சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

# வானங்களே கேளுங்கள்... பூமியே செவிகொடு...



சீர்திருந்தாதவன் சீர்திருத்த தகுதியற்றவன்...

# வானங்களே
# கேளுங்கள்
# பூமியே
# செவிகொடு

# வானங்களே கேளுங்கள், பூமியே செவிகொடு

Bro.D.Augustine Jebakumar

Published by

**GEMS Publications**

Sikaria, Indrapuri (P.O), Dehri – on – Sone,
Rohtas Dist., Bihar - 821 308, North India
E-Mail : publications@gemsbihar.org
www.gemsbihar.org, www.gemsmedia.in
Tel. : 06184 234026, 234567, Fax 06184 234042

Copies can also be received from

**GEMS**

No. 11, 13th Cross Street,
New Colony, Chrompet, Chennai – 44
TamilNadu, South India
Tel. : 044 22386031, 22380295

© Copyright by Gospel Echoing Missionary Society (GEMS)

First edition 3000 copies - 2012

No part of this publication may be reproduced in any form or by any mean, electronic or mechanical, including photocopying, recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.

..................................................................

அவர்களுக்கு

..................................................................

அவர்களால்

...........................

அன்று

..................................................................

நினைவாக அளிக்கப்படுகிறது

# பதிப்புரை

**"வானங்களே கேளுங்கள், பூமியே செவிகொடு"** என்ற இப்புத்தகத்தை உங்கள் கரங்களில் தருவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். உலகை உலுக்கும் பாவங்கள் ஒரு புறமிருக்க, மறுபுறம், மறுபடி நாங்கள் பிறந்திருக்கின்றோம் எனச் சொல்லிக்கொள்பவர்களுக்குள்ளும் இன்னும் பல துணிகரங்கள் மறைந்து கிடக்கின்றன. கூடவே, திசை காட்டுபவர்களையே திட்டித் தீர்ப்பவர்களும் திரள்கூட்டமாகின்றனர். வேதத்தை கையில் ஏந்தி கூவி கூவி அன்பரை அறிவித்துவிட்டு, வாழ்க்கையில் குறைவுபட்டுவிட்டால், தேவ நாமம் குற்றஞ்சாட்டப்படுமே! விண்ணிலிருக்கிறவரை மண்ணில் காட்டுவது நமது வாழ்க்கைதானே. ஆத்தும ஆதாயம், ஆவிக்குரிய வாழ்வு, ஆண்டவருக்கான அருட்பணி என்ற அடிப்படைத் தளத்தின் அஸ்திபாரங்களில் கூட இன்னும் அடி சறுக்கி விழும் மக்களை நிறுத்துவது யார்? "நீதியான வேதம்" கையிலிருந்தும், நீதி அறியாது, தீமையின் தீயில் தங்களைக் கருக்கிக்கொள்ளும் மக்களின் நிலையினை மனதில் கொள்வது யார்? அவர்களை நித்தியத்திற்கு நேராய் நடத்துவது யார்? எனக்கு முன்னே போகிறவர் விண்ணைப் பார்க்கிறவரா அல்லது தன்னைப் பார்க்கிறவரா என அடையாளம் காட்டுவது யார்?

தடுமாறும் தலைவர்கள், தள்ளாடும் திருச்சபைகள், தடுக்கிவிழும் விசுவாசிகள், மற்றோரை எழுந்திருக்கவிடாத விழுந்தோர்கள், பரத்தை அல்ல பணத்தைப் பார்க்கும் கண்கள் மற்றும் தேவனை காட்டி தனது உலக வாழ்க்கையைக் கட்டி எழுப்புபவர்கள் என பட்டியலை இன்னும் நீட்டிக்கொண்டே போகலாம். வேதத்தின் வழியினை மறந்து, தனக்கென தங்கள் விழிகள் கண்ட வாழ்வில் நுழைந்து, மற்றோரையும் மறை வழியினுள் நுழையவிடாத முன்னோடிகளிடம் சிக்கிக்கொண்டோரின் நிலை கவலைக்குரியதே! வேதத்தை அல்ல தங்களையே தேட வைத்து, தங்கள் தடங்களில் வருவோர் தங்களது தவறுகளைக் கண்டால், "தாங்கள் செய்வது சரியே" என நீதி கூறிக்கொள்வோர்களால் மாளுவோர்கள் பெருகிவரும் இக்கடைசி நாட்களில், "ஊதும் எக்காளமாக" உங்களை வந்தடைகிறது இப்புத்தகம். ஜெம்ஸ் 'யுத்தசத்தம்' பத்திரிக்கைகளில் சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார் எழுதி அன்பின்மடல்களாய் ஒலித்த மணிகளின் மாலை இது.

ஒரே முறையில் வாசிக்கப்பட்டு, பின்னர் ஓரங்கட்டி ஒதுங்க வைத்து, அலங்காரமாய் புத்தக அலமாரியில் எண்ணிக்கையினைக் கூட்ட இப்புத்தகம் ஒரு நாவல் அல்ல. மாதத்திற்கு ஒன்றாக மணம்

தந்தவைகளை, **வாரத்திற்கு ஒன்றாக உங்கள் மனம் தியானிக்கத் தந்துள்ளோம்.** வருடத்தின் 52 வாரங்களிலும், இச்சத்தியத்தோடு ஒன்றிணைந்து நின்று வாழ்க்கையினை வடிவமைக்க உதவும் குயவன் கையிலுள்ள காலச்சக்கரமே இப்புத்தகம். உங்களை களிமண்ணாய் பாவித்து இப்புத்தகத்தினுள் நுழைந்தால், கர்த்தரின் வழி செல்லும் மனிதனாக்கும்; உங்களையும், மற்றோரையும் அடையாளம் காணக் கண் திறக்கும். வாழ்க்கையில் ஏற்றினால், மற்றோருக்கும் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை விளக்காகும். இதன் சாரம் உங்களில் ஊற்றப்பட்டுவிட்டால், செல்லும் இடங்களிலும், சொல்லும் மொழிகளிலும் சத்தியமே பாரமாகி பரத்திற்கே பலன் கொடுக்கும்.

ஆடுகளைத் தேடுவோர் அரிதாகிவரும் நாட்களில், தேடிப் பிடித்த ஆட்டினை கூட்டிலேயே கட்டி வைத்து, குட்டி கூட போடவிடாதபடி, தொலைந்ததை தேடிப் போகவிடாதபடி வைத்திருக்கும் மேய்ப்பர்கள் உண்டே! பலுக விடாததும், பெருக விடாததுமே இன்று மந்தைகள் பல சிறிதானதற்குக் காரணங்கள். தேவனுடையவர்களை தங்களுடையவர்கள் எனவும், தேவனுடையவைகளைத் தங்களுடையவைகள் எனவும் மார்தட்டிக்கொள்ளும் ஊழியர்களின் சிந்தையில் பரத்தின் பாரமும், சுவிசேஷம் அறிவிக்கும் வீரமும், சத்துருவை எதிர்கொள்ளும் வீரியமும் கரைந்து மறைந்துவிடுகிறதே. "துன்மார்க்கருக்கு விரோதமாய் என் பட்சத்தில் எழும்புகிறவன் யார்? அக்கிரமக்காரருக்கு விரோதமாய் என் பட்சத்தில் நிற்பவன் யார்? (சங் 94:16) என்ற கர்ஜனையும், கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் (யாத் 32:26) என்ற அறைகூவலையுமே உங்கள் முன் விடுக்கிறது இப்புத்தகம். விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் வீணானவைகளைப் பின்பற்றி, தங்களை வீணடித்துக்கொள்ளக்கூடாது, தேவ நோக்கத்தை மறந்துவிடக்கூடாது, தேவ பாதையினை விட்டு விலகிவிடக்கூடாது, சத்துருவின் சதிக்கு பலியாகிவிடக்கூடாது என்பவைகளையே மனதில் கொண்ட மிஷனரி சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமாரின் இப்புத்தகம் உங்கள் ஆத்துமாக்களை தேவனண்டை திருப்பும், இயேசுவை அறியாதோர்க்கு அவரை அறிவிக்கச் செய்யும். இது உங்கள் கையிலேயே வந்துவிட்ட ஓர் கலங்கரை விளக்கு.

- **ஜெம்ஸ் வெளியீட்டுத் துறை**

# பொருளடக்கம்


1. நித்தியம் ........ 1
2. அடையாளம் காண... ........ 4
3. அக்கினி ........ 8
4. அழைப்பைக் குறித்த தெளிவு ........ 13
5. பெலப்படுத்தும் கிறிஸ்து ........ 17
6. தேவ கரத்தில் பிள்ளைகள் ........ 22
7. தேவ ராஜ்யமே நம் குறியாகட்டும் ........ 27
8. தேவன் பேசுவது எப்படி? ........ 34
9. எதிர்கால சந்ததிக்கு நம் பங்கு என்ன? ........ 39
10. கொடிய காலங்கள் ........ 42
11. கறையான ஊழியர்கள் ........ 48
12. கவலையைக் கொண்டுவரும் கடன் ........ 54
13. கிருபைக்கு விரோதமானவைகள் ........ 58
14. அறிவியாதிருந்தால் ஐயோ ........ 65
15. மாம்சத்தில் முடிவு பெறுவோர் ........ 70
16. மாற்றம் இல்லையேல் ஏமாற்றமே ........ 79
17. என்னால் என்ன பிரயோஜனம்? ........ 83
18. மிஷனரிப் பணி ........ 89
19. மோகம் ........ 94
20. நியாயத்தீர்ப்பு ........ 98
21. ஊழியப் பணம் ........ 105
22. ஊழியர்களைப் பகுத்தறியுங்கள் ........ 110
23. பெண்களின் பங்கு ........ 114
24. பண்டிகையின் குதூகலம் ........ 122
25. பெரிதானவைகளைக் காண்பாய் ........ 128
26. பிடிக்கப்பட்ட நோக்கம் ........ 133
27. பிள்ளைகள் - பெற்றோர்கள் ........ 137

28. பிரிக்கப் படித்துக்கொள் .......... 145
29. பொய்யை எதிர்க்க... .......... 151
30. போராட வா .......... 155
31. பிரபஞ்சத்தின் பிள்ளைகள் .......... 160
32. சபையின் நடுவிலே பாபிலோனின் ஆவி .......... 164
33. சபையின் ஒளியை அணைக்கும் சக்தி .......... 168
34. சிட்சித்து போதிக்கிறவனே பாக்கியவான் .......... 174
35. சோர்வு .......... 180
36. தடுமாறும் தலைவர்கள் .......... 185
37. தரிசனம் பெற்றவன் .......... 190
38. தெரிந்து கொள்ளப்படுவதற்கான தகுதி .......... 195
39. திருத்து அல்லது தகர்த்துவிடு .......... 200
40. துரோகிகள் .......... 205
41. உல்லாச ஊழியர்கள் .......... 209
42. உப்பிலாப் பண்டமாகிவரும்... .......... 214
43. வாலிபரைத் தொடும் சத்துரு .......... 223
44. வஞ்சிக்கும் மூத்த ஊழியர்கள் .......... 231
45. வசனமே விளக்கு .......... 235
46. வீணடிக்காதீர் .......... 245
47. வித்தைகள் .......... 254
48. யார் கொள்ளைக்காரன்? .......... 258
49. முந்தி ஆசீர்வாதம் பெற்றவர்கள் .......... 264
50. தீர்க்கதரிசனம் .......... 269
51. கிறிஸ்துவுக்குள் நான் யார்? .......... 273
52. ஊடகங்கள் .......... 278

# 1. நித்தியம்

கடைசிக் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற நமக்கு, தேவ வார்த்தைகளை அறிவிக்கிற மக்கள் எத்தனை தெளிவாக அறிவிக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகிவருகிற பொல்லாத காலம் இது. **இந்த உலக வாழ்க்கையின் தேவைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படும் செய்திகள், நம்முடைய காதுகளுக்கும், இருதயத்திற்கும் ஒருவேளை இன்பமாக இருக்கலாம்; ஆனால், நம்மைக் கரை சேர்ப்பதற்கு அவைகளுக்குப் பெலனில்லை** என்பதனை நாம் அதிகமாக உணரவேண்டிய அத்தியாவசியம் உண்டு. "இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டோமாகில், நம்மைப் போன்ற பரிதபிக்கப்படத்தக்கவர்கள் உலகில் வேறொருவர் இல்லை எனலாம்" (1கொரி 15:19). இந்த ஜீவனுக்கானவைகளை நமது பரம பிதா தருகிறார், அறிந்துமிருக்கிறார். (மத் 6:32)

"அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும் (மத் 6:11) என்று அவைகளுக்காக ஜெபிக்கவும் அவர் கூறினார். **ஆனால், அவைகள் மாத்திரம் தேவ நோக்கம் அல்ல என்பதும், அதனைக் காட்டிலும் மேலானவைகளையே தேடவும் நாம் இந்த ஜீவனுள்ள தேவனைப் பின்பற்றுகிறோம்** என்பதனை அழுத்தமாக ஆணித்தரமாகப் பேசவேண்டிய கட்டாயம் உண்டு.

ஆதி அப்போஸ்தலர்களும் இதனைத்தான் செய்தார்கள் என்பது, அவர்கள் எழுதிய கடிதங்கள் நமக்குச் சொல்கின்றன. அவர்கள் நிருபங்களை எழுதும்போது, **சபை மிகுந்த உபத்திரவத்திலும்** (1தெச 1:6)), **பாடுகளிலும்** (1பேது 4:12,13), **குறைவிலும்** (2கொரி 8:2) **கடந்து சென்றுகொண்டிருந்தது.** ஆயினும், இவ்வுலக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, விசுவாசத்தை எப்படி உபயோகிக்கவேண்டும்? அற்புதங்களை எப்படிப் பெற்றுக்கொள்ளவேண்டும்? தேவனை எப்படி துதிக்கவேண்டும்? என்று அவர்கள் சபைக்குப் போதிக்காமல், அன்றாட வாழ்க்கையின் தேவையைக் காட்டிலும் பெரிதான காரியங்களைக் குறித்தே அவர்களுக்கு எழுதி நினைப்பூட்டினார்கள். (யூதா 3, 2பேது 1:2, 1பேது 2:12)

ஆனால், இன்றைய சுவிசேஷகர்களும், பிரசங்கிகளும் இதனை முற்றிலும் மறந்தவர்களாய் கூட்டங்களிலும், டி.வி-யிலும் இந்த ஜீவனுக்குரியவைகளுக்கே முதலிடம் கொடுத்து, அதைச் சந்திப்பதற்காகவே தேவனைத் தேடவேண்டும் என்று **அஞ்ஞானிகளைப் போலவே பிரசங்கிக்கிறார்கள்.** நித்தியத்தினைக் குறித்த அறிவு அதிகம் புகட்டப்படவேண்டிய அவசியம் உண்டு. **நித்திய அக்கினி** (மத் 18:8, 25:41), **நித்திய ஜீவன்** (மத் 19:29, மாற் 10:38, யோவான் 3:15), **நித்திய ஆக்கினை** (தண்டனை) (மத் 25:46), **நித்திய வீடு** (லூக் 16:9, 2கொரி 5:1), **நித்திய கனமகிமை** (2கொரி 4:17), **நித்திய தீர்மானம்** (அநாதி நோக்கம்) (எபே 3:11), **நித்திய அழிவு** (2தெச 1:10), **நித்திய ஆறுதல்** (2தெச 2:16), **நித்திய வல்லமை** (1தீமோ 6:16), **நித்திய இரட்சிப்பு** (எபி 5:9), **நித்திய நியாயத்தீர்ப்பு** (எபி 6:2), **நித்திய மீட்பு** (எபி 9:12), **நித்திய ஆவி** (எபி 9:14), **நித்திய சுதந்திரம்** (எபி 9:15), **நித்திய உடன்படிக்கை** (எபி 13:20), **நித்திய ராஜ்யம்** (2பேது 1:11), **நித்திய சுவிசேஷம்** (வெளி 14:8) இவைகளே அதிகமாகப் பேசப்படவேண்டியவைகள்.

**உலகம் அல்லது உலகத்து மக்கள் இதனைக் குறித்துப் பேச தகுதியற்றவர்கள். எனவே, அவர்கள் மனித நேயத்தையும், சம உரிமைகளையும், மனிதத் தேவைகளையும் மற்றும் அதனைச் சந்திக்கும் வழிதனையும் குறித்துப் பேசுவார்கள்.** ஆனால், ஜீவனுள்ள தேவனை அறிந்திருக்கிற நாம், மேலானதும், விலையேறப்பெற்றதுமாயிருக்கிற நித்திய ஜீவனைக் குறித்தும், நித்தியமானவைகள் என்று வேதம் கூறும் மற்றவைகளைக் குறித்தும் உலகத்துக்குக் காண்பிக்க அழைக்கப்பட்டவர்கள். இதனை மறந்து, அநேகர் **ஊழியத்தினைச் செய்தாலும், உள்ளுக்குள் உலகத்தினை உள்ளடக்கியவர்களாக பிரசங்கித்து வசப்பு மொழிதனை வாரி வழங்கி, ஜனங்களை வழி தப்பிப்போகச் செய்துகொண்டேயிருக்கின்றனர்.** இப்படிப்பட்டவர்களைத் தூரத் தள்ளிவிட்டு, வேதம் காட்டும் வழியில் நடக்க ஒப்புக்கொடுப்போரின் எண்ணிக்கை பெருகவேண்டி ஜெபிக்கவும், அப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்தவும் அழைக்கப்படுகிறோம் நாம். "விசுவாசத்தின்

நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்" என்பது பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின வார்த்தைகள் அல்ல கட்டளைகள். (1தீமோ 6:12-14)

ஐசுவரியமான வாலிபன் தன்னுடைய **ஐசுவரியம் நித்திய ஜீவனைத் தர வல்லமையற்றது** என்பதனை அறிந்திருந்தான் (மத் 19:16). அவன் தெருவிலே முழங்கால் படியிடக்கூடிய அளவு தாழ்மை உள்ளவன்தான் (மாற் 10:17), தலைவனாகவும் அவன் இருந்தது உண்மை (லூக் 18:18); ஆயினும், **பதவியும் கூட அதனைத் தர இயலாது** என்பதனை தெளிவாக அறிந்திருந்தான்.

இதனை மனதில் வைத்தே, இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்புள்ள சிந்தையுள்ளவர்களாயிராமலும், **நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும்,** நாம் அனுபவிப்பதற்குச் சகலவிதமான நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கைவைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் தாராளமாய் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு (1தீமோ 6:17-19) என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கட்டளையிடுகிறார்.

ஆனால், இந்த நாளின் பரிதாப நிலைதான் என்ன? அன்றாடத் தேவைகளுக்காகவே தேவன் கிரியை செய்வதுபோல அவரைக் காண்பித்து, அதற்காகவே அவரைத் தேடவைத்து, அதனைத் தங்களுக்கு ஆதாயத் தொழிலாக மாற்றிக் கொண்டோரின் எண்ணிக்கை பெருகிப்போயிற்றே.

அப்படிப்பட்டவற்றை உதறித் தள்ளுவோம், ஜெபிப்போம், சபையும் சபையின் ஊழியர்களும் விழித்துக்கொள்ள வேதம் காட்டும் வழியில் மக்களை நடத்த ஜெபிப்போம்; அது தேசத்தினைச் சந்திக்கத் தேவையான ஒன்று என்பதனை சிந்தையில் கொள்வோம்.

## 2. அடையாளம் காண...

**தேவ ஜனங்கள் தவறாக வழி நடத்தப்பட்டு மோசம் போவதற்குப் பல ஆவிக்குரியத் தலைவர்கள் காரணமாகத் திகழுகிறார்கள். ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.**(மாற்கு 13:22)

இன்றைய விசுவாசிகள், தங்கள் திருச்சபைகளிலும் கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்கும் போதகர்கள் இயேசுவின் நாளில் இருந்தவர்களைப் போலக் கெட்டவர்களாகவும், மாய்மால வாழ்க்கை வாழ்பவர்களாகவும் இருப்பார்கள் என்பதை உணரவேண்டும் (மத் 24:11,24). கிறிஸ்துவை அறிக்கையிடும் ஒவ்வொருவரும் உண்மையான விசுவாசிகளல்ல. அதுபோல கிறிஸ்தவ எழுத்தாளர்களோ, நற்செய்திப் பணியாளர்களோ, போதகர்களோ, சுவிசேஷகர்களோ, ஆசிரியர்களோ, மூப்பர்களோ, ஊழியக்காரர்களோ தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று உரிமை பாராட்டுவதால் அப்படி உண்மையான கிறிஸ்தவர்களாக ஆகிவிடமாட்டார்கள் என்று இயேசு எச்சரிக்கிறார்.

இந்த ஊழியர்கள் வெளி வேஷத்தில், "நீதிமான்கள் போலத் தோற்றமளிப்பார்கள்" (மத் 23:28), அவர்கள் "ஆட்டுத் தோல்களைப் போர்த்திக்கொண்டு" வருவார்கள் (மத் 7:15); அவர்கள் தங்கள் செய்தியை தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டிருப்பார்கள்; உயர்ந்த ஒழுக்க நெறிகளையும், நீதிகளையும் அறிவிப்பார்கள்; தேவனுடைய ஊழியத்திலும் இராஜ்யத்திலும் அதிக அக்கறைக் கொண்டவர்கள் போலத் தோன்றுவார்கள்; எல்லா மக்கள் மேலும் அன்பு செலுத்துபவர்களாகவும், இழந்துபோனவர்களை மீட்பதில் அதிக ஆர்வம் உள்ளவர்கள் போலவும் காணப்படுவார்கள்; தேவனுடைய அபிஷேகம் பெற்ற, பாராட்டத்தக்க பெரிய ஊழியக்காரர் போலவும், ஆவிக்குரியத் தலைவர்கள் போலவும் தோற்றமளிப்பார்கள்; அவர்கள் பல அற்புதங்களைச் செய்யும் வெற்றியுள்ள ஊழியக்காரர்கள் போலவும் விளங்குவார்கள்; **திரளான கூட்டம் அவர்களைப் பின்பற்றும்** (மத் 7:21-23; 24:11,12; 2கொரி 11:13-15).

இருந்தபோதிலும், இவர்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள கள்ளத் தீர்க்கதரிசிகளைத் தங்கள் ஆவிக்குரிய மூதாதையர்களாகக் கொண்டிருப்பார்கள் (உபா 13:3; 1இராஜா 18:40; நெகே 6:12; எரேமியா 14:4; ஓசியா 4:15). புதிய ஏற்பாட்டிலுள்ள பரிசேயர்களும் இவர்களுடைய முன்னோடிகளான வழிகாட்டிகளே. மக்கள் கூட்டத்தை விட்டு விலகி, தங்கள் மறைவான தனி வாழ்க்கையில் பரிசேயர்கள் பேராசை உள்ளவர்களாகவும், தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றுகிறவர்களாகவும் காணப்பட்டார்கள் (மத் 23:25). "இறந்த மனிதர்களின் எலும்புகளும், அசுத்தமான அனைத்துக் கிரியைகளும்" அவர்களுடைய வாழ்க்கையில் நிறைந்து காணப்பட்டன (மத் 23:27). "மாய்மாலமும், அக்கிரமமும்" அவர்களுடைய வாழ்க்கையில் நிறைந்திருந்தன (மத் 23:28). **மூடிய கதவுகளுக்குள் அவர்களுடைய அந்தரங்க வாழ்க்கையில் இச்சை, பாலியல் ஒழுக்கக்கேடு, விபச்சாரம், பேராசை, தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றும் தன்மை இவை நிறைந்து காணப்பட்டன.**

இந்த வஞ்சகர்கள் திருச்சபைகளில் இரண்டு வழிகளில் முக்கியமான இடத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். சில கள்ளப் போதகர்களும், பிரசங்கிகளும் தங்கள் ஊழியத்தை மிகுந்த உண்மையுடனும், சத்தியத்துடனும், கிறிஸ்துவின் மீது உண்மையான விசுவாசத்துடனும் ஆரம்பிக்கிறார்கள். பின்னர் பெருமையினாலும், தங்கள் ஒழுக்கக்கேடான ஆசைகளினாலும், கிறிஸ்துவின் மீதுள்ள அவர்களின் அர்ப்பணிப்பும், அன்பும் படிப்படியாகக் குறைகின்றது. இதன் பலனாக தேவனுடைய இராஜ்யத்தின் தொடர்பிலிருந்து அவர்கள் விலகிவிடுகின்றனர் (1கொரி 6:9,10; கலா 5:19-21; எபேசியர் 5:5,6). எனவே, **அவர்கள் சாத்தானின் கருவிகளாக மாறிவிடுகிறார்கள். ஆனால், நீதியுள்ள ஊழியக்காரர்கள் போலத் தங்களைக் காட்டிக்கொள்வார்கள்** (2கொரி 11:15).

மற்ற கள்ளப் போதகர்களும், பிரசங்கிகளும் எப்போதுமே கிறிஸ்துவின் உண்மை விசுவாசிகளாய் இருந்ததில்லை. **ஆரம்பத்திலிருந்தே சாத்தான் அவர்களைத் திருச்சபைகளில் நாட்டி வைத்திருக்கிறான்** (மத் 13:24-28; 36-43). அவர்களுடைய திறமை, மக்கள் மீது காட்டும் அன்பு, அக்கறை, செய்யும்

உதவி இவற்றின் மூலம் அவர்களுடைய பணியில் வெற்றி இருக்கும். சாத்தானின் சூழ்ச்சி என்னவெனில், இவர்களை மிகவும் புகழ் பெற்ற, சக்தி வாய்ந்த பதவிகளில் வைப்பது. இவர்களது செயல்பாட்டால் கிறிஸ்துவின் உண்மையான வேலைகளைத் தடை செய்து கீழ்ப்படுத்த முடியும். இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டால், கிறிஸ்துவுக்கும், அவருடைய நற்செய்திக்கும் பெருத்த அவமானமும், அவப்பெயரும் உண்டாகும் என்பதைச் சாத்தான் அறிவான்.

**"சோதித்தல்"** : நற்செய்தி நூல்களில் பதினான்கு தடவைகள், தவறாக வழிநடத்தக் கூடிய இத்தகைய கள்ளப்போதகர்களைக் குறித்து விழிப்புடன் எச்சரிக்கையாய் இருக்குமாறு இயேசு அறிவுறுத்தினார் (மத் 7:15; 16:6,11; 24:4,24; மாற்கு 4:24; 8:15; 12:38-40; 13:5; லூக்கா 12:1; 17:23; 20:46; 21:8). இன்னும் பல இடங்களில் திருச்சபைகளில் உள்ள தலைவர்கள், போதகர்கள், ஆசிரியர்கள் இவர்களை விசுவாசிகள் சோதித்துப் பார்க்குமாறு இயேசு கூறியுள்ளார் (1தெச 5:21; 1யோவான் 4:1). **கள்ளத் தீர்க்கதரிசிகளையும், கள்ளப் போதகர்களையும் கண்டறியக் கீழ்க்கண்ட சோதனைகளைச் செய்யலாம்.**

1. **அவர்களுடைய நன்னடத்தையையும், பண்புகளையும் சோதித்துக் கண்டறியுங்கள்.** அவர்களிடம் உண்மையான ஜெப வாழ்க்கை உள்ளதா? அவர்கள் தேவனிடம் உண்மையான பக்தியும், பற்றுதலும் கொண்டவர்களா? **அவர்களது வாழ்க்கையில் ஆவியின் கனிகளை வெளிப்படுத்துகின்றனரா?** (கலா 5:22,23), பாவிகளை நேசிக்கிறார்களா? (யோவான் 3:16), **அக்கிரமத்தை வெறுத்து நீதியை நேசிக்கிறார்களா?** (எபி 1:9), **பாவத்துக்கு எதிராகக் கூக்குரல் எழுப்புகிறார்களா?** (மத் 23; லூக்கா 3:18-20)

2. **அவர்களுடைய நோக்கங்களைக் கண்டறியுங்கள்.** உண்மையான கிறிஸ்தவ ஊழியர்கள் நான்கு காரியங்களைச் செய்ய ஆசைப்படுவார்கள்.

   - ❒ கிறிஸ்துவைக் கனப்படுத்துதல். (2கொரி 8:23; பிலி 1:20)
   - ❒ **திருச்சபையைப் பரிசுத்தத்திற்கு நேராக வழி நடத்துவார்கள்.** (அப் 26:18; 1கொரி 6:18; 2கொரி 6:16-18)

- ❒ **இழந்துபோனவர்களைத் தேடி இரட்சிப்பார்கள்** (1கொரி 9:19-22).
- ❒ **கிறிஸ்துவின் நற்செய்தியைக் கூறி அறிவிப்பார்கள், நற்செய்திக்காக வாதிடுவார்கள், அப்போஸ்தலர்களை ஆதரிப்பார்கள்** (பிலி 1:16, யூதா 3).

3. அவர்களுடைய வாழ்க்கையிலும், போதனையிலும் உண்டாகும் கனிகளைச் சோதித்துப் பாருங்கள். **கள்ளப் போதகர்களின் ஊழியத்தின் பலனான மனந்திரும்புகிறவர்கள் தேவனுடைய வார்த்தைக்குத் தங்களை முற்றிலும் அர்ப்பணித்தவர்களாக இருக்கமாட்டார்கள்** (மத் 7:16).

4. அவர்கள் எந்த அளவு தேவனுடைய வார்த்தைகளைச் சார்ந்திருக்கிறார்கள் என்று கண்டறியுங்கள்; இது ஒரு முக்கியமான பிரச்சனை. பழைய, புதிய ஏற்பாடுகளில் எழுதப்பட்டிருப்பவை எல்லாம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள்; அவற்றுக்கு முற்றிலும் நம்மை அர்ப்பணிக்கவேண்டும் என்று அவர்கள் விசுவாசிக்கிறார்களா? மக்கள் அப்படி செய்யவேண்டும் என்று போதிக்கிறார்களா? (2யோவா 9-11). இல்லையேல், அவர்களும் அவர்களுடைய செய்திகளும் தேவனிடத்திலிருந்து வந்தவையல்ல என்று நாம் அறிந்துகொள்ளலாம்.

5. **இறுதியாக, கர்த்தருடைய காணிக்கைப் பணத்தை அவர்கள் எப்படி கையாளுகிறார்கள் என்று சோதியுங்கள். பெரிய தொகைகளைத் தங்களுக்கென்று எடுத்துக்கொள்ள மறுக்கிறார்களா? புதிய ஏற்பாட்டில் தலைவர்களுக்கான தகுதிகளின்படி ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்து நிறைவேற்ற, உண்மையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும், அப்பணத்தை கையாளுகிறார்களா?** (1தீமோ 3:3; 6:9-10). உண்மையான விசுவாசிகள் இத்தகைய கள்ளப் போதகர்களின் தனி வாழ்க்கையையும், போதனைகளையும் மதிப்பீடு செய்யச் சோதனை நடத்தினாலும், சாத்தானின் உதவியுடன் சிலர் கண்டுபிடிக்கப்படாமல் திருச்சபைகளின் பொறுப்புகளில் நிலைத்திருப்பார்கள். அவர்களின் உண்மைத்தன்மை எப்படிப்பட்டதென்று தேவனே வெளிப்படுத்தும் வரை அவர்கள் நீடித்திருப்பார்கள்.

# 3. அக்கினி

**பல போராட்டங்களின் மூலம் தேசத்தில் இளைஞர்களின் மன வாஞ்சையைக் காண நேரிடுகிறது எனினும், லஞ்சப் பேர்வழிகள் பலரும் லஞ்சத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து, திருடனே "அதோ திருடன் திருடன்" எனக் கூப்பிட்டுக்கொண்டு ஓடுவது போலக் காணப்படுகிறது. உள்ளான மனிதனில் உண்டாக வேண்டிய "பொருளாசையை" வெறுக்கும் சுபாவத்தை பரிசுத்த ஆவியானவரால் மாத்திரமே தர முடியும். போராட்டம் அந்த வாஞ்சையை உருவாக்கலாம்; ஆனால், மாற்றத்தினைக் கொண்டுவர வலுவற்றது.** எனவே, கடைசி நாட்களில் மாம்சமான யாவரின் மேலும் மாரியைப் பொழியப் பண்ணுவேன் என்று வாக்கு பண்ணினவர் (அப் 2:17), அதனை நிறைவேற்ற தீவிரம் காட்ட ஜெபிப்போம், வாஞ்சிப்போம், நிறைவேறுதலைக் காண்போம்.

**"அக்கினி"** என்கிற வார்த்தை இன்றைய ஆவிக்குரிய உலகில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் சொற்களில் ஒன்று. “அக்கினி முகாம்”, “அக்கினி அபிஷேகம்” போன்றவற்றால் குழம்பிப் போயிருப்பவர்களும் ஏராளம். இதுதான் வேளை என்று, “அந்நிய அக்கினி” யும் இன்று சபைகளுக்குள் நுழைந்து தன் வேலையை நடத்துகிறது. ஆனால், **"அறிந்தோ, அறியாமலோ" எழுப்பப்படும் அக்கினியின்** விளைவினை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

**"அக்கினி எழும்பி, முட்களில் பற்றி, தானியப் போரையாவது, விளைந்த பயிரையாவது, வயலிலுள்ள வேறே எதையாவது எரித்துப் போட்டதேயானால், அக்கினியைக் கொளுத்தினவன் அக்கினிச் சேதத்திற்கு உத்தரவாதம் பண்ணவேண்டும்"** (யாத் 22:6)

இது ஒரு பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தின் தீர்ப்பு எனினும், அநேக காரியங்களை நமக்குக் கற்றுக்கொடுக்கிற ஒரு வேத வாக்கியம். இந்த “அக்கினி” **தெரிந்தோ, தெரியாமலோ, வேண்டுமென்றோ, கவலையீனத்தினாலோ பற்றவைக்கப்பட்டிருக்கலாம்.** அது, கொளுத்தப்பட்ட நேரத்தில் இல்லாத ஒரு காற்று, கொளுத்தப்பட்ட பின்னர் அதன் வேகத்தினை அதிகப்படுத்த தீவிரமாக அடித்து காரியத்தினை இன்னமும் கெடுத்திருக்கலாம்; **எப்படியாயினும், நஷ்டம் உண்டாகிவிட்டது.**

இன்றும், மற்றவர்களுக்கு நஷ்டம் உண்டாக்க **(எண்ணத்தில், வாழ்க்கையில், எதிர்காலத்தில், முன்னேற்றத்தில், பெருக்கத்தில்)** நம்மை அறியாமல் நடத்தும் காரியங்கள், நம்முடைய கவலையீனத்தினால் உதிர்ந்துவிட்ட வார்த்தைகள் அக்கினியைக் காட்டிலும் அதிக சேதம் உண்டாக்கிவிட்டனவே.

**தெரிந்து செய்திருந்தாலும், அறியாமல் செய்திருந்தாலும் அதற்கு நான் பொறுப்பேற்றாகவேண்டும் என்பதனை மறக்கலாகாது**; அது தேவ தீர்மானம் என்கிற தெளிவு நமக்கு உண்டாவதாக. கவலையீனக் குறைவு "மன்னித்துக்கொள்ளுங்கள்" (sorry) என்ற ஒரு வார்த்தையில் தீர்ந்துவிட்டதாக எண்ணக்கூடாது. அந்த பாதிப்புக்கு ஈடுகட்ட நாம் கடமைப்பட்டவர்கள். நான் செய்த வேலையில் அந்த "காற்று" (சூழ்நிலை) இல்லை, பின்னதாகவே அது உண்டாகிவிட்டது என்றும் ஒதுங்கிவிடமுடியாது.

இங்கே குறிப்பிட்ட இந்த **"அக்கினி" , உபதேசமாக இருக்கலாம், ஆலோசனையாக இருக்கலாம், புத்திமதியாக இருக்கலாம் அல்லது சாதாரணமாகச் சொல்லப்பட்ட ஒரு வார்த்தையாக இருக்கலாம் ஜாக்கிரதை.**

இது செய்யும் வேலைதனை நான்கு பிரிவாகப் பிரிக்கிறது.

முதலாவது அது முள்ளுகளில் பற்றிப் பிடிக்கலாம். முள்ளுகள் வேலிதனைக் குறிப்பிடுகிறது (Hedges). பயிரின் பாதுகாப்புக்காகப் போடப்பட்ட இந்த வேலியைப் பழுதாக்கிவிட்டக் கொடுமை அது. என்னுடைய சொல், செயல் (words or deeds) **அநேகருடைய வாழ்க்கையில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்ட பலவற்றைப் பாதித்திருக்கலாம்.**

இரண்டாவது, அறுத்து வைத்திருக்கும், சேகரித்து வைத்திருக்கும் அறுவடை கட்டுகளை அது கொளுத்துகிறது; அதுவும், அறுவடை "களத்தில்" (Threashig floor) நடைபெறுகிறது. **அது ஒரு மனிதனின் உழைப்பின் பலன். எதிர்பார்ப்போடு அதன் பலனை அனுபவிக்கக் காத்திருப்பவரின் வாயில் மண்ணைப் போடும் செயல்.** "கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லையே" என்ற நிலைக்குத் தள்ளிவைக்கும் ஒரு அநியாயம். விதை தானியம் அதாவது, **முதலீடும் அதில் அழிந்துபோகும் அநியாயம்.**

**என்னுடைய சொல்லும், செயலும், ஆலோசனைகளும் எத்தனை பேருடைய வாழ்க்கையில் அவர்களுக்கு இருந்த கொஞ்சம் நம்பிக்கையினையும் எரித்து சாம்பலாக்கிவிட்டது என்பதனை யோசித்துப் பார்த்து ஈடு செய்யவேண்டிய அவசியம் உண்டு.**

மூன்றாவதாக, விளைந்து ஆனால், இன்னமும் அறுவடைக்கு முற்றிலும் தயாராகாத பயிரை அந்த அக்கினி அழித்துவிடுகிறது (standing crop). **எழும்பி வரும் எத்தனை இளைஞர்களை, உபயோகப்பட ஆயத்தப்படும் வாலிப உள்ளங்களை அழித்துப் போடக்கூடிய செயல்கள், ஊழியங்கள், வாழ்க்கை முறைகள் எத்தனை எத்தனை!**

சபைகளில், ஸ்தாபனங்களில் பழைய தலைவர்களால், புகழ் பெற்ற ஊழியர்களால் இன்று எழும்பிவரும் எத்தனை ஊழியர்கள் இடறல் அடைகின்றார்கள். அவர்களின் **வாழ்க்கை முறை, அணுகு முறை, ஊழிய முறை** தேவையற்ற அக்கினியைப் பரப்பி, இப்படிப்பட்ட ஒன்று உபயோகப்பட ஆயத்தமாகும் வாலிபர்களைப் பாதிக்கப் போதுமானது அல்லவா!

நான்காவதாக, மற்ற எதையாவது அதாவது, பயிருக்கு உதவுபவைகளை அழித்துப்போட்ட அக்கினி எத்தனை எத்தனை? **ஊழியத்திற்கு உதவுகிறவர்களை, ஜெபிக்கிறவர்களை, ஊற்சாகப்படுத்துகிறவர்களை இல்லாத பொல்லாதவைகளை அறியாதவைகளைக் கூறி அலப்பி உற்சாகமிழக்கச் செய்து, செயலற்றுப் போகப்பண்ணி, வீடு வீடாகத் திரிபவர்கள் எத்தனை பேர். தன்னுடைய ஊழியத்தினை தாங்கவேண்டி மற்றவரின் ஊழியத்தின் குறைவுகளை (வேதத்தில் காணப்படும் குறைவுகளை அல்ல), அவர்கள் பார்த்திராத, விசாரித்திராத, அறிந்திருக்காத மனோகற்பனைகளை ஊதி, அதனால் உற்சாகமுடையோரைக் குழப்பி, செயலற்றுப்போகப்பண்ணின அக்கினி வார்த்தைகள் எத்தனை?** அவைகளை ஈடு செய்யக்கூடுமோ?

இந்த அக்கினி கொளுத்தப்பட்ட நோக்கம் என்ன? சாதாரணமாக வயலில் அறுவடை முடிந்த பின் தேவையற்ற அனைத்தையும் கொளுத்திவிடுவது குடியானவரின் வழக்கம். **தனக்குத் தேவையற்றவைகளைக் கொளுத்துகிறவன் மற்றவர்களின் வாழ்க்கையில் தேவையானவைகளைக் கொளுத்திப் போட**

**வாய்ப்புண்டே** (Burning of thorn can damage the corn). கொளுத்தும் நேரத்தில் "காற்று" இல்லாமல் இருந்து, அது அணைவதற்கு முன்னால் அடிக்கும் ஒரு காற்று அடுத்தவரைப் பாதித்துவிடுமே. அல்லது நாம் கவலையீனமாக இருக்கும்போது **வேறொருவர் விஷமத்தனமாக செயல்பட்டு** அடுத்தவரை சேதப்படுத்திவிடக்கூடுமே.

ஆனால், தேவ பிரசன்னம் அதனை ஈடு செய்யச் சொல்கிறது. நாம் மற்றவர்களுக்காகக் கரிசனை கொள்ளவேண்டியவர்கள் (shows accountability), இழப்புக்கு ஈடு செய்யவேண்டியவர்கள் (Restitution). சகேயு "நான் யாரிடத்திலாவது அநியாயமாய் வாங்கினது உண்டானால் நாலத்தனையாகத் திரும்பத் தருவேன்" என்பதனைப் பின்பற்றுவோர் இன்று எத்தனை பேர்?

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். குடும்ப வாழ்வில், சபை வாழ்வில், ஊழிய வாழ்வில், சமுதாயத்தில் நம்மால் பாதிக்கப்பட்டவர்களின் பாதிப்பு நம்மைப் பாதிக்கட்டும். சொல் அளவில் அல்ல செயலளவில் இதனைக் காண்பிக்கவும், இந்த அக்கினியின் பெரிய தீமைதனைக் கண்டுகொள்ளவும் தேவன் நமக்கு உதவுவாராக. அநேகருடைய வாழ்வு அதனால் செழிக்கட்டும்; இழப்புகள் தவிர்க்கப்படட்டும், இளமை ஜொலிக்கட்டும்.

அன்று சீஷர்கள் அறியாமல் (தங்களுக்குள் இருக்கும் ஆவி என்ன என்பதனை) அக்கினி இறக்கி சமாரியரை அழிக்க ஆண்டவரிடம் அனுமதி கேட்டனர். ஆண்டவராகிய இயேசுவோ, அவர்களை அதட்டினார் என்பதனை மறக்காதிருப்போமாக. (லூக் 9:51-55)

எஜமானின் வேலைக்காரர்கள் களைகளைப் பிடுங்கிப் போட அனுமதி கேட்டனர். ஆனால், எஜமானோ "வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையும் கூட பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள் என்றார். கனிகளின் மீது அத்தனை கரிசனை உள்ளவர் நம் எஜமான் (மத் 13:24-30).

நான் அநியாயமாய் வாங்கினதைத் திரும்ப நாலத்தனையாய் தருவேன் என்ற சகேயுவை, ஆபிரகாமின் குமாரன் என்று கூறி மகிழ்பவர் நம் தேவன். (லூக் 19:8-9)

சத்துருதான் நம்மை தீயில் தள்ளவைத்து வேதனையை உண்டாக்குகிறவன். (மத் 17:15)

**மற்றவர்களின் அழிவில் குளிர்காய நினைப்பவர்களும் உலகில் உண்டு.** எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம் என்போரும் உண்டு. அந்த வகைக் கூட்டத்தில் நாம் சேர்ந்திடலாகாது.

நாவாகிய நெருப்பு (யாக் 3:5,) பொசுக்கிப் போட்டவர்களின் எண்ணிக்கை உலகில் ஏராளம்; கவனமாய் இருப்போம்.

அந்நிய அக்கினியைப் பற்றவைத்து ஆண்டவரின் அக்கினியால் அழிந்தவர்கள் உண்டு; கவனம். (லேவி 10:1-2)

# 4. அழைப்பைக் குறித்த தெளிவு

பரிசுத்தமானதற்கும் பரிசுத்தம் இல்லாததற்கும், தீட்டானதற்கும் தீட்டல்லாததற்கும் இருக்கும் வித்தியாசத்தை ஜனத்துக்குப் போதிக்கவே ஆசாரியர்களை நியமித்தார் ஆண்டவர் (எசேக் 44:23). அந்த ஆசாரியன் (ஊழியக்காரன்) அவருக்குப் **பயந்து நடக்க வேண்டும்** என்பதும், ஆசாரியனின் **வாயில் சத்திய வேதம்** இருக்க வேண்டும் என்பதும், அவர்களுடைய **உதடுகளில் அநியாயம் காணப்படக்கூடாது** என்பதும், அவரோடு கூட **சமாதானமும் யதார்த்தமுமாய் சஞ்சரிக்க வேண்டும்** என்பதும், **அநேகரை அக்கிரமத்தினின்று திருப்புவார்கள்** என்பதும் தேவனுடைய பெரிதான எதிர்பார்ப்பு (மல்-2:5-7). அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள் (ரோமர்-12:11) என்கிற கட்டளை வசனம் அனைவருக்கும் உரியது என்பதனால், நம்மிலும் இதனை எதிர்பார்ப்பார் என்பது உறுதி.

அப்படியானால், நமது ஊழியத்தில் நாம் எப்படி செயல்பட வேண்டும்? என்ற அடிப்படைக் காரியத்தினை அறிந்து கொள்வது **அனைவருக்கும் நல்லது; அவை,**

**அழைப்பு**

**அர்ப்பணிப்பு**

**அயரா உழைப்பு**

**அரவணைப்பு** என்பவைகளே

**அனைவரும் தன்னுடைய அழைப்பைக் குறித்த தெளிந்த அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்**; இவைகள் தெளிவாகப் போதிக்கப்படுதல் அவசியம். ஞானஸ்நானத்தின் மூலம் நான் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாகும் போது (1கொரி. 12:13), அதன் செயல்பாட்டைக் குறித்த அறிவு இல்லாமல் போனால் எப்படி நான் செயல்பட (ஊழியம் செய்ய) முடியும்? "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்" (1பேதுரு 2:21) என்ற வாசகங்கள் நம்மை தாண்டிப் போய் விட விட்டு விடாதீர்கள்.

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் (1தெச5:24) என்பது வெறும் வாக்குத்தத்த வசனமாக மாத்திரம் நின்று விடக்கூடாது. **அழைக்கிறவர் உண்டு என்றால் அழைப்பு பெற்றவர்களும் உண்டு தானே.** அழைப்பு பெற்றவன் என்றால், எதற்காக? என்கிற கேள்விக்கும் பதில் கண்டாவேண்டுமே. **பரிசுத்தத்திற்கும்** (1தெச.4:7), **பாடுபடுவதற்கும்** (1பேதுரு 2:21), **கனிதரும் வாழ்க்கைக்கும்** (2பேதுரு 1:3-8), **அவரின் புண்ணியங்களை அறிவிப்பதற்கும்,** (1பேதுரு 2:9), **தப்பிப் போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புவதற்கும்** (யாக். 5:20), **மற்றவரை அக்கினியினின்று இழுத்து விடுவதற்கும்** (யூதா : 22), **கட்டுண்டவர்களை கட்டவிழ்ப்பதற்கும், காயங்கட்டுதலுக்கும்** (ஏசாயா 61:1&2), **திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் உபத்திரவத்திலே விசாரிக்கவும்** (யாக் 1:27), **நற்காரியங்களைப் போதிக்கவும்** (தீத்து 2:5), **நற்கிரியைகளைச் செய்யவும்** (தீத்து 3:14), **தரித்திரரை நினைத்து உதவவும்** (கலா 2:10), **துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிக்கவும்**(ரோமர்12:14,1பேதுரு3:9), **துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபிக்கவும்** (மத்.5:44) **அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதனை மறக்கலாகாது.** இன்னமும் அடுக்கிக் கொண்டே போகலாம். மேலே சொல்லப்பட்ட அனைத்தும் நாம் அனைவரும் செய்ய வேண்டியவைகளே.

ஆயினும், தேவ இராஜ்ஜிய கட்டுமானத்தில் என் பங்கு அல்லது வேலை என்ன என்பதனை அறிந்து செயல்படுதல் அனைத்து விசுவாசிகளுக்கும் உரியவை என்பது அநேக நேரங்களில் மறக்கப்படும் உண்மை.

**தன்னுடைய அழைப்பை தேவ இராஜ்ஜியம் கட்டும் பணியில் உணர்ந்து கொண்ட எந்த மனிதனும் எந்த இடத்தில் அமர்த்தப்பட்டு இருந்தாலும், எந்த சூழ்நிலையில் இருந்தாலும் எப்படியாகிலும் செயல்பட்டே ஆவான்.** முழு நேரமாகவா பகுதி நேரமாகவா என்கிற கேள்விகள் இங்கே எழும்புவதில்லை. மொத்தத்தில் எவ்வளவு நேரம் எனக்காக உழைக்கிறேன், எவ்வளவு நேரம் தேவனுக்காக உழைக்கிறேன் என்பதனை விட, **எவ்வளவு நான் எனக்கு வைத்துக் கொள்கிறேன் எவ்வளவு நான் தேவனுக்குத் தருகிறேன் என்பது மிக முக்கியம். அது நேரம், பணம், தாலந்து, கிருபை, உழைப்பு அனைத்தையும் உள்ளடக்கியது.**

அதனைத் தொடர்ந்து வருவது **அர்ப்பணிப்பு.** அழைப்புப் பெற்றோரும் அறிந்து கொண்டோரும் அர்ப்பணித்துவிடுவதில்லை. அது அடுத்த மைல் கல். அர்ப்பணிக்கத் தயக்கம் கொண்டோரின் எண்ணிக்கை ஏராளம். "அனைத்தும் கிறிஸ்துவுக்கே" எனப் பாடுவோர் எத்தனை வாய் கிழியப் பாடினாலும் செயலில் அது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. ஊழியத்திற்கு வந்துவிட்டவர்களிலும் பலரின் நிலை இந்தக் காரியத்தில் பரிதாபமானதே! **ஏன் அர்ப்பணிக்கத் தயக்கம் வருகிறது**? என்பதனை ஆராயுங்கால் சில காரியங்கள் பளிச்சென்று விளங்கும்.

முதலாவது பயம்; **எதிர்காலத்தினைக் குறித்து, தங்களின் பேர் புகழைக் குறித்து (Prestige), வருங்கால சந்ததியைக்குறித்து, மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள்? என்று, உற்றார் உறவினர் மற்றும் பெற்றோரின் நிலையைக் குறித்து, தன்னுடைய பலவீனங்களைக் குறித்து** என்று பலவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் வேதமோ! "என் கிருபை உனக்குப் போதும்" (2கொரி 12:9), பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும் (1யோவா 4:18), தாங்குவேன், தப்புவிப்பேன், ஏந்துவேன், சுமப்பேன், முதிர்வயதிலும் கைவிடாதிருப்பேன் (ஏசாயா 46:3,4), நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்திற்கு இரந்து (கையேந்தி) திரிகிறதையும் நான் காணவில்லை (சங் 37:25) என்றெல்லாம் வாக்குத்தத்தங்களை அள்ளி வீசுகிறது. ஆயினும் அழைத்தவரை பூரணமாக நம்பக் கூடாததாலே அர்ப்பணத்தையும் நாம் செய்ய முடிகிறதில்லை. நம்புவதற்கு ஏதுவில்லாதிருந்தும் அவன் நம்பிக்கையோடு விசுவாசித்தான் (ரோமர் 4:18) என்று சாட்சி பெற்ற ஆபிரகாமின் சந்ததியல்லவா நாம்? அர்ப்பணித்துவிட்டு செயலற்றுப் போய் விட்டவர்களும் ஏராளம். **"கடின உழைப்புக்கு இணையில்லை"** என்ற வாசகங்கள் **"எமர்ஜன்ஸி"** காலத்திற்கு மட்டுமல்லாது எக்காலத்துக்கும் உரியது, இந்த வாசகங்கள் இந்தியா "நெருக்கடி (Emergency) காலத்தில் இருந்த போது அநேக இடங்களில் எழுதப்பட்டது ஞாபகமிருக்கலாம். அயராமல் உழைத்தவர் இயேசு, அப்போஸ்தலர்களும் அயராது உழைத்தனர். தனக்குக் கொஞ்ச காலம் தான் உண்டு என்று உணர்ந்த சத்துரு (வெளி 12:12) வேகமாகச் செயல்படும் போது, நாம் **அவனின் உபாய தந்திரங்களை முறியடிக்க அழைக்கப்பட்டபடியினால்,**

**இன்னமும் உத்வேகத்தோடும் இளைப்படையாமல் ஓட வேண்டியது எத்தனை அவசியம்.** சோம்பேறிகளைத் தேவன் உபயோகப் படுத்துவதில்லை. இயேசு தம் ஊழியத்தில் தெரிந்து கொண்டவர்கள் அனைவருமே அவர் அழைத்தபோது சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தார்கள் (லூாக் 5:2, மத் 4:21, மத் 9:9). எறும்பினிடத்தில் போய் கற்றுக் கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும் அதிகாரியும் இல்லாதிருந்தும் அது சுறுசுறுப்பாய் செயலாற்றுகிறதே. அதாவது, அதனை விரட்டி வேலை வாங்க ஆட்கள் இல்லாதிருந்தும் அது அயராமல் உழைக்கிறதே! (நீதி6: 6,7) என்பது ஞானியாகிய சாலமோனின் ஆலோசனை. சோம்பேறியின் வயல் முள்ளுக்காடும், காஞ்சொறியும் நிறைந்தது என்பதும் (நீதி 24:30,31) மறக்கலாகாதது.

கூடவே, **ஊழியத்திலும் வாழ்க்கையிலும் மற்றவர்களை அணைத்துச் செல்வது மிகவும் முக்கியம்.** அதிகாரத்தோடு எதையும் ஊழியத்தில் நாம் சாதித்துவிட முடியாது. ஓய்வு நாளுக்காக மனிதன் உண்டாக்கப்படவில்லை என்று சொன்ன ஆண்டவர் (மாற்கு 2:27), மனிதனை மையமாகக் கொண்ட (People Oriented) காரியங்களைக் கவனிக்கச் சொல்லுகிறார்; நிகழ்ச்சி நிரல்களோ (Programme Oriented) குறிக்கோள்களோ (Goal Oriented) அல்ல. நல்ல சமாரியன் உவமையிலும் இயேசு இதனை வலியுறுத்திச் சொல்லுகிறதைக் காண்கிறோம். சமாரியன் மாத்திரமே மனிதனை மையமாகக் கொண்ட வாழ்க்கை வாழ்ந்ததினால், தன்னுடைய குறிக்கோளையும், நிகழ்ச்சி நிரலையும் தியாகம் செய்ய ஆயத்தமாயிருந்தான். ஆசாரியனும், லேவியனுமோ தங்களின் நிகழ்ச்சி நிரலையே முக்கியப்படுத்தி விலகிப்போனபோது உதவி செய்கிறவனாய் முன்மாதிரியான பாத்திரமாய் சமாரியன் மாறிப் போகிறான். அரவணைப்பு ஊழியத்தின் பாதையில் எத்தனை அவசியம் என்பதனை அறிந்த தலைவர்கள் எத்தனை? ஊழியர்கள் எத்தனை? **"எல்லாவற்றிலும் அன்பே பிரதானம்"** (1கொரி 13:13) என்பது உண்மையானால் இந்த பணியினைச் செய்வது எத்தனை எளிது.

# 5. பெலப்படுத்தும் கிறிஸ்து

நீதியாய் **நடந்து,** செம்மையானவைகளைப் **பேசி,** இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் **கைகளை** உதறி, இரத்தஞ் சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் **செவியை** அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் **கண்களை** மூடுகிறவனெவனோ, அவன் **உயர்ந்த** இடங்களில் வாசம்பண்ணுவான். கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த **அடைக்கலமாகும்.** அவன் **அப்பம்** அவனுக்குக் கொடுக்கப்படும். அவன் **தண்ணீர்** அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். உன் கண்கள் ராஜாவை **மகிமை** பொருந்தினவராகக் காணும், தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும் (ஏசாயா 33:15-17). **நம்முடைய தேவன் நமக்குத் தரும் உயர்வும், பாதுகாப்பும், நிம்மதி நிறைந்த நிறைவாழ்வும், மகிமையுள்ள பிரசன்னமும், தரிசனமும் நம்முடைய தீர்மானங்களைச் சார்ந்தது என்பதனை மறக்காவண்ணம் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமே இது.**

இப்படிப்பட்ட வாழ்வை இப்பாழ் உலகில் நம்மால் வாழ முடியாது என நினைப்பவர்கள் ஏராளம். ஆனால், பவுலோ "என்னைப் பலப்படுத்துகின்ற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" என முழங்குகிறார். (பிலி 4:13)

அநேக நேரங்களில் நாம் நினைக்கலாம் "என்னைச் சுற்றி உள்ள மனிதர்கள் இப்படி இருக்கிறார்களே! ஊழியம் செய்யும் ஊழியர்கள் இப்படி இருக்கிறார்களே! நாம் நம்பும் மனிதர்கள் இப்படி உள்ளார்களே!" என்ற கேள்விகள் உங்களைத் துளைத்து எடுக்கலாம். **"இவர்கள் மத்தியில் வாழும் நான் என்னைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்வது எப்படி? தேவன் எனக்குத் தந்தவைகளைச் செய்து முடிக்க முடியுமோ?"** என்ற சந்தேக தொனிகளும் உங்களை மேற்கொள்ளலாம்.

பவுலுக்கு அப்படி ஒரு காரியம் நிகழவில்லையா? கொஞ்சம் பிலிப்பியர் நிருபத்தினை வாசித்துப் பாருங்கள் அப்போது புரியும். முதலாம் அதிகாரத்தில் சுவிசேஷத்தின் நிமித்தம் கட்டப்பட்டு,

நாளை என்ன நடக்கும் என்பதனை அறியாமல் சிறைச்சாலையில் வாழும் **அவனுடைய உபத்திரவங்களைக் கூட்ட நினைக்கும் ஒரு கூட்டம்** அவனைச் சுற்றிக் காணப்படுகிறது (பிலி 1:16). அவர்கள் கிறிஸ்துவைத்தான் அறிவிக்கிறார்கள், ஆனால் **உள் நோக்கம்** வேறு; **சுத்த மனதும்** இல்லை. இன்றும் அப்படிப்பட்டவர்கள் இல்லையா? கிறிஸ்துவைப் பிரசங்கிக்கும் நோக்கம் மற்றவர்களுக்குக் கஷ்டம் உண்டாக்கவே!

**முன்னமே காரணமின்றி பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். "தன்மேல் சாட்டுகிற குற்றங்களை மற்றவர்கள் நிரூபிக்கமாட்டார்கள் என்பதனையும், தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்போதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படும் வாழ்க்கை வாழ்கிறவன் என்பதனையும், எதிரிகள் யாதொரு அநியாயத்தையும் கண்டதில்லை என்பதனையும் அவரே கூறி அறிவிக்கிறார். (அப் 24:13,16,20)**

**இவன் மரணத்திற்குப் பாத்திரமான ஒன்றையும் செய்யவில்லை என்றுதான் பெஸ்து என்னும் தேசாதிபதியும் எழுதுகிறான் (அப்25:25). இந்த மனுஷன் மரணத்திற்காவது, கட்டுகளுக்காவது பாத்திரமானதொன்றையும் செய்யவில்லையென்று அகிரிப்பா ராஜாவும், தேசாதிபதியும் பெர்னீக்கேயாளும் அவர்களுடனே கூட உட்கார்ந்திருந்தவர்களும் சொல்வதனையும் கவனிக்கலாம் (அப் 26:30,31). அரண்மனையில் வசித்தவர்களுக்கும் அது நன்றாகத் தெரியும் (பிலி 1:13).**

அப்படியிருந்தும் சுத்தமனம் இல்லாததினாலும், நோக்கம் சரியில்லை என்பதினாலும் மற்றவர்களைக் கஷ்டப்படுத்தும் நோக்கமே மேலோங்கி நிற்பதினாலும் இதனைச் செய்தனர். ஆனால், இது பவுலைப் பலவீனப்படுத்தவேயில்லை, பின்வாங்கச் செய்யவுமில்லையே!

அப்படியே உடன் குழுவில் இருந்தவர்களின் நிலையையும் பாருங்கள். தீமோத்தேயுவைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் கிறிஸ்து **இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்** (பிலி 2:21). இன்றைய கிறிஸ்தவ உலகில் இந்தக்

கூட்டத்தில் ஏராளமான பேர்கள் காணப்படலாம். சுவிசேஷ ஊழியத்தில்தான் இவர்கள் உள்ளனர்; பிறருக்கு அறிவிக்கும் பணியில்தான் ஈடுபட்டுள்ளனர். ஒரு மிஷனரியோடு கூட பிரயாணம் செய்யவும், கரடு முரடுகளைச் சந்திக்கவும் தயங்கவில்லைதான். ஆனாலும், "தங்களுக்குரியவைகளையே" என்கிற பதம் பவுலிலிருந்து புறப்படுகிறது. கம்யூனிச தலைவன் ஒருவன் என்னைப் பார்த்து சொன்ன வார்த்தைகளை நான் மறக்க முடியாது. **"நித்தியத்தினையோ, நியாயத்தீர்ப்பினையோ நம்பாத நாங்கள் எங்கள் கொள்கைகளைப் பரப்ப எங்களுக்குரியவைகளையும் விற்று கட்சிக்குச் செலவழிக்கிறோம். ஆனால், நித்தியத்தினையும், நியாயத்தீர்ப்பையும் நம்பி போதிக்கிற கிறிஸ்தவ பிரசங்கிகள் கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி ஐசுவரியவனாக மாறியதனை நாங்கள் காண்கிறோமே? ஏன்?"** இது அநேகருக்கு இடையூறு, தடைக்கல்.

இந்த மாதிரி மனிதர்களைச் சந்திக்கும் உங்களுக்கும், இப்படிப்பட்டவர்கள் நிமித்தம் இடறல் உண்டாகியிருக்கலாம். ஆனால், பவுலின் வேகத்தினைத் தடுக்காத இந்தக் காரியம் நம்மைப் பாதிக்காதிருப்பதாக.

**தன்னோடு இருந்தவர்களுக்காக தன் சொந்தக் கைகளாலே வேலை செய்து (அப் 20:34), உழைத்து உருவாக்கின குழுவின் மக்களின் சுயநலத்தினையும், சுயத்தினை மையமாகக் கொண்ட வாழ்வினையும் கண்ட மனிதன் அவன்.** சுயம் என்னில் சாம்பலாக மாற சுத்தாவியே அனல் மூட்டும் எனப் பாடுவோர் கூட்டத்தில் காணப்படும் **சுய பெருமை, சுயநலம், பேராசை, பொருளாசை போன்றவைகளைக்** காணும் வாய்ப்பு நம்மில் அநேகரை தளர்ந்துபோகச் செய்ய முடியும். ஆனால், கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, **கிறிஸ்துவே என் ஜீவன்** என வாழும் மனிதன் **கிறிஸ்துவை ஆதாயப்படுத்துவதில்தான்** நோக்கமாய் இருப்பான். **கிறிஸ்துவைத்தான் தன் மாதிரியாகக் கொள்வான். கிறிஸ்துவின் பலத்தில்தான் ஓடுவான்** (பிலி 1:21;3:8;2:5;4:13). அது, கூட இருப்பவர்களின் ஆவிக்குரிய நிலையினால் சிதறப்படுவதில்லை அல்லது குறைவதில்லை. எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதனை தொடரும்படியான ஆசையான ஓட்டம் அது. மூன்றாவது ஒரு கூட்டம், அது தன்னைச் சுற்றி ஊழியம் செய்யும் மற்றொரு கூட்டம். அவர்கள் கொள்கையும், போதனையும், நடக்கையும் முற்றிலும் மாறுபட்டது.

"அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு. அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே. **அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்**" (பிலி 3:18,19). இப்படிப்பட்ட கள்ள அப்போஸ்தலர்களால், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்ட **வேஷதாரிகள்** (2கொரி 11:13), கள்ளப் போதகர்கள் கேட்டுக்கேதுவான வேதபுரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்பவர்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள்நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளினால் தங்களுக்கு மக்களை ஆதாயப்படுத்திக் கொள்பவர்கள் (2பேதுரு 2:1-3). அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கு ஏற்றபடி நடந்து கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவர்கள் (2பேதுரு 2:10).

இப்படி ஊழியங்கள் பெருகிவரும் இந்நாட்களில் அதனால் சூழப்பட்டுள்ள உண்மை ஊழியர்களும் இதுதான் சிறந்த வழி என்று அதனைப் பின்பற்றத் துடிக்கும் இந்நாட்களில், **உண்மை ஊழியனின் கண்கள் கண்ணீரால் நனைகின்றன.** (பிலி 3:18)

மந்தையைத் தப்பவிடாத இந்த ஓநாய்கள் ஆட்டுத் தோல் போர்த்திய கொடிதான ஓநாய்கள். ஆனபடியால் இரவும் பகலும் கண்ணீர்தான் இவர்கள் உணவு (அப் 20:20-21). தாங்கள் போன பின்பு சபையாம் மந்தைக்கு என்ன நேரிடும் என்பதனை நினைத்து விழிப்பாய் இருக்க முயற்சி செய்பவர்கள் (அப் 20:20). உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த் தாரைகள் ஓடுகிறது (சங் 119:136) என்ற வேதனை. பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிற்று. இவ்விதமாய் பாடுபட்டேன் (ஆதி 31:40) என்பதே இவர்கள் அன்றாடக வாழ்க்கை. **ஓநாய்களை அடையாளம்**

**கண்டுகொண்டு, அடையாளம் காட்டிக்கொடுத்து, முகமூடியினைக் கிழித்து, அவர்கள் போர்த்திக்கொண்டிருந்த தோலை உரித்து உலகத்திற்கு காண்பிப்பவர்கள் உபயோகிப்பது கண்ணீரின் ஆயுதமே.** அவர்கள் பைத்தியக்காரர்களாகவே காட்சி அளிப்பர் (அப் 20:24; 1கொரி 4:10).

கண்ணீரே உணவாயினும் பவுலை அசைக்கவில்லை. என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்ற முழக்கம் அவனை விட்டு எடுக்கப்படக் கூடாத ஒன்று.

கடைசியாக, பிலிப்பியரில் காணப்படும் அடுத்தக் கூட்டம் 4ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. தான் ஸ்தாபித்த சபையில் காணப்படும் பிரிவினையே. சிந்திகேயாளும், எயோதியாளும் சுவிசேஷ ஊழியத்தில் மிகவும் பிரயாசப்படுகிறவர்கள். தங்களின் நாமங்கள் கர்த்தரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பாக்கியம் பெற்றவர்கள்; ஆயினும் **இருவருக்கும் ஒத்துப்போகவில்லை. இணைந்து செயல்படக் கூடாமற்போக இவர்களின் தன்னம்பிக்கை இடம் கொடுக்க மறுக்கிறது.** அதனைக் கண்டு வேதனைப்படவேண்டிய சூழ்நிலை. கட்டப்பட்டு சிறையில் இருக்கும் அவன் மற்றவர்களின் உதவியை நாடி எப்படியாவது இணைந்து செயல்படமாட்டார்களா? எனத் துடிப்பவர்.

ஆனால், இவை ஒன்றினாலும் பவுலையும் அவருடைய ஆவலையும், தரிசனத்தையும் குறைக்க இயலவில்லை. அதுபோலவே சூழ்நிலையையும், சுற்றி இருப்பவர்களையும் பார்த்து அவர்களுடைய நடக்கைகளையும் கண்டு இடறாதபடிக்கு தேவன் உங்களைக் காப்பாராக.

# 6. தேவ கரத்தில் பிள்ளைகள்

அநேகர் நாங்கள் பார்த்து பின்பற்றக்கூடிய நபர்களைக் காணோமே? என்று மிகுந்த கரிசனையோடு கூடிய கேள்விகளைக் கேட்டனர். விசேஷமாக சில பெற்றோர் என்னிடம் **"என் பிள்ளைகளை வளர்க்கும் சூழ்நிலைகள் எங்கும் சிதைந்து காணப்படுகிறதே"** சமுதாயம் அது சீர்கெட்டு உள்ளது, சபைகளிலும் உலகம் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்துள்ளது. சொந்தக்காரர்கள் மத்தியில் என் பிள்ளை பண ஆசை உடையவனாக மாறுவதற்கு அனைத்துக் காரியங்களும் காணப்படுகிறது. பள்ளியில் அல்லது கல்லூரியில் அவர்களைப் பாழடிக்கும் அனைத்தும் தாராளமாகக் கிடைக்கிறது. என்ன நடக்கும் என்கிற பயத்தினால் அக்கம் பக்கம் என்று கூட அனுப்ப இயலவில்லை" என்ற புலம்பலின் வார்த்தைகள், தங்களுடைய வருங்கால சந்ததி தேவனுக்குப் பயந்து ஆவிக்குரிய வாசனை உடையவர்களாக இருக்கவும், ஆண்டவர் விரும்பும், உபயோகிக்கும் பாத்திரமாக இருக்கவேண்டும் என்பதனையும் கருத்தில் கொண்டு கவலைக்குள்ளாவதனை வெளிப்படுத்துகின்றது. இன்றைய சூழ்நிலையில் இது நூற்றுக்கு நூறு உண்மையே. அப்படிப்பட்டவர்கள் தேவ கரத்தில் தங்கள் பிள்ளைகளை ஒப்புவித்து வாழவேண்டும்.

**முதலாவது ஈசாக்கு :** அநேக வருடங்களாக காத்திருந்ததின் பலனாக கிடைத்த பிள்ளை. ஆனால், கூடி விளையாட குடும்பத்திலேயே கிடைத்த பிள்ளையைக் கவனித்துப் பாருங்கள்; அவன் பரியாசக்காரன் (அப் 21:9), கேலி பேசுவதில் நிபுணன். சாராள் கவனிக்கும் அளவுக்கு கேலி பேசுகிறவன். பிஞ்சு உள்ளத்தினைப் பாழாக்கும் வண்ணம் "டீன்" ஏஜில் உள்ள ஒருவன் முயற்சிக்கும் குணம் கொண்ட பிள்ளையோடு வளர்க்கப்படும் நிலை. இது என்னுடைய பிள்ளையை பின்னால் பரியாசக்காரனாக மாற்றிவிடுமே. பரியாசக்காரன் தன்னுடைய சுய இச்சையின்படி நடக்க ஆரம்பித்து விடுவானே (2பேது 3:3). தேவ வாக்குத்தத்தங்களையும் பகடி செய்ய ஆரம்பித்துவிடுவார்களே (வச.4). என் மகன் வாக்குத்தத்தத்தின் புத்திரன் அல்லவா! அது அவனைத் தேவனை விட்டு தூரம் போய்விடச்

செய்யுமே. **நான் தேவனை "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து வயது சென்ற பின்னரும், ஸ்திரிகளுக்குள்ள வழிபாடுகள் நின்றுபோன பின்னரும் அடைந்த பிள்ளை அல்லவா!** (எபி 11:11).

ஆனால் நடந்த காரியங்களை உற்று கவனியுங்கள். தேவன் சொன்னவைகளை உற்று கவனிக்கவும், அப்படியே நம்பவும் அழகாக கற்றிருந்தான் ஈசாக்கு (ஆதி 22:8; ஆதி 26:2-5). தேவன் பிள்ளையுடனே இருந்தார். பிள்ளையும் தேவனோடு உறவாடும் பழக்கம் கொண்டவனாகவே வாழ்ந்தான் (ஆதி 24:63); எத்தனை உண்மை அது!

**இரண்டாவதாக யோசேப்பு:** இவனும் மிகவும் வியாகுலம் கொண்ட ஒரு தாய்க்கே பிறந்தான் (ஆதி 30:24). குடும்பத்தில் பிள்ளை பெறுவதில் கூட போட்டா போட்டி உள்ள குடும்பச் சூழ்நிலை. உடன் சகோதரரோ, துன்மார்க்கத்திற்கு பெயர்போனவர்கள் (ஆதி 37:2). இரண்டு பேர் கொலைகாரர்; அதுவும் வன்மம் வைத்து ஊரையே அழித்தவர்கள் (ஆதி 34-ம் அதிகாரம்); ஒருவன் உல்லாச வேளைகளில் வேசியைத் தேடிச் செல்கிறவன் (ஆதி 38:15,16); பொறாமைக்கு அனைவரும் பெயர்போனவர்கள் (ஆதி 37:11); தேவ தரிசனங்களைக் கேலி செய்கிறவர்கள் (ஆதி 37:19,20); மாய்மால ஜீவியத்திலும் நாடகமாடுவதிலும் கில்லாடிகள் (ஆதி 37:31-35); ஒன்றுவிட்ட தாயையும் கறைபடுத்தத் துணிந்தவர்கள் (ஆதி 49:4); அக்கா ஒரு மினுக்கி (ஆதி 34:1).

**இதன் மத்தியில், சூழ்நிலையில் ஒரு பிள்ளை எவ்வாறு பரிசுத்தத்தினை வாஞ்சிக்க முடியும்? வலிய வரும் பாவ வாய்ப்புகளை எப்படி நழுவவிடமுடியும்? எப்படி மற்றவர்களுக்காக கரிசனை கொள்ளமுடியும்? தேவ ஆவியினால் நிறைந்த வாழ்வு வாழ்ந்து தேசம் அழியாதபடி காக்க முடியும்? தீங்கு செய்தோருக்கு எப்படி மன்னிப்பை தயாளமாக வழங்க முடியும்? ஆனால், யோசேப்பால் அனைத்தும் சாத்தியமாயிற்று.**

ஏன்? எப்படி? தேவன் யோசேப்போடே இருந்தார் (ஆதி 39:2; 29:11). அது அந்நிய தேசமாயிருந்தாலும் அல்லது சிறைச்சாலையாய் இருந்தாலும் அதுவே அவனுக்கு பாதுகாப்பு.

இதுதான் உங்கள் பிள்ளைகளுக்கும் இன்றைய தேவை. தேவனோடு நடக்கச் சொல்லிக் கொடுத்துவிடுங்கள். அவர் நோக்கம் அவர்களிலும் நிறைவேறும்.

**மூன்றாவதாக சாமுவேல்:** இவனும் வியாகுலத்தில் பிறந்த மகனே (1சாமு 1:10,11). பால் மறந்தவுடன் ஆலயத்தில் விடப்பட்ட அவன் இருந்த சூழ்நிலையைப் பாருங்கள். ஆசாரியர்கள் என்று அழைக்கப்பட்ட ஒப்னி, பினகாஸ் பேலியாளின் மக்கள். பிரயோஜனமற்ற துன்மார்க்கர். கர்த்தரையும் அவர்கள் அறிந்ததில்லை (1சாமு 2:12); பெருந்திண்டிக்காரர், மனிதர்கள் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துவதனை வெறுப்பாக எண்ணும் அளவுக்கு அட்டகாசம் செய்தவர்கள். அடியாட்களின் பலத்தில் செயல்பட்டவர்கள் (1சாமு 2:13-17); ஒரு பெண் பிள்ளையை அதிலும் தேவ சந்நிதியில் ஆராதிக்க வருபவர்களை விட்டுவைப்பதில்லை (1சாமு 2:22); தகப்பன் இவர்களைக் கண்டிக்கக் கூடாத இடத்தில் இருந்தவர்கள் (வச 25); ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாக வாழ்ந்தவர்கள் (வச 24); அவர்களுடைய பொல்லாத நடக்கை தேவனை மிகவும் கோபப்படுத்தியது (வச 25); அவர் அவர்களை அழிக்கவும் சித்தங்கொண்டார். தீர்க்கதரிசியை அனுப்பியும் அவர்கள் அதனை அசட்டையே செய்தார்கள் (வச 26-36).

இந்த சூழ்நிலையில் சாமுவேல் வளர்க்கப்பட்டால் எப்படி இருக்கும்? யாரைப் பார்த்து அவன் கற்றுக்கொள்வான்? என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், சாமுவேல் எந்த துன்மார்க்கமும் காணக்கூடாதபடிக்கும், கர்த்தரின் வார்த்தையை தெளிவாய் அறிந்து வாழுகிறவனாகவும் காணப்படுகிறான். "நானோ கிழவனும் நரைத்தவனுமானேன். என் சிறு வயதுமுதல் இந்நாள் வரைக்கும் உங்கள் முன்பாகச் சஞ்சரித்து வந்தேன். இப்போதும் கர்த்தரின் சந்நிதியில் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுங்கள். **நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன் யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ் செய்தேன்? யாருக்கு இடுக்கண் செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்? " என்று சவால் மிகு வார்த்தைகளைக் கேட்கத் தக்க சுத்தமுள்ளவனாகத் தன்னைக் காத்துக்கொண்டவன்** (1சாமு 12:2,3).

எப்படி நடந்தது? கர்த்தர் அவனுடனே இருந்தார் (1சாமு 3:19). இன்று உங்கள் பிள்ளை அறியவேண்டியதும், நீங்கள் பயிற்சிக்க வேண்டியதும் இதுவே, கர்த்தர் அவர்களோடு இருக்க கற்றுக்கொடுப்பதே.

**நான்காவதாக தாவீது:** அவன் தகப்பனால் மறக்கப்பட்டவனே (1சாமு 16:11). தாயும் கூடத் தன்னை மறந்துவிட்டாள் என்றே அவன் கூறுகிறான் (சங் 27:10). சகோதரர்களோ யுத்த வீரர்கள், ஆனால் சவாலைச் சந்திக்க தைரியமற்றவர்கள் (1சாமு 17:13,24). தங்களுக்குத் தகப்பன் அனுப்பிய ஆகாரத்தை எடுத்துக்கொண்டு வந்த குட்டி தம்பியைக் கடிந்துகொள்ளத் தயங்காத கல் நெஞ்சர்கள் (1சாமு17:28). சுகம் விசாரிக்க வந்தவனிடத்தில் ஆடுகளைப் பற்றிய கவலையையே வெளிப்படுத்தியவர்கள் (1சாமு 17:18,28). பொருள்களைக் குறித்த கவலையே அதிகம்; மனித உறவுகளைக் குறித்து அல்ல என்ற இந்த நாட்களின் சிந்தையை வெளிக்காட்டும் உடன் பிறந்தோர். இந்த சூழ்நிலையில் பிள்ளை எப்படி வளரமுடியும்? ஆனால் தாவீதோ, ஒரு மாறுபட்ட மனிதன்; எதிரியையும் தொடுவதற்கு அஞ்சினவன் (1சாமு 24:5; 26:11). தன் ஆபத்துக்காலத்திலும் தன் சகோதரரையும் அவர்களின் குடும்பத்தாரையும் பேணிக் காப்பாற்றினவன் (1சாமு 22:1); நன்றிகெட்டவர்களையும் விடுவிக்க தேவ பலத்தில் போராடும் சுபாவம் கொண்டவன் (1சாமு 23:1-12). என் ஆத்துமாவே கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே என்று (சங் 103:2) மறக்காமல் நன்றியோடு வாழ்பவன்; எப்படி நடந்தது?

**கர்த்தர் அவனோடிருந்தார் (1சாமு 18:28); இதுவே தேவை, இதுவே இரகசியம். உங்கள் பிள்ளைகளோடு கர்த்தர் இருக்கும் காரியத்திற்கு முக்கியத்துவம் தாருங்கள்.**

**தீமோத்தேயும் இப்படியே!** குடும்ப சூழ்நிலை : கலப்பு திருமணத்தில் நடந்த ஒரு சூழ்நிலை, ஆனால் பக்தியுள்ள தாயும், பாட்டியும் (அப் 16:1, 2தீமோ 1:5) இருந்த இடம் வளர்ந்த சூழ்நிலை லிஸ்திரா என்னும் பட்டணம், அப்பட்டணத்தில் உள்ளோர், தங்களுடைய எண்ணங்களில் ஸ்திரமற்றவர்கள். போற்றுவோரைத் தூற்றவும்,

ஏன் கல்லெறியவும் அஞ்சாதவர்கள். மனிதர்களையும் தெய்வமாக மதிப்பார்கள், பின்னர் ஒரு நாயைப்போன்றும் நடத்துவார்கள்; என்ன ஏது என்று தீர விசாரியாமலே கேட்டதனை உடனே பின்பற்றிச் செல்ல தங்கள் உணர்வுகளுக்கு முக்கியத்தும் தருபவர்கள் (அப் 14:8-19). பயந்த சுபாவம் உடையவன் (1கொரி 16:10); பெலவீனன் (1தீமோ 5:23); ஆனாலும், **வெளி உலகத்தின் அல்லது வளர்ந்த சூழ்நிலையின் தாக்கம் அவனைப் பாதிக்கவில்லை. மாறாக என்னைப்போல் மனதுள்ளவன் என்று பவுல் சொல்லுமளவிற்கு உத்தமத்திலும், விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், பாடுகள் அனுபவிப்பதிலும் உயர்ந்து நிற்கிறான்** (பிலி 2:20).

கர்த்தரின் கிரியை நடப்பிக்கிறவன் (1கொரி 16:10). பிரியமானவர்களே, இன்றைய உலகம் பொல்லாங்குக்குள் கிடக்கிறது என்பது நாம் அறிந்ததே (1யோ 5:19), நம் பிள்ளைகளும் அனுதினமும் பள்ளி, கல்லூரிகள் செல்லவோ அல்லது வேலை செய்யவோ இந்த உலகத்தில் சென்றுவிடவேண்டியுள்ளது; சபைகளிலும் இன்று அநேக சீர் கேடுகள்; ஊழியர்களின் பிள்ளைகளிலும் அநேகர் தேவ நோக்கம் உள்ளவர்கள் அல்ல. உறவினர்களோ தேவ பக்தியினை வேஷ மாகத் தரித்திருப்பவரே அதிகமாக உள்ள நாட்கள், பணமே பிரதானம் என்றும் அதனை அடைய எதனையும் செய்ய துணிகரம் கொண்ட ஒரு பெருங்கூட்டத்தின் மத்தியில் நம் பிள்ளைகள் வளரவேண்டியுள்ளது.

உல்லாசம் நாடி, ஆடம்பரம் மிகுந்து, தாழ்மை, எளிமை, தூய்மை, தியாகம் என்ற நற்குணங்களை மதியாமையே இன்றைய ஆவிக்குரிய வட்டாரங்களிலும் காணப்படும் சாதாரண காரியம். பிள்ளைகள் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையோ இல்லை. விஞ்ஞான வளர்ச்சி, டெக்னாலஜி வளர்ச்சி போன்றவை காட்டும் பாதை எளிதில் கறைபடுத்தவே உதவும். **பரிசுத்தம் காக்கப்பட உபயோகப்படும் வார்த்தைகளுக்கு மிகுந்த பஞ்சம். வாழ்ந்து காட்டுவோரும், வழிநடத்துவோருக்கும் ஏகப்பட்ட பஞ்சம். ஆனாலும், தேவனை நம்புவோம், பிள்ளைகளை அவரிடத்தில் ஒப்புக்கொடுப்போம் அவரே அதனைச் செய்துமுடிக்க நம்மால் இயன்றதனைச் செய்து விசுவாசித்து நம்பிக்கையில் தேறுவோம்.**

# 7. தேவ ராஜ்யமே நம் குறியாகட்டும்

இந்திய தேசத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசத்தை நடத்திச் செல்லும் அரசினை தெரிந்துகொள்ளும் தேர்தலில் **பல கோடி இளைஞர்களின் வாக்குகள் காரியங்களை நிர்ணயிக்க, நிலைநாட்ட, மாற்ற உபயோகப்படப்போகிறது. வாழ்க்கையில் சரியான பிடிப்பில்லாத அநேகர் தேசத்தின் நிலையை நிலைநாட்ட உபயோகப்படப்போகின்றனர்.** அவர்கள் ஆர்வத்தின் மிகுதியினால் இதில் அதிக உற்சாகமாய்ப் பங்கு பெற வாய்ப்புண்டு. தேவனுக்கு **பயப்படக்கூடியவர்களே** தேசத்திற்குத் தேவை.

இந்நிலையில் தேவமக்கள் மத்தியில் இன்னுமொரு போர் நடந்துகொண்டிருப்பதனை கவனிக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம். இந்த போர் வெளியே தெரியாவிட்டாலும், **அநேகருடைய அறியாமையின் நிமித்தம் பலமாகவே நடைபெறுகிறது** என்பதனை ஆவிக்குரிய உலகினை நன்றாய் உற்று நோக்கினால் விளங்கும். அடிப்படையான உண்மைகளை அறிந்துகொள்ளும்படி சில காரியங்களை விளக்க விரும்புகிறேன்.

நாம் மறுபடியும் பிறக்கும்போது, அதாவது பாவமன்னிப்பின் நிச்சயத்தை இயேசு கிறிஸ்துவில் பெற்று அவருக்குள் வாழ ஆரம்பித்து, ஆவிக்குரிய உலகில் பிரவேசிக்கும் போது **தேவ இராஜ்யத்தின் பிரஜை** ஆகிறோம் என்பதனை மறக்கலாகாது.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் **தேவனுடைய இராஜ்யத்தைக்** காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் இயேசு (யோவான் 3:3).

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் **தேவனுடைய ராஜ்யத்தில்** பிரவேசிக்க மாட்டான்" என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவா 3:5)."இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய **இராஜ்யத்திற்கு** உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறேன்" (கொலோ 1:13).

**எனவே முதலாவது நாம் ஒரு இராஜ்யத்தின் பிரஜையாகிறோம் என்பதனை மறக்கமுடியாது.** ஒரு சபையின் அங்கம் ஆகிறோம் என்பது போலத்தான் அநேக நேரங்களில் சித்தரிக்கப்படுகிறது. தேவனுடைய பெரிதான உலகளாவிய சபையின் அங்கமாகிறோம் என்பதே உண்மை; அதுவே கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்படுகிறது.

"நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகத் தாகம் தீர்க்கப்பட்டோம்" (1கொரி 12:13)

**ஒரு ஸ்தல சபை** (Local Church), **அந்தப் பெரிய சரீரத்தின் ஒரு துண்டுதான் என்பதனை விளங்கிக் கொண்டவர்கள் எத்தனை பேர்? அது புரியாததாலேயே அநேக போதகர்கள் ஸ்தல சபையின் முக்கியத்தை அழுத்திக் கூறி மக்களை இராஜ்யத்தின் பிரஜைகள் என்கிற காரியத்தினின்று மாற்றிப்போட்டுவிட்டனர்.**

**தேவ இராஜ்யத்தின் சுவிசேஷம்** தான் நாம் பிரசங்கிக்கிறது என்பதனையும் (மத் 24:14), தேவனுடைய **இராஜ்யத்துக்கும்** இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றதைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததைத் தான் கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கித்தான் என்று வேதம் குறிப்பிடுவதனையும் (அப் 8:12,5), அப்போஸ்தலனாகிய பவுல் "மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் **தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப்** பிரசங்கித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்" (அப் 28:31) என்பதனையும் கவனித்துப் பார்த்தால் தெளிவு ஏற்படும்.

"மேலும், நாம் அநேக உபத்திரவங்களின் வழியாகத் **தேவனுடைய இராஜ்யத்தில்** பிரவேசிக்க வேண்டும்" என்பதும் (அப் 14:22), **தேவனுடைய இராஜ்யம்** பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது (1கொரி 4:20) என்பதும், "தம்முடைய இராஜ்யத்திற்கும், மகிமைக்கும் நம்மை அழைத்த தேவனுக்கு நாம் பாத்திரமாய் நடக்கவேண்டும் (1தெச 2:11) என்பதனையும், "நாம் **தேவனுடைய**

**இராஜ்யத்தினிமித்தம்** பாடு அனுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த ராஜ்யத்திற்கு நாம் பாத்திரர் என்று எண்ணப்படும்படிக்கு அழைக்கப்பட்வர்கள் என்பதனையும் அடிக்கடி நினைவு கூறவேண்டும் (2தெச 1:5).

அவருடைய இராஜ்யத்தின் வருகைக்காகவே காத்திருக்கிறோம் (2தீமோ4:1,8) என்பதுமே நம்முடைய ஜெபம். **"உம்முடைய இராஜ்யம் வருவதாக"** (மத் 6:10) என்பதும், "அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம்" (எபிரே 12:28) என்பதும், அவரிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குத் தாம் வாக்குப் பண்ணின **இராஜ்யத்தைச்** சுதந்தரிக்கிறவர்களாக நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் (யாக் 2:5) என்பதும் நம்மை உற்சாகப்படுத்தி எதிர்காலத்தினைக் குறித்த தெளிவான நம்பிக்கையைத் தருபவைகள்.

"உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய **கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாயின**" என்ற ஏழாம் தூதனின் எக்காளச் சத்தத்திற்குக் காத்து நிற்பவர்கள் நாம் (வெளி 11:15). ஆனால், **அந்த இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல. உலகத்தின் முறைகளை உபயோகப்டுத்திப் பெற்றுக்கொள்வதும் அல்ல** (யோவா 18:36).

மேற்சொன்னவைகளின் அடிப்படையில், **ஒரு மனிதன் இயேசுவை அறிந்துகொண்டு இராஜ்யத்தின் பிரஜையானால், அவனுடைய வாழ்க்கை இராஜ்யத்தை மையமாகக் கொண்டு செயல்படுபவையாகவே இருக்கவேண்டும்.** ஆனால், இன்று அநேக மக்கள், சபையை (குறிப்பாக ஸ்தல சபையை) மையமாகக் கொண்ட வாழ்க்கைக்கே அர்ப்பணிக்க வற்புறுத்தப்படுகின்றனர்; இதனை நான் கொடுமை என்றே கூறுவேன்; ஏன்? என்று கேட்பீர்கள். இராஜ்ஜியத்தினை மையமாகக் கொண்ட வாழ்க்கைக்கும், ஸ்தல சபையினை மையமாகக் கொண்ட வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசத்தினைக் கண்டறிந்தால் நான் கூறுவது உண்மை என்று ஒத்துக்கொள்வீர்கள். ஸ்தல சபை வாழ்வினை மையமாகக் கொண்ட மனிதன் ஒருவனைப் பற்றி வேதம் கூறுகிற உண்மைகளைக் காண்பிக்க விரும்புகிறேன். 3யோவான் 9 ல் காணப்படும் **தியோத்திரேப்பு**வைக் கவனித்துப் பாருங்கள்.

- ❒ அவன் தான் முதன்மையாயிருக்கவேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்துகிறான்.
- ❒ ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்களைத் தள்ளிவிடுகிறான். (வச 10)
- ❒ அதினிமித்தம், அப்போஸ்தலர்களை (யோவான் போன்றவர்களைக் கூட) ஏற்றுக்கொள்ள மனதற்றவன். (வச 9)
- ❒ தான் அப்படி நடப்பதுமன்றி மற்றவர்களையும் (அதாவது தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்புகிறவர்களையும்) தடை செய்கிறான். (வச 10)
- ❒ சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாய் நடந்துகொள்ள, தேசத்தில் தேவனுக்காய் அலைந்து திரிகிறவர்களை, புறஜாதிகளிடத்தில் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாமல் கிறிஸ்துவின் இராஜ்யப் பணியில் ஈடுபட்டவர்களைத் தாங்க கடமைப்பட்டவர்களை செயலற்றுப்போகப்பண்ணுகிறான் (வச 7,8)
- ❒ இயேசு கிறிஸ்துவின் மார்பில் சாய்ந்து, அன்பின் சீஷனாக எண்ணப்பட்ட மூத்த அப்போஸ்தலனையே மதிக்க முடியாதவாறு அவனுடைய பெருமையும் கண் அடைப்பும் தடை செய்துவிட்டன (வச:9).

இன்றும் அநேக ஊழியர்கள் இப்படி காட்சியளிப்பதற்குக் காரணம், "நாம் மக்களின் விசுவாசத்திற்கு அதிகாரிகள் அல்ல, மாறாக அவர்களுடைய சந்தோஷத்திற்குச் சகாயர்கள் மாத்திரமே" (2கொரி 1:24) என்பதனை மறந்ததினாலேயே.

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட வாழ்க்கையில், **"இங்கேதான் வரவேண்டும், கொடுக்கவேண்டும்"** என்ற வற்புறுத்தல்கள் அதிகம் காணப்படும்.

இராஜ்யத்தை மையமாகக் கொண்ட வாழ்வில், **"எப்படியாவது சந்திக்கப்படாதவர்கள் சந்திக்கப்படவேண்டும்"** என்பது வற்புறுத்தப்படும்.

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட சபையில், **"சந்தோஷமாயிருக்கிறவர்கள் அல்லேலூயா சொல்லுங்கள்"** என்ற வார்த்தை வாரந்தப்பாமல் வர்ணிக்கக்கப்படும்.

இராஜ்யத்தை மையமாகக் கொண்ட சபையில், **புதிதாக இரட்சிப்புக்குள் இந்த வாரம் இத்தனை பேர் கொண்டுவரப்பட்டார்கள்,** பரலோகத்தின் சந்தோஷம் நம்மையும் நிரப்பட்டும் என்கிற தொனி அடிக்கடி ஒலிக்கும். (லூக் 10:20; 15:10)

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட ஊழியத்தில், **நிகழ்ச்சி நிரல்கள் (programmes) தவறாமல் நடப்பதனையும், அனைவரும் அதில் தவறாமல் கலந்துகொள்ளவேண்டும் என்பதும் அதிகம் பேசப்படும்.**

இராஜ்யத்தினை மையமாகக்கொண்ட ஊழியத்தில், புதிது, புதிதாக ஆத்துமாக்களை எப்படிச் சந்திப்பது அவர்களை எப்படி வழிநடத்துவது என்பது கற்றுக்கொடுக்கப்பட்டு, **சபையைப் பயிற்சிக்கூடமாகவும் சபையாரை யுத்த வீரர்களாகவும் மாற்றி உலகினை யுத்தக் களமாகக் காண்பித்து,** அனுப்பும் பணியைச் செய்வது குறித்து அதிகம் பேசப்படும்.

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட கமிட்டி கூட்டங்களில், இன்னமும் சபைக் **கட்டடத்தை அலங்கரிக்க, கோபுரம் கட்ட, விழாக்களைக் கொண்டாட,** (மணிவிழா, திருவிழா, பாராட்டு விழா போன்றவை) எப்படிச் செய்வது, **பணம் திரட்டும் உத்திகள்** என்ன! என்ற **வாக்கு வாதங்களே** அதிகம் இடம் பெறும்.

இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட கமிட்டி கூட்டங்களில், இன்னமும் அறியாத இடத்தில் கிறிஸ்துவை அறிவிப்பதற்கு நம்முடைய பங்கு என்ன? **வித்தியாசமான வயதினர், நிலையில் உள்ளோர், மாறுபட்ட கலாச்சாரத்தில் வாழ்வோர் ஆகியோரை சந்திப்பது எப்படி?** அதற்குத் தேவையான ஆட்கள், பணம் எப்படி வரும் என்பதனைக் குறித்த **கலந்துரையாடல்** இடம் பெறும்.

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட சபை கூடுதலில், **யார் யார் பக்கம்?** என்பதே அதிகமான இழுபறி.

தேவ இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட சபை கூடுதலில், இராஜ்யத்தின் சுவிசேஷம் பரவுவதற்கு நம்மில் **என்ன தடை** என்பதனைக் குறித்தே கவலை.

ஸ்தல சபையை மையமாகக்கொண்ட ஊழியத் தலைவன், **தன்னை அனைவரும் மதிக்க வேண்டும்** என்பதில் அதிகக் கவனம் செலுத்துவான்.

தேவ இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட ஊழியத் தலைவன் **யாரைக் கொண்டாகிலும்** தேவன் கிரியை செய்யவேண்டும் என்பதில் கவனமாக இருப்பான்.

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட ஊழியம், தாங்கள் மட்டும் வாழவேண்டும் என்பதில் குறியாக இருந்து **மற்ற ஊழியங்களை சிதைக்கும் பணியிலும்** ஈடுபட அஞ்சாது.

தேவ இராஜ்யத்தினை மையமாக்கிக் கொண்ட ஊழியம், **எப்படி மற்ற ஊழியங்களோடு இணைந்து செயல்படுவது,** மற்றவர்களிடத்தில் இருந்து கற்றுக்கொள்ளக்கூடியது என்ன? என்பதனைக் கண்டறிந்து நலமானவைகளைப் பற்றிக் கொள்ளவும் **நல்லவர்களோடு தொற்றிக்கொள்ளவும் அஞ்சாது.**

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட போதகர் தன் மக்கள் **தன்னை விட்டுப் போய்விடக்கூடாது** என்பதில் அதிகக் கவனம் செலுத்துவார்.

தேவ இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட போதகர், தன் மக்களின் கிருபை வரங்களைக் கண்டறிந்து, காண்பித்துக் கொடுத்து உற்சாகப்படுத்தி **செயல்படத் தூண்டுவார்.**

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட சுவிசேஷகர் திருப்திப்படுத்தும் வார்த்தைகளையும், ஆசீர்வாத வசனங்களையும் வாரி இறைத்து **சபைதனைத் தன் சொந்த லாபத்திற்கு மாற்றிக்கொள்ளத்** தக்க வார்த்தைகளைப் பிரசங்கிப்பார்.

தேவ இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட சுவிசேஷகர், தேவனுக்கு முன்பாக மக்களை நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருந்து, **தேவனுக்கு மக்கள் உபயோகப்படவேண்டும்** என்பதனையே கருத்தில் கொண்டு பிரசங்கிப்பார்.

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட ஊழியர் தனக்கு **எத்தனை கூட்டம்** வருகிறது என்பதில் குறியாயிருப்பார்.

இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட ஊழியர், இன்னமும் **எத்தனை மக்கள் கூட்டம் (Peoples Group) அவரை அறியவில்லை** என்பதனை நினைத்து அங்கலாய்ப்பார்.

ஸ்தல சபையை மையமாகக் கொண்ட ஊழியத்தில், **காணிக்கையை வெளியே விட்டுவிடக்கூடாது** என்பதற்காக பல சாகசங்கள் கையாளப்படும்.

இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட ஊழியத்தில், **காணிக்கை சரியான இடத்திற்குப் போகிறதா** என்பதிலும், சரியாய் உபயோகிக்கப்படுகிறதா என்பதிலும் கவனம் செலுத்தப்படும்.

ஸ்தல சபையை மையமாகக்கொண்ட ஊழியத்தில், தாங்களும் கிறிஸ்துவாகிய சபையின் சரீரத்தில் ஒரு அங்கம் எனவே **மற்றவர்களுக்காகவும் கவலைப்படவேண்டும்** என்ற நோக்கம் மறக்கப்படும்.

இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட ஊழியத்திலோ, ஒரே சீராக மற்றவர்களும் வளர வேண்டும் என்பதிலும், **மற்றவர்களுடைய பலவீனம் நம்முடைய பெலவீனம் என்று அறிந்து** ஆவன செய்ய ஓயாமல் பாடுபடும்.

இவைகள் யாவற்றையும் வேத வசனம் அடிப்படையில் சிந்தியுங்கள்; இராஜ்யத்தினை மையமாகக் கொண்ட வாழ்வுக்கு ஒப்புக்கொடுங்கள் (kingdom centred life). இதனை எழுதுவதன் மூலம் ஸ்தல சபையின் ஊழியங்களை மட்டமாக நினைக்கிறேன் என்றோ, அவைகளுக்கு எதிராளி என்றோ என்னைத் தவறாக நினைக்கவேண்டாம் ஸ்தல சபைகளும் வளரவேண்டும்.

ஆனால் அந்த வட்டத்துக்குள்ளிருந்து இன்னமும் மேல் எழுந்து சிந்திக்கவும், செயல்படவுமே இவைகளை எழுதுகிறேன், **தேவனே சாட்சி.**

# 8. தேவன் பேசுவது எப்படி?

முதல் கிறிஸ்மஸை ஒட்டி நடைபெற்ற சம்பவங்கள் உணர்த்தும் ஓர் பேர் உண்மையை தியானிக்க உங்களை அழைக்கிறேன். நம் ஆண்டவர் ஜீவிக்கிறவர், பேசுகிறவர் என்று கூறி அறிவிப்பதோடு, **"பேசுகிறவருக்குச் செவிகொடுக்க மற்றவர்களை நாம் அழைக்கிறோம்"**. வேதமும் "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், பூமியில் பேசினருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப்போவோம்? (எபி 12:25) என்கிறது.

ஆனால், இன்றைக்கு அநேகருடைய பிரச்சனை **தேவன் எப்படிப் பேசுவார்? அவருடைய சத்தத்தைக் கேட்பது எப்படி?** என்ற கேள்விகளோடு, "அவருடைய ஆடாகிய நான் அவர் சத்தம் கேட்கவேண்டுமே! (யோவா 10:27) ஏன் நான் கேட்க முடிகிறதில்லை? **எனக்காக யாராவது கேட்டுச் சொல்லமாட்டார்களா?** என்று அலைந்து திரிகின்றனர்; திகைத்து திசைமாறியும் போகின்றனர். இதனை உபயோகப்படுத்தி சில போலி தீர்க்கர்களும் நாங்கள் கேட்டுச் சொல்லுகிறோம் என்று **ஜனத்திற்கு தேவ சத்தம் கேட்கும் விதத்தினை சொல்லித் தராமல், தங்களிடம்தான் அவர் பேசுவார் என்பது போல் நடித்து அதற்குரிய கூலியையும் பெற்று கிறிஸ்தவ உலகின் "சத்தான"அவர் சத்தம் கேட்கும் தன்மையை இல்லாமற் போகச் செய்துவிட்டனர்.** பழைய உடன்படிக்கை (ஒழிந்து போவது) காலத்தில் நடந்தது போல, மோசே நீர் கேட்டுச் சொல்லும் நாங்கள் கேட்டால் செத்துப்போவோம் என்று புதிய உடன்படிக்கைக்குக் கீழ்ப்பட்டோரை, பழைய உடன்படிக்கைக் காலத்திற்கு இவர்கள் தள்ளிவிட்டுவிட்டார்கள் (2கொரி 3:6,8). நாம் எல்லாரும் திறந்த முகமாய் (முக்காடிட்டு அல்ல) கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியில் காண்கிறது போலக் கண்டு மகிமையின்மேல் மகிமை அடைய அழைக்கப்பட்டவர்கள் (2கொரி 3:13) என்பதனை மறக்கலாகாது.

எனவே, **தேவன் எப்படிப்பேசுவார்** என்பதனை விளக்கும் வண்ணமாக ஏழு முறைகளை கிறிஸ்மஸை ஒட்டிய சம்பவங்களில்

தேவன் வெளிப்படுத்தியுள்ளார். கிறிஸ்துவின் பிறப்பினை ஜனங்கள் அறிவதற்கு தேவன் செய்தது என்ன? என்பதை சிந்திக்குங்கால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்விற்கு அது பிரயோஜனமாக இருக்கும் என்பதனை உணர்ந்து இவைகளை ஆராய்வோம்.

முதலாவதாக, **மேய்ப்பர்களுக்கு தேவ தூதர்கள் மூலமாக செய்தி.** (லூக் 2:8-18)

ஒரு தூதன் பேச, மற்றவர்களும் அதனை ஆமோதிக்கும் வண்ணம் திரள் கூட்டமாகத் தோன்றி, ஒரு துதி ஆராதனை நடைபெறுகிறது. "பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில், தாவீதின் ஊரில் காண்பீர்கள்" (வச 11,12) என்று அவன் சொன்ன வார்த்தையில் தெளிவு உண்டு. அப்படியே அவர்கள் கஷ்டமேயில்லாமல் அதனைக் கண்டுபிடித்தார்கள். தேவதூதர்கள் மூலம் தேவன் பேசுகிறார் என்பதனை நாம் சந்தேகிக்கக் கூடாதபடி இன்றும் அவர் அப்படி அவர்களை உபயோகிக்கிறார் என்பது உண்மை. **ஆனால், இன்று அநேகர் தேவ தூதன் பேசினான் என்று கூறுவது சுய லாபத்திற்காக, ஜனங்கள் அவர்களை மிகவும் தேவனுக்கு நெருங்கியவர் என்பதைக் காணவேண்டும் என்பதற்காக, அதன் மூலம் தங்களை ஆவிக்குரியவர்கள் என்று காண்பிக்கவேண்டி, கூடவே அதனை வைத்து லாபம் சம்பாதிக்க முயல்வதற்காக.** எனவே, தேவன் தேவ தூதர்களைக் கொண்டு பேசின எந்த சம்பவத்திலேயும் மேலே சொல்லப்பட்ட இந்தக் காரியங்கள் நடைபெறவில்லை என்பது தெளிவு.

இன்றும், தேவன் தேவ தூதர்களை உபயோகப்படுத்துகிறார். ஆயினும், **மேய்ப்பர்கள் மிகுந்த ஆவிக்குரியவர்களாய் வாழ்ந்தார்கள் என்பதினால் அல்ல அவர்களுக்கு தேவ செய்தி, மாறாக கீழ்ப்படியக்கூடியவர்கள் என்பதினாலேயே, அவசரம் காட்டுபவர்கள் என்பதினாலேயே, மற்றவர்களுக்கும் அறிவிப்பார்கள்** தங்களை பெரியவர்கள் உன்னத நிலையில் உள்ளவர்கள் என்பதனைக் கூற அல்ல, பிள்ளையைக் (இயேசுவை) குறித்து பேசுவார்கள் **என்பதினாலேயே.** (வச 15-17)

அப்படி ஒப்புக்கொடுத்த ஒரு வாழ்க்கை வாழக் கற்றுக்கொண்டவர்கள் தேவ தூதன் மூலமாய் தேவ சத்தம் கேட்க வாய்ப்புண்டு.

இரண்டாவதாக, **"வானத்தின் அடையாளங்கள்"** மூலம் பேசுகிறார். இது **"ஜோசியம் பார்ப்பதினால் வருவது அல்ல".** சாஸ்திரிகள், "அவருடைய நட்சத்திரம்" என்று குறிப்பாகக் கூறி, "யூதருக்கு ராஜா" என்பதனையும் அறிந்து, ராஜாவுக்குரிய மரியாதையை அளிக்கப் புறப்பட்டு வருகிறார்கள் (மத் 2:1-12). அந்த நட்சத்திரம் அவர்களை வழி நடத்தவும் செய்கிறது (வச 9). உயரே வானத்திலே அற்புதங்களையும், தாழ பூமியிலே அதிசயங்களையும் காட்டுவேன் (அப் 2:10) என்ற யோவேலின் வார்த்தைக்கு அர்த்தம் சொல்வது போல இவைகள் நடைபெறுகிறது. கூடவே, வான சாஸ்திரிகளுக்கு அவர்கள் புரிந்துகொள்ளும் மொழியில் தேவன் பேசுகிறார் அவ்வளவே (மத் 18:3). வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே? (மத் 18:3) என்று இயேசு பரிசேயரைப் பார்த்துக் கேட்கவில்லையா? சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும் (லூக் 21:25) என்று இயேசு சொல்லவில்லையா! தேவன் சில வேளைகளில் இப்படியும் பூமிக்குச் செய்தி அனுப்புகிறார்.

மூன்றாவதாக, **ராஜாவின் வீட்டில் உள்ளவர்களுக்கு தேவன் சாஸ்திரிகளை** (wise men) **உபயோகப்படுத்துகிறார்** (மத் 2:3). **கண்டவர்கள், அறிந்து புரிந்துகொண்டவர்கள் அறிவிக்கிறார்கள்.** யோவானும், "ஆதி முதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினால் தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1யோவா1:1) என்று சொல்லவில்லையா! அறிந்தவர்கள் அறிவாளிகள்; அவர்கள் அறிவிக்க அழைக்கப்பட்டவர்கள் என்பது தெளிவு, அவர்களை நம்பலாம். எனவே தேவன் அப்படிப்பட்டவர்களை உபயோகப்படுத்துகிறார் தன்னுடைய செய்திதனை அறிவிக்க.

நான்காவதாக, **"வேத புத்தகத்தில் எழுதப்பட்டவைகள் மூலம்"** (மத் 12:5,6). எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு ஒப்பானவை எதுவுமில்லை எனலாம். வேதபாரகருக்கு அது நன்றாகத் தெரிந்திருந்தது; ஆனால், கூடவே எழுத்தினை அறியும் அறிவு இருந்தது; அதைப் பற்றிக்கொள்ள இருதயம் இல்லாதிருந்தது. அதுவே அவர்களை இடறப் பண்ணிற்று. இன்றைக்கும் எழுதப்பட்ட வார்த்தை நம்முடைய கரங்களில் **பாதைக்குத் தீபமாய், பேதைக்கு**

**ஞானமாய்** தரப்பட்டுள்ளது; அதனை தியானிக்க மாத்திரமல்லாமல், எந்த சூழ்நிலையில் எதனைப் பேச விரும்புகிறார் என்பதனைப் புரிந்துகொண்ட தியானம், நம்மை அவர் சத்தம் கேட்கவும் வழி நடத்தவும் போதுமான வல்லமையைத் தருவதாக உள்ளது.

ஐந்தாவதாக, **"பரிசுத்த ஆவியானவரால் ஏற்படும் உந்துதல்"** (லூக் 2:25-27). தேவ ஆவியினால் நிறைந்த மனிதன் ஒருவன் தேவ ஆவியினால் நடத்தப்படவும் தன்னை விட்டுத் தரவேண்டும் (ரோமர் 8:14,16)). அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறவர்களைத் தேவன் இப்படி சுலபமாக நடத்த முடியும். அவர்கள் நடைகளைக் கர்த்தர் தெளிவாக நடத்தி, சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கச் செய்கிறார். இதனைக் கற்றுக்கொண்டவர்களுக்கு ஆரம்பத்தில் அது சிறிது கடினமாகவும், விசுவாசிக்கக் கூடாததுமாயிருந்தாலும், போகப் போக அது எளிதாகிறது. **நீதியும் பக்தியும் உள்ளவர்களுக்கு பரிசுத்த ஆவியின் சத்தம் தெளிவாகக் கேட்கும்.**

இன்றைய நாட்களில், ஆவியானவர் சொல்கிறார் என்று கூறுகிற அநேகர், **"தங்கள் ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதி கெட்ட தீர்க்கர்களே"** (எசே 13:3). **அவர்களுக்குத் தேவன் தன்னை விரோதி** என்று கூறுகிறதையும் கவனியுங்கள் (வச 8,9). எனவே, தேவன் ஒருதரம் விளம்பினார் இரண்டு தரம் கேட்டிருக்கிறேன் என்ற தெளிவு இல்லாமல், பரிசுத்த ஆவியானவர் சொன்னார் என்பவைகள் **வேத வாக்கியத்தினால் முத்திரையிடப்படவேண்டும்** என்பதனை மறக்காமல் காண கர்த்தர் கிருபை செய்வாராக.

ஆறாவதாக, **"ஜெபத்திலே உணர்த்துவிக்கப்படுதல்"** என்ற முறையையும் தேவன் உபயோகப்படுத்துகிறார். இரவும் பகலும் தேவ சமூகத்தில் காத்துக் கிடந்து ஜெபித்து ஆராதனை செய்யும் அன்னாள், ஜெபத்தில் உணர்த்துவிக்கப்பட்டவளாய் இயேசுவைக் காண குறித்த நேரத்தில் வந்து நிற்கிறாள் (லூக் 2:36-38). ஜெபிக்கும் மனிதன் ஏதோ பல காரியங்களுக்காக ஒரு பட்டியலை தேவ சமூகத்தில் தருகிறவனாக மாத்திரம் அல்லாமல், **தேவன் என்ன சொல்கிறார் என்பதனைக் கேட்கும் காதுகளை உடையவனாகவும் காத்திருக்கிறவனாகவும் காணப்படவேண்டியது அவசியம்.** "என்னை நோக்கிக் கூப்பிடு உனக்கு எட்டாததும், நீ அறியாததுமானவைகளை உனக்குக் காண்பிப்பேன்" என்பது அவரின் வாக்கு அல்லவா (எரே 33:3).

**ஜெபிக்கக் கற்றுக்கொண்டவர்கள் ஏராளம், ஆனால் ஜெபத்தில் தேவ சத்தம் கேட்கக் கற்றுக்கொண்டவர்கள் சிலரே.** பத்து நாட்கள் காத்திருந்து விடை பெற்றான் எரேமியா (எரே 42:7) என்பதனை மறக்காதிருப்போமாக.

ஏழாவதாக, **"தீர்க்கதரிசனத்தினால்" தேவன் பேசுகிறார்.** அது எலிசபெத்தாக இருக்கட்டும் அல்லது சகரியாவாக இருக்கட்டும் (லூக் 1:41-55, 67-79). தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு இயேசுவின் பிறப்பினைக் குறித்து தெளிவாகக் கேட்கிறவர்களுக்கு நிறைவாக தேவ சத்தத்தின் நோக்கத்தினைத் தெரியப்படுத்துகிறார்கள். தேவ செய்தியோடு, வாக்குத்தத்தத்தின் நினைவு கூறுதலும் ஆனந்தமும் பொங்கி எழுகிறது. நம்பிக்கையின் நற்செய்தி நடுங்குகிறவர்களை திடப்படுத்துகிறது. **அந்த கட்டி எழுப்பும் ஆறுதல் செய்தி பக்தி விருத்தியை உண்டாக்குகிறது.**

இதிலும் இன்றைய ஆவிக்குரிய உலகில் அநேக மோசடிகள் நடைபெற்றுவருகிறது. அதனை தேவன் 'பதர்' என்கிறார் (எரே 23:28). தங்கள் நாவின் சொல்லையே வழங்கி, அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். **அவர்கள் ஜனத்துக்கு பிரயோஜனமாய் இருப்பதில்லை** என்ற தேவ வாக்கு (எரே 23:31,32) நம் முன் எப்போதும் இருக்கவேண்டிய அவசியம் உண்டு.

தேவ சத்தம் பல்வேறு நிலைகளில், பல்வேறு வகைகளில் தொனிப்பதனை கிறிஸ்மஸ் கால சம்பவங்கள் நமக்குச் சொல்லுகின்றது என்பதோடு, ஒரு பெரிய உண்மையும் கூடவே தொனிக்கிறது; அது என்ன? **இயேசு உலகில் வந்தார் என்ற இனிப்பின் செய்தி அடக்கிவைக்கப்படவேண்டியது அல்ல, அது அறிவிக்கப்படவேண்டியது. அது ஜனங்களுக்கு வந்தடையவேண்டியது. கொண்டாடிப்போக அல்ல, அது ஒன்றுமில்லாதோர்க்கு பங்குகளை அனுப்பச் செய்யும் செய்தி. அது பட்டாடைக் கட்டி பாரம்பரியத்தினை பகட்டாய் நிறக்கச் செய்வது அல்ல, மாறாக பட்டி தொட்டியிலும் பட்டணங்களிலும் படியாதவர்களுக்கும் அவசியம் இந்தச் செய்தி. அறிவிப்போம் ஆர்ப்பரிப்போம் ஆண்டவர் திரும்பவும் வருகிறார்.**

# 9. எதிர்கால சந்ததிக்கு நம் பங்கு என்ன?

**“எதிர்கால சந்ததிக்கு நம் பங்கென்ன?”** இன்றைக்கு அநேகரிடத்தில் காணப்படும் சிந்தை, எசேக்கியா ராஜாவில் காணப்பட்டது போலவேயே இருப்பதை நாம் உணரலாம். அவன் என்ன சொன்னான்? “என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே” (ஏசாயா 39:8) என்று. தேவன் அவனுடைய நன்றி கெட்ட காரியத்தினைக் கண்டு கடிந்துகொண்டவராக, “நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரண்மனையிலே அரண்மனை வேலைக்காரர்களாயிருப்பார்கள்” என்று கூறுகிறார். அரசாளப் பிறந்தவர்கள் அடிமைகளாக மாறப்போகிறார்கள், வேலை கொள்ளவேண்டியவர்கள் வேலை செய்யப்போகிறார்கள் என்றபோது, கொஞ்சமும் நடுக்கம் அற்றவனாக, **"என் நாட்களில் சமாதானம் இருந்தால் போதும்"** என்ற திருப்தி எசேக்கியாவில் காணப்படுகிறது.

எங்களுடைய நாட்கள் பூமியிலே நன்றாக இருந்தால் போதுமானது; என் மக்களின், பிள்ளைகளின் நாட்கள் எப்படி இருந்தால் எனக்கென்ன? என்று வாழத் துணியும் ஒருவரைக் குறித்து நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அல்லது, என் நாட்களைக் காட்டிலும் அவர்களின் நாட்கள் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைப்போர் என்ன செய்வார்கள்? தாவீது செய்தது போலச் செய்ய துணிச்சல் கொள்வர். “இப்போதும் நீங்கள் என்றென்றைக்கும் இந்த நல்ல தேசத்தைச் சுதந்திரமாய் அனுபவித்து உங்களுக்குப் பிறகு அதை உங்கள் பிள்ளைகளுக்குச் சுதந்திரமாய் பின்வைக்கும் பொருட்டாக, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு விசாரியுங்கள் என்று கர்த்தரின் சபையாகிய இஸ்ரவேல் அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும் நமது தேவனுடைய செவி கேட்கவும் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.” என்பர். (1நாளா 28:8).

கூடவே, "என் குமாரனாகிய சாலமோன் உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய சாட்சிகளையும் உம்முடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கும் அவனுக்கு உத்தம இருதயத்தைத் தந்தருளும்"என்று ஜெபிக்கிறான் (1நாளாகமம் 29:19). சங்கீதக்காரனைப் பாருங்கள், "தேவனே என் சிறு வயது முதல் எனக்குப் போதித்து வந்தீர். இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன். இப்போதும் தேவனே, இந்த சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும் முதிர்வயதும், நரை முடியுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக" (சங்கீதம் 71:17,18) என்றே ஆண்டவரைக் கெஞ்சுகிறான். "உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" என்பது ஆண்டவரின் வாக்குத்தத்தம் அல்லவா? (ஏசாயா 44:3). அப்படியிருக்க **வருங்கால சந்ததிக்கு நாம் ஆவிக்குரிய பிரகாரமாய் என்ன செய்திருக்கிறோம்?** என்பது நமக்கு சவாலாகட்டும்.

இந்திய மண்ணில் 72 கோடி பேர் 35 வயதிற்குட்பட்டவர்கள்; 47 கோடிக்கு மேல் 21 வயதிற்குட்பட்டவர்கள் என்பது நம்மை நிலைகுலையச் செய்யும் செய்தியல்லவா? இயேசுவின் வருகை தாமதமானால் இவர்கள்தானே இந்த பாரதத்தின் வழிகாட்டிகள்; இது நம்மை அசைக்கட்டும். இத்தனை பேரின் ஆவிக்குரிய காரியங்களுக்கு 35 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பேரும் பொறுப்பு. இளைஞர்களை எதிர்காலத்தில் நடக்கப் போகும் பேரழிவுக்குத் தப்புவிக்கவும், தேவனுக்காய் வல்ல பெரும் காரியங்களைச் செய்ய ஊக்குவிக்கவும் நாம் தவறிவிட்டால் குற்றம் நம்மேல் சுமரும். **எப்படியாவது என் நாட்களை ஓட்டிவிடுவேன் என்ற தன்னயமான எண்ணங்களிலிருந்து தேவன் நம்மைக் காப்பாராக.**

தீமோத்தேயுவின் குடும்பம் நமக்கு ஒரு சவால். **"உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூறுகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனசாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்"** (2தீமோத்தேயு 1:4-5)

என்கிறார் பவுல். எனவேதான், "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கும் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷரிடத்தில் ஒப்புவி." (2தீமோத்தேயு 2:2) என்று தொடர்ச்சியாக தலைமுறை தலைமுறையாக கடத்தப்படவேண்டிய சத்தியம் என்று அறிவுரை கூறுகிறார். எனவே நாம் முன் இருக்கும் இந்த பெரிய சவாலை கொஞ்சம் அலசிப்பார்க்கவேண்டிய அவசியம் உண்டு. இதனை சிரமேற்கொள்வோமாகில் செயல் வடிவம் கொடுக்க முயற்சி செய்வோம். அப்படிச் செய்யும்போது கீழ்க்கண்டவைகளைச் செயல்படுத்தத் தீவிரம் காட்டுவோம்.

- ❒ இளைஞர்களுக்கு முன்பாக **வாழ்ந்துகாட்டுவோம்**, ஓர் இலட்சிய வாழ்க்கையை.
- ❒ இளைஞர்களுக்குத் **தேவ பயத்தை** ஊட்டும் அனைத்தையும் செய்ய முற்படுவோம்.
- ❒ அவர்களுக்கு **பொறுப்புகளைப் பகிர்ந்தளித்து** கூடவே நின்று அவர்களை நிறைவேற்றவைப்பதில் உற்சாகம் காட்டுவோம்.
- ❒ வருங்காலத்தினைக்குறித்த **தீர்க்கதரிசனப் பார்வையோடு அவர்களை எச்சரிக்கவும், ஆயத்தப்படுத்தவும்** நம்மால் இயன்றவற்றைச் செய்வோம்.
- ❒ சபைகளில், சங்கங்களில், குடும்பத்தில் அதற்கு பெரும்பகுதி **பணத்திலும், நேரத்திலும்** செலவு செய்ய இடம் தருவோம்.
- ❒ அவர்களின் நோக்கம், நேரம் செலவிடுதல் போன்ற காரியங்களில் **ஆவிக்குரிய தாக்கத்தை உண்டாக்க** அனைத்தையும் செய்வோம்.
- ❒ நாம் அவர்களில் கரிசனை உள்ளவர்கள் என்பதனை **அடிக்கடி** காண்பிப்போம்.

# 10. கொடிய காலங்கள்

பொருளாதாரச் சிதைவு, ஜனத்துக்கு விரோதமாக ஜனம், கொள்ளை நோய்கள், நம்மைச் சுற்றி நடக்கும் காரியங்கள் அனைத்தும் நமக்குள் ஓர் அங்கலாய்ப்பை ஏற்படுத்துவதோடு, **இயேசுவின் இரண்டாம் வருகைக்கான அடையாளங்கள் என்பதனை அறிவித்து எச்சரிப்பை ஏற்படுத்தப் போதுமான பலமுள்ளவைகள்.**

வான மண்டலங்களின் நிலையினைக்குறித்து பேசுபவர்கள், இது முத்திரைகள் உடைக்கப்படும் நேரம் என்று வெளிப்படுத்தின விசேஷத்தின் காரியங்களை விளக்க முயற்சிக்கலாம். கூடவே, தேவன் என்னைப் பரலோகத்திற்குக் கொண்டு சென்று இந்த காரியங்களைப் புரிந்து கொள்ளச் செய்தார் என்று அதனையே தங்களுக்குச் சாதகமாக இருக்க **தங்களையே ஆவியின் நிறைவைப் பெற்றவர்களைப்போலக் காண்பிக்கச் செய்ய முயற்சி செய்பவர்களும் ஏராளம்.**

ஆனால், கூடவே சபைக்குள் இருக்கும் மனிதர்களுடைய நிலை அப்படிப்பட்ட நாட்களில் எப்படி இருக்கும், அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதனைக் குறித்தும் வேதம் அடித்துச் சொல்கிறது என்பதனை மறப்பதற்கில்லை. வேத அறிவினைப் போதிக்கும் அறிஞர்கள் அடையாளங்களையும், தேசங்களின் நிலைதனையும் ஆராய்ந்து ஆளுக்கு ஒரு கொள்கையைப் பரப்பும் வேளையில், இன்றைய சபையின் நிலையை எடுத்துக் கூறி **சபை மாசற்றதாய், கபடற்றதாய், கறையில்லாததாய், பிழையற்றதாய் மாற போதிப்போரும், உணர்த்துவித்துப் பிரசங்கிப்போரும் செயல்படுவோரும் மிகவும் குறைந்துபோய்விட்டனர்.**

மேல் நாட்டில் இறையியல் (Theology) படிக்கும் என் நண்பரின் மகன் என்னைப் பார்த்து, “உங்களுக்கு எவ்வளவு இறையியல் தெரியும்?” என்று கேட்டான் (நான் வேதாகமக் கலாசாலைக்கே செல்லவில்லை என்பதனால்). நான் சொன்னேன் என்னுடைய இறையியல் மிகவும் எளிதானது (Simple), **"முன்னே குருடனாயிருந்தேன் இப்போது காண்கிறேன்"** இதுவே என்னுடைய இறையியல் என்றபோது அவனுக்கு கொஞ்சம் வியப்பாக இருந்தது. தொடர்ந்து நான் சொன்னேன், “இந்த அறிவு என்னை மூன்று காரியங்களை விளக்கப் போதுமானதாக இருக்கிறது”

- ❒ ஆண்டவரைக் காணக் கூடாதவனாக இருந்தேன், இப்போது அவரைக் காண்கிறேன், களிகூறுகிறேன், ஐக்கியம் கொள்ளுகிறேன்.
- ❒ என்னுடைய நிலையில் பெரும் மாற்றம் வந்துவிட்டது. புரிந்துகொள்ளுதல் வந்துவிட்டது. என்னையும் புரிந்துகொண்டேன் மற்றவர்களையும் புரிந்துகொண்டேன், சூழ்நிலைகளையும் புரிந்துகொண்டேன், காரியங்களையும் தெரிந்துகொண்டேன், மற்றவர்களின் கருத்துக்களைச் சார்ந்து மாத்திரம் இருக்க இப்போது அவசியமில்லை.
- ❒ என்னுடைய முன்னிலையைப் போல குருடாயிருப்போரை ஆண்டவரின் அண்டைக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பையும் கடமையுணர்வையும் அறிந்துகொண்டேன்.

இதனைக் கேட்ட அவனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை தான் கிரேக்க எபிரேய மொழியில் பாண்டித்தியம் பெற்று, அந்த காலத்தில் என்ன அர்த்தத்தில் சொல்லப்பட்டது, இப்போது அது எப்படிச் சொல்லப்படவேண்டும் என்றெல்லாம் தன்னுடைய மூளையைக் குழப்புவது வீண்தானோ? என்ற கேள்வி அவனுடைய முகத்தில் காணப்பட்டது. இத்தனை எளிதான இறையியலை வேத பண்டிதர்கள் எத்தனையாய் குழப்பிவிட்டனர். கூடவே மற்றவர்களையும் செயலிழக்கச் செய்துவிட்டனரே.

**எகிப்திலே குழந்தை பெறுவதற்கு உதவி செய்யவேண்டிய மருத்துவச்சிகளையே, குழந்தைகளைக் கொல்ல விரும்பின பார்வோனைப் போல வேதாகம கலாசாலைகள் மாறிவிட்டதுவோ? என கேட்கத் தூண்டுகிறது அல்லவா.**

நான் அறிந்திருக்கிற இறையியல் **என்னையும் மற்றவர்களையும் ஆண்டவரையும் புரிந்துகொள்ள மாத்திரமல்ல, என்னைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவும் என் பொறுப்பதனை உணர்ந்துகொள்ளவும் போதுமானது** அல்லவோ! அது என்னை செயல்வீரனாக மாற்றிவிடவும் வலு பெற்றிருக்கிறதே, அல்லேலூயா.

இந்தக் கோணத்தில் கடைசி நாட்களைக் குறித்து சிந்திக்குங்கால் "தேவ மக்களின் நிலையையும்" வேதம் காட்டுவதனைக் காணமுடிகிறது. **சபைகளில் நடுவில் தேவ பிரியர்கள்** (Lover of God) **என அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை**

**குறைந்துவரும் இந்த நாட்களில், தற்பிரியர்களையும்** (Lover of Self) **பணப்பிரியர்களையும்** (Lover of Money) **சுகபோகப் பிரியர்களையம்** (Lover of Pleasure) **ஏராளமாக நாம் சந்திக்க நேரிடுகிறது** (2தீமோ 3:1-5). வெளி உலக மக்கள் அப்படித்தான் இருப்பார்கள். அதனை இயேசு மத் 6:32-ல் இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் (வேத அறிவு இல்லாதவர்கள்) நாடித் தேடி ஓடித் திரிகிறார்கள்; இதனையே நோக்கமாகக் கொண்டு வாழ்கிறார்கள் என்று சொல்லவில்லையா?

இப்படிப்பட்டவர்களை **விட்டு விலகவேண்டும்** என்றும் நாம் கட்டளை பெற்றிருக்கிறோம் (2தீமோ 3:5). இது **"கொடிய காலம்"** என்று (perilous time) வர்ணிக்கவும் பவுல் தவறவில்லை.

இதனைக் குறித்து சற்று சிந்தித்தால் அநேக காரியங்களுக்கு நாம் விலக வேண்டியதின் ரகசியம் விளங்கும்.

## **தற்பிரியர்** (Lover of Self)

**இன்றைய மனிதன் எளிதாகக் காயமடைகிறான்** (Hurt); கூடவே மற்றவர்களைப் பாதித்துவிடக்கூடாது என்பதில் நாம் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டோம் (we should not offend others). இது கேட்பதற்கு ஆவிக்குரியது போலத்தான் தெரிகிறது. ஆனால், வேதம் கடிந்துகொண்டு (Rebuke) என்ற பதத்தினை அடிக்கடி உபயோகப்படுத்துகிறதை நாம் மறக்கக் கூடுமோ? கடிந்து கொள்ளும்போது காயங்கள் உண்டாக வாய்ப்பு உண்டல்லவோ?

இயேசு சொன்னதனை மறந்துவிட்டோமோ? **"தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை சுமக்காதவன் எனக்குப் பாத்திரன் அல்ல"** என்றல்லவா சொன்னார் (மத் 10:38, லூக் 9:23). இன்றைய பிரசங்க பீடங்களில் இயேசுவைப் பின் செல் உனக்கு எல்லாம் கிடைக்கும் என்று கூறப்படுவது எத்தனை முட்டாள்தனம். **வெறும் ஆசீர்வாதவார்த்தைகளையே அள்ளி வீசி, மூலப் பொருளைத் தள்ளிவிட்ட செய்திகள் மக்களை எத்தனையாய் திசை திருப்பிவிட்டுள்ளது. கல்வாரியில் அடிக்கப்பட்டவரைப் பற்றி பேசுவோர், நாமும் சிலுவையில் அறையப்படவேண்டும் என்பதனை போதிக்கவோ வாழ்ந்துகாட்டவோ மறுக்கும் காலம் அல்லவோ** இது. சிறு பிள்ளைகளைக் கூட நீ “offend” பண்ணிவிடாதே என்ற வார்த்தை எத்தனை தவறாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

"இடறல் வேறு" கடிந்துகொண்டு நல்வழிப்படுத்துவது வேறு. இதனைக் குழப்பி நாம் வாழக்கற்றுக்கொண்டதற்கு காரணம் சுயத்தை வெறுக்கக் கற்றுக்கொள்ளாததே.

**சுயம் என்னில் சாம்பலாய் மாற,**
**சுத்தாவியே அனல் மூட்டும்**

என்று பாடுகிற நாம் சுத்தாவியை எத்தனை நேரம் இந்த கிரியையை செய்ய அனுமதிக்கிறோம் என்பது கேள்விக்குறியே.

**சுயத்தை சாகடித்தால் சுகமாய் வாழ்ந்திடலாம்** என்ற பாடலின் அடிகள் வெறும் பாட்டுக்காகத்தானோ?

தேவ பிரியனாய் வாழ விரும்புகிறவன் (Lover of God) தற்பிரியனாய் வாழத் தெரியாதவனாய் மாறிப்போவான். அவரின் சிநேகத்தால் மயங்கிப்போன அவன் தன்னைக் குறித்துக் நினைக்கவும் மறந்துபோய்விடுகிறான், அவனிலே மேலோங்குவது எல்லாம் அவர் புகழ் பாடுவதே, அவருக்காய் வாழ்வதே, அவரின் மகிமைக்காய் வாழ்வதே நோக்கமாய் போய்விடும்.

## பணப்பிரியர் (Lover of Money)

**"வேஷமாகவே மனுஷன் திரிகிறான்,** விருதாவாகவே சஞ்சலப்படுகிறான், ஆஸ்தியைச் சேர்க்கிறான் யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்" ( சங் 39:6) என்று தாவீது புலம்புகிறான்.

**பணப்பிரியன்** பணத்தினால் திருப்தியடையான், செல்வப் பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை. (நீதி 5:10)

நான் பெரிய வேலைகளைச் செய்தேன்; **எனக்காக** வீடுகளைக் கட்டினேன், திராட்சத்தோட்டங்களை நாட்டினேன். **எனக்காகத்** தோட்டங்களையும் சிங்காரவனங்களையும் உண்டாக்கி, அவைகளில் சகலவகைக் கனிவிருட்சங்களையும் நாட்டினேன். மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர்ப்பாய்ச்சுகிறதற்குக் குளங்களை உண்டு பண்ணினேன். வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் **சம்பாதித்தேன்**; வீட்டிலும் வேலைக்காரர் பிறந்தார்கள்; எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஆடு மாடு முதலான திரண்ட ஆஸ்திகள் எனக்கு இருந்தது. வெள்ளியையும் பொன்னையும்,

ராஜ சம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் **சேகரித்தேன்;** சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும், மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் **சம்பாதித்தேன்.** எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்; என் ஞானமும் என்னோடேகூட இருந்தது. (பிர 2:9)

என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை; நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன். என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, **எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது**; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை (பிர 2:4-11) என்கிறான் ஞானி சாலமோன்.

ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, **அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்** (1தீமோ 6:9-10) என்று பதைக்கிறான் பவுல்.

பணப்பிரியன் தேவ பக்தியைக் கொண்டிருப்பது இன்னமும் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பதற்காகவே. அது அவனுக்கு இதமாயிருக்கும். **பணத்திற்கு நீ வேலைக்காரனா? அல்லது பணம் உனக்கு அடிமையா? என்ற கேள்விக்கு பதில் கண்டுபிடித்தாலே நம்மை அடையாளம் கண்டுகொள்ளலாம்.**

பணத்தை அதிகமாக்கவே பிரயாசப்படுகின்றாய் என்றால் நின்று, நிதானித்து, எதற்காக நான் ஓடுகிறேன் என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிக்க முயல்வது நல்லது. ஊழியர்களுக்கும் இது மிகவும் பொருந்தும். இன்றைய உபதேசங்களில் செழிப்பு உபதேசத்திற்கு வரவேற்பு உள்ளதற்கான காரணமும் இதுதானே!

## சுகபோகப்பிரியர் (Lover of Pleasures)

**உல்லாசமாக வாழ வழி உண்டு என்றுதான் உலகம் கூவி அழைக்கிறது. தன்னிடம் வருபவர்களை அழிக்கிறது** "ENTERTAINMENT INDUSTRY" (பொழுதுபோக்கு) இன்றைக்கு பொருள் ஈட்ட உபயோகப்படுத்தப்படும் பெரும் தொழில். **தொல்லைகளும், அழுத்தங்களும்** (Stress) **அதிகமாக்கப்பட்டுள்ள இந்த உலகில்** பொழுதுபோக்கு சாதனங்கள் கண்டிப்பாக தேவை என்ற தோற்றம் உண்டாக்கப்பட்டுள்ளது. இது அநேகரை addict (அடிமை) ஆக்கி உள்ளதனை மறுக்க முடியாதே. மனதையும் கெடுத்து (பணம் கொடுத்து), வாழ்க்கை நெறிகளையும் இழந்து, **குடும்பங்களையும் சிதைத்து** பின்னர் வெறுமையாக்கப்பட்டவர்கள் எத்தனைபேர்.

தேவ பிரியம் நம்மை அமைதியான இடத்தில் அவரோடு நடக்க, ஐக்கியம் கொள்ள, தியானிக்க இழுத்துச் செல்லும். ஆனால், இன்று சபை ஆராதனைகளும் பொழுது போக்கு சாதனங்களாக மாறிவிட்ட கொடுமையை எங்கே சொல்வது! **பக்திக்கேதுவானது போய் பரவசத்துக்கேதுவானதாக மாறியது இதனால் தான்** (not for Edification but for Excitement ).

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுபெலனடைவார்கள் என்ற நிலை மாறிவருகிறதே (ஏசா 40:31).

**தேவன் மேல் தீராத அன்பு, காதல், சிநேகம் போன்ற தேவ பிரியராய் மாறி "என் நேசர் என்னுடையவர் நான் அவருடையவன்"** என்று சொல்லுவோம்.

"தேவ பிரியர், வேத புதல்வர் சேதமடையா நடந்திடுவார் இலைகள் உதிரா மரங்கள் போல இவர்கள் நல்ல கனி தருவார்.

என்ற வார்த்தைகள் எத்தனை மகத்துவமுள்ளவைகள். வாஞ்சிப்போம் தேவப்பிரியராய் வாழ, சபைகள் அப்படிப்பட்டவர்களால் நிரம்பட்டும்.

**தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய ஆரம்பிப்போர் வாழ்வில் பரிசுத்தம், தாழ்மை, அன்பு தானாய் வர ஆரம்பிக்கும். மற்றோரை தேவனுக்குள் கொண்டுவர ஓயாமல் பிரயாசப்படும்** வாழ்க்கை வெளியாகும்.

# 11. குறையான ஊழியர்கள்

மிஷனரி ஊழியத்தினைச் செய்யும் நீங்கள், அந்த ஊழியத்தின் மேன்மைதனைக் கூறி, அதன் அவசியத்தினை மாத்திரம் அறிவித்தால் போதாதா? **ஏன் மற்ற ஊழியங்களைச் சாடுகிறீர்கள்?** குறிப்பாக சபையிலே நடைபெறும் சில அவலட்சணங்களை ஏன் அடிக்கடிச் சுட்டிக் காட்டுகிறீர்கள்? அது உங்கள் நேரத்தையும் சாப்பிட்டு, உங்களை ஆதரிக்கிறவர்களின் கோபத்தையும் கூட்டிக்கொண்டால், அது உங்களுக்குத்தானே நஷ்டம். கூடவே, உங்கள் திறந்த வெளி எழுப்புதல் கூட்டங்களில் அதனைச் செய்வதினால் அது சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் அதிக பாதிப்பைக் கொண்டுவரும் என்பதனை அறியீர்களா?

தவறுகளையும், பாவங்களையும் (குறிப்பாக ஊழியர்களின் பாவங்களை) சுட்டிக்காட்டி, பரிசுத்தத்திற்கு அர்ப்பணிக்கச் செய்யும் உங்கள் செய்திகளைக் கேட்க விரும்பும் கூட்டம், நீங்கள் மற்றவர்களைப் போட்டு வாங்குவதனை இரசிக்க ஆரம்பித்துவிடுகிறார்களே; அது தேவைதானா? என்று சரமாரியான கேள்விகள் என்னிடத்தில் அநேகரால் (தெரிந்தவர்கள், நண்பர்கள், உடன் ஊழியர்கள்) கேட்கப்படுகின்றன.

**என் இருதயத்தின் நிலைதனையும், ஆவியானவரின் பெரும் போரட்டம் எனக்குள் நடப்பதனையும், எதிர்பார்ப்புகளையும், என் ஜெபங்களையும், என் ஆதங்கங்களையும், தேவ சபைதனைக் குறித்த பாரம் தனையும், கடைசி நாட்களில் வாழ்கிறோம் கறை, திரை, பிழை இல்லாததும், தேவ வைராக்கியம் கொண்ட ஒரு பயமில்லா (பாவத்தைக் குறித்து மாத்திரம் பயம்) பெருங்கூட்டம் எழுப்பப்படவேண்டிய அவசியம் தனையும் உணர்ந்த அவசரத்தினையும் அறிந்தால் என்னை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்** என நம்புகிறேன்.

முதலாவது, **பரிசுத்த குலைச்சல்** தேவனை நம்மை விட்டு அகற்றிவிடும் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. **நம்முடைய ஆர்ப்பரிப்புகள் அவருடைய பிரசன்னத்தை நம் மத்தியில் கொண்டுவரக்கூடாதவை** (1சாமு 4:5,6,10). பரிசுத்தம் தேவ சபையில் தொனிக்கும்போது நாம் இருக்கும் சமுதாயத்திலும் நம்மைச் சுற்றி இருக்கும் ஜனத்திற்குள்ளும் ஒரு பெரிய பயம்

நம்மைக் குறித்தும், தேவனைக் குறித்தும் உண்டாவது உண்மை (ஆதி 35:1-5; அப் 5:1-14). குறிப்பாக ஊழியர்கள் பரிசுத்த குலைச்சலான வாழ்க்கை வாழ்ந்தால் அவர்களால் நடத்தப்படுவோர் நிலைமை அதைக்காட்டிலும் மிகவும் கொடுமையாய் மாறிவிடும் என்பது நாம் அறியாதது அல்லவே. அவர்கள் **"கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருப்பார்கள்"** (1சாமு 2:24).

“அநேக மேய்ப்பர்கள் என் திராட்சத்தோட்டத்தை அழித்து, என் பங்கைக் காலால் மிதித்து, என் பிரியமான பங்கைப் பாழான வனாந்தரமாக்கினார்கள்; அதைப் பாழாக்கிவிட்டார்கள். பாழாய் கிடக்கிற அது என்னை நோக்கிப் புலம்புகிறது, தேசமெல்லாம் பாழாயிற்று” (எரே 12:11). **தேசத்தின் பாழாக்கப்பட்ட நிலைக்கு மேய்ப்பர்கள் காரணமாகிவிட்டார்கள் என்றுதானே தேவன் புலம்புகிறார்.**

அந்த பரிசுத்தக் குலைச்சலுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் எத்தனை வாலிபர், பெண்கள், விதவைகள் என்பதனைக் காணுங்கால் அது சபையில் தேவ பிரசன்னத்தைக் கொண்டுவர தடைக் கல்லாய் மாறி, **செயல்பட வேண்டிய சபையை செயல்படக்கூடாதவாறு செய்துவிடுகிறதினால்,** பாதிப்போரும், பாதிக்கப்பட்டு மாட்டிக்கொண்டு விழிப்போரும் ஒருமிக்க எச்சரிக்கப்பட்டு, மனந்திரும்புவதுக்கேதுவான வார்த்தைகள் அவர்களுக்குத் தேவையல்லவா?

இவர்களைத்தானே பேதுருவும் “விபச்சார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள், **உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் பிடித்து,** பொருளாசையில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்” எனச் சாடுகிறார் (2பேதுரு 2:14)

இதனை ஏன் பொதுக்கூட்டத்தில் (அவைகள் எழுப்புதல் கூட்டங்கள், சுவிசேஷக் கூட்டங்கள் அல்ல) பேசுகிறீர்கள்? அது கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும், புதிய விசுவாசிகளுக்கும் இடறல் ஆகிவிடும் என்பது அநேகரின் வாதம். அப்படியானால் சுவிசேஷ செய்தி சொல்லும் நான் புதிய ஏற்பாட்டினை கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும், புதிய விசுவாசிகளுக்கும் தரவே கூடாது.

ஏனெனில், அவைகளில் பவுலின் கடிந்துகொண்ட வார்த்தைகளும், அப்போஸ்தலரின் கடிந்துகொண்ட வார்த்தைகளும், இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளும் அதிகமாகவே அடங்கி உள்ளதே. சில வசனங்களை மாத்திரம் சுட்டிக்காட்டுகிறேன். அவைகளை அகற்றிவிட்ட ஒரு புதிய ஏற்பாட்டினை அவர்களுக்கு தரக்கூடுமோ?

"நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திச் சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, **நய வசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்** (ரோமர் 16:17).

மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? **விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா?** (ரோமர் 2:21,22)

உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே. ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே. **அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே.** இப்படிப்பட்ட காரியஞ் செய்தவனை நீங்கள் உங்களை விட்டு நீக்காமலும் துக்கப்படாமலும் இறுமாப்படைந்திருக்கிறீர்களே (1கொரி 5:1,2). அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், **கபடமுள்ள வேலையாட்கள்.** கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள் (2கொரி 11:13) (வேஷதாரிகள் - சுருங்கச் சொன்னால்). அவர்கள் உங்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்கள்; ஆகிலும், **நல் மனதோடே அப்படிச் செய்யாமல்...** (கலா 4:17), மாம்சத்தின்படி நல் வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள். (கலா 6:12)

ஒருவனும் உங்களை **வீண் வார்த்தைகளினாலே** மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குப் **பங்காளிகளாகாதிருங்கள்.** (எபேசியர் 5:6,7)

அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் **கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று** உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு அவர்களுடைய தேவன் வயிறு. (பிலி 3:18,19)

எல்லா நிருபங்களிலும் அவர்கள் சொல்லுவதனை நான் குறிப்பிட்டுக்கொண்டே போகலாம். கூடவே, பிற அப்போஸ்தலர்களும் அப்படியே எழுதுகிறார்கள்.

“விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் **உலகத்திற்குச் சிநேகிதராயிருக்க** விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். (யாக் 4:4)

கள்ளப் போதகர்கள்.... **தந்திரமாய் நுழையப்பண்ணி**... கெட்ட நடக்கையினால் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படக் காரணமாவார்கள், பொருளாசையுடையவர்களாய் **தந்திரமான வார்த்தைகளால்** உங்களைத் தங்களுக்கு ஆதாரமாக வசப்படுத்திக் கொள்கிறார்கள். (2பேது 2:1-3)

இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றி விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்கிறார்கள். இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டு தரம் செத்து வேரற்றுப் போன மரங்களும். தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், **மார்க்கந் தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்**. (யூதா 12,13)

இயேசு கிறிஸ்துவும் தன்னுடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் 7 **பாக்கியவான்களைக் குறித்து பேசினார்** (மத் 5:3-12). ஆனால் முடிவில் ***7 ஐயோ-க்களைக் கொண்டு மாய்மாலம் பண்ணுகிற பொருளாசைக்காரரும், விதவையின் வீடுகளை பட்சிக்கிற மார்க்கத் தலைவர்களையும் வசைமாறி பொழியவேண்டியதாயிற்றே*** (மத் 23:13-29). இவர்கள் யார்? பொருளாசைக்காரரும் வேதம் கையிலேந்தியவர்களும் அல்லவா? (லூக் 16:14)

வெளிப்படுத்தின விசேஷத்திலும் சபையை நடத்தும் (தூதனுக்கு) தலைவனுக்கு கடிதம் எழுதியவர் கூறியவைகளை கவனித்துப் பார்த்தால் எத்தனை நலமாயிருக்கும் (வெளி 2,3 அதி) குறிப்பாக,

என் ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும்... அவர்களை வஞ்சிக்கும்படி நீ யேசபேலுக்கு இடங்கொடுக்கிறாய் (வெளி 2:20) என்று தியத்திரா சபைக்கு சொல்லுகிறாரே.

இன்றைக்கு சபை ஊழியர்கள், தலைவர்களிடத்தில் காணப்படும் பொருளாசை, மாய்மாலம், வஞ்சகம், பரிசுத்த குலைச்சல், உலகத்திற்கு ஒத்த வேஷம், சத்தியத்திற்குப் பதிலாக மறுதலிக்கும் அளவுக்கு ஒத்துப் போகுதல் தலைவிரித்தாடுவதினால், **சபையின் சாரமும், சத்துவமும் குறைந்து, குலைக்கப்பட்டு அநேகரை ஆதாயம் செய்யவேண்டிய சுவிசேஷப் பணியும், அறியாதப் பகுதிகளுக்கு அனுப்ப வேண்டிய மிஷனரி ஊழியமும் தாக்கப்பட்டு, பணமும், பிரயாசமும் எத்தனையாய் வீணடிக்கப்படுகிறது.** இது நம்மைத் தாக்காவிடில் அல்லது பாதிக்காவிடில் நான் கிறிஸ்துவின் சபையாம் சரீரத்தின் அங்கமாயிருப்பது எப்படி?

கூடவே, பாபிலோனிய ஆவியின் உட்பிரவேசம் சபையை பேய்களின் குடியிருப்பாகவும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடாகவும், அசுத்தமும் அருவருப்பும் நிறைந்த இடமாக மாற்றிவருகிறதினால் (வெளி 18:2) **உலகத்தின் ஆவியையும், உன்னதத்தின் ஆவியையும் அடையாளம் காண முடியாமல் மக்கள் தவிக்கின்றனர்** (1கொரி 2:12)**. வேசி மார்க்கம் மணவாட்டியைப் போல உடையணிந்து உலாவருகிறது.** புலம்புவார் உண்டோ? தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படும் காலம் அல்லவோ. (மத் 24:24)

தேவன் சம்பாதித்த சபையையும், அவர் மீட்டுக்கொண்ட சுதந்தரத்தையும், அவர் வாசம் பண்ணும் சீயோனையும், சத்துரு பரிசுத்த ஸ்தலம் அனைத்தையும் கெடுத்துப்போட்டதனையும், அவருடைய ஆலயத்திற்குள்ளேயே தன்னுடைய கொடிதனை நாட்டுவதனையும் அறிந்தவர் புலம்பாமல் இருப்பது எப்படி? (சங் 74:2-4)

தீர்க்கர்கள் அனைவரும் அதனைத்தானே செய்தார்கள். எனவே மிஷனரி பணியின் மகத்துவத்தினையும் தேவைதனையும் கூறி அறிவிக்க விளையும்போது, சபையின் **சாரத்தினைச் சாப்பிடும் அனைத்தையும் சுட்டிக்காட்டுவது இன்றியமையாததாக மாறிவிடுகிறது. இதனால் மற்றவர்களைப் பழித்து லாபம் சேர்ப்பதற்கு அல்ல மாறாக சபையினைக் குறித்த பக்தி வைராக்கியம், தேசத்தினைக் குறித்த கரிசனை, அழிந்து போகிறவர்களைக் குறித்த ஆதங்கம், அன்பரின் கடைசி கட்டளைதனை தலைமேல் கொண்டதினால் வரும் பாரம், நேரமில்லையே இனி காலம் செல்லாதே என்ற துடிப்பு, வரும் ஆபத்தினைக் குறித்த அறிவு, அந்தரங்கமாய் சத்துரு செய்யும் தந்திரத்தினை புரிந்துகொண்டதால் ஏற்படும் புழுக்கம், இராஜாவின் வருகைக்கு ஜனத்தை ஆயத்தப்படுத்தவேண்டிய கட்டாயம், அறிவிக்கப்படாத பகுதிகளைக் குறித்த வேதனை** இவைகளே என்னை பேசத் செய்து உணர்த்துவிக்க செய்யும் வார்த்தைகளை உதிர்க்கச் செய்கிறது.

சுயலாபம் கருதியோ, நான் மாத்திரமே ஊழியம் செய்கிறேன் என்பதனை பறை சாற்றவோ செய்யப்படவில்லை. புரிந்துகொண்டவர்கள் தேவ சமூகத்தில் கண்ணீரோடும் விண்ணப்பத்தோடும் விரைந்து வந்து "சீயோன் குமாத்தியின் அழகெல்லாம் அவளை விட்டு போயிற்று. அவள் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி, தொடருகிறவனுக்கு முன்பாக சத்துவமில்லாமல் நடந்து போனார்கள்" (புல 1:6) என்பதனை உணர்ந்து கூவி கதறி அழுது கிருபையை தேவ ஜனத்தின் மேல் தேசத்தின் மேல் கொண்டுவருவோரை எழுப்பவேண்டும் என்பதே என் ஆவல்.

# 12. கவலையைக் கொண்டுவரும் கடன்

கடன் பிரச்சனை அநேகருக்கு பெரிய பிரச்சனையாகி, ஆவியை அவித்துப்போடுகிறது, உற்சாகத்தினைக் குறைத்துப்போடுகிறது. **கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை** என்றான் ஞானி சாலமோன். (நீதி 22:7)

**நீயோ கடன் வாங்காமல் கடன் கொடுப்பாய்** என்று வாக்குக் கொடுத்தார் வல்ல ஆண்டவர் (உபா 28:12).

**அன்பினால் அன்றி வேறொன்றிலும் கடன்படாதிருங்கள்** என்றார் பவுல். (ரோமர் 13:8)

ஆயினும், வியாபாரத்தின் நிமித்தம், தனக்கு இவ்வளவு வரவு உண்டாயிருக்கிறது என்கிற தைரியத்தின் நிமித்தம், என் சம்பளத்தில் ஒரு பகுதிதானே என்கிற எண்ணத்தின் நிமித்தம், வியாதி அல்லது அவசரத் தேவைகளைத் தவிர்க்கமுடியாதபோது வலுக்கட்டாயமாகத் தள்ளப்படும் சூழ்நிலையின் நிமித்தம், எப்படியாவது செய்யத்தான் வேண்டும் என்ற கட்டாயத்தின் நிமித்தம், சம்பிரதாயங்களை விட்டுக்கொடுக்க முடியாமல் தவித்ததின் நிமித்தம், வறட்டு பெருமையைத் தக்கவைத்துக்கொள்ள பிரயாசப்படுவதின் நிமித்தம், நண்பர்களுக்கு அல்லது உறவினருக்கு உதவி செய்யத் தூண்டுதல் பெற்றதின் நிமித்தம், பேராசையின் நிமித்தம், விளம்பரங்களின் வஞ்சனை பேச்சினை நம்பினதின் நிமித்தம், பிள்ளைகளைப் படிக்கவைக்கவேண்டியதின் கட்டாயத்தின் நிமித்தம், விபத்துக்கள், ஏமாற்றங்களில் அகப்பட்டுக்கொண்டதின் நிமித்தம், தேவையற்ற சொப்பனங்களையும், திட்டங்களையும் நிறைவேற்ற ஒப்புக்கொடுத்ததின் நிமித்தம், பசப்பு மொழி பேசி உண்மைகளைத் திரித்து கூறியவரின் நிமித்தம் கடன் தொல்லைக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

“இரவலாக வாங்கி வந்தேன்” என்று கதறினான் கோடரியை இழந்தவன். “என் பிள்ளைகளைக் கொண்டுபோகப் பார்க்கிறான் கடன் கொடுத்தவன்” என்று கதறினாள் விதவை ஒருத்தி. “அவர்கள் எனக்கு வட்டிக்குக் கொடுத்ததுமில்லை” என்றான் எரேமியா தீர்க்கதரிசி. “என் வீட்டுக்கு வந்தவர்களுக்கு முன்

வைக்க அப்பம் கடனாக வேண்டும்" என்றான் பிள்ளைகளோடு படுத்துக்கொண்டிருந்த தகப்பன். இவைகள் யாவும் வேதத்தில் காணப்படுவோரின் நிலை.

இன்று உங்களைக் கூப்பிட்டு வங்கியோ, மார்வாடியோ கடன் வாங்கிக்கொள்ளுங்கள், மீதத்தை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம் என்கின்றனர். வங்கிகள் (Banks) வம்புக்கு கடன் கொடுப்போர்.

மாதந்தோறும் இலகுவாக நீங்கள் கொடுத்துவிடலாம் என "இன்ஸ்டால்மென்ட்" பேசுவோர் எத்தனை ரகம். மாதச் சம்பளம் வாங்கி வீட்டிற்கு வரவாப் போகிறது. சம்பளம் கிடைக்கும் இடத்திலே பிடிக்கப்பட்டுவிட்டால் பொருள் வீட்டுக்கு வந்தது கூடத் தெரியாமல் போய்விடும் என்று புலம்புவோர் எண்ணிக்கை இன்றைய நாட்களில் அதிகமே.

வீட்டுக்குக் கடன், காருக்குக் கடன், பொருளுக்குக் கடன், கல்விக்குக் கடன், வியாபாரம் செய்யக் கடன் என்று பலவித புதிய புதிய கடன் திட்டங்களோடு போட்டா போட்டி போட்டுக்கொண்டு முன்வருகின்றன ஸ்தாபனங்கள். திக்கு முக்காடும் ஜனம் வகையறியாது மாட்டிக்கொள்கிறது.

கடன் அட்டை (Credit card) முறை பல இடங்களில் பணமின்றி பொருளைப் பெற்றுக்கொள்ளவும், கொள்ளை, திருட்டு போன்றவற்றால் இழக்காதபடி காத்துக்கொள்ள போதுமான பெலமுள்ளவை என்பதினால் இந்த முறையையும் உபயோகப்படுத்தி சத்துரு அநேகரை சிறையாக்கிவிட்டான். சம்பளத்தை அடிப்படையாகக்கொண்டோ அல்லது வியாபாரத்தின் வெற்றியை அடிப்படையாகக்கொண்டோ கடன் வாங்கும் முறையில், வசதிகளை வியாபார நோக்காக வங்கிகளும் ஸ்தாபனங்களும் வழங்கி அநேகரை வழுக்கிவிடச் செய்கின்றனர். மேலும், பணத்தின் நிலைமையைப் புரியவைப்பது போல் புரியவைத்து அநேகரை இதனால் கவிழ்த்துவிடுகின்றனர்.

உதாரணமாக, இன்று 20 லட்சம் ரூபாய் பெறும் வீடு இன்னமும் 15 வருடம் கழித்து 40 லட்சம் பெறும் ஆனால் கடன் முறையில் நீங்கள் கட்டப்போகும் பணம் 35 லட்சமே

(முதலும் வட்டியும் சேர்த்து) எனவே, இந்த முறையில் நீங்கள் 5 லட்சம் லாபமே பெறுகிறீர்கள் எனப் போதித்து 15 லட்சம் வட்டியாக 15 ஆண்டுகளில் கட்டும் பணத்தை அறியாமலேயே வங்கிகள் விழுங்கிவிடுகின்றன. நீயாக சேர்த்துவைத்து என்றைக்கு கார், அல்லது வீடு வாங்கமுடியும்? எனவே நாங்கள் வாங்கித் தருகிறோம் நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து லாபமும் பெற்றுக்கொள்ளுங்கள் என்று இவைகள் அழைக்கின்றன. இதற்கு இரையானோரின் வருமானத்தில்தான் வான் அளாவிய கட்டிடங்களையும் வருமானத்தையும் வங்கிகள் பெற்றிருக்கின்றன என்பதும் கூடவே சொல்லவேண்டிய உண்மை.

இந்த முறைகள் இன்றைக்கு ஊழியப் பாதையில் நடப்போரையும் கவ்விப் பிடித்துக்கொண்டது. வரும் மாதக் காணிக்கையின் பேரில் வங்கிகளும் கடன் தர ஆயத்தம். இதன் விளைவு ஜனங்கள் கலைந்துபோய்விடக்கூடாது என்பதில் கவனமாயிருக்கும் பிரசங்கங்கள் மலிந்துவிட்டன. **சத்தியம் பேசினால் சத்துருவாகிவிடவேண்டுமே என்ற பயத்தின் ஆவி** போதிக்கவேண்டியவர்களைப் பிடித்து ஆட்டுகிறது. இதினிமித்தம் கவர்ச்சிப் பிரசங்கங்கள் மிகுதியாகி கேட்போரை கவிழ்த்துப்போட வாய்ப்புகள் பெருகிவிட்டன.

பவுலும், அப்போஸ்தலரும் வாழ வகை தெரியாதவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். பரிசுத்தவான்கள் சென்ற பாதை கோணலானது, குறைவுள்ளது, விசுவாச அறிக்கையில்லாதது என்று பறைசாற்றப்படுகின்றது. பிரசங்கபீடம் அடிக்கடி கொடுப்பதனைக் குறித்தே நிறைந்திருக்கிறது. ஆசீர்வாத வசனமே அதிகமாய் உபயோகப்படுகிறதே ஒழிய ஆரோக்கிய உபதேசம் இடம் பெற மறுக்கிறது.

தன்னுடைய வைப்பு நிதி (PF) போன்றவற்றிலிருந்து ஒருவர் கடனாகப் பெற்றால் அது அவருடைய பணமே என்பதனால் தவறில்லை. ஆனால், வரும் என்று எதிர்பார்த்து கடன் வாங்குவது எத்தனைப் பொருத்தம் என எனக்கு விளங்குவதில்லை. மற்றவர்கள் நகைகளை ஊழியத்தின் நிமித்தம் பெற்று அடகுவைத்து திருப்பி தரமுடியாமல் பராமுகமாய் இருப்பவர்களையும் நான் அறிவேன். புருஷனுக்குத் தெரியாமல் தங்கள் நகைகளை அளித்தோரும்

இதில் அடங்குவர். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நிற்கும் இந்த அபலைகள் போதகரின் பிரசங்கத்தை எப்படிக் கேட்பார்கள் என்பது கேள்விக்குறியே.

சொத்துக்கள் அல்லது பொருள்களின்பேரில் கடன் வாங்கியவர்கள் கட்டிய வட்டி குட்டிப்போட்டு சொத்துக்களை இழக்கப்பண்ணியதும் உண்மையே. பார்ப்பதற்கு கவர்ச்சியாய் இருக்கும் திட்டங்கள் இன்று ஏராளம்.

கவனக்குறைவினால் நாம் இரட்சிப்பின் சந்தோஷத்தினை இழக்க வாய்ப்புகள் ஏராளம். மற்றவர்களுக்கு இடறுதலாக நம்முடைய சாட்சிகள் கெடப்போவதும் நிச்சயம் என்பதனை மனதில் கொண்டு வாழக் கற்றுக்கொள்வோம். அநேகர் இதனால் ஊழியத்தினை வெறுக்கவும் ஏதுவாயிற்று என்பதனை மறக்காமல் இருப்போம்.

எந்த காரணமானாலும் "பொருளாசை" என்ற விக்கிரக ஆராதனை எங்கேயாவது ஒட்டிக்கொண்டிருக்கிறதா? என்பதனை சோதித்தறிய தேவ ஆவியானவர் உதவுவாராக. "கர்த்தருக்காகவே கடன் வாங்கினேன்" என்று அவரையும் இழுக்க முயல்வோரும் உண்டு. "திருப்பிக் கொடுக்கவேண்டுமே" என்ற வார்த்தைகளை அறியாதோரும் உண்டு.

இதுவரை இப்படிப்பட்ட மாயவலைகளில் மாட்டிக்கொள்ளாதோர் கவனமாக இருங்கள். மாட்டிக்கொண்டோர் "இனிமேல் மாட்டிக்கொள்ளாமல் காத்துக்கொள்ளுவேன்" என்று தீர்மானம் பண்ணுங்கள்; **இரும்பையும் மிதக்கப்பண்ணின ஆண்டவர் உதவுவார்.** கடன் வாங்கி வாங்கியப் பொருள் கவர்ச்சியாக இருந்தாலும் கவலையைத்தான் பெருக்கும் என்பதனை மறக்காதீர்கள்.

**கர்த்தர் கிரியைசெய்து உன்னை அற்புதத்தைக் காணச் செய்யாதவாறு மாட்டிவிட கடனுக்கு வல்லமை உண்டு** என்பதனை மறக்கலாகாது.

தேவைகள் பெருகும்போதும், நெருக்கும்போதும் அவரையே சார்ந்துகொள்ளப் படியுங்கள்; அது அநேக வேதத்தின் அற்புதங்களை வாழ்வில் அனுபவிக்க ஏதுவாகும். அதுவே அற்புதங்களை அனுபவிக்கச் சிறந்த வழி.

# 13. கிருபைக்கு விரோதமானவைகள்

சிலர் கிருபையை வீணடிக்கிறது உண்மைதான் எனினும் (கலா 2:21), சிலர் மாயையைப் பின்பற்றி அதனைப் போக்கடிக்கிறார்கள் என்பதும் உண்மை (யோனா 2:6). ஆனால், **அநேகர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையை சாகடிக்கிறார்களே.**

சார்லஸ் ஸ்விண்டல் (Charles swindoll) என்பவர் தன்னுடைய புத்தகத்தில் (Awakened Grace) 24 காரியங்களைக் குறிப்பிட்டு, அவைகள் கிருபையை சாகடிக்கப் போதுமான பலமுள்ளவை என கூறுகிறார். அவைகளைப் பட்டியலிட்டு கொஞ்சம் ஆராய்வது நம்முடைய ஆவிக்குரிய வாழ்விற்கு பிரயோஜனமாக இருக்கும்.

## 1.Legalism

**(சட்டத்திட்டங்கள் மாத்திரம் மேன்மைபாராட்டப்படுதல்)**

அநேக நேரங்களில் **பரிசேய ஆவியுடையவர்கள்** இதனைப் பெரிதாக மேன்மை பாராட்டுவார்கள். லூக் 6:6-10 வரையிலான வசனங்களில் அப்படிப்பட்டவர்கள்மேல் இயேசு கோபமடைவதனைக் காணலாம். சூம்பின கையுடைய மனிதனை குணமாக்குவது ஓய்வு நாளில் செய்யக்கூடாது என்பது இவர்கள் வாதம். லூக் 13:10-17 ல் பலவீனப்படுத்தும் ஆவியையுடைய பெண் ஒருத்தியை இயேசு கட்டவிழ்த்தபோது ஜெப ஆலயத் தலைவன் அதனை வன்மையாகக் கண்டித்ததோடு, "ஓய்வுநாளில் அப்படிச் செய்யலாகாது என்றே தீர்ப்பளிக்கிறான் (வச 14). அவனை **"மாயக்காரன்"** என்று சொல்ல இயேசு அஞ்சவில்லை (வச 15). **எருது, கழுதையைக் காட்டிலும் மனிதனை மோசமாக மாற்றிவிடுகிறது** இந்தக் காரியம். இதைப் போன்றே எது முக்கியம்? என்று கேள்வி எழுப்பும் இயேசு, "நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் இந்தக் கொள்கையினால் (Legalism) விட்டுவிட்டீர்கள் (மத் 23:19,23) எனப் பாய்கிறார். **சட்டத்திட்டங்களை மாத்திரம் மேன்மைப்படுத்தி மனிதாபிமானத்தை மறந்துவிடும் எந்த காரியமும் கிருபையைக் கொன்றுவிடக்கூடியதே.**

## 2.Expectations (எதிர்பார்ப்புகள்)

**நாம் எதிர்பார்த்தபடி மற்றவர்கள் செயல்படாதபோது, அல்லது காரியங்களையோ, குணங்களையோ வெளிப்படுத்தாதபோது, கிருபையை நிந்திக்கவும் சாகடிக்கவும் நாம் தயங்குவதில்லை.** நாகமானை கவனித்துப் பாருங்கள். "நாகமான் கடுங்கோபம் கொண்டு, புறப்பட்டுப் போய், "அவன் (எலிசா தீர்க்கன்) வெளியே வந்து நின்று தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும், பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி உக்கிரத்தோடே திரும்பிப் போனான்" (2இராஜா 4:11,12).

இங்கே, அவனுக்கு நியாயப்பிரமாணத்தைக் குறித்து அறிவு இல்லை. குஷ்டம் பிடித்தவன் ஊருக்கு வெளியே மற்றவர்களைப் பார்க்கும்போது "தீட்டு தீட்டு" என்று அலறவேண்டியது என்பது கட்டளை. ஆனால், இவனுடைய எதிர்பார்ப்பு குஷ்டத்தினை எலிசா தடவிவிடுவான் என்பது; கூடவே, **மூன்று முறை தேவ வார்த்தைக்கு, தேவ மனிதனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த யோர்தானை** (யோசுவாவின் நாட்களில் ஆசாரியரின் கால் பட்டமாத்திரத்திலும், பின்னர் எலியா எலிசாவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்த நேரத்திலும் பிரிந்துபோன நதி அது) தமஸ்குவின் நதிகளோடு ஒப்பிட்டு கிருபையை சாகடிக்கிறான். கூடவே, கோபமும், உக்கிரமும் வெளிப்படுகிறது (2இராஜா 4:11-12) என்னே பரிதாபம்.

## 3.Traditionalism (பாரம்பரியம்)

மீண்டும் குற்றஞ்சாட்டும் பரிசேயரைப் பாருங்கள். அவர்களுக்கு பாரம்பரியமே பெரிது (மத் 15:2). இயேசுவோ "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனைகளை ஏன் மீறி நடக்கிறீர்கள்? எனக் கேட்கிறார் (வச 3). கூடவே, **தேவ வார்த்தையை அவமாக்குகிறீர்கள்** என்கிறார் (வச 6). **வீணாய் ஆராதனை செய்கிறீர்கள்** எனக்கு என குற்றஞ்சாட்டுகிறார் (வச 9). **பாரம்பரியத்திற்கு முதலிடம் கொடுப்பவர்கள் வசனத்தினால் இடறல்**

**அடைவார்கள் என்பதும் (வச 12), "பரம பிதா நடாத நாற்றுகள்" என்றும் பிடுங்கப்பட்டுப் போவார்கள் என்பதும் (வச 13), பாரம்பரியம் குருடாக்கிவிட வல்லமை உள்ளது என்பதும் (வச 14) நமக்கு இங்கே நன்றாக விளக்கப்படுகிறது.**

## 4.Manipulation (எடுத்துக்கட்டிச் சொல்லுதல்)

தாவீதின் நாட்களில் நடந்த ஒன்று 2சாமுவேல் முதலாம் அதிகாரத்தில் காணப்படுகிறது. அமலேக்கிய வாலிபன் ஒருவன் தான் சவுல் ராஜாவை கொன்றதாகவும், அவருடைய தலையில் இருந்த கிரீடத்தினை எடுத்து தாவீதினிடத்தில் கொண்டுவந்ததாகவும் எடுத்துக்கட்டிக் கூறுகிறான்; ஆனால், உண்மை என்ன? சவுல் தானே தற்கொலை செய்து செத்துப்போனான் (1சாமு 31:5). **தனக்கு வெகுமானம் கிடைக்கும் பாராட்டு கிடைக்கும் என எண்ணின அந்த வாலிபன் தன் உயிரை இழக்க நேரிட்டது. கிருபையை சாகடிக்கிறவர்களும் இப்படியே செயல்படுகிறார்கள்.**

## 5. Demands (அளவுக்கு மீறி உரிமைபாராட்டல்)

பிள்ளை சுமக்கக் கூடிய பாரம் 5 கிலோ என்றால் என்னுடைய பிள்ளை எனவே நான் சொல்லுவதனை செய் 15 கிலோ எடையை எடுத்துக்கொள் என்று சொல்லும் தகப்பனும், உனக்கு வேலை தந்தது நான் சம்பளம் தருவது நான் எனவே நான் சொல்லுவதையெல்லாம் நீ செய்துதான் ஆகவேண்டும் என்று கூறும் எஜமானும், நீ எனக்கு மனைவி எனவே உன்னை அடிமைபோல நடத்த எனக்கு உரிமை உண்டு எனக்கூறும் கணவனும், ஏன் என்னைப் பெற்றீர்கள்? எனவே நான் விரும்புகிறதை எனக்குக் கடன்பட்டாகிலும் வாங்கித்தாருங்கள் என்று கூறும் பிள்ளையும், நான் உன்னை நடத்தும் பாஸ்டர் என்னைக் கனப்படுத்தி எனக்கு அடங்கி இரு என்று கூறும் ஊழியனும், **கொள்ளைக்காரரைக் காட்டிலும் கேடானவர்களே.** அவர்களும் கிருபையை சாகடிக்கிற கூட்டத்தாரே.

## 6. Negativism (எதிர்மறை கொள்கையை உடையவர்கள்)

எதனைக் கண்டாலும் எதிர்மறையாகவே பார்க்கக் கற்றுக்கொண்டவர்கள். என்ன சொன்னாலும் அதனை

எதிர்த்து நிற்பவர்கள். காரியத்தின் நஷ்டத்தினைப் பார்க்க மாத்திரம் அறிந்தவர்கள். விசுவாச வார்த்தைகளையோ, கிருபைநிறை வார்த்தைகளையோ பேச அறியாதவர்கள். ஒரு வேலையைச் சொன்னால், அதிலிருக்கும் கஷ்டத்தினை மாத்திரமே பெரிதாக்கிப் பேசத் தெரியுமே தவிர **அதனைச் செய்து முடிக்க கிருபையைப் பெறக் காத்திருக்கக்கூடாதவர்கள்.** இவர்களும் கிருபையை கொலை செய்யத் தயங்காதவர்களே.

## 7. Control (அடக்கி ஆளுதல்)

அதிகாரத்தினால், பலத்தினால், பணத்தினால் காரியங்களையும், மனிதர்களையும், உடன் வேலையாட்களையும் அடக்கி ஆள நினைப்பவர்கள் இவர்கள். மற்றவர்களுக்குள் இருக்கும் **கிருபையையோ, தாலந்துகளையோ, அனுபவங்களையோ கவனிக்கக்கூடாதபடிக்கு கண் அடைக்கப்பட்டவர்கள். யேசபேலின் ஆவி இவர்களை ஆட்டிப்படைக்கும்** (1இராஜா 21:7). "நான் உமக்குக் கொடுப்பேன்" என்ற அகங்காரப் பேச்சு இவர்களின் தனித்தன்மை. அடையாளம் கண்டுகொண்டால் நாம் தப்பிவிட வாய்ப்புண்டு.

## 8.Comparison (ஒப்பிட்டுப் பார்த்தல்)

இயேசு இதனை வன்மையாகக் கண்டிக்கிறார் மத் 20:1-15 வரை உள்ள வசனங்களை தியானித்தால் அது விளங்கும். கஷ்டங்களையும், பாடுகளையும் சகித்த எங்களை அதிக களைப்படையாத, கஷ்டத்திற்குட்படாதவர்களுக்குச் சமமாக்கினீரே என்பதே இப்படிப்பட்டவர்களின் புலம்பல் (வச 12). **எஜமானின் தயாளத்தினைப் புரிந்துகொள்ளும் மனப்பான்மை அற்றவர்கள், வன்கண்ணர்கள் (வச 14). எஜமானின் உன்னத நிலையை அங்கீகரிக்கத் தெரியாதவர்கள் (வச 15).** வேறொரு சாரார், "நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராதபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" என்று ஒப்புமை ஸ்தோத்திர பலி ஏறெடுப்போர்கள் (லூக் 18:11). **தேவனுக்கு நன்றி செலுத்தும் வேளையில் கூட மற்றவர்களோடு தங்களை ஒப்புமைப்படுத்தி மகிழ வாஞ்சிப்பவர்கள்.** இந்த சுபாவமும் கிருபையை சாகடிக்க போதிய பலன் பெற்றது.

## 9.Perfectionism (குறைவற்றக் கொள்கைக்காரர்)

தாங்கள் பூரணமானவர்களா? இல்லையா? என்பதனைக் குறித்துக் கவலையற்றவர்கள். ஆனால், மற்றவர்களிடத்தில் அதனை எதிர்பார்த்து, அதனால் ஆத்திரமடைபவர்கள். பவுலைப் பாருங்கள், "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்", ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்" (பிலி 3:12-15) என்பதே அவரின் முழக்கம்.

கூடவே, "என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன், ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை. என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தர் (1கொரி 4:4) என்பதே அவரின் நிதானம். மற்றவர்கள் எல்லாவற்றிலும் தவறு செய்யாமல் இருக்கவேண்டும் என்று நினைப்பது தவறல்ல. வேலை முழுவதும் சரியாய் இருக்கவேண்டும் என்பது நல் நோக்கம். **அதனை சாக்காகக் கொண்டு மற்றவர்களை திட்டித் தீர்ப்பது கிருபையை சாகடிக்கப் போதிய ஆயுதமாகிறது.**

## 10. Competition (போட்டி மனப்பான்மை)

இரண்டு பேருக்கு இடையில் **ஆரோக்கியமான போட்டி** (healthy competition) நல்ல உற்சாகத்தினைக் கொண்டுவரக்கூடியதே. இரண்டு ஸ்தாபனங்களின் மத்தியில் காணப்படும் ஆரோக்கியமான போட்டி அநேகருக்கு பயனைக் கொண்டுவந்து சேர்க்கும். ஆனால், **அது ஒருவரை ஒருவர் மிதித்து முன்னேற வழி செய்யும்போது, பேராபத்தினைக் கொண்டுவந்துவிடும்.** விளையாட்டுப் போட்டிகளில் தோற்றுப்போகும் அணி மற்றவரைக் கட்டித் தழுவி வாழ்த்தும் காட்சிகள் கண் கொள்ளாதவை. அவை அநேக **நேரங்களில் ஊழியத்தில், ஊழியக்காரர் மத்தியில் நடைபெறுவது இல்லை.** மாறாக பொறாமையினால் நிறைந்து, காய்மகாரமாகப் பார்த்து மற்றவரை அழிக்கவும் செயல்படத் தொடங்கும் காட்சியே ஆவிக்குரிய உலகில் காண்பவைகள் (1சாமு 18:9-10). **அது**

**பொல்லாத பிசாசுக்கு நம்மை விற்றுப்போடத் செய்து, கிருபையை சாகடிக்கப் பெலன் பெற்று செயலாக்கத் தொடங்கி, அநேகரின் வாழ்வுக்கும் ஊழியத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டது.**

## 11. Criticism (குறை காணல்)

எதனை மற்றவர்கள் செய்தாலும் அதில் குறை காண்பதே இப்படிப்பட்டவர்களின் தொழில்; இயேசுவின் பின் பரிசேயர்கள், பவுலின் பின்னே யூதர்கள், பேதுருவின் பின்னே கிறிஸ்துவுக்குள் வந்துவிட்ட விருத்தசேதத்தினை மேன்மைப்படுத்தும் சகோதரர்கள், அப்போஸ்தலர் பின்னே இயேசு கிறிஸ்துவின் நாமத்தினை கேட்கவும் விரும்பாத விரோதிகள், கள்ள அப்போஸ்தலர்கள் போன்ற அநேகர் இதனை தங்கள் ஊழியமாக செய்துகொண்டுவந்தார்கள். கிருபையை விட்டு மற்றவர்களை சீக்கிரமாய் திருப்புகிறவர்கள் (கலா1:6) கட்டி எழுப்பும்படியானவை (Constructive criticism) வரவேற்கப்படவேண்டியது. ஆனால், (Destructive criticism) அழிவுக்காகச் செயல்படும் கருத்துக்கள் களைந்தெறியப்படவேண்டியவை. ஏனெனில், அது கிருபையை சாகடித்துவிடுமே.

## 12. Pettiness (அற்பத்தனம்)

சிலருடைய சம்பாஷனை மிகவும் அற்பத்தனமாக இருக்கும். சீமேயி என்பவன் தாவீதை தூஷித்ததுபோல, இப்படிப்பட்டவர்கள் செயல்படுவார்கள் (2சாமு 16:5-13). **மற்றவர்களுக்குக் கோபமூட்டும் செயல்தனை செய்யவும், தூஷிக்கவும் அஞ்சாதவர்கள்**; ஆனால், அற்பத்தனம் கிருபையை கொன்றுபோட்டுவிடுமே.

மேற்சொன்ன அனைத்தும் வெளிப்படையாகக் காணப்படும் காரியங்கள். உள்ளே காணப்படும் காரியங்களையும் ஸ்வின்டல் பட்டியலிடுகிறார். அவைகள் நமக்கு நன்றாகத் தெரிந்தவைகள் என்பதனால் விளக்காமல் விடுகிறேன்.

**பெருமை** (pride), **பயம்** (fear), **தப்பர்த்தப்படுத்துதல்** (Resentment), **கசப்பு** (bitterness), **மன்னிக்க இயலா ஆவி**

(unforgiving spirit), **பாதுகாப்பற்ற நிலையுள்ள மனப்பான்மை** (insecurity), **மாம்சீக முயற்சி** (fleshly effort), **குற்ற உணர்வு** (guilt), **மானக்கேடு** (shame), **புறங்கூறுதல்** (gossip), **மாய்மாலம்** (hypocrisy), **மற்றவர்களைக் குறித்த எதிர்மறையான கூற்று** (saying negative things about others).

மேற்கண்ட அனைத்து குணங்களும் இருதயத்தில் காணப்படும் காரியங்கள். இவைகளும் **கிருபையைச் சாகடிக்கப் போதுமானவைகள்.** இவை அனைத்திலிருந்தும் தேவன் நம்மை காப்பாராக. கடைசி நாட்களில் கிருபையை இழந்து போகாதபடி நம்மை ஜாக்கிரதையோடுக் காத்துக்கொள்ள தேவ தயவு போதுமானதாக இருப்பதாக.

# 14. அறியாதிருந்தால் ஐயோ...

"ஐயோ"என்ற வார்த்தையின் சாரத்தினை அறியாதவர் யார்? குறிப்பாக பாவ வாழ்வுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தவர் இதனை நன்கு அறிவர். ஞானி சொல்வதனைக் கேளுங்கள் "ஐயோ யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? " என்று அடுக்கிக்கொண்டே போகிறான். சாராயத்தினை நாடி, பின்னர் பரஸ்திரிகளை பற்றிக்கொண்டு, தாறுமாறானவைகளைப் பேசி, அதிலேயே தாபரிக்கிற மனுஷனை நமக்கு அடையாளம் காட்டுகிறார் (நீதி 23:29-35).

விசுவாச வாழ்வில் முன்னேறுகிறவர்கள், இப்படிப்பட்ட வாழ்வில் தங்களைக் காணாமல் இருக்கலாம். **ஆனால், மதுவைப் போன்ற பதவி வெறி, பெயர் தப்பட்டத்தில் நாட்டம், பொருளாசையை அடிப்படையாகக் கொண்ட வாழ்வு நம்மை மதுபானத்தினைக் காட்டிலும் மோசமான நிலைக்குத் தள்ளிவிட வாய்ப்புண்டு என்பதனை மறுப்பதற்கில்லை.**

அது நம்மை மாத்திரம் அல்ல, உடன் இருப்பவர்களையும் கெடுத்துவிட வழிசெய்துவிடுமல்லவா? தன் தோழருக்கு குடிக்கக் கொடுத்து தன் துருத்தியை அவர்களண்டையிலே வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு அவர்களையும் வெறிக்கப் பண்ணுவதற்கேதுவாக (பதவி வெறி, பண வெறி முதலானவைகளால்) செயல்படுகிறவர்களுக்கு ஐயோ! என்பது தீர்க்கதரிசி ஆபகூக்கின் அலறல் (ஆபகூக் 2:15).

நாம் தெரிந்துகொள்ளும் சூழ்நிலையும் நமக்கு "ஐயோ"வைக் கொண்டுவந்துவிட வாய்ப்புண்டு. சங்கீதக்காரன், "சமாதானத்தை பகைக்கிறவர்களிடத்தில் குடியிருப்பதனையும், ஆகாமிய கூடாரத்தில் தங்கியிருப்பதனையும் தனக்கு சாபமாகவே கொள்கிறான்" (சங் 120:5,6; 34:10).

இதனைத்தான் யூதாவும் தன்னுடைய பொன்னான சிறிய நிருபத்திலும் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. காயீனுடைய

வழி என்றும், பிலேயாமின் வஞ்சகம் என்றும் கோராகின் பாவம் என்றும் குறிப்பிட்டு கெட்டுப்போன அவர்களை எச்சரிப்பின் கல்லாகவே நிறுத்துகிறார் (யூதா 1:11).

பாவத்தோடே பாவத்தைக் கூட்டும்படி என்னை அல்லாமல் ஆலோசனை பண்ணி, என் ஆவியை அல்லாமல் தங்களை மூடிக்கொள்ளப் பார்க்கிறவர்களும் என் வாக்கைக் கேளாமல் பார்வோனின் பெலத்தினால் பெலக்கவும், எகிப்தின் நிழலிலே ஒதுங்கவும் வேண்டும் என்று எகிப்துக்குப் போகிறவர்களுமாகிய முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ! (ஏசா 30:1,2). சகாயமடையும்படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும், எகிப்துக்குப் போய், குதிரைகள் மேல் நம்பிக்கை வைத்து, இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரை வீரர் மகா பெலசாலிகளாயிருப்பதினால் அவர்களை நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ! (ஏசா 31:1) என்ற ஏசாயாவின் மூலம் உரைக்கப்பட்ட தீர்க்கமான வார்த்தைகளைக் கேட்பவர் எத்தனை பேர்; எத்தனை ஊழியர்கள், சபைகள் இந்த முறையில் கெட்டுப்போயுள்ளன.

தொடர்ந்து **தன் பெலத்தினை மாத்திரம் நம்பி மற்றவர்களை மதிக்காமல் நடந்து, இசைந்துபோக மனமற்றவர்களான சிலரையும், தன்னிச்சையாய் காரியங்களை நடப்பிக்க ஒப்புக்கொடுத்த சிலரையும் வேதம் எச்சரிக்காமல் விடவில்லை.** ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ! அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே (பிர 4:10).

அப்படிப்பட்டவர்கள் செய்வது என்ன? அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின் மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணி, தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால் விடியற்காலமாகிறபோது அதை நடப்பித்து, வயல்களை இச்சித்துப் பறித்துக்கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக்கொண்டு, புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்தரத்தினையும் எடுக்கிறவர்களாக மாறிவிடுகின்றனர். இதுதானே இன்றைய அரசியல் உலகிலும், சில வேளைகளில் ஆன்மீக உலகிலும் நடைபெறுபவை. அவர்களுக்கு வரும் ஐயோ!க்கள் எத்தனை எத்தனை! (மீகா 2:1)

அடுத்தாற்போல், காணப்படும் **நிர்விசார அலட்சிய வாழ்வு. பலத்த செய்கைகள் கண்டும் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் அனுபவித்தும் ஆண்டவர் விரும்புகின்ற மனந்திரும்புதலை பெறாத ஒரு கூட்ட ஜனம்** உண்டு; அலட்சியமே பிரதான காரணம் (மத் 11:20-24). அவர்கள் மற்றவர்களைக் குறித்த எந்த கரிசனையும் கொள்ள இயலாதவர்கள். சீயோனில் நிர்விசாரமாய் இருப்பவர்கள். தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப் போல் கீதவாக்கியங்களைத் தங்களுக்கு உண்டு பண்ணி இசையில் மயங்கி அதிலே பிரியப்படுவதே பிரதான வாழ்க்கையாகக் கொண்டு, யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்கும் கவலைப்படாமற் போகிறவர்கள் (ஆமோஸ் 6:1-6).

ஏன் ஆசீர்வதிக்கப்பட்டோம்? ஏன் சீயோனின் வாசிகளாக நாம் இப்பூமியில் வைக்கப்பட்டிருக்கிறோம்? என்பதனை உணரக்கூடாதவர்கள். எத்தனையான குருட்டாட்டம், மயக்க நிலைமை. ஆசீர்வாதமே ஆபத்தாக முடிந்துவிட்டதே; ஐயோ என்ன பரிதாபம்.

மாய்மால வாழ்வினை அதிகமாக கண்டித்து உணர்த்திய இயேசுவின் பிரசங்கங்களில் எத்தனை வன்மையாக அவர் கடிந்துகொள்கிறார் என்பது, மத் 23-ம் அதிகாரம் தெளிவாக்கும் அல்லவா?

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷனாலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது.

தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பித்து, நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ! என்பதும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி ஏசாயாவின் தெளிவான தேவ சத்தம்; உள்ளொன்றும் வெளியில் ஒன்றுமாக வாழும் யாவரும் இதற்கு விதிவிலக்கல்லவே! (ஏசா 29:13,15).

வேறு சிலரோ பெற்றோரை இகழ்ந்து, தங்களின் இச்சைகளை நிறைவேற்றக் கூடாமல் தடுக்கப்படும்போதும், போதிய பொருள் அல்லது கல்வி கொடுக்கத் திறனற்றவர்களான பெற்றோரைப் பார்த்து, ஏன் என்னைப் பெற்றாய் என்று கேட்கிறார்கள் அல்லவா?

தகப்பனை நோக்கி, **ஏன் ஜெனிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி ஏன் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ** அல்லவா (ஏசா 45:10). தன் தகப்பனையும் தாயையும் தூஷிக்கிறவர்களான அநேகருடைய தீபம் காரிருளில் அணைந்துபோயிற்றே (நீதி 20:20).

அநேகம் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்திலும், வியாதிப்பட்டோராய் வாழும் பெற்றோர் மத்தியிலும், போதுமான வருமானம் இல்லாமல் கஷ்டப்படும் குடும்பத்திலும், சில வேளைகளில் மிஷனரிகளின் குடும்பத்திலும் இக்குரல் கேட்கப்படுகிறதே. தங்களை அறியாமல் இக்கேள்விகள் கேட்கப்பட்டாலும், இதன் விளைவினை அனுபவிக்கும்போது அது வேதனை அல்லவா?

இவைகள் ஒருபுறமிருக்க, தங்களையே சபிக்க ஆரம்பித்த சிலரைக் காண்பிக்க விரும்புகிறேன். பரிசுத்த தேவனின் பரிசுத்த பர்வதத்தில் தன்னை நிறுத்தத் தகுதியற்றவனாகத்தான் காண்கிறார் ஏசாயா என்ற தீர்க்கதரிசி. ஊழியம் செய்யும் அவர் அதுவரை தன்னுடைய குறைதனை அறிய முடியவில்லை; ஆனால், தேவ தரிசனம் அவரை அலறச் செய்கிறது (ஏசா 6:1-6).

இடறல்கள் வருவது அவசியம் (மத் 18:7), அதைத் தவிர்க்கவும் முடியாது (லூக் 17:1); அப்படியாயினும், அதனைக் கொண்டுவருவதற்குக் காரணமாகக் காணப்படுவோருக்கு ஐயோ! என்றால் கவனித்துப் பாருங்கள். அவசியமானதும் தவிர்க்க முடியாத ஒன்றினைக் கொண்டுவரக் காரணமாக அமைய நாம் எத்தனிக்கவே கூடாது அல்லவா?

ஆனால், இவைகள் எல்லாவற்றிலும் மேலாக, தன்னுடைய பொறுப்புணர்ச்சியின் நிமித்தம் பவுல் சுவிசேஷத்தினை தான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! என்று தன் மேலேயே

இதனை வலுக்கட்டாயமாக சுமத்திக்கொள்வது எத்தனை ஆச்சரியமானக் காரியம். அவனுடைய துடிப்புக்குக் காரணமும் இதுவல்லவா! அறியப்படாத பிரதேசங்களைக் குறித்த ஆர்வத்திற்கும், ஈடுபாடுக்கும் இவைதானே காரணம். உயிரை அற்பமாக எண்ணுவதற்கும், புதிய பகுதிகளைச் சந்திக்க உத்வேகம் கொண்டதற்கும் அடிக்கடி நாசமோசத்திற்கு அஞ்சாமல் முன்னேறவேண்டிய துணிச்சலுக்கும் இவைதானே உரமேற்றியது (ரோமர் 15:21; 2கொரி 11:23-27).

இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனையும் பற்றிப் பிடிக்கவேண்டிய கடைசிக் காலத் தேவை. இதனை ஊக்கப்படுத்தும் சபைத்தலைவர்களும் விசுவாசிகளை ஊக்கப்படுத்தவேண்டிய அவசியம் உண்டு.

## 15. மாம்சத்தில் முடிவு பெறுவோர்

அநேக தேவ பிள்ளைகளும், ஊழியரும் **ஆவியில் ஆரம்பம் பண்ணினது மெய்தான்;** ஆனால் **நாளாவட்டத்தில்** மாம்சத்தில் முடிவு பெற்றோராய் நிற்பதனைக் காணுங்கால் கண்கள் நீர் சொரிகின்றன (கலா 3:3). **அவர்களை புத்தியீனர்** என்றுதானே வேதம் அழைக்கிறது. **அவர்கள் பட்ட பாடுகளும், தியாகமும் வீணாக்கப்பட்டுவிடுகிறதே** (வச 4). அவர்களுக்குள் அற்புதங்களை நடப்பித்தவர் மறக்கப்பட்டுப்போனாரே (வச 5). **விட்டு விட்டவைகளைத் திரும்பத் தேடுவோராயும், வெறுத்து தள்ளினவைகளை அள்ளி அணைப்பவர்களாகவும்** மாறிவிட்ட கொடுமைதான் என்னே!

"கக்கினதை தின்னும் நாய்" என்று தானே எண்ணத் தோன்றுகிறது. அப்படிப்பட்டவர்கள் **தான் கெட்டுப்போவதோடு, மற்றவர்களுக்கும் இடறுதலாய் மாறிவிட்டனரே.** ரோமன் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்த ஒரு வாலிபன், படித்தவன், இரட்சிக்கப்பட்டான். ஆவிக்குரிய சபை என்று அழைக்கப்பட்ட சபைக்கு சென்றான். ஆராதனை நடத்திக் கொண்டிருந்த போதகர் திடீரென்று "விசில்" அடித்தார். அது அவனைப் பின் வாங்கப்பண்ணப் போதுமான பெலன் உள்ளதாய் இருந்தது. அத்தனை வைராக்கியமாய் மனந்திரும்பியவன் இன்று ஆராதனைகளில் கலந்து கொள்ளவும் மறுக்கிறான்; என்னே பரிதாபம்! மாம்சத்தில் முடிவு பெற்ற சிலருடைய காரியங்களை வரிசைப்படுத்துகிறேன் இவைகள் நம்மைத் தாக்காதபடி காத்துக்கொள்வோம். இது கடைசிக்காலம் **தேவனால் பிறந்தவன் தன்னை காக்கிறான்** அல்லவா! (1 யோவான் 5 : 18)

### பதவி :~

இதற்காக எதையும் செய்யத்துணிபவன் அரசியல்வாதி. அவனுக்குக் கொள்கைகள் தானும் பெரிதல்ல. பதவிப்பெறுவதில் குறியாய் இருக்கும் இவன் யாரையும் விட்டு விடவோ, யாரோடும் சேர்ந்துக்கொள்ளவோ தயங்கமாட்டான். அதற்கு இசைவாக

ஏதாவது காரணம் சொல்லி சப்பைக்கட்டு கட்டுவான். ஆனால், இன்று கிறிஸ்துவின் அடியவர்கள் என அழைக்கப்படுவோர் மத்தியில் இது சகஜமாகக் காணப்பட ஆரம்பித்து விட்டது. நன்றாக ஓடினவர்களும் இந்த காரியத்தில் அகப்பட்டுக்கொண்டு துணிகரமாகச் செயல்படவும், பேசவும் ஆரம்பித்து விடுகிறார்களே! **அவர்களுக்கு வேண்டியது எல்லாம் மனிதரால் வரும் மகிமை அது தேவனுக்கு முன்பாக அருவருப்பல்லவோ**! (லூக் 16:15). **இதனால் உண்டாகும் கசப்பு, வெறுப்பு, காயங்கள், பகை** எத்தனை! எத்தனை! இந்த பதவி ஆசை ஆவிக்குரியோரை மாம்ச கிரியையினால் நிறைந்தவர்களாய் எவ்வளவு எளிதாக மாற்றி விடுகிறது. (கலா 5:19-21). பதவியினைப் பிடிக்க எவரையும் நண்பராக்கிக் கொள்ள விரும்புவோரும், அதற்கென பணத்தினை கொட்டிச் செலவழிப்போரும் ஏராளம்! ஏராளம்!

**"பதவி பணி செய்வதற்கே" என்பதனை உணர்ந்தவர்** ஒரு சிலரே, விரல்விட்டு எண்ணிவிடலாமே.

**பட்டம் :-**

கஷ்டப்பட்டு படித்து பட்டம் பெற நினைப்பவர்களைக் காட்டிலும், **குறுக்கு வழியில் பட்டம் பெற நினைப்பவர்களே அதிகம், ஆவிக்குரிய உலகில்.** அதுவும் எதற்காக? தன்னை ஒரு பொருட்டாக காட்டிக் கொள்ள வேண்டுமென்பதற்காக! "குறை குடம் கூத்தாடும்" என்ற பழமொழியின் நிறைவேறுதலாய் அலைபவர் எத்தனை பேர்!

**பட்டங்கள் பெறுவது தவறல்ல** வேலைவாய்ப்பினை அதிகப்படுத்த வேண்டிய கட்டாயம் இன்றைய வாலிய சமூகத்திற்கு உண்டாகியுள்ளது. ஆனால், ஆண்டவரின் வார்த்தைகளைப் போதித்து அவரின் வழிதனை மற்றவர்களுக்கு காண்பித்துக் கொடுக்க அழைக்கப்பட்டவர்கள் பட்டங்களின் மீது அலாதி பிரியம் கொள்வது எப்படி? **ஆவிக்குரிய வாழ்வின் உன்னத நிலையில் "லாபமான யாவும் குப்பையாகத்தான் தெரிய வேண்டும்"** (பிலி 3:7).

பட்டம் பெற்றவர்கள் தேவ காரியத்தில் ஈடுபாடு கொள்வது அவசியம். ஆனால் பட்டங்கள் பெறும் விதத்தினையும்

அவற்றினைக் காட்டி தம்பட்டம் செய்யும் காரியங்களையும் கவனித்துப் பார்க்கும் போது, **இந்தப் பட்டங்கள் இவர்களின் ஆவிக்குரிய கண்களைக் குருடாக்க போதுமான பெலன் கொண்டதாக உள்ளது** என்பது வெளியாகிறது.

## பணம் :~

“பண ஆசை” யினால் விழுங்கப்பட்டவர்களுக்குக் கணக்கில்லை. ஆயிரமாயிரம் ஆவிக்குரியவர்களை இது விழுங்கி ஏப்பம் போட்டு நிற்கிறது. பொன், வெள்ளியில்லை ஆனால் அதனைக் காட்டிலும் விலைமதிப்பில்லாத விசுவாசத்தினைக் கிரியையில் காண்பித்தனர் ஆதி அப்போஸ்தலர் (அப் 3:6; 1 பேது 1:7). **பணத்தினை மற்றவர்களிடத்திலிருந்து பறிக்க உதவும் அநேக தந்திரத் திட்டங்கள், மாய்மாலங்கள், வஞ்சக வார்த்தைகள், பொய்கள், பொய்வாக்குறுதிகள், பொய்யான அடையாளங்கள், விளம்பரங்கள்** என அடுக்கிக்கொண்டே போகலாம். ஏனெனில், எல்லா தீமைக்கும் அது வேர் அல்லவா! (1தீமோ 6:10).

பலவிதமான காணிக்கைகளைக் குறித்தும் காணிக்கைக்கான விசேஷ பிரசங்கங்களையும் கேட்டு மனம் பேதலித்துப் போனவர்களுக்குக் குறைவில்லை. தங்களின் ஆசையை நிறைவேற்ற “கர்த்தர் சொன்னார்” என்ற வாசகத்தோடு வெளியாகும் காரியங்களை கணக்கிட்டும் பார்க்கமுடியாது அத்தனை அதிகம். இதனால் தங்களைக் கிரயத்துக்கொண்ட ஆண்டவரை மறுதலித்தவர்கள், தேவ குமாரனாம் கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறவர்கள். “பணம் படைத்தோரே மதிக்கப்படும் பொல்லாத காலம் இது”. இது ஆவி பெற்றோரையும் மூழ்கடித்து விட்டது தான் கொடுமை.

## புகழ்:-

“கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்” (2கொரி 10:18). ஆனால், மனுஷர்கள் தங்களைப் புகழ வேண்டும் என்று செய்தவைகளை தாரை ஊதி கொண்டாடுவோர் (மத் 6:2) செய்யும் யுக்திகளைக் கண்டவர்கள் நாம். **தங்களின் பெயர் உச்சரிக்கப்பட வேண்டும் என்பதற்காக மாய உலகத்தின் வழிகளைக் பின்பற்றுவோர்**

சிலகாலம் கழித்து உலகத்தினரைவிட எந்த விதத்திலும் வித்தியாசம் இல்லாமல் வாழ்பவர்களாகிவிடுவர்.

"உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது" என்று பிரபலமாக விரும்பும் நபரைப் பார்த்து இயேசு சொல்கிறார். (யோவான் 7:4,7) உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்களைப் பகைக்கும் முன்னே என்னைப் பகைத்தது என்று அறியுங்கள் என்று ஆவிக்குரியவர்களைப்பார்த்து அவர் சொல்கிறார் (யோவா 15:18). **உலகத்தின் அங்கீகரிப்பைத் தேடும் எந்த மனிதனும் புகழை நாடுகிறான் என்பது தெளிவு அல்லவா.**

## மாம்ச இச்சை:~

பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ள வேண்டியவர்கள் (2தீமோ 2:22), சோதோமியரைப் போல பணமும் புகழும் வரும் போது மாம்சத்தின் இச்சைகளுக்குத் தங்களை விற்றுப்போட்டு அநேக பெண்களுக்கு இடறலாய் மாறி, சிலர் இதனால் கெடுக்கப்பட்ட நிலையில் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வாழும் நிலையினை நான் அநேக இடங்களில் கண்டு திகைக்கிறேன். **வரங்கள் கிரியைசெய்கிறதே என்று வசீகரிக்கப்பட்ட விட்டில் பூச்சிகள் போல அழிந்து போனவர்களின் புலம்பல் பரலோகத்தினை எட்டுகிறதே.**

"உன்னில் ஒருவன் தன் அயலானுடைய மனைவியோடே அருவருப்பானதைச் செய்கிறான்; வேறொருவன் முறை கேடாய்த் தன் மருமகளைத் தீட்டுப்படுத்துகிறான்; வேறொருவன் தன் தகப்பனுக்குப் பிறந்த தன் சகோதரியைப் பலவந்தம் பண்ணுகிறான் (எசே 22:11) என்று தேவன் அன்று தம் ஜனத்தினைப் பார்த்து புலம்பினது போல புலம்புகிறாரே. "எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன். விபசாரம் பண்ணி, வஞ்சகமாய் நடந்து.... சோதோமைப்போலும், கொமொராவைப்போலும் இருக்கிறார்கள் (எரே 23:14) என்பது அந்த நாட்களுக்கு மாத்திரம் அல்ல இந்த நாட்களுக்கும் உரிய தீர்க்கத்தரிசனம் அல்லவா!

**எப்படி நடந்தாலும் வரங்கள் கிரியை செய்கிறதே என்ற துணிகரம் அநேகரை இன்னமும் குருடாக்கி வைத்திருக்கிறதே.** இவர்கள் எல்லாம் ஓர் நாள் நன்றாக ஆவியில் ஆரம்பம் செய்தவர்கள் தான், பரிசுத்தத்தினைக் குறித்து பகிரங்க அறிக்கையிட்டவர்கள் தான். பரிசுத்த குலைச்சலாக்கப்பட்டவர்களின் நிலைமை என்னை அதிரச் செய்கிறது.

## ஆடம்பரம்:-

**வாழ்வில் வசதிகள் பெருகும் போது வருமானம் பெருகும் போது, வாய்ப்புகள் பெருகும் போது மனிதன் தன்னை அறியாமலேயே சுக போகத்திற்கும் ஆடம்பரத்திற்கும் விற்றுப்போட வாசல்கள் திறக்கின்றன.** தேவையற்ற காரியங்களையும் அனுபவிக்கவேண்டும் என்ற மாம்ச ஆவல் அவனில் தட்டி எழுப்பப்படுகிறது. **அலங்காரம் என்ற பெயரில் ஆடம்பரம் உள்ளே நுழைகிறது. தன்னைச் சுற்றியுள்ள தேவைகளையோ, தேவையுள்ளோரையோ குறித்து கரிசனையோ, கவலையோ இல்லாமல் செய்து விடுகிறது.** பின்னர் ஏறின ஏணியிலிருந்து இறங்க முடியாமல் போய் "பந்தா" ஜீவியத்திற்குத் தள்ளுகிறது. பின்னர் ஆடம்பரத்திற்கு வக்காலத்து வாங்கச் செய்து, தாங்கள் இராஜாவின் பிள்ளைகள் எனவே இப்படித்தான் வாழ வேண்டும்" என எளிமையும் தாழ்மையின் ரூபமாய் வாழ்ந்த இயேசுவின் சீடர்களை வஞ்சிக்க வைத்து போதனைச் செய்கிறது.

ஆபிரகாமின் ஆசீர்வாதம் நம் தலையின் மேல் உண்டு; எனவே, நாமும் செல்வச் சீமானாய் வாழ வேண்டும் என்கின்றனர். ஆனால், ஆபிரகாம் அன்று நடுப்பகலில் நடந்து போன வழிப்போக்கர்களை (பின்னர் தான் அவன் அறிவான் அது கர்த்தரும் அவருடைய தூதனும் என்று) தன்னிடத்தில் வரவழைத்து விருந்து கொடுத்த போது அது மரத்தடியே என்பதனை மறுதலிக்கும் இவர்கள் (ஆதி 18:4), தங்களின் ஆடம்பர வாழ்க்கையை மற்றவர்களிலும் ஏவிவிடுகின்றனர். **ஒட்டு மொத்தத்தில் தேவ ஜனம் உலகின் மக்களைக் காட்டிலும் உல்லாசமாக வாழ ஆரம்பித்து விடுகிறது.**

"ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே

ஆயிரம் ஆயிரமே நரக வழிபோகின்றாரே
ஆ நீரேயல்லாமல் யாருண்டு மீட்க
ஆண்டவரே இரங்கும" என்றுதான் பாடத்தோன்றுகிறது"

## ஒத்துப் போகுதல்:~

இன்று அநேக தேவ மனிதர்கள், பெரியவர்கள், சத்தியத்தினைக் கூறி அறிவித்தவர்கள் **மாய்மாலக்காரரோடும், வஞ்சகர்களோடும், பொய்யரோடும், வரங்களைக் கொண்டு வியாபாரம் செய்பவர்களோடும், தேவ வார்த்தைகளைத் தங்களுக்குச் சாதகமாக்கியவர்களோடும் குலாவி தங்களுக்கு அழிவை வரவழைத்துக் கொள்ளுகிறார்கள்.** "தனித்து ஜீவிக்க அழைக்கப்பட்ட ஜனம் (மீகா 7:14) இன்று தன்னிச்சையாக, அன்று பிலேயாமின் போதகத்தால் விற்றுப்போட்ட பாலாக்கின் வழியில் இசைந்துபோவதற்கு ஏதுவானவைகளைச் செய்ய (வெளி 2:14; எண் 25:1-3) ஏவப்பட்டுள்ளனர்; என்னே பரிதாபம்.

## குறுக்கு வழி:-

அனைவரும் குறுக்குவழியில் சம்பாதிப்பதனையும், புகழ்பெறுவதனையும், **விலைக்கிரயம் செலுத்தாமலேயே மேலே எழும்புவதனையும் வாஞ்சிக்க ஆரம்பித்துள்ளனர்.** விளைவு வேதம் சொல்லாத அநேக வியாபார முறைகள் பின்பற்றப்பட்டு தேவனுடைய வீடு வியாபார ஸ்தலமாகவும், கள்ளர் குகையுமாக மாறிவருகிறது (யோவா 2:16; லூக் 19:46), பையை நிரப்புவதே குறியாகிவிட்டதினால் **ஆவிக்குரிய வர்ணம் தீட்டப்பட்ட வலைகளை விரிப்பது இவர்களுக்கு எளிதாகிவிடுகிறது.** பேதைகளும் இதில் எளிதாக மாட்டிக்கொள்கிறார்கள் (நீதி 1:13,19). சீமோன் என்ற மாயவித்தைக்காரன் வழியில் அநேகர் பரிசுத்த ஆவியின் வரத்தினைப் பெற்றுக்கொள்ள தீவிரம் காட்டுகின்றனர் (அப் 8:18,19). தாங்கள் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருப்பதனை அறியக்கூடாதவர்கள்.

வஞ்சனையினால் வந்த போஜனம் மனுஷனுக்கு இன்பமாயிருக்கும். பின்னே அவனுடைய வாய் பருக்கைக் கற்களால் நிரம்பும் (நீதி 20:17). **ஆரம்பத்தில் துரிதமாய் கிடைத்த சுதந்திரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது** (நீதி 20:21) என்பது உண்மையல்லவா!

## வருங்காலக் கவலை:-

என் பின் சந்ததிக்கு என்ன வைத்துப்போவேன் என்ற கவலை இன்று அநேக ஆண்டவரின் தாசர்களையும் ஆட்டிப்படைக்கிறது. வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம் (நீதி 19:14) தான் என்றாலும், ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான். ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும். இதுவும் மாயையும் பெரிய தீங்குமாய் இருக்கிறது (பிர 2:21). நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை என்றானே தாவீது (சங் 37:25). **தேவனின் உடன்படிக்கையையும், தேவ ஆசீர்வாதத்தினையும், தேவ வல்லமையையும் குறித்துப் பேசுவோர் வருங்காலத்தினைத் தீர்மானிக்க மாத்திரம் குறிப்பாக பிள்ளைகளைப் பொருத்தமட்டில் குழம்பி, புலம்பித் திரிவது ஏன்?** அது அவர்களை மாம்சத்துக்குரியவர்களாக மாற்ற வல்லமை கொண்டதாய் மாறிவிடுகிறதே (மத் 6:31,32)

## கிருபையை வரங்களை விலைபேசுதல்:-

சத்தியத்தை வாங்கு அதனை விற்காதே (நீதி 23:23) என்பதே ஞானியின் வாக்கு. ஆனால், இன்று அநேகருடைய வழிகளைக் கவனித்துப் பார்த்தால் தேவன் கிருபையாய் நம்பித்தந்த வரங்களைத் தவறாக உபயோகித்து **தரக்குறைவான வாழ்வு வாழ** தங்களை ஒப்புக்கொடுத்தோர் மத்தியில் **எலிசாவைப் போல** நாகமானின் காணிக்கையையும் பெற்றுக்கொள்ள மறுக்கும் தேவமனிதர்கள் எங்கே? **தானியேலைப்போல** பெல்சாத்சார் கையில் துணிச்சலோடு "வேறொருவனுக்குக் கொடும்" என்ற முழக்கம் திரும்பக்கேட்கப்படாதா? (2இரா 5:16 தானி 5:17). கேயாசிகளே இன்று அதிகமாக காணப்படுகின்றனரே (2இரா 5:26).

## தரிசனம் கோட்டை விடுதல்:-

தேவன் அழைத்த அழைப்பில் நிற்கக் கூடாமல் போய், பெற்ற தரிசனத்தினை மறந்து, **மற்றவர்களையும் பார்த்து காப்பி அடித்து,** தங்கள் வழிகளை மாற்றிக்கொண்டவர்கள் உண்டு. பிரச்சனைகளை எதிர்கொள்ள பலமில்லாமல், **திருமணத்தினால் செய்ய வேண்டியதினை செய்யமுடியாமற் போனவர்களும் உண்டு** (லூக் 14:20). என்ன வந்தாலும் "நான்

பரம தரினத்திற்கு கீழ்படியாதவனாகயிருக்கவில்லை (அப் 26:19) என்ற பவுல்களைத்தான் தேவன் இன்று தேடுகிறார். தரிசனத்தினைக் கோட்டை விட்டவன் சீக்கிரமாய் மாம்சவழியில் விழுந்துவிடுவானே.

## தங்களுக்குரியவைகளையே தேடுதல்:~

பவுலின் குழுவில் **ஒரு மனிதன் மாத்திரம் வித்தியாசமானவன்.** மற்றவர்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல் தங்களுக்குரியவைகளையே தேடினவர்கள் (பிலி 2:21). ஆத்துமாக்ளைக்குறித்த வாஞ்சை, பாரம், வரவர குறைந்து போய் **ஊழியம் வாழ்க்கையாக மாறும் போது** இது எளிதாய் நடக்கிறது. அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள் (ரோமர் 16:18). அன்று எரேமியா தீர்க்கன் மூலம் அவனுடைய எழுத்தன் பாருக்கைப் பார்த்து கர்த்தர் சொன்ன வார்த்தைகள் **"நீ உனக்குப் பெரியக்காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே"** (எரே 45:5) என்ற வார்த்தைகள் அநேகருடைய காதுகளில் தொனிக்கப்பட வேண்டியது. ஆனால், யாவர் மீதும் தீங்கு வரும் போது உன் பிராணனை உனக்குக்கிடைக்கும் கொள்ளைப்பொருளாக்குவேன் என்பது எத்தனை பெரிய வாக்கு (வச 5-ன் பின்பகுதி).

## மற்றவர்களோடு இசைந்து செல்லாமை:~

தேவ இராஜ்யபணி ஒரு கோல்ப்ஃ ஆட்டம் அல்ல; மாறாக அது குழு விளையாட்டைப் போன்றதே. இதைத்தான் இயேசுவும் செய்தார். **ஒத்துப்போகுதலை வெறுக்கும் வேதம், இசைந்து போகுதலை பரத்தின் ஞானம் என்று அழைக்கிறது** (யாக் 3:17) அது இணக்கமுள்ளதல்லவா! மற்றவர்களால் காயப்பட்டு விடுவேன் என்ற பயம் அநேகரைத் தள்ளி வைக்கிறது. **சுயம் சாகடிக்கப்படாதோரின் நிலமை பரிதாபமே.** சரீர அமைப்பில் வேறுபட்ட அவயங்கள் இணைக்கப்பட்ட தலையோடு செயல்படக்கூடும் என்பதனை புரிய இயலாதோர், **வெற்றி நமக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனை** விளங்கிகொள்ளாதோர் இணைந்து

செயல்படமுடியாமல் கஷ்டப்படுகின்றனர். இது ஆவியின் பெலத்தால் மேற்கொள்ளப்பட்டால் (ரோ 8:13) எளிதானதே. ஆனால், முடியாமை இன்று அநேகரை மாம்சத்தில் முடிவு பெற செய்துவிட்டது.

**தேவ இராஜ்யத்தினையும்,**
**தேசத்தையும் குறித்த தெளிவு இல்லாமை :-**

பெரிய தேசத்தில் திறந்தவாசல் எதற்காக? **குறுகிய இடத்தில் கூடாரம் அடித்து அதனையே உலகமாக எண்ணி, அதற்குள் இருப்பவர்கள் மாத்திரம் பரலோகம் சென்றால் போதும் என்ற எண்ணம் சத்துருவால் தரப்படுவதே!**

# 16. மாற்றம் இல்லையேல் ஏமாற்றமே

மனிதன் சீக்கிரமாக மாற்றத்தினை விரும்புவதில்லை, உள்ளான மனிதனின் மாற்றம் அவனுடைய குறிக்கோளை, வாழ்க்கையை நோக்கும் விதத்தினை (out look of life), செயல் முறைகளை, பழகும் விதத்தினை (relationship), மற்றவர்களைக் குறித்த கரிசனையை (concern), நித்தியத்தினைக் குறித்த நினைவினை, உலகத்தின் பொருட்களைக் கையாளும் விதத்தினைப் (Handling material things) போன்ற அனைத்தினையும் மாற்றிவிட வல்லமை உடையது ஆகும். ஆவியில் பிறந்த அனுபவம் உடைய அநேகரின் வாழ்க்கையில் இதனைக் காண்பது இன்றைக்கு அரிதாகிவருகிறது. **"மனந்திரும்புதல்" என்ற வார்த்தையோடு "குணப்படு" என்ற வார்த்தையும் இணைக்கப்பட்டால் "மனந்திரும்பிக் குணப்படுங்கள்"** (அப் 3:20) இது எளிதாகும். ஆனால், இன்றைய பிரசங்க பீடத்தில் "மனந்திரும்புதல்" என்கிற வார்த்தையினைக் கேட்பது அரிதாகிவிட்டபடியினால், குணப்படுதலையும் மேலே சொன்ன புது வாழ்வின் நெறிமுறைகளையும் (Principles) காண்பது கனவாக மாறிவருகிறது. **மெய்யான மனந்திரும்புதல் நடக்கும்போது, அங்கே செய்த பாவத்தினைக் குறித்த உணர்வுகள் கண்ணீரை வரவழைக்கும்** (லூக் 7:38); நன்றி பெருக்கு ஆண்டவரை அதிகம் நேசிக்கச் செய்யும் (லூக் 7:43); அநியாயமாய் வாங்கினவைகளை, களவாய் எடுத்தவைகளைத் திரும்பக் கொடுக்கும் (லூக் 19:8); தன்னால் காயப்பட்டவரின் காயங்களைத் தானே கழுவிவிடும் (அப் 16:33); தவறாய் பயன்படுத்தப்பட்ட புத்தகங்கள், பொருட்கள் எரிக்கப்படும் (அப் 19:19); வீட்டின் கதவுகளைத் தேவ மக்களுக்கு வலிய வந்து திறந்து கொடுக்கும் (அப் 16:15). மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும், தேவ மக்களோடும் இணைந்து செயல்பட்டு ஐக்கியம் கொள்ளும் (அப் 2:46); கர்த்தரை அறிவிக்கத் துடிக்கும் (அப் 9:20); புதிதாக பிறந்த குழந்தையினைப் போல தேவ வசனத்திற்கு ஏங்கும் (1பேது 2:3); தேவ கட்டளைகளை நிறைவேற்ற தீவிரம் காட்டும் (அப் 8:36); அவருடைய சித்தம் தன் வாழ்வில் வெளிப்படவும், அதனை

நிறைவேற்றவும் வேண்டும் என்கிற துடிப்பில் சம்பூரணமாய் அர்ப்பணிக்கும் (அப் 9:6); தங்களுக்குத் தேவனைக் காண்பித்தவர்களை மரியாதை செய்யவும், அவர்களுடைய தேவைகளைச் சந்திக்கவும், தயக்கம் காட்டாது (அப் 28:10); ஏன் கண்களைப் பிடுங்கிக் கொடுக்கக் கூட ஆயத்தமாயிருக்கும் (கலா 4:15); அவர்களுடைய புதிய வாழ்வினைக் குறித்து தூ ரத்தில் உள்ள ஜனங்களும் அறிந்துகொள்வார்கள் (1தெச 1:8); உபத்திரவத்தினைச் சகிக்கும் குணம் நிரம்பி வழியும் (எபி 10:33); அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென சொல்லுவதினை அடையாளம் கண்டுகொள்ளும் (வெளி 2:2); இந்த அச்சடையாளங்கள் அவர்கள் வாழ்வில் பளிச்சிடும்.

இதனை அல்லாமல், **நம்முடைய செயல்முறைகளிலும் தேவன் மாற்றங்களைக் காண விரும்பும் நேரங்கள் உண்டு.** உயிர்த்தெழுந்த இயேசு சீஷருக்கு மூன்றாம் முறை தரிசனம் தந்த நாளின் காலையில் நடந்த காரியத்தினைக் குறித்து சிந்திக்குங்கால் இது தெள்ளத் தெளிவாக விளங்கும். யோவான் 21:1-14 வசனங்களை வாசித்துப் பார்த்தால், ஒரு உண்மையினைக் கண்டுகொள்வது எளிது. இரவெல்லாம் மீன் பிடிக்க முயற்சி செய்தும் "ஒன்றும் பிடிக்காத நிலை" ஏதாவது உங்களிடத்தில் உண்டா? என்றால் "இல்லை" என்ற வெறுமையும், ஏமாற்றமும், அங்கலாய்ப்பும், மிகுந்த உத்தரவே சீஷர்களிடம் இருந்து புறப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில், கர்த்தர் கட்டளை தருகிறார், **"நீங்கள் படகுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள்"** என்று (வச 6). உலகில் கிட்டத்தட்ட அனைவருமே வலது கையையே பிரதானமாக, பளுவான வேலைக்கு உபயோகிப்பதனைக் காணலாம்; எனவே வாழ்நாள் எல்லாம் வலது கையில் கனமான அல்லது பளுவான வலையின் பகுதியை வைத்துக்கொண்டு, இடது பக்கமே வலையை வீசி மீன் பிடிக்கக் கற்றுக்கொண்டிருந்த மீன் பிடிக்கும் சீஷருக்கு, இப்போது நேர் எதிர்மறையான "ஆணை" பிறப்பிக்கப்படுகிறது; ஆயினும், அந்தக் கட்டளைகளைக் கேட்டு கீழ்ப்படிந்து தங்களுடைய பழக்கத்தினை பாரம்பரியத்தை (tradition) இலகுவான காரியத்தினை சீஷர்கள்

மாற்றிக்கொண்டதின் நிமித்தம் 153 பெரிய மீன்களை வலை கிழிக்கப்படாமல் பிடித்தார்கள் என்பது பேருண்மை. இன்று, அதே மாதிரியாகத்தான் பெரிய ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ள நாமும் நம்முடைய முறைகளை, செய்து வருகிற அன்றாட (routine) காரியங்களை மாற்றவேண்டியிருக்கலாம்.

அநேக ஊழிய முறைகளை மாற்றினால், நாம் பெரிய மீன்களைப் பிடிக்கலாம். அதுவும் வலை கிழியாமல், பலத்த ஜாதி உன்னிடத்திற்கு வரும் என்ற தேவ வாக்குத்தத்தம் சபைகளில் நிறைவேறுவதற்கு (ஏசா 60:11), நம்முடைய ஊழிய முறைகள் மாற்றப்படவேண்டியதாயிருக்கும்.

படகின் வலது பக்கத்தில் மோதி அடிக்கும் மீன்களை பார்க்கக்கூடாதபடிக்கு, சீடர்களின் கண்கள் அவர்களுடைய பழைய முறைகளைப் பின்பற்றியதினாலேயே அடைக்கப்பட்டிருந்தது. கவனம் திரும்ப வேண்டிய அவசரமுண்டு இன்று. இத்தனைக் காலம் அப்பியாசிக்கப்பட்டு வந்த முறைகள் மாற்றப்பட வேண்டிய காலம் இதுதான் என நான் நம்புகிறேன். அது ஆவிக்குரிய காரியங்களுக்குப் பொருந்தாது என ஆவிக்குரியவர்களாகிய நாம் சொல்ல முடியாதே!

**சத்துரு எல்லாக் கோணத்திலும் ஜனத்தினை வஞ்சித்து வருவதனைக் காணுங்கால், "ஒன்றுமில்லை" என்ற அவலக் குரல் மாற, நாம் தேவன் சொல்லுகிற "புதிய வழி முறைகளை" கேட்கவும் செயல்படுத்தவும் உதவி செய்வாராக.**

தீர்க்கனாக அழைக்கப்பட்டிருந்த ஆரோனைக் கர்த்தர் ஆசாரியனாக மாற்ற விரும்புவதனைக் காண்கிறோம் (யாத் 7:1; 28:1). அதாவது தேவனுடையவைகளை பேச அழைக்கப்பட்டவன், தேவனுக்காய் பேச அழைக்கப்பட்டவனை ஜனங்களுக்காகப் பேச ஆசாரிய ஊழியம் தருகிறார்; மறுக்கவில்லை ஆரோன். ஆசாரியனாக இருந்த எரேமியாவை தீர்க்கனாக மாறச் சொல்கிறார் (எரே 1:1-5), அப்படியேதான் எசேக்கியேல் தீர்க்கதரிசி (எசே 1:3; 3:1). அழைப்பிலே மாற்றம் இடையில், ஊழியத்தின் மத்தியில் உண்டாகிறது இவர்களுக்கு.

கெம்பீரமாக ஜே, ஜே என்று பட்டணத்தில் வெற்றி ஊழியம் ஒன்றினை செய்து வருகிறான் பிலிப்பு, பட்டணத்தில் ஒரே களிப்பு, சந்தோஷம் (அப் 8:8). எருசலேமிலிருந்து அப்போஸ்தலரும் வந்து உதவுகின்றனர். ஆனால், திடீரென்று கர்த்தருடைய தூதன் எழுந்து வனாந்தரமார்க்கமாக அனுப்புகிறார் (அப் 8:26). உடனடியான கீழ்ப்படிதல் (வச 27), ஊழிய முறையில் மாற்றம், ஊழிய இடத்தில் மாற்றம், அதற்குப் பின்னர் ஆவியானவர் பிலிப்புவை சமாரியாவில் கொண்டு விடவில்லை, மாறாக ஆசோத்தில் கொண்டுபோய் விடுகிறார்.

அந்தியோகியா பட்டணத்தில் உள்ள சபையில் போதகராகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்த பர்னபா, பவுல் மிஷனரிகளாக மாற்றப்படுகிறார்கள், ஆவியானவரின் கட்டளையால் (அப் 13:1-3). இன்றைக்கு சபையின் நடுவில் கிரியை செய்யும் ஆவியானவர் இப்படிப்பட்ட கிரியைகளை செய்வதில்லையோ?

**"பெரிய மீன்கள்" வேண்டும் சபைக்கு; அதற்கு நமக்குள் (இரட்சிக்கப்பட்டு ஊழியம் செய்கிறவர்களுக்குள்ளும்) நம்முடைய செயல் முறைகளில், அணுகு முறைகளில் மாற்றங்களைச் செய்யச் சொல்கிறார் தேவன்**; கீழ்ப்படிந்தால் அது நடக்கும். அவருடைய சத்தம் சில வேளைகளில் எல்லாக் காதுகளிலும் விழுகிறதில்லை (அப் 22:9). தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்களாவது அதனைக் கேட்குமா? (அப் 9:15). அவர் வார்த்தையினை நடுக்கத்தோடு எழுந்து கேட்க ஆயத்தமாவோர் யார்?

# 17. என்னால் என்ன பிரயோஜனம்?

நம்பிக்கையே இல்லாதோர்க்கு நம்பிக்கை வழங்குவது அல்லவோ கிறிஸ்துமஸ் செய்தி. இது உலகெங்கும் கூறி அறிவிக்கப்படவேண்டியதல்லவோ! மாட்டுத் தொழுவில் உதித்தவரின் மாபெரும் மகிமைதனை, மாறிவரும் உலகத்திற்குக் கூவி அறிவிக்க அழைக்கப்பட்டவர்கள் நாம் என்பதனை, நமக்கு மீண்டும் ஞாபகப்படுத்துவதுதான் பண்டிகை நாட்கள். கூடவே, கிறிஸ்து பிறப்பின் மாட்சிமையையும் நாம் புரிந்துகொள்ளுதல் மிகவும் நல்லது.

தேவ குமாரன் வந்த நோக்கத்தினை விளக்கும் யோவான், **"பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்"**(1யோவா 3:8) என்று மகிழ்ச்சியூட்டும் செய்தியினை வழங்குகிறார். பிசாசானவன் **சோதனைக்காரன்** என்றும் (மத் 4:3), **மோசம் போக்குகிறவன்** என்றும் (வெளி 20:2,10), **குற்றஞ்சாட்டுகிறவன்** என்றும் (வெளி 12:10), **பொய்யன்** என்றும் (யோவா 8:4), **அழிப்பவன்** என்றும் (யோவா 10:10), **திருடன்** என்றும் (யோவா 10:10), **மரணத்திற்கு அதிபதி** என்றும் (எபி 2:14) வேத புத்தகத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறான்.

அவனுடைய குணநலன்களை மையமாகக் கொண்டே இந்த பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளபடியால், அவனை அடையாளம் கண்டுகொள்வது நமக்கு எளிதாகிறது. அதனால்தான் வேதப்புத்தகத்தினை சத்துரு அதிகமாக வெறுக்கிறான். இந்தக் கிரியைகளை அழிக்கவே தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார் என்கிற அறிவு நம்மை எச்சரிக்கச் செய்வதோடு, அவனை அடையாளம் காட்டிக்கொடுக்கவும் போதுமானது. அவனை அடையாளம் காட்டிக் கொடுத்தால், அவனுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் பிடிக்காது என்பது மெய்தான். ஏனெனில், **தேவன் தாம் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று சொல்பவர் (யாத் 3:14). சாத்தானோ தான் இல்லை என்று கூறவே முற்பட்டு அநேகரை வஞ்சித்து ஏமாற்றிவருகிறான்.** தன்னை வெளிப்படுத்த விரும்பாதவன் அவன்; ஆனால், அவன் கிரியைகள் அவனைக் காட்டிக்கொடுக்கப் பலம் வாய்ந்தவை.

அவனைச் சோதனைக்காரன் என்று கண்டோம். அவன் இயேசு கிறிஸ்துவைச் சோதித்த விதத்தினை வேதம் நமக்கு விளக்குகிறது. மத்தேயு 4-ம் அதிகாரம் 1 முதல் 11-ம் வசனங்கள் வரை வாசித்துப் பார்த்தால், அவன் அவரைச் சோதித்த மூன்று நிலைகளை நாம் காணலாம். அதனைக் குறித்து விளக்கங்கள் அநேகம் இருந்தாலும், **இன்றைய நாட்களில் அதே ஆயுதங்களை தினம் தினம் ஒவ்வொரு விசுவாசிகளின் மேலும் ஊழியர்கள் மேலும் உபயோகித்து வருகிறான்.** எனவே, “சோதனைக்குட்படாமல்” தீமையினின்றுக் காக்கப்பட அவைகளை ஆராய்வது நலம் என எண்ணுகிறேன் (மத் 6:13).

முதலாவது சோதனை “கற்களை அப்பமாக்கத் தூண்டியதே”. அது இன்றையக்கால வார்த்தைகளில் வர்ணிக்கப்பட்டால்,**“Quick money making” துரிதமாக செல்வந்தனாக வாழத் தூண்டிவிடுவதனையே குறிக்கும்.** இது உலகத்தினை ஆட்டிப்படைக்கும் ஓர் சக்தி; ஆனால், தேவ ஆவியானவரோ நமக்கு வேறு வழியினைச் சொல்லித்தருகிறார். “ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி” என்றே போதிக்கிறது வேதம் (1தீமோ 6:9-11).

துரிதமாய் வரும் செல்வம் நிலைப்பதில்லை என்பதும், அநியாய வட்டியினாலும் ஆதாயத்தினாலும் வரும் செல்வம் அதை சம்பாதிப்பவனுக்குப் பலன் தருவதில்லை என்பதும் (நீதி 28:8; 10:2) மனதில் கொள்ளவேண்டியவை. **சாத்தானோ இன்றைக்கு சடிதியாக சிலரை பணக்காரனாக வழி சொல்லித்தந்து, அதனை அநேகர் பின்பற்ற வைத்துவிடுகிறான். திருப்தியற்ற வாழ்க்கைக்கு இவை வழி நடத்தும்** என்று அறிந்த இயேசு அவனை ஜெயித்ததினால், நம்மைப் போல் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்து இயேசு, நமக்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்

(எபி 4:15; 2:18). கிறிஸ்மஸ் நாட்களில் நாமும் ஜெயிக்க முடியும் என்ற நினைவு நம்மைக் களிகூறப் பண்ணுவதாக. இதுவே பண்டிகையின் ஆர்ப்பரிப்பாகவும் கொண்டாட்டமாகவும் மாறுவதாக. அதுவே நம்மை ஆராயவும் போதுமான பலனுள்ளது. பத்து ரூபாய்க்கு வாங்கின ஒரு பொருளை நூறு ரூபாய்க்கு விற்றுவிட்டால், மனிதன் அதனை தன் திறமை என்று கூறி தன் மார்பைத் தட்டிக் கொடுத்துக்கொள்கிறான்; ஆனால், அது ஒரு அபத்தம் என்பதனையோ, ஏமாற்று என்பதனையோ அறியா வண்ணம் **பொருளாசை அவன் கண்களை மறைத்துவிடுகிறது.**

**ஆவிக்குரிய உலகிலும் இந்த உக்தி உபயோகப்படுத்தப்பட்டு, இந்த திட்டத்தில் இணைந்தால் உங்களுக்குப் பெரிய ஆசீர்வாதம் வைக்கப்பட்டிருக்கிறது என்கிற வார்த்தைகள் அநேகரின் கண்களை மறைத்துவிட்டக் கொடுமை உண்டு.** சாத்தான் இயேசுவிடத்தில் கூறின, “உம்முடைய உரிமையை உபயோகிக்கவும், உம்முடைய சொந்த பிரயோஜனத்திற்காக” என்ற பசப்பு வார்த்தைகள் செல்லுபடியாகவில்லை. ஆனால், பொருளாதார செழிப்பைப் போதிக்கும் அநேக போதகர்கள் **"உன் உரிமையை உபயோகப்படுத்தி செல்வந்தனாக மாறு" என்றே போதிக்கின்றனர்.** Quick money, Quick blessing என்ற குறிக்கோளே பின்பற்றப்படுகிறது. இது சாத்தானின் தந்திரம் என்பது அநேகருக்குத் தெரிவதில்லை. இந்த நாட்களில் இதனைக் கண்டுகொள்ள கண்கள் திறக்கப்பட்டால் எத்தனை நலமாயிருக்கும். சத்துருவின் கிரியைகளை அழிக்க வெளிப்பட்ட தேவ குமாரன், அநேகருடைய இருதயத்தில் இதனை செய்யவேண்டிய அவசியம் உண்டு.

தேவாலயத்தின் உச்சியில் ஏற்றப்பட்டு, அங்கிருந்து குதிக்கச் சொல்லி இயேசுவை ஏவி சோதிக்க விரும்பின சாத்தான் என்ன செய்ய விரும்புகிறான். “Quick fame” **குறுக்கு வழியில் (யாருக்கும் பயன்படாத ஓர் வித்தையைச் செய்யச் சொல்லி) புகழைச் சம்பாதிக்க வழி காட்டுகிறான், விளம்பர வித்தைகளைச் சொல்லித் தருகிறான். வசனம் தவறாக உபயோகப்படுத்தப்படுகிறது.** “பாதம் கல்லில் இடறாதபடி தூதர்கள் கைகளில் தாங்குவார்கள்” (சங் 91:12) என்ற வசனத்தை சாத்தான் தனக்குச் சாதகமாக உபயோகித்து, “நடக்கும்போது” காக்க நியமித்த வாக்குத்தத்தத்தை “குதிக்கச் சொல்லி” நிரூபிக்கச்

சொல்கிறான். இயேசு அதில் மயங்கிவிடவில்லை. குதிப்பதினால் யாருக்கும் பிரயோஜனப்படப்போவதில்லை என்பதனை அறிந்த அவர், அவனை எளிதாக ஜெயித்துவிடுகிறார். **மற்றவர்களுக்கு என்னால் என்ன பிரயோஜனம்? என்பதனை ஆராய முற்படும் எந்த மனிதனும் சத்துருவை அடையாளம் கண்டுகொள்வான்.**

"நான் என் சுய பிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி" (1கொரி 10:32) என்பது பவுலின் கோஷம்.

தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்? (மல் 3:14) என்பது இன்று அநேகருடைய கேள்வி. ஆனால், அவர்களுடைய ஆசையெல்லாம் தங்களுடைய பிரயோஜனத்திற்காக தேவன் அவர்களுக்கு ஆசீர்வாதம் தரவேண்டும் என்பதே. இந்த இழுப்பு அநேகரை தவறான புகழை பெறவே அழைத்துச் சென்றுவிட்டது.

இயேசு சொல்வது என்ன? **"மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது"** (லூக் 16:15). **எத்தனை தேவ தாசர்கள் வழி விலகிப் போனார்கள். சொந்த மகிமையைத் தேடி அதற்காக தகாததனை, மற்றவர்களுக்கு உபயோகப்படாதவைகளை நடப்பித்து, அதையே ஆவிக்குரிய போர்வையாக்கி, அதற்கேற்ற வசனங்களைத் தேடி கண்டுபிடித்து, தங்கள் ஆசைக்கேற்ப முன்னும் பின்னும் அதனைக் கத்தரித்து, தங்களை தேவனுடையவர்களாகவும் ஆவிக்குரியவர்களாகவும் காண்பித்து, தேவ தூதர்கள் தங்களை ஏற்றிக்கொண்டுப் போகிறது போன்ற போலியான எண்ணங்களை மக்கள் மத்தியில் கொண்டு வந்து மாயையைப் பின்பற்றி கிருபையை வீணடித்துவிட்டார்கள்.**

இயேசு ஜெயமெடுத்ததினால், இப்படிப்பட்ட இச்சைகளிலிருந்து நம்மையும் காப்பாற்றவும், தீமைக்குட்படாமல் காக்கவும் வல்லவராயிருக்கிறார் (ரோ 8:37). கிறிஸ்மஸ் நம்மனைவரையும் இந்த சத்துருவின் உபாயத் தந்திரத்திற்குத் தப்புவித்தால், தந்திரத்தால் தாக்கப்படாமல் காக்கப் போதுமானதாக இருக்குமே!

**பண்டிகை நாட்களில் நம்முடைய பிரஸ்தாபத்தைக் காண்பிக்க முயலுவதனை விட, மற்றவர்களுக்காகப் பிரயோஜனப்படும் சிலக் காரியங்களைச் செய்தால் எத்தனை நலமாயிருக்கும்.** அது அநேகர் இரட்சகரை அறிந்துகொள்ள வல்லதாக இருக்குமே!

உலகத்தின் மகிமையைக் காண்பித்து, அதனைப் பெற இலகுவான மூன்றாவது சோதனையை இயேசுவுக்கு முன் கொண்டுவருகிறான். "Quick glory" அவனைப் பணிந்துகொண்டால் போதும் என்பதுதான் அவனின் ஆசை வார்த்தைகள். தேவனுக்கு மெய்யாக ஆராதனை செய்வதிலிருந்து ஜனத்தை திசை திருப்ப ஓயாமல் உழைக்கும் அவன், இதே ஆசை வார்த்தைகளையே இன்று கூறி தன்னை வணங்கவைத்துவிட்டான். இதில் அநேக தேவ பிள்ளைகளும் விழுந்து கிடக்கின்ற பரிதாப நிகழ்ச்சி நம்மை உலுப்புமே!

**எத்தனை கலப்பு உபதேசங்கள், உறவுகள், சம்பந்தங்கள், கலப்பு வாழ்க்கை முறைகள்? உலகில் மதிக்கப்படுவதோடு, உலகத்தின் பேர், புகழ், மகிமைக்காக ஏங்கும் ஊழியர்கள் எத்தனை?** சரியாக நடைபெறாத பள்ளி ஒன்றுக்கு சிறந்த பள்ளி என்ற "ஆளுநர் பாராட்டு" (Governor's honour) கிடைத்தபோது, அதை நடத்திய ஒரு விசுவாச தம்பியை நான் கேட்டேன், எப்படி? என்று. அவன் சொன்ன வார்த்தை என்னைத் திடுக்கிட வைத்தது. "பணமும், ஆளும் கட்சியின் ஆட்களின் ஆதரவும் இருந்தால் இது எல்லாம் சர்வ சாதாரணம்" என்றான். அதனால் என்ன லாபம்? என்றேன். போகிற இடத்தில் தனக்குக் கிடைக்கும் மரியாதையும் உபசரிப்பும் எத்தனை என்றானே பார்க்கவேண்டும். இப்படி உலகத்தின் மகிமையைத் தேட பொய்யான, மாய்மாலமான வேடம் போடத் துணிபவர்கள் எத்தனை பேர்? இன்று அந்த பள்ளி மூடப்பட்டும் விட்டது. இந்த கேவலத்திற்கு பணத்தையும், விசுவாசத்தையும் பலியிட்டோர் எத்தனை பேர்? **அரசில் தங்களுக்கு அதிக ஆதரவு என்று காட்ட சுயமரியாதையையும், ஆவிக்குரியவைகளையும் பலியிட ஆயத்தமானக் கூட்டம் ஏராளமாக பெருகிவருகிறது.** "கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்" (2கொரி 10:18) என்பதல்லவோ உத்தமர்களின் வழி. வீண் மகிமையைத் தேடவும், ஆவிக்குரிய பலத்தினை இழக்கவும் ஆயத்தமானோர் எத்தனை பேர்? இந்த பண்டிகை நாட்கள் நம்மை அப்படிப்பட்டவைகளில் இருந்து காப்பதாக. அதனை அழிக்கப் புறப்பட்ட இயேசு நமக்குரியவரே.

கிறிஸ்மஸ் தினத்தினை நினைவு கூறும் நாம், அதன் உண்மை பலனை அனுபவிக்கும் வண்ணம், அனைத்தையும் "Quick Noodles" **முறையிலேயே பெற முயற்சிக்கும் சகலவற்றிற்கும் முற்றுப்புள்ளிவைக்க தேவன் உதவுவாராக.**

பண்டிகை வீண் பெருமை கொள்ளவோ, வீண் ஆடம்பரங்களின் களியாட்டமாயிராமல், அநேகருடைய பிரயோஜனத்திற்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாக மாற்றப்படட்டும். **நம்முடைய உண்மை மகிழ்ச்சி உலகிற்கு உதவட்டும்.** உண்மையாக கிறிஸ்துவின் வருகை உலகின் சரித்திரத்தை மாற்றி, ஆவிக்குரிய தரித்திரத்தையும் மாற்றிய விந்தையை உலகு அறிய ஏதுவாகட்டும்.

சத்துருவின் கிரியைகளை அழிக்க வெளிப்பட்ட தேவ குமாரன் நம் உள்ளத்தில் பிறந்தது உண்மையானால், நம்மில் இந்த கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட இடந்தருவோம்.

**இயேசு இந்த சோதனைகளை வென்றதினால், ஆவியானவருடைய பலத்தினால் ஊழியம் செய்யப் புறப்பட்டது போல நாமும் புறப்படுவோம்** (லூக் 4:14); அதுவே இன்றைய தேவை. கிறிஸ்மஸ்-ன் செய்தி அறியா கோடி கோடி மக்கள் அப்போதுதான் விடுவிக்கப்படுவர்; தேசம் தேவனை அறியும். இல்லையென்றால், இது ஒரு காந்தி ஜெயந்தி போலும், கிருஷ்ண ஜெயந்தி போலும், குருநானக் ஜெயந்தி போலவுமே மாறிவிடும். உலகும் அதைத்தான் புரிந்துகொள்ளும். நம்முடைய மனநிலையும், நடையுமே கிறிஸ்துவின் பிறப்பு மற்றவர்களைப் போல அல்லாது மறுரூபப்படுத்த உண்டான ஒன்று என்பதனை விளக்கும்.

பண்டிகை ஆராதனைகளில் கிறிஸ்துவை அறியாதவர் ஒருவரை அழைத்துச் செல்லுவோம்; முடிந்தால் அவருக்கும் புத்தாடை உடுத்துவித்து, அவரை புது ஜீவனில் வழிநடத்த தேவ கிருபை நம்மை ஆட்கொள்வதாக. இதுவரை கொண்டாடிய பண்டிகையைப் போல வரும் பண்டிகை இல்லாதிருப்பதாக. புதுத் தீர்மானம், புது உடன்படிக்கை நம் ஆராதனைகளை நிரப்பட்டும்; உண்மை கிறிஸ்மஸ் உலகிற்குத் தெரியட்டும்.

# 18. மிஷனரிப் பணி

மேற்கண்ட காரியம் நடைபெறுவதற்கு குறிப்பாக இந்திய மக்களின் இரட்சிப்புக்கு செயல்படுவதற்கு ஒப்புக் கொடுத்துள்ள உங்களை வாழ்த்தும் நேரத்தில், **இந்தியாவின் இரட்சிப்புக்கு தமிழ் திருச்சபைகள் பெரும் பொறுப்பாளிகள் என்பதனை நினைவூட்ட விரும்புகிறேன்.**

வேதத்தினை மிகவும் நேசிக்கும் ஒருவர், தேவனுக்குக் கீழ்ப்படிந்தவனும், விசுவாச வீரனுமாகிய ஆபிரகாம் மூலம் தேசங்கள் ஆசீர்வதிக்கப்படும் என்பதனை விளங்கிக்கொண்டவர், திராவிட இன மக்கள் விசேஷமாக தமிழ் மக்கள் ஆபிரகாமின் வித்து என நம்புகிறார். ஆபிரகாமுக்கு கேத்துராள் என்ற மறுமனையாட்டி இருந்ததையும், அவளை ஆபிரகாம் கீழ்த்தேசத்துக்கு அனுப்பிவிட்டார் என்பதனையும் (ஆதி 25:1,5) மேற்கோளிட்டு, அப்படிப்பட்டவருக்குப் பிறந்த சந்ததியில் ஒன்றுதான் தமிழ் இனம் என்பது இவரது முடிவு. மேலும், ஆவிக்குரியவர்கள் ஆபிரகாமின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்குச் சொந்தமாவார்கள்; **எனவே, அவரை ஏற்றுக்கொண்டு அவருக்காக வாழத்துடிக்கும் தேவ பிள்ளைகளைக் கொண்டு, இந்த பரந்த இந்திய தேசத்திற்கு அவர்களே ஆசீர்வாத ஊற்றுக்கள் என்பது இவரின் தீர்க்கமான நம்பிக்கை.**

எனவேதான், **தமிழ் மக்களுக்குத்தான் மிஷனெரி பணியின் மேல் ஆதங்கம் அதிகம்; அவர்களில் இருந்துதான் மிஷனெரி தலைவர்கள் எழும்புகிறார்கள்; அவர்கள்தான் இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக அதிகமாக ஜெபிப்பவர்கள்;** அப்படிப்பட்ட பணிக்கு அதிகம் கொடுப்பவர்களும் அவர்களே. உறுதியான தியாகத்தினைச் செய்து அநேகருக்கு முன்னோடியாய்த் திகழ்பவர்களும் இவர்களே. தீர்க்கமான முடிவோடு எதனையாகிலும் இதற்காகச் சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடையவர்களும் இவர்களே.

இதனால்தான் தமிழ் மொழி வேதாகமே இந்தியாவின் முதல் மொழிபெயர்ப்பு; முதலில் அச்சடிக்கப்பட்டதும் அதுவே; முதல் சுதேச பணி தொடங்கியதும் அவர்களாலேயே; இயேசுவின்

சீடர்களில் ஒருவரான தோமா உயிர் நீத்ததும் இந்த பூமியிலேயே என்றெல்லாம் அடுக்கிக்கொண்டு போகலாம்.

இப்படியிருக்க, **இன்றைக்கு தமிழ் சபைகளில் காணப்படும் உற்சாகம், உருப்படியாக முறைப்படுத்தப்பட்டால் இந்த தேசம் அசைக்கப்படும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.** அதற்கான வழிமுறைகள் எதுவாக இருக்கலாம் என்பதனை சற்று சிந்திக்க உங்களை அழைக்கிறேன்.

## உணர்வும் வாழ்வும் :

முதலாவது தமிழ் திருச்சபைகள் அனைத்தும் **நாம் "யுத்தத்தில்" இறங்கி உள்ளோம் என்பதனை உணரவேண்டும்.** அது இரத்தமின்றி, கத்தியின்றி நடக்கும் ஒரு யுத்தம். அது முழுவதும் ஆவிக்குரிய மண்டலத்தில் நடைபெறுவது. சபை அங்கத்தினர் சிறியவர், பெரியவர் **அனைவரும் "போர்க்கால" வாழ்விற்கு ஒப்புக்கொடுக்க உற்சாகப்படுத்தப்படவேண்டும்.** "போர்க்கால" வாழ்வை நம்மவர்கள் இன்னமும் கண்டதில்லை. போர்க்கால வாழ்வில் பொழுது போக்காக காரியங்கள் செய்யப்படுவதில்லை; உல்லாசத்திற்கு அங்கு இடமில்லை; உறக்கத்திலும் ஓர் விழிப்புணர்வு; எந்த நேரத்திலும் எதற்கும் தயார் என்ற நிலை; சிறுவர்களும் சிறுமியரும் கூட எப்படிச் செயல்படவேண்டும் எனப் போதிக்கப்பட்டிருப்பார்கள். எதிரியின் தாக்குதலை அடையாளம் காணவும், அப்படிப்பட்ட நேரத்தில் எப்படி செயல்பட்டு மற்றவர்களையும் தங்களையும் எப்படிக் காத்துக்கொள்ளவேண்டும் என்பதனையும் குறித்த தீர்க்கமான அறிவு அனைவருக்கும் புகட்டப்பட்டிருக்கும்.

வீண் வெளிச்சம் போடுதல் அகற்றப்படும். சடங்குகளும், சடங்காச்சாரங்களும் இல்லாமல் போகும். ஏன்? திருமணத்திற்குக்கூட சிலர் மட்டுமே அழைக்கப்படுவர். "தடாபுடா" என்று எதுவும் செய்யப்படாது. வீண் செலவுகள் அனைத்தும் குறைக்கப்படும் "யுத்தகாலத்தில்" என்ன நடக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிவிக்கப்பட்டு அதுவே முக்கிய செய்தியாக மாறும். இடையிடையே தொனிக்கும் "அபாய தொனி"யின் அலறல் ஜனங்களை மிகுந்த விழிப்புள்ளவர்களாகக் காத்துக்கொள்ளும்.

உணவுப்பொருட்களோ, வேறு எதுவுமோ வீணடிக்கப்படாமல் "யுத்தத்தில் ஜெயமெடுக்க" வேண்டுமே என்ற கொள்கைக்காகவே செலவழிக்கப்படும். கிட்டத்தட்ட **அனைவருமே ஆயத்த நிலையில் காணப்படுவர். ஆயுதமேந்த (ஆவிக்குரிய) அனைவருக்கும் கற்றுக்கொடுக்கப்படும்.**

**யுத்தக் களத்தில் தோல்வி என்றால் முழங்கால்கள் அதிகம் முடங்கும்; யுத்தக்களத்தில் நம் படை முன்னேறுகிறது என்றால் "முழங்கும் ஒலி" கேட்கும்.** எத்தனை வீரர்கள் இறந்துவிட்டார்கள் என்ற கேள்வி கேட்கப்படுவதோடு அதனை ஈடு செய்வதற்கு நம்மில் யார்? யார்? என்ற கேள்விக்குப் பதில் கொடுக்கப்படும். எந்த பகுதிகளை நாம் பிடித்துவிட்டோம் என்ற கேள்வி கேட்கப்பட்டு, படைகள் முன்னேறுகிறது என்ற காரியம் அநேகரை இன்னமும் முடுக்கிவிட்டுவிடும். படைவீரர்கள் பற்றாமல் இருந்துவிடக்கூடாது தனித்துவிடப்படக்கூடாது, தன்னிச்சையாக திரிந்துவிடக்கூடாது, படைக்கலன்கள் இல்லாமல் போய்விடக்கூடாது என்பதில்தான் அனைத்துபேருடைய எண்ணமும் சிந்தையும் மேலோங்கியிருக்கும்.

## திட்டமும் செயல்படுதலும் :

இரண்டாவது, "திட்டமிட்ட முன்னேறுதல்" **(Strategic progress)** இந்தியாவினை, மாநிலமாக, **மாவட்டங்களாக, தாசில்களாக, பஞ்சாயத்துக்களாக பிரித்துப் பார்க்க நமக்கு அரசுத்தகவல்கள் உதவுகின்றன.** இது எப்படி ஒரு அரசாங்கத்திற்கு திட்டமிடவும், திட்டங்களை செயல்படுத்தவும் உதவுகிறதோ அப்படியே திருச்சபைக்கும் உதவவேண்டும்.

உதாரணமாக 50 அல்லது 100 அங்கத்தினரைக் கொண்ட ஒரு சபை தூரத்தில் உள்ள (தூரப்பார்வையுள்வர்களாக) **ஒரு தாசிலையோ, பல பஞ்சாயத்துக்கள் அடங்கிய ஒரு பகுதியையோ தத்து எடுத்துக்கொண்டு,** அதனை அடிப்படையாகக்கொண்டு முதலாவது செய்திகளையும் தகவல்களையும் சேகரித்து, பின்னர் அதற்காக ஜெபித்து சபையின் ஒவ்வொருவரையும் அந்த ஜெபத்தில் ஈடுபடுத்தி, பின்னர் அவர்களால் இயன்ற அளவு தேவ துணையோடும் மற்றவர்களின் ஒத்தாசையோடும் (செயல்படும் மிஷனெரி இயக்கங்களின் ஒத்தாசை, அல்லது

அந்த பகுதியில் வாழும் விசுவாசிகளுடைய ஒத்தாசையோடு) தங்களால் இயன்ற, முடிக்கக் கூடிய காரியங்களைச் சிந்தித்து, அதனைச் செயல்படுத்தக்கூடிய மக்களைத் தெரிந்தெடுத்து, பொறுப்புகளைத் தந்து அவரின் கரத்தினைக் பொருளாலும் ஆலோசனையாலும் பலப்படுத்தி, அந்த பகுதிகளுக்கு குழுவாக ஆட்களை அனுப்பி காரியங்களை திட்டமிட்டு, தொடர்ச்சியாக அதனைச் செய்வதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிந்து, ஊழிய முறைகளை செயல்படுத்தி சபைகளை ஸ்தாபிக்கவும், கூடுகைகளை உண்டாக்கவும் செயல்பட்டால் **எத்தனை பெரிய மாற்றங்கள் இந்த தேசத்தில் அதிக செலவில்லாமல் உண்டாகிவிடும்.** பெரிய சபைகள் அதிக பஞ்சாயத்துக்களைத் தத்தெடுத்துக்கொள்ளலாமே. தென்னகத்தையும், வடகிழக்கு மாநிலங்களையும் தள்ளிவிட்டு **தேவையுள்ள பகுதிகளை தெரிந்தெடுத்து** இப்படி முறையாக சில வருடங்களில் செய்யவேண்டியவற்றைத் திட்டமிட்டு ஒரு காலக்கெடுவோடு, அதனை அளக்கக்கூடிய **(measure)** அளவைத் தீர்மானித்து அவ்வப்போது கூடி (சபையாக) ஆலோசித்து முன்னேறிச் சென்றால் இது செயல்படக்கூடிய ஒன்றே என்பது தெளிவு. **இதன் மூலம் சபையில் ஒற்றுமை உண்டாகும். ஏனெனில், தூரப்பார்வையினைப் பார்க்க அனைவரும் கற்றுக்கொண்டார்கள்.** அன்றாட உறுத்துதல்களை நினைக்கவே நேரமில்லாமல் போய்விடும். ஜெபமும் தீவிரமும் மேலோங்க ஆரம்பிக்கும். எனவே ஆண்டவரின் ஒத்தாசையை சபை தனக்காக சுயநலத்திற்காக தேடுவதனை விட்டுவிட்டு தேசத்திற்காக தேட ஆரம்பித்துவிடும்.

## இணைப்பும் இணக்கமும் :

இப்படி அநேக சபைகள் செயல்பட்டால் ஆங்காங்கே அவர்கள் இணைந்து செயல்படவேண்டும் என்கின்ற எண்ணம் **தானாக உதிக்க** ஆரம்பிக்கும். அது போட்டி பொறாமைகளைக் குறைக்கும். குறிப்பாக யாருமில்லாத பகுதிக்கு ஒவ்வொரு சபையும் செல்ல ஆரம்பித்துவிட்டால், இதன்மூலம் **மற்றவர்களைப் புரிந்து கொள்ளுதலும், மற்றவர்களின் முயற்சிகளை மதிக்கும் பழக்கமும், மற்றவர்களோடு இணங்கிப்போக ஆரம்பித்தலும் தானாக உண்டாகும். தலைமைத்துவத்தில் உள்ளோரும் தங்கள் பணியின் வெற்றித்தோல்விகளை பகிர்ந்துகொண்டு ஆலோசனைப்**

**பெறத் துடிப்பவர்களாகவும் மற்றவர்களுக்கு உதவுகிறவர்களாகவும் மாறிவிடுவர்.** இளைஞரும் எப்படியாவது பணித்தளங்களை பார்க்கவும் விடுமுறைகளை கழிக்கவும் ஏதாவது செய்யவேண்டும் என்ற துடிப்பு உள்ளவர்களாக மாறிப்போவார்கள். பெண்கள் ஜெப வீராங்கனைகளாக மாறிவிடுவர். **தற்பெருமை, தன்னயம் மறைந்து இன்னமும் செயல்பட என்ன செய்யவேண்டும், எதனை இழக்கலாம் என்ற எண்ணங்களே மேலோங்கும்.** இணைந்து செயல்படுதல் ஒரு வேதனையாக இருக்காது.

## தடைகளும் தாண்டுதலும் :

**பதவிப் பித்தர்களும், பெருமையைத் தேடுவோரும், தங்களுக்கென்று ஆதாயம் தேடுவோரும், மாம்ச பெலத்தினை நம்புவோரும் மாம்சத்தில் செயல்படுவோருமே இதற்குத் தடையாக மாறுவர்.**

அனைவரும் ஆவிக்குரியவர்களாக, ஆண்டவரின் சத்தம் கேட்பவர்களாக, மாம்ச கிரியை அழிக்க வல்லவர்களாக **சிலுவையில் அறையப்பட்டவர்களாக,** தேவ ராஜ்யத்தின் விரிவாக்குதலையே சிந்தையில் தரித்தவர்களாக மாறிவிட்டால் இதனைத் தாண்டுவது எளிது.

## இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பது எப்போது?

# 19. மோகம்

**"தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்கு உட்படாமல்"** (1தெச 4:4) என்கிற நம்மை எச்சரிக்கிற வார்த்தைகள் வெறும் வேசித்தனம், விபச்சாரம் என்பவைகளை மாத்திரம் குறிக்காமல், இன்றைய உலகில் காணப்படும் அநேக மோக இச்சைகளையும் குறிக்கின்றதாக இருக்கிறது. அவைகளில் சிலவற்றை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்; புரிந்துகொள்ள தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக.

## கிரிக்கெட் மோகம் :

இந்தியாவைப் பிடித்து ஆடும் அல்லது ஆட்டும் இந்த **கிரிக்கெட் மோகம் இன்றைக்கு அநேகரை கோடீஸ்வரராக மாற்றுவதல்லாமல், விதிமுறைகளை மீறுகிறவர்களாகவும், பண பலத்தினால், பதவி பெலத்தினால் எதையும் சாதித்துவிட முடியும் என்கிற ஒரு மமதைக்குள் தள்ளிவிட்ட மாறாத உண்மையையும் இந்த நாட்களில் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.** ஆயிரக்கணக்கான கோடிகள் இந்த மோகப் பித்தினால் அநேகருடைய பையைத்தான் நிரப்பினதே தவிர வேறொன்றுக்கும் உதவுவதில்லை. ஏதோ இந்தியர்கட்கு விளையாட்டு உலகில் ஒரு இடம் உண்டு என்பதனைப் போன்ற மாயத்தோற்றத்தினை உருவாக்கியிருக்கிறோமே தவிர, **இளைஞர்கள் பலருடைய வாழ்க்கைதனை செயலற்றதாக மாற்றுவதற்கு இது எத்தனை உதவியிருக்கிறது என்று பார்த்தால் நன்கு விளங்கும்.**

**மக்களுக்குள் காணப்படும் இந்த மோகத்தினை, தன் சுய ஆதாயத்துக்காக உபயோகித்துவரும் பணமுதலைகள், நிர்வாகத் திறமைசாலிகள், மீடியா துறை வல்லுனர்கள் இணைந்து செயல்படும்** விதத்தை இந்த உலகத்தினர் அறிந்திருந்தாலும், கவலைப்படாமல் உணர்வில்லாமல் வாழ்வதும், ஈடுபாடு கொள்வதும் நமக்குத் தெரியாததல்லவே. இன்றைக்கு IPL பந்தயங்களை கவனித்துப் பார்ப்போருக்கு இது நன்கு தெரியும்.

**ஆனால், இதனைப் போன்றே ஆவிக்குரிய உலகில் மக்களின் மோகத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்றார்ப்போல் தந்திரமாக வியாபார நோக்கத்தை மையமாகக்கொண்டு செயல்படுவதனைப்**

**புரிந்துகொண்டோர் எத்தனை பேர்.** சிலருடைய பைகளை மாத்திரம் நிரப்ப உபயோகப்படுத்தப்படும் யுக்திகளை அடையாளம் கண்டுகொள்ள ஆவியானவர் உதவி செய்யமாட்டாரோ?

**சிலருக்குப் பிள்ளைகளைக் குறித்து மோகம், பிள்ளைகளின் வாழ்வும், வளமும் தான் அவர்கள் கண்களுக்கு முன் தெரியும்.** அதற்காக அவர்கள் எதையும் செய்ய ஆயத்தம். ஓடவும், உழைக்கவும், இரவு பகலென்று பாராமல் செயல்படவும் திட்டங்களைத் தீட்டவும், அதையே சிந்தையாக்கி வாழ்வோரிடம் ஆலோசனை கேட்கவும் இவர்கள் தவறுவதில்லை. ஆனால், அந்தப் பிள்ளை **அதைக்காட்டிலும் மேலாக வாழ்வின் நெறிமுறைகளை, வாழ்வின் சித்தாந்தங்களை தங்கள் தாய் தகப்பனிடமிருந்து பார்த்தே கற்றுக்கொள்கிறது என்பதனை யோசித்துப் பார்ப்பதில்லை. அதற்கேற்றாற்போல் வாழ்க்கை நடத்துவதும் இல்லை. பிள்ளையும் பணமே எல்லாவற்றையும் சாதித்துவிடும் என்ற பிரம்மையில் வாழக் கற்றுக்கொள்வதினால், எல்லா சூழ்நிலைகளிலும் தங்களை ஆபத்திற்கே வேடிக்கைப் பொருளாக மாற்றிக்கொள்கிறார்கள்.**

## பதவி மோகம் :

**எப்படியாகிலும் தன்னை மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்பதினால், மனிதன் எப்பொழுதுமே அதற்குத் தேவையான ஓரிடத்தைப் பெற்றுக்கொள்வதிலும், தக்கவைப்பதிலும்** அதிகக் கவனம் செலுத்துகிறான். பதவியென்றால் எல்லாரும் தன்னைத் தேடுவார்கள் என்பதனையும், அப்பொழுது தங்கள் முக்கியத்துவம் பெருகும் என்பதனை நினைத்து, பதவி தரப்படுவது மற்றவர்களுக்கு உதவவும் மற்றவர்களை உயர்த்திவிடவுமே என்பதனை மறந்து, **அரசியலிலும், வியாபார உலகிலும் ஆன்மீக உலகிலும் இந்தக் காட்சி சரிபாகமாகவே காணப்படுகிறது. பதவிப் பித்தர்கள் எந்த வேஷமும் போட அஞ்சமாட்டார்கள், பொய் சொல்வதற்கோ, வாக்குறுதிகளை அள்ளி வீசுவதற்கோ தங்களைக் குறித்த ஒரு மாய தோற்றத்தை உருவாக்கவோ அதற்கு எந்த விலையும் செலுத்தவோ தயங்கமாட்டார்கள்.** சிலவேளைகளில், மக்களுக்காவே ஒவ்வொரு மூச்சும் இருப்பதுபோல **நாடகம் ஆடுவது** இவர்கட்கு கை வந்த கலை. வசப்படுத்தக்கூடியவர்களை வசீகர மொழியால் தங்களுக்காக

இழுத்துக்கொண்டு, பின்னர் அடிமையாக்க அஞ்சாதவர்கள். பதவி இல்லாவிட்டால் இவர்கட்கு பைத்தியமே பிடித்துவிடும் **இதுவும் இன்றைய ஆவிக்குரிய உலகில் தலை விரித்தாடும் கேவலம்.**

## அலங்கார மோகம் :

எத்தனை பணம் செலவழித்தாகிலும் அவ்வப்போது காணப்படுகிற உடைகள், நகைகள், வாகனங்கள், கருவிகள், செல் போன்கள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். இந்த மோகத்தை உபயோகப்படுத்தித்தான் இன்றைக்கு அநேக வியாபாரங்கள் நடக்கின்றன. நிகழ்ச்சிகளை மாற்றிக்கொண்டேயிருக்கும் ஆவிக்குரிய நிகழ்ச்சிகளில் நோக்கங்கள் மறக்கப்பட்டு, கொள்கைகள் காற்றில் தள்ளப்பட்டு வழிமுறைகள் காலில் மிதிக்கப்பட்டு, அலங்கார மோகத்தினிமித்தம் உண்டாக்கப்பட்ட ஊழியங்கள்தான் எத்தனை இன்று.

## விளம்பர மோகம் :

எப்படியாகிலும் அனைவரின் கண்களிலும் தான் படவேண்டும் என்பது சிலருடைய அலாதி ஆசை. மேடைகளில் இடம் பிடிக்கிறதிலேயோ, தேவையில்லாத நேரத்திலும் தங்களை மற்றவர்கள் மத்தியில் திணித்துக் கொள்வதிலேயும், சத்தத்தை உயர்த்தி, உயர்த்தி பேசுவதிலேயும் தேவையற்ற கருத்துக்களை வெளியிடுவதிலும், மற்றவர்களைக் காட்டிலும் தங்களுக்கு அதிகமாகத் தெரியும் என்பதைக் காட்டிக்கொள்ள முயற்சிப்பதிலும் அவர்கள் ஈடுபடும்போது, இவர்களை அடையாளம் கண்டு கொள்வது மிகவும் எளிது. தங்களை வித்தியாசப்படுத்தவேண்டும் என்பதே குறியாக இருப்பதினால். தங்களை மிகவும் ஆவிக்குரிய நிலையில் உன்னத நிலையில் வாழுபவர்களைப் போல வெளிப்பாடுகளைச் கூறி, அதன்மூலம் ஒரு விளம்பரத்தைத் தேடிக்கொள்ள இவர்கள் அஞ்சாதவர்கள்.

## பொழுதுபோக்கு மோகம் :

உல்லாசமாய் வாழவேண்டுமென்று உலகம் நம்மை ஏவிவிடுகிறது; அதற்கான அநேக சாதனங்களை, **வசீகரிக்கும் அநேக சாதனங்களை உலகம் கையாளுகிறது. பொருளற்ற, பொறுப்பற்ற உள்ளான உணர்வுகளைத் தூண்டும் பேச்சுகளைக்**

**காரியங்களைச் செய்து கவர்ச்சியினை மையமாகக்கொண்டு ஜனங்களை ஒரு மயக்கத்தில் தள்ளிவிடுவது.** இவைகளை ஆவிக்குரிய உலகினை பொழுது போக்கும் மையமாக மாற்றிவிட்ட கொடுமைதனை நாம் கண்டுவருகிறோம்.

இப்படிப்பட்ட மோகங்கள், ஆவிக்குரியவைகளைப் பகுத்தறிந்து தங்களை விலக்கிக் காத்துக்கொள்ளவேண்டியது மிகவும் மிகவும் அத்தியாவசியம். இல்லாவிட்டால், நமக்கும் தேவனை அறியாத அஞ்ஞானிகளுக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லாமல் போய்விடும். ஏதோ ஒரு வாழ்வு வாழ்ந்தேன் என்றோ, உலகத்துக்குக் கடனாளி என்றோ நாம் வாழ முடியாதவர்கள். தேவன் நம்மை உலகத்தினின்று வேறு பிரித்ததும், நம்மை தம்முடைய ஆவியினால் நிரப்பி **உலகத்தின் ஆவியை எடுத்துப்போட்டதும் அவருக்காக உபயோகப்படவேண்டும் என்பதினால் அல்லவோ!**

உலக மக்களின் இந்த மோகத்தினைக் கண்டு அனைத்து விளம்பர ஸ்தாபனங்களும், அலங்காரப் பொருட்களை உண்டாக்கும் ஸ்தாபனங்களும், ஏன் அத்தியாவசியப் பொருட்களை உண்டாக்கும் ஸ்தாபனங்களும் வணிக முறையினைக் கையாண்டு மக்களை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் முறைகளை உபயோகப்படுத்துகின்றனர். **மாம்ச கிறிஸ்தவர்கள் மலிந்துவரும் இந்த நாட்களில் ஆவிக்குரிய உலகினையும் இந்த முறைமைகள் விட்டுவைக்கவில்லை.** இதனை இப்பொழுது ஆவிக்குரிய கிறிஸ்தவர்களும் போட்டி போட்டுக்கொண்டு பின்பற்றத் தொடங்கியுள்ளனர். **நமக்குள் இருக்கும் பக்திவைராக்கியமும் நம்முடைய தேவனைக்குறித்த அறிவும் தேசம் தேவனை அறியவேண்டும் என்ற தரிசனமும், திருச்சபை தேவனுக்கு ஏற்ப கறை திரையற்றதாக மாறவேண்டும் என்ற தாக்கமும் மேலே சொல்லப்பட்ட மோகங்களிலிருந்து நம்மைக் காப்பதாக.**

## 20. நியாயத்தீர்ப்பு

"துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; **சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ"** என்ற தன்னுடைய **சிநேகிதனாகிய ஆபிரகாமின்** ஜெபத்தினைக் கேட்டு அப்படி நான் செய்வதில்லை என வாக்களித்தவர் நமது தேவன் (ஆதி 18:25). தேவன் தம்மை நோக்கி **இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின்** விஷயத்தில் நீடிய பொறுமையாயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ (லூக் 18:7). இதனால்தான் நெகேமியாவும் ஜெபிக்கிறான், "ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது **நாமத்துக்குப் பயப்படவேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும்** உமது செவிகள் கவனித்திருப்பதாக" (நெகே 1:11) என்று. நியாயத்தீர்ப்பு உண்டென்று அறிந்திருக்கிற நமக்கு அதனைக் குறித்த தெளிவு தேவை என்பதோடு நம்மைக் காத்துக்கொள்ளக்கூடிய ஜெப ஞானமும் எத்தனை தேவை.

"சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படி, **நாமெல்லாரும்** கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். ஆகையால், கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம் (2கொரி 5: 10,11) என்று பவுலடியார் கூறுவதனை சிந்திப்போர் எத்தனை பேர்? எதனைக் குறித்து நியாயத்தீர்ப்பு என்பதனை அறிந்து வாழ்க்கையை சரியாக்கிக்கொண்டவர்கள் கிறிஸ்தவ உலகில் மிகவும் சொற்பமே. **வேதத்தின் வெளிச்சத்தினை அறிவது குறைந்து வருகிற இந்நாட்களில்** அவைகளை விளங்கிக் கொள்வது மிகவும் அவசியமானது. உங்கள் ஆத்துமாவின் அருமையை உணர்ந்தவனாக இதனை எழுதுகிறேன். சரிசெய்யவேண்டிய பகுதிகளை சரிசெய்துகொண்டு **நீதியின் கனிகளால் நிறைந்து துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்க ஒப்புக்கொடுங்கள்.** (பிலி 1:11)

## Judgment on Confidence

முதலாவது நம்முடைய நம்பிக்கையைப் பற்றியது (confidence). அநேகந் தடவைகள் நம்முடைய நம்பிக்கை ஆண்டவர் பேரில் தான் என்று சொல்லுவதுண்டு. என்றாலும், **நடைமுறையில் அதனை அனுபவிப்பவர்கள் வெகு சில விசுவாசிகளே.**

**நான் பொன்னின் மேல் என் நம்பிக்கையை வைத்து, தங்கத்தைப்பார்த்து: நீ என் ஆதரவு என்று நான் சொன்னதும், என் ஆஸ்திபெரியதென்றும், என் கைக்கு மிகுதியும் கிடைத்ததென்றும் நான் மகிழ்ந்ததும், சூரியன் பிரகாசிக்கும்போதும், அல்லது சந்திரன் மகிமையாய்ச் செல்லும்போதும், நான் அதை நோக்கி: என் மனம் இரகசியமாய் மயக்கப்பட்டு, என் வாய் என் கையை முத்தி செய்ததுண்டானால், இதுவும்நியாயாதிபதிகளால்விசாரிக்கப்படத்தக்க அக்கிரமமாயிருக்கும்; அதினால் உன்னதத்திலிருக்கிற தேவனை மறுதலிப்பேன்.** (யோபு 31:24-28)

**திருமணத்தின்போது நகைபோடுவது திராவிட கலாச்சாரம் என்பர். எப்படியாவது மாமனாரை மொட்டையடிக்க அதுவே நேரம் என எண்ணுபவர்கள் ஏராளம். வேதத்திலேயும் எலியேசர் ரெபேக்காளுக்கு அணிவிக்கவில்லையா? என்று வாதிடுகிறவர்களும் உண்டு (ஆதி 24:22). (ஆனால் இங்கே மாப்பிள்ளை வீட்டார்தான் பெண்ணுக்கு அணிவித்தார்கள் என்பதனை மறந்துவிட்டார்கள்). ஆனால்உள்நோக்கம்,ஏதாவதுஆபத்துநேரிடும்நாட்களில்இவைகள் உதவுமே என்பதுதான். எனவே, அது தேவன் பேரில் வைக்கும் நம்பிக்கையைத் தூக்கித் தங்கத்தில் வைப்பதற்குச் சமானமானதே.**

உண்மைக்குப் பிரசித்திப்பெற்ற ஒரு மிஷனெரி ஸ்தாபனமும் தங்களுக்கு கிடைக்கும் பொன் நகைகளை விற்பதில்லை, மாறாக அதனை வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தில் (locker) வைத்துவைக்கின்றனர். அதனைக் குறித்து கேள்விகள் எழுந்தபோது, ஒருவேளை ஏதோ ஒரு காரணத்திற்காக தேவ ஜனங்கள் காணிக்கையை நிறுத்திவிட்டாலும், ஆறுமாதம் முதல் ஒருவருடம் வரை நாங்கள் மிஷனெரிகளைத் தாங்கிவிடலாம் அல்லவா? என்று பதில் வந்தது.

**கேட்பதற்கு அதிக ஞானமான வார்த்தையாகத் தோன்றினாலும், ஆராய்ந்து பார்த்தால், "அழைத்தவர் உண்மையுள்ளவர்" (Iதெச 5:24) என்ற உண்மை மறுதலிக்கப்படுவது தெளிவாகத் தோன்றும்.**

**பரலோகில் பாதத்தின் கீழ் இருக்கப்போகும் பொன்னும், தங்கமும் (வெளி 21:21) இன்று அநேகருக்கு நம்பிக்கை உண்டாக்கும் ஆபரணங்களாக மாறிப்போன விந்தைதான் என்னே.** சப்பரம் போல் தன்னை அலங்கரித்து நடமாடும் பெண்கள் எத்தனை? அவர்கள் படித்த கணவனையும் பாதுகாப்பாளனாகவே (watchman) மாற்றிவிடுகின்றனர்; என்னே பரிதாபம். அமெரிக்கர்கள் இந்தியரை அதிலும் தென்னிந்தியரை அதிகமாக நேசித்து பழகுவதற்குக் காரணம், பொன்னை கொள்ளை அடிக்கவே என்று செய்தித்தாள் ஒன்றில் வாசித்தேன்; தங்கம் தரும் வெகுமதி இதுதானோ?

கூடவே, தங்களுடைய சம்பளத்தினை, வருமானத்தினையே நம்பி வாழ்க்கை நடத்துபவர்களும் எத்தனைபேர்? அல்லது தான் சாதித்தவைகளையும், கட்டி வைத்திருக்கிறவைகளையும் குறித்து மேன்மை பாராட்டி தன்னைத்தானே மெச்சிக்கொள்பவர்களின் எண்ணிக்கையும் மிகவும் பெரியதே! **"நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?" என்ற நேபுகாத்நேச்சார்கள் கிறிஸ்தவ உலகில் ஏராளம்.**

**இவையெல்லாம் நியாயத்தீர்ப்புக்குரியது என்பதனை நாம் மறக்கவே கூடாது.** என் நம்பிக்கை தேவனைத் தவிர வேறொருவர் மேலேயோ அல்லது வேறொரு பொருளின் மேலேயோ போய்விடக்கூடாது.

**"இயேசுவல்லால் ஆசை இப்புவியில் வேறேஇல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே"**

இன்றும் சிலர் நாள், நட்சத்திரம், காலம் போன்றவற்றிலும் நம்பிக்கை வைக்கின்றனர்; அது விசேஷமாக திருமண நேரங்களில் வெளிப்படும். திருமண அழைப்பிதழ்தனைப் பார்த்தாலே அது புரியும்.

"புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்; வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள்" (எரே 10:2) என்பது **தேவ கட்டளை கலந்த ஆலோசனை அல்லவா.**

## Judgment on Conversations

இரண்டாவதாக, சம்பாஷணையைக் குறித்தும் (conversations) நியாயத்தீர்ப்பு உண்டு. ஏனெனில், "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னாரே. ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்னு தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய். (மத் 12:36,37)

**வீணான வார்த்தைகள் என்றால் மற்றவர்களுக்கு பிரயோஜனமில்லாதவைகள், கேட்கிறவர்களை கட்டுவிக்காதவைகள், பக்திவிருத்தியைக் கொண்டுவராதவைகள், சாரமற்ற வார்த்தைகள் (எபே 4:29, கொலோ 4:6). அறிவும், ஞானமும், ஆலோசனையும், ஆறுதலும், உந்தித்தள்ளும் சக்தி கொண்ட வார்த்தைகள்** (motivational), **கடிந்து கொள்ளுதல் இல்லாத அனைத்து வார்த்தைகளும் வம்பு வார்த்தைகளே.**

**இல்லாத ஒருவரைக் குறித்து பொல்லாத வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வதும் வீண் வார்த்தைகளே.** உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லித் திரியாயாக (லேவி 19:16) என்பது தேவ கட்டளையல்லவா! **"ஷிபோலேத்" என்ற வார்த்தைதனை "சிபோலேத்" என்று சொன்னவர்களின் தலையே தப்பவில்லையே** (நியா 12:6). இப்படியிருக்க பேசும் வார்த்தைகளைக் குறித்து கணக்கொப்புவிக்கவேண்டிய நாம் எவ்வாறாக நடந்துகொள்ளவேண்டும்!

அஸ்தோத் பாஷையைப் பேசின யூதமக்களுக்குச் சாபம் வரும் என்று சொன்ன நெகேமியாவின் வார்த்தைகள் நம்மைத் தட்டி எழுப்பட்டும் (நெகே 13:24,25).

## Judgment on Convictions

மூன்றாவதாக நாம் நிச்சயித்துக் கொண்ட காரியங்களைக் குறித்து (conviction)

**"...மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும். உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன் மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்" (ரோமர் 14:21,22).** மருந்து சாப்பிடுவதனைக் குறித்து, வெள்ளை ஆடை அணிவதனைக் குறித்து, மோதிரம் போடுவதனைக் குறித்து, மீசை வைப்பதனைக் குறித்து, சுடிதார் அணிவதனைக் குறித்து இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். நம்மில் அநேகருடைய பிரதிஷ்டைகள் உண்டு; அதனை நான் தவறு என்று கூறவில்லை. ஆனால், அப்படிப்பட்ட தனிப்பட்ட வாழ்வின் பிரதிஷ்டைகள் அல்லது நிச்சயங்கள் எப்படி உபயோகப்படுத்தப்படுகிறது என்பது முக்கியம். **நான் நிச்சயித்துக் கொண்டவைகள் எவ்விதத்திலும் மற்ற விசுவாசிகளை இடறப்பண்ணவோ, தவற்றுக்கு வழிநடத்தவோ, பலவீனப்படுத்தவோ ஒருபோதும் இடம் தரக்கூடாது.** அப்படிச் செய்வோமானால் நாம் நியாயத்தீர்ப்புக்கு நம்மை உட்படுத்துகிறோம் என்பதனை மறக்கலாகாது. அரை குறை ஆடையணியும் ஒருவர் இது எனக்குப் பிடிக்கிறது என்று சொல்லாமல், இது நான் நிச்சயித்துக்கொண்டது என்று சொல்லாமல் மற்றவர்களுக்கு இதனால் என்ன நேரிடும் என்று யோசித்துப் பார்ப்பது கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய இலட்சணம். எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் (1கொரி 10:31); **இடறலற்றவர்களாயிருங்கள்** (வச:33)

## Judgment on Confrontation

"மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே."(ரோம 14:4)

**தப்பு செய்கிற மனுஷனைக் கண்டுகொள்ளாமல் இருக்கச் சொல்லுவது அல்ல இந்த வசனம்.** ஏனெனில், "நீதிமான் துரோகம் பண்ணுகிற நாளிலே அவனுடைய நீதி அவனைத் தப்புவிப்பதில்லை....... நீதிமான் பாவம் செய்யும் நாளிலே தன் நீதியினால் பிழைப்பதுமில்லை. பிழைக்கவே பிழைப்பாய் என்று நான் நீதிமானுக்குச் சொல்லும்போது அவன் தன் நீதியை நம்பி அநியாயஞ்செய்தால் அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப்படுவதில்லை. **நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி அநியாயஞ் செய்தால் அவன் அதினால் சாவான்."** (எசே 33:12,13,18)

"நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும்..., **நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்தில் சாவான்". அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். (எசே 3:20)**

**மற்றவர்களுக்குப் பயமுண்டாக்கும்படி பாவம் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள். (I தீமோ 5:20)**

மேற்சொன்ன வசனங்கள் நம்மை எச்சரிக்கின்றன. **ஒரு தனி மனிதன் தன் வாழ்க்கையை மாத்திரம் கெடுத்துக்கொண்டிருந்தால் அவனை தனியே சந்தித்து விளங்கச் செய்து திருத்துவது தேவன் சொன்ன முறை (மத் 18:15-17). ஆனால், ஒரு மனுஷனுடைய நடக்கை, உபதேசம், வாழ்க்கை முறை அநேகர் இடறவும் பின்வாங்கவும், குளிர்ந்துபோகப்பண்ணவும் செய்யுமேயானால் அவர்கள் முகமுகமாய் எதிர்க்கப்படவேண்டியவர்களே.**

பவுல் பேதுருவை அப்படித்தானே எதிர்த்தான் (கலா 2:11-14)

எல்லாருக்கும் முன்பாகத்தானே அதைச் செய்தான் (வச 14)

**"எந்த நோக்கோடு நீ எதிர்க்கிறாய்" என்பது முக்கியம்.**

யந்நேயும், யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள், பரீட்சைக்கு நில்லாதவர்கள், சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள் (2தீமோ 3:8). ஆரோனும், மிரியாமும் மோசேக்கு எதிர்த்து நின்றார்கள்,

அது உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட எதிர்ப்பு (confrontation) (எண் 12:1-20). இவை தண்டணைக்குரியவைகள், நியாயத்தீர்ப்புக்குரியவைகள்.

**ஊழியர்களையும் ஊழியங்களையும் தாக்கிப் பேச அல்ல, நோக்கமெல்லாம் தேவ சபை திசை திருப்பப்படக்கூடாது என்பதே. இது சுய இலாபத்திற்காச் செய்யப்படுவது அல்ல.**

எனவே நியாயத்தீர்ப்பில் இத்தனை காரியங்களையும் கர்த்தர் கணக்கில் கொண்டுவருகிறார் என்பதனை மறக்காலாகாது. "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்." (ரோமர் 14:12)

**எத்தனை ஜாக்கிரதையாய் வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். சாங்கோபமான கிறிஸ்தவ வாழ்க்கை இல்லையே. இன்றைய பிரசங்க பீடங்கள் எத்தனை மலிவாக மாறிவிட்டன. ஜனத்தை ஆயத்தப்படுத்த வேண்டியவர்கள் ஜனத்தின் மயக்கத்தை விரும்பி அதினால் வரும் லாபத்தைப் பெருக்கிவருகின்ற காரியம் எந்த தேவ மனிதனையும் அசைக்கவேண்டுமே.** மன்றாடுவோம் உணர்த்துவிப்போம், தேவ இராஜ்ய மக்களை தேவனுக்காய் செயல்பட எழுப்பிடுவோம். தேவ வல்லமை நம்மைத் தாங்கட்டும்.

# 21. ஊழியப் பணம்

ஊழியங்களுக்குப் பணம் திரட்டுவதனைக் குறித்து வேதம் சொல்லும் வழி முறைகளை கண்டறிந்தால் நல்லது. அது இந்த நாட்களுக்கு மிகவும் தேவை. இதனால், ஒரு மனத் தெளிவு ஏற்படும்.

**தேவன் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் வித்தியாசமான பாதையில் நடத்துகிறார்** என்பது மெய்யானது; எனினும், கொள்கைகளில் (Principles) மாற்றமில்லை என்பது நாம் அறியவேண்டியது. இது ஊழியத்திலும், ஊழியத்திற்காக பணம் திரட்டுவதிலும்கூட நன்றாக செயல்படுகிற ஒன்றே. தேவனால் உபயோகப்பட்ட பல மனிதர்களின் வாழ்க்கையில் இதனைக் காணலாம். ஜார்ஜ் முல்லர் என்கிற தேவ மனிதன் செய்த ஊழியத்தில், **"தேவனைத் தவிர மற்றவர்களிடத்தில் சொல்லுவதில்லை"** என்னும் கொள்கையைப் பின்பற்றினார். அவருடைய சாட்சிகள் அற்புதமானவைகள்; என்னைப் போன்றோரை கவர்ந்திழுத்த ஒன்று. எனவே, அதனையே GEMS-ன் கொள்கையாகவும் மாற்றினோம். ஹட்சன் டெய்லர் என்ற சீன தேசத்தை அசைத்த தேவ மனிதர் ஊழிய விபரங்களைச் சொல்லி பணத்தினைப்பற்றி பேசாமல் விட்டுவிடுகிறார். விண்ணப்பங்களை மனிதர் முன் வைக்கமாட்டார் (appeal for funds) அவரையும் தேவன் கனப்படுத்தி உபயோகித்ததைக் கண்டிருக்கிறோம்.

D.L.மூடி என்கிற தேவமனிதர் அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் அசைக்க உபயோகப்படுத்தப்பட்ட தேவமனிதன். அவர் ஊழியத் தேவைகளை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, **கொடுக்கும்படி உற்சாகப்படுத்தினதால்,** அவரின் ஊழியமும் செழித்தது என்பதும் நாம் அறிந்ததே. வேதமும் இப்படிப்பட்ட பலரைக் குறித்து நமக்கு விளக்குகின்றது. வேதம் காட்டும் முறைகள் சிலவற்றை ஆராய்ந்தால், இன்றைக்கு ஆவிக்குரிய வட்டாரங்களில் நடக்கும் அட்டகாசங்களும், அருவருப்புகளும், அசிங்கங்களும் நமக்குத் தெளிவாகத் தெரியும், புரியும்.

மோசேயை தேவன் பணம், பொருட்களை ஆசரிப்பு கூடார வேலைக்காகத் திரட்டச் சொல்கிறார். யாத் 25:1-7 வரை எப்படிப்பட்டக் காணிக்கைகளை வாங்கவேண்டும் என்றும் கட்டளையிடுகிறார். இத்தனைக் காலம் **அடிமைகளாக இருந்தவர்கள் அல்லவா; அப்படியிருப்பினும், அவர்களிடமே கேள் என்று சொல்லுகிறார். வனாந்தரமாயிற்றே என்றெல்லாம் மோசே யோசிக்கவில்லை; கூடவே, இத்தனைக்காலம் செங்கல் அறுத்த கரங்கள் தேவனுடைய வீட்டிற்காக பொன் வேலைகளையும், விநோதமான மற்ற வேலைகளையும் செய்ய தேவ ஆவியானவர் அவர்களை நிரப்புவார்** என அறிந்து மனிதர்களையும் திரட்டுகிறான். **ஆனால், பயமுறுத்தல், கட்டாயப்படுத்துதல் ஒன்றும் இவைகளில் காணப்படவில்லை என்பதனைக் கவனிக்கவேண்டும். கூடவே, இது கொடுத்தால் அது கிடைக்கும் என்று லாட்டரி சீட்டு விற்பது போலும் தேவனோ, தேவனுடைய மனிதனோ செயடல்படவில்லை என்பதும் கவனிக்கப்படவேண்டும்.** மோசே இனி காணிக்கைக் கொண்டுவரவேண்டாம் என்று கூறும் அளவுக்கு அவர்கள் கொடுத்தார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது (யாத் 36:5,7).

திருப்பணியின் வேலைக்கு, கர்த்தர் கற்பித்தபடியெல்லாம் பெசலெயேலும் அகோலியாவும் செய்ய அறியும்படிக்குக் **கர்த்தரால் ஞானமும் புத்தியும் பெற்ற விவேக இருதயமுள்ள மற்ற அனைவரும் செயல்பட்டார்கள்.** (யாத் 36:1)

ஜனங்கள் **மனப்பூர்வமாய், உற்சாகமாய் கொடுத்தார்கள்** என்பதும் உண்மை (யாத் 25:1, யாத் 35:29). **ஞான எழுப்புதல் அடைந்த** ஸ்திரீகளும் இணைந்து கொண்டார்கள் கொடுப்பதிலும், வேலை செய்வதிலும் (யாத் 35:25,26). இன்றைக்கும் ஊழியத்திற்குப் பணம், ஆள் திரட்டுபவர்கள் மோசேயின் இந்தக் காரியங்களை அறிந்தால் எத்தனை நலமாயிருக்கும். சாட்சிகள் என்ற பேரில் வியாபாரமாக்கப்பட்டிருக்கும் ஊழிய காரியங்களை தேவன் அங்கீகரித்ததுமில்லை, அதனை அடிப்படையாகக் கொண்டு ஆசீர்வதித்ததுமில்லை. **இவைகள் உலகம் கற்றுக்கொடுத்த வியாபாரத் தந்திரமே.** மேலை நாடுகளில் பணம் திரட்டித் தர ஒரு ஸ்தாபனத்தை அணுகினால் அவர்கள் சபைகளில் வந்து ஜனங்களை உற்சாகப்படுத்தி, வியாபாரத் தந்திரங்களை உபயோகப்படுத்தி பணம் சேர்த்துத் தந்து, பின்னர்

அதில் சில சதவீதங்களைத் தங்களுக்கு எடுத்துக்கொள்வார்கள் (பெருவாரியாக 15%). இவர்கள் வேதத்திலிருந்து தான் பேசுவார்கள் ஆனால், வேதத்தைக் குறித்து கவனமற்றவர்கள். இது இன்றைக்கு நம் நாட்டில் ஊழியத் தலைவர்களாலே செய்யப்படுகிறது; அதுதான் வித்தியாசம்.

கூடவே, **மோசேக்கு தேவன் வரைபடத்தைத்தான் காட்டினார். பொருள் சேர்த்ததும் ஆட்களை எழுப்பினதும், வேலையைக் கண்காணித்ததும் எல்லாமே மோசேதான் எனினும் ஆசரிப்புக்கூடார பிரதிஷ்டை நாளில் அவனையும் கர்த்தர் தம்முடைய வீடாகிய கூடாரத்திற்குள் விடவில்லை** (யாத் 40:34,35). இன்று இப்படி நடந்தால், என்ன நடக்கும்? **நான் கட்டின ஊழியம் அல்லவா? எனக்கும் என் பிள்ளைகளுக்கும் என் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அல்லவா இது சொந்தம் என்று கர்த்தரின் ஊழியத்தினை வியாபாரமாக்கினவர்கள் இதனைக் கவனித்தார்களோ?** தேவன் தம்முடைய வேலைக்காக மனிதர்களை உபயோகப்படுத்துகிறார்; ஆனால், மனிதர்களோ தேவனை உபயோகப்படுத்தி தங்களுக்கு ஆதாயத்தைத் தேடிக்கொண்டது எப்படி அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கமுடியும்? அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திச் சொல்லுகிறேன் (ரோமர் 16:17) என்பதோடு நிறுத்தாமல் **"அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து நய வசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்"** (ரோமர் 16:18) என்று எச்சரிக்கத் தவறவில்லை.

பின்னர், தாவீது தேவனுடைய ஆலயத்திற்குப் பொருள் திரட்ட முயற்சிக்கிறான். தேவன் அவனை "நீ எனக்கு ஆலயம் கட்டாமல் உன் குமாரனே கட்டுவான் என்று கூறிய போதிலும், ஆண்டவருடைய ஆலயத்தின் பேரில் இருந்த வாஞ்சையினால் (1நாளா 29:3) ஏராளமாக சவதரித்தான்; ஆனால், அதற்கு முன்தானே மற்றவர்களுக்கு முன்மாதிரியாக **"எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும்** என் தேவனுடைய

ஆலயத்திற்கென்று கொடுக்கிறேன். அவைகளை சுவர்களை மூடுவதற்காகவும், பொன் வேலைக்குப் பொன்னும், வெள்ளி வேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும் ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் **கொடுக்கிறேன்"** என்று கொடுத்து, பின்னர் "இப்போதும் உங்களில் இன்றைய தினம் கர்த்தருக்குத் தன் கைக் காணிக்கைகளைச் செலுத்த **மனப்பூர்வமானவர்கள் யார்?** என்றான். அது மற்றவர்களையும் கொடுக்கச் செய்கிறது. **உற்சாகம், உத்தம மனம், மனப்பூர்வம்** இவைகளே அன்றைக்குக் காணப்பட்டது (1நாளா 29:3-9). ஆனால், இன்றோ தாங்கள் தர முன்வராமலே மற்றவர்களைக் கொடுக்கச் சொல்பவர்கள் அதிகம். **தான் இழக்காமல் மற்றவர்களை இழக்கச் சொல்லுபவன் எப்படி தேவனால் அங்கீகரிக்கப்படமுடியும்.** கொடுத்த பின்னர் "உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம், பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது, நிலைத்திருப்போம் என்னும் நம்பிக்கையில்லை. என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன், இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன், இப்பொழுது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன்" என்று சொல்லவும் தயங்கவில்லை (1நாளா 29:15,17).

**தங்களின் மனைவி, பிள்ளைகளையும், பொன்னால் பொருளால் வீடுகளால் அலங்கரித்து, பின்னர் மற்றவர்களைப் பார்த்து காணிக்கையைக் கொடுக்க கண்டிப்புப் படுத்துபவரே தண்டனைக்குரியவர் என்று கவனிக்கவேண்டியது. பலவந்தம்** பண்ணுவது ஒப்னி, பினகாஸ் வழியில் தோன்றிய ஊழியர்களுக்கு கைவந்த கலை. (1சாமு 2:16-17)

கூடவே, அந்நிய தேச ராஜாவாகிய கோரேஸ் தேவப் பணிக்கு காணிக்கைகளைக் கொடுக்க ஜனங்களை உற்சாகப்படுத்துகிறார். அதற்குக் காரணம் **எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் செயல்பட்டார்கள் என்பது வசனம் காட்டும் தெளிவு** (எஸ்றா 1:1,5)

எனவே தேவ ஆவியின் தொடுதலே மனிதரைக் கொடுக்கச் செய்யவேண்டுமே அன்றி வெளிப்படையான அழுத்தம் கொடுப்பதினால் அல்ல (Pressure tactics) என்பதனை பணம் திரட்டுவோர் அறிந்தால் நல்லது. அது அவர்களையும் கொடுப்பவர்களையும் பாதுகாக்கும்.

பவுலும் திரளான பணம் தர்ம காரியத்திற்காக சேகரித்தது நமக்குத் தெரிந்ததே (2 கொரி 8:20); ஆனால், அதனைக் குறித்து எத்தனை கரிசனையாக **வெளியரங்கமாக** (Transparent) **கணக்கு ஒப்புவிப்பவராக** (Accountable) மற்றவர்களின் முன்பாக **குற்றமற்றவராக இருப்பதில் கவனம் செலுத்துகிறார்** என்பதனை கவனிக்குங்கால் இக்கால அநேக ஊழியங்களில், சபைகளில் இவைகள் ஏன் செயல்படுத்தப்படுவதில்லை என்ற கேள்வி எழும்பாமல் இல்லை. (2கொரி 8:18-23)

இயேசுவின் நாட்களிலும் பணம் சேகரிக்குங் காரியம் ஆலய நிர்வாகிகளாகிய ஆசாரியர், பிரதான ஆசாரியர்களால் நடைபெற்றது; ஆனால், அது வியாபார முறையில் நடந்ததைக் கண்ட இயேசு அவர்களை துரத்தியடித்ததை நாம் அறிவோம் (லூக் 19:45,46). காரணம் **முறைகள் தவறாக இருந்தது, நோக்கம் தவறாக இருந்தது** (Methods & Motives were wrong). இன்று இயேசு இதையே செய்ய விரும்புகிறார் என்பதனை அறிந்தவர்கள் எத்தனை பேர்.

**அமெரிக்காவில் பச்சை கைக்குட்டைகளை விற்று,** உங்கள் மேல் தடவிக்கொண்டால் பெரிய பணக்காரர் ஆகலாம் என்பவர்களையும் அதற்கு பவுலின் கைக்குட்டை செய்த அற்புதங்களை அடையாளம் காட்டுபவர்களையும் பார்த்து சலித்துப்போயிருக்கிறேன். எண்ணெய் வியாபாரம், தண்ணீர் வியாபாரம் என்பது எல்லாம் வெளிநாட்டுச் சரக்கே. **ஆனால், நம்மவர்கள் அவர்களையும் மிஞ்சிவிட்டனர்.** காணிக்கைத் தந்தால் கல் வைக்கிறோம், பெயர் பொறிக்கிறோம் என்பது தமிழ் மக்களை மயக்கும் பேர் பிரஸ்தாப ஏக்கமே; ஜாக்கிரதையாய் செயல்பட்டு தேவ ஊழியங்களைத் தாங்குங்கள்; தேவன் உங்களை சத்தியத்திற்குள் நடத்த ஆவியானவர் நிரப்புவாராக.

# 22. ஊழியர்களைப் பகுத்தறியுங்கள்

வேதத்தின் வெளிச்சத்தில் ஊழியங்களையும், ஊழியர்களையும் நிறுத்திப் பார்த்தால், வேதனைகளும், **சாதனைகளையும் விழுங்கிவிடக் கூடிய அளவிற்குச் செயல்படும் மாய்மாலமும் மலிந்துவருவது** நமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. ஆவிக்குரிய வாழ்வில் தேறின அநேகருக்கும் இதே அங்கலாய்ப்பு உண்டாயிருப்பதில் ஆச்சரியமில்லை.

இன்றைய அநேக ஊழியங்கள் (பெரியவையும், சிறியவையும்) **தேவனால் அங்கீகாரம்** (approval) **பெற்றவைகளா?** என்ற கேள்விக்குப் பதில் கண்டால் நலமாயிருக்கும். ஊழியங்கள் பெருகியிருப்பதில் உற்சாகம்தான், ஆனால் அங்கீகரிக்கப்படாத ஊழியங்களே அநேகம் என்பது வசனத்தின் அடிப்படையில் பார்த்தால் உறுதியாகத் தெரியும் உண்மை.

“கள்ளர்கள் பரவி அங்குமிங்கும் கர்த்தரின் வார்த்தையைப் புரட்டுகின்றார்” என்ற பாடல் அடிகள் எத்தனை உண்மை. ஒரு பள்ளி அல்லது கல்லூரி அங்கீகாரம் பெற்றதா? என்பதனை அறியாமலே அதில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்போரை நாம் எள்ளி நகையாடுகிறோம், ஏமாளிகள் என்ற சொல்லுகிறோம், எதிர்காலம் என்னவாகும் என நம்மையே கேள்வி கேட்டுக் கொள்கிறோம். அங்கீகாரம் உண்டா? இல்லையா? என்பதனை அறிய அநேக இணைய தளங்களைத் (website) துருவுகிறோம்; அநேகரை விசாரிக்கிறோம்; அந்தச் சான்றிதழ்கள் (certificates) யாரால் முத்திரையிடப்பட்டுள்ளது என்று காண வாஞ்சிக்கிறோம்; அதில் படித்து வெளியேறினவர்கள் மற்ற வேலை ஸ்தலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டனரா? என அறிய விழைகிறோம், அங்கீகாரம் பெறத் தேவையான தகுதிகள் அதற்கு உண்டா? என தேவையான இலாக்காவோடு கலந்துரையாடுகிறோம்.

ஆனால், **ஊழியங்களைப் பகுத்தறிய மட்டும் நாம் இவைகளை உபயோகப்படுத்துவதே இல்லையே ஏன்?** எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான், அவனுக்குப் புத்தியில்லை (ஓசி 7:11) என்று இதனைத்தான் தேவன் சொன்னாரோ?

என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன், அதனை அந்நிய காரியமாக எண்ணினார்கள் (ஓசி 8:12) என்று இந்த நிலையில் நாம் வாழ்ந்து விடுவதைத்தான் தேவன் குறிப்பிட்டாரோ?

ஒரு பள்ளியோ, கல்லூரியோ அல்லது ஸ்தாபனமோ அங்கீகாரம் பெற பல படிகளைத் தாண்டவேண்டியுள்ளது. பல காரியங்களைப் பூர்த்தி செய்யவேண்டியுள்ளது (criteria). அப்படியே, ஊழியங்கள் பல வசனங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டியது கட்டாயம்; ஒழுங்குகள் செயல்படுத்தப்பட வேண்டியது அவசியம். ஏதோ **ஒரு சில கிருபைகள் செயல்படுவதினால் மாத்திரம் அதுவும் ஒரு ஊழியம் என்று நாம் ஏற்றுக்கொண்டால், அது தேவ பார்வையில் அருவருப்புக்குரியது என்பதை மறக்கலாகாது.** இன்றைய தமிழக ஊழியங்கள் பலவற்றையும் ஆராய்ந்து பார்த்தால், சில கிருபைகளையும், தாலந்துகளையும் பெற்ற **சிலர் தங்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யவும் தங்களின் கனவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கவும் ஏற்படுத்திக்கொண்டதே அவர்களின் ஸ்தாபனம்** என்பது தெள்ளத் தெளிவு. சிலருடைய சரீரத் தேவைகளை ஏதோ ஒரு விதத்தில் பூர்த்தி செய்து, அதனைப் பின்பு தங்களுடைய அழைப்பாகக் கருதி, அதனையே அழைப்பாகக் காட்டி, ஆரவாரப்படுத்தி, பின்னர் அம்பலத்தில் ஏற்றி, அரியணையிலும் உட்கார வைத்துவிட்டதினால் ஏற்பட்ட ஊழியங்கள் தேவ இராஜ்யத்திற்கு மிகுந்த இலாபத்தை அல்ல, நஷ்டத்தையும் அவமானத்தையுமே தேடித்தந்து வருகிறது.

ஆனால், கொடுமை என்னவெனில், இப்படிப்பட்ட ஊழியங்களைக் **கணிக்கவோ, கண்காணிக்கவோ வகை தெரியாமல்,** காணிக்கைகளை அள்ளித் தந்து தங்களையும் ஏதோ ஒரு வகையில் இவைகளோடு இணைத்துக்கொண்டு, கண்டும் காணாமல் செயலாற்றும் பக்த கோடிகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. கல்லூரியை அடையாளம் கண்டு கொள்ளத் தெரியும், அரசாங்க சட்ட திட்டத்தின்படி நடக்காதவைகளை புரிந்துகொள்ளத் தெரியும், ஆனால், தேவ அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவைதானா? என **ஊழியங்களைக் குறித்து தெரிந்துகொள்ளுவதில் மாத்திரம் கவலைப்படவில்லை அநேகர்**; தேவன் அவர்களைப் பொறுத்தருளுவாராக.

இப்படி, தேவனால் அங்கீகாரம் பெறாதவைகள் தேவனால் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் (acceptance) என்பது கேள்விக்குரியே! “இங்கே ஏறிவாருங்கள்” (வெளி 11:12) என்ற குரல் இவர்களுக்குக் கேட்குமோ? இல்லையோ?

கட்டிடங்கள் இருக்கலாம், பணமும் புகழும் இருக்கலாம், சில வேளைகளில் அற்புதங்களும் இவர்களால் நடக்கலாம், கூட்டமும் கூடலாம்; ஆனால், **"தேவனால் அங்கீகாரம் பெறாதவைகள்" என்ற கூற்று பதில் சொல்லும் காலம் வரும்போது வெட்கத்துக்குரியவர்களாய் இவர்களை மாற்றுமே.**

ஏன் இந்த நிலை? இதற்கு சில காரணங்கள் உண்டு. முதலாவது, **அழைப்பு பெற்றார்களா?** என்பது. எல்லாருக்கும் அழைப்பு (call) உண்டு; ஆனால், எதைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பது முக்கியம். தேவ இராஜ்ஜியப் பணியில் எல்லா அவயங்களுக்கும் வேலை உண்டு; ஆனால், **எல்லாம் ஒரே வேலையைச் செய்ய அல்ல** என்பதனை மறக்கலாகாது (ரோமர் 12:4). “உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்படி ஜாக்கிரதையாயிருங்கள்” (2பேதுரு 1:10) என்பதனைப் புரிந்து செயல்படுதல் தேவை. இன்றைக்கு அநேகர் அவர் செய்கிறார் என்பதால் நான் செய்கிறேன் என்றே செய்கிறார்கள்.

சிலர் ஆரம்பத்தில் அழைப்பைப் புரிந்துகொண்டு செயல்பட்டவர்கள், போகப் போக மற்றவர்களைக் (copy) காப்பி அடிக்கத் தொடங்கி, அவர் செய்யும்போது நான் ஏன் செய்யக்கூடாது என்ற நிலைக்கு வந்து திசை தப்பிப்போனவர்கள். திசை தப்பிப்போனபடியினால் தேவ அங்கீகாரத்தை இழந்த ஊழியங்களாக இவை மாறிப்போயின. தேவனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊழியங்கள் சவுலைப்போல (அப் 13:22) பின்னதாகத் தள்ளப்பட்டுப் போயின. ஆனால், பழைய மகிமையில் இன்னமும் ஏதோ ஓடிக்கொண்டிருக்கின்றன. மக்களும் அந்தப் பழைய காரியங்களை மனதில் கொண்டு இன்னமும் அப்படிப்பட்ட ஊழியங்களில் பங்குகொண்டு உதவிசெய்து வருகின்றனர்.

சில ஊழியர்கள், **அர்ப்பணிப்பில்** (Commitment) **கோட்டை விட்டுவிட்டனர்**. கொஞ்சம் கொஞ்சமாக உலக ஆசை அவர்களைப் பற்றிக்கொள்ள அர்ப்பணிப்பு குறைய ஆரம்பித்தது. ஆடம்பரங்களும் கூடவே தொத்திக்கொள்ள அர்ப்பணிப்பு இருக்கும் இடம் தெரியாமல் போயிற்று. தியாகம், எளிமை, தாழ்மை, மற்றவர்களை மதித்தல் அனைத்தும் அவர்களுடைய அகராதியை விட்டு அகல ஆரம்பித்து போட்டி, பொறாமை, வீம்பு, தற்பெருமை, சுயம் போன்றவை ஆட்டிப்படைக்க, தாங்கள் ஆரம்பித்த ஓட்டத்தின் நோக்கத்தினை மறந்து அல்லது கோட்டை விட்டு தேவ அங்கீகரிப்பை இழந்துபோயினர். ஜே, ஜே என்று நடப்பது போல் தோற்றமளிக்கும் இவர்கள் ஊழியத்தில், தேவ அங்கீகாரம் பெற்றிருக்கிறார்களா? என்பதனைச் சோதிப்பது நல்லது.

**சிலரோ, ஒத்துப்போகுதல் என்ற போர்வையில்** (Compromise) **சத்தியத்தினை விற்றுப்போட்டவர்கள்.** பிலேயாம் போதனையால் பாலாக் செய்த தந்திரத்தினை அறியாமல் சோரம் போன இஸ்ரவேலரைப் போல ஒத்துப் போகுதலில் உண்டாகும் வேதனையைப் புரிந்துகொள்ளாமல், தேவ கோபாக்கினைக்கு இரையாக வைக்கப்பட்டதினால் தேவ அங்கீகாரத்தை இழந்து நிற்பவர்கள்.

**இனம் கண்டுகொள்ள வேண்டியவற்றை இனம் கண்டுகொள்ளுங்கள். இணைக்கப்படவேண்டியவற்றோடு மாத்திரம் இணைந்துகொள்ளுங்கள்; அங்கீகாரம் இல்லாதவைகள் உங்களை அந்தகாரத்திற்குள் தள்ள வல்லமை பெற்றவை என்பதனை மறவாதிருங்கள். தேவ ஆவியானவரின் அபிஷேகம் உங்களை வழிநடத்தட்டும்; ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்** (1கொரி 2:13).

## 23. பெண்களின் பங்கு

**ஏற்றத் துணையாய்க் கொடுக்கப்பட்டவளை ஏற்ற விதத்தில் ஏற்றுக்கொள்ளாதவர்களைக் கொண்டதுதான் இந்த பாரதம்.** பெண்ணைக் குறித்தக் கருத்துக்கள் பல வழிகளில் மாறத் தொடங்கியிருப்பது உண்மையெனினும், இன்னமும் இதயத்தின் ஆழத்தில் அநேக கிறிஸ்துவின் அடியார்கள் மனதிலும் கூட பெரும் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியம் உண்டு.

**வீட்டு நடவடிக்கைகளிலும், அலுவல்களிலும், திருமண நேரத்திலும், ஊழியப் பாதையிலும் அநேகமாகப் பெண் ஒதுக்கிவைக்கப்படுகிறாள் என்பது மாபெரும் உண்மை.** பாதிக்குப் பாதி பெண்களைக் கொண்ட இந்த உலகிற்கு மாற்றத்தையோ, தாக்கத்தையோ கொண்டுவரவேண்டும் என்பது நம் நோக்கமானால், இவர்களை உபயோகிக்கவோ உயர்த்தவோ நாம் அஞ்சவேண்டியதில்லையே. இந்தியா மாற இவர்களை இன்னமும் உற்சாகப்படுத்தி முன்னேற்றப் பாதையில் அவர்களை நடத்த நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டியது முக்கியமானது மாத்திரமல்ல, அது **குடும்ப வாழ்விலும் பிரதிபலிக்க நாம் ஜெபிக்கவும், உழைக்கவும் வேண்டும்.** பெண் பிள்ளையைப் பாரமாகப் பார்க்கும் இந்த சமுதாயத்தில், வேதம் போதிக்கும் பிரமாணத்தை முன் நிறுத்தி செயல்படவேண்டியது நம் அனைவர் மேலும் விழுந்த கடமை.

பெண்ணை வைத்திருப்பவர்கள் வயிற்றில் நெருப்பை வைத்திருப்பது போன்று உணர்வது வாடிக்கை. ஆனால், **அவள் ஒரு நெருப்பு எனவும் அவளை உபயோகித்தால் சத்துருவின் வெள்ளாண்மை அழிக்கப்படும் என்பதுவும் நாம் அறிந்தாகவேண்டிய உண்மை.**

பவுலின் ஊழியத்தினைத் தொடர அவனைப் போல மனநிலையோடு செயல்படும் ஒரு தீமோத்தேயு தேவை (பிலி 3:20,21). மற்றவர்கள் எல்லாரும் தங்களுக்குரியவைகளையே தேடி கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேட மறந்துவிட்டார்கள் என்பது இன்றைக்கும் உண்மை. அப்படிப்பட்ட மனநிலைக்கு

அஸ்திபாரம் போட்டது யார்? பெண் குலம் தானே. **மாயமற்ற விசுவாசமும், சுத்தமனசாட்சியும் அவனுக்குள்ளே நிலைத்திருக்க அவனைத் தயாரித்தப் பெருமை அவனுடைய தாயாகிய ஐனிக்கேயாளைச் சாரும்** (2தீமோ 1:4,5). தீமோத்தேயுவின் தந்தை ஒரு கிரேக்கன்; எந்தக் காரியத்தின் நிமித்தம் இப்படிப்பட்ட ஒரு கலப்புத் திருமணம் நடந்ததோ தெரியாது (அப் 16:11). யூதப் பெண் கிரேக்கனை மணந்துகொண்டது காதலினாலோ அல்லது கட்டாயத்தினாலோ அல்லது சூழ்நிலையினாலோ நமக்குச் சொல்லப்படவில்லை. ஆனால், ஒன்று தெரிகிறது தனது நியாயப்பிரமாணத்தின் சட்டத்தை நிறைவேற்ற, அதுவும் தனக்குப் பிறந்த பிள்ளையில் நிறைவேற்ற அவளால் முடியவில்லை (அப் 16:3; லூக் 2:23; லூக் 1:59). கலப்புத் திருமணத்தின் அழுத்தங்கள் ஐனிக்கேயாளை வசன வாழ்வில் இருந்து அசைக்க முடியாமல் திணறியதிற்குக் காரணம், தன்னால் செயல்படுத்த முடியாததை மகன் தானாகவே செய்துவிடுவான் என அவள் நினைத்ததினால்தான். சிறு வயது முதல் அவனைத் தேறினவனாக மாற்ற அவள் பிஞ்சு நெஞ்சில் அதனைப் போட்டுவிட்டாள் (2தீமோ 3:15); அது தீமோத்தேயுவுக்கு வரப்பிரசாதம் அல்லவா.

சூழ்நிலையின் நிமித்தம் பயந்த சுபாவத்தோடு (1கொரி 16:10), பெலவீன சரீரத்தோடு (1தீமோ 5:23), உணர்ச்சிவசப்படக்கூடிய பட்டண வாசிகளின் மத்தியில் வளர்ந்தாலும் (அப் 14:6-19), பவுலின் ஊழியத்தினைத் தொடரும் மகனாக மாற்றியதற்குத் **தாயும் பாட்டியுமே அஸ்திபார ஊழியத்தினைச் செய்தார்கள்** என்பதனைப் பவுலே அங்கீகாரம் செய்கிறாரே.

**திருமண வாழ்க்கையின் தோல்விகளைப் பெரிதாக்கும் பெண்களுக்கு அவள் ஒரு சவால். செய்த ஒரு தவறினையே சுற்றிச் சுற்றி வந்து தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் கெடுத்துப் போடக்கூடிய பெண்களுக்குள் அவள் ஒரு சவால்.**

சாமுவேலின் தாயும் அப்படித்தானே; அன்னாள் அழுகிறவளாகத்தான் அறிமுகப்படுத்தப்படுகிறாள் (1சாமு:1:7). ஆனால், ஆண்டவரின் காரியத்திற்குத் தன்னை அவள் அர்ப்பணித்தபோது (1சாமு 1:11), பிள்ளைக்கு பாலூட்டியபோது தேவ பயத்தையும் அவள் ஊட்டிவிட்டதினால் அல்லவா மாபெரும்

ஒரு தீர்க்கனை இஸ்ரவேல் தேசம் கண்டது. **அந்தப் பிள்ளையை அன்றிருந்த ஆவிக்குரிய அலங்கோல உலகு அசைக்கவோ, அறுக்கவோ, அசுத்தப்படுத்தவோ முடியாமற்போயிற்றே (Iசாமு 12:3). அன்னாளையும், ஐனிக்கேயாளையும் இன்றையத் திருச்சபை கண்டுபிடித்து உபயோகித்தால் எத்தனை நலமாயிருக்கும்.**

மனாசேயின் மனைவி அல்லவோ தேவனின் திட்டத்தைத் தன் கணவனுக்குச் சொல்லிக் கொடுத்தவள் (நியா 13:23). அவளுடைய பத்திய வாழ்க்கை அல்லவோ சிம்சோன் என்ற வீரனைப் பத்திரமாக வளர்க்க உதவியது (நியா 13:14). **வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி என்று சொல்லும் வார்த்தை இவளில் அல்லவோ நிறைவேறுகிறது.** பெலிஸ்தியரை நடுங்கச் செய்தவனைப் பிறப்பிக்க இப்படிப்பட்டவர்கள் தேவையல்லவோ!

உயித்தெழுந்த கிறிஸ்து காட்சி கொடுத்ததும் விடாப்பிடியாய் நின்ற மரியாளுக்கல்லவோ! (யோ 20:17,18). யோவானும் பேதுருவும் வெறுங் கல்லறையைச் சென்று பார்த்துப் போய்விட்டார்களே (வச. 10); ஆனால், மரியாள் தூதர்களைத் தரிசித்து அதிலே திருப்தியாகிவிடவில்லையே (வச 12). **இப்படிப்பட்ட குணசாலிகளைத் திருச்சபையும், சமுதாயமும் ஏன் கண்டு கொள்வதில்லை?**

குலத்தைக் காத்த எஸ்தரின் தைரியமும், வைராக்கியமும் (எஸ்றா 4:16), புத்திசாலித்தனமும் ஆமான்களை அடையாளம் காட்டிக்கொடுக்கும் அல்லவா! (எஸ் 7:6).

பாராக்குக்குத் தைரியம் சொன்னவள் தெபோராள் அல்லவோ (நியா 4:8). யாகேல் தானே சிசெராவின் தலையை உடைத்துப்போட்டவள் (நியா 5:26). **இப்படிப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து விவாகம் செய்து தேவ இராஜ்யத்திற்கு உபயோகமாக்கவேண்டிய ஆவிக்குரிய வாலிபரும், இன்று பணம் என்ற பெயரில் (வரதட்சணை) பெற்றோரை முன்னிறுத்தி அவளைத் துன்பப்படுத்துவதும் அலட்சியமாக நடப்பிப்பதும் எவ்வகையில் தகும்? இந்தக் கொடுமையின் நிமித்தம் திருமணமாகாமல் மூலையில் ஒதுக்கப்பட்டிருக்கும் பெண்கள்தான் எத்தனை?** அவளைத் திருமணம் செய்தவரும் அவளை ஏதோ வேலைக்கு வந்த வேலைக்காரியைப் போலவே நடத்தி, **அவளின்**

**திறமைகளைத் தின்று விட்ட கழுகுகளாகவே அநேக நேரங்களில் காட்சி அளிக்கின்றனர்.** அல்லது அவளை ஊழியத்திலோ, அலுவலகத்திலோ தனியாகச் சந்திக்க நேரிடின் ஒரு காமப் பொருளாகவே கண்டு சரசமாட, அவளும் அதனைக் கண்டு வெகுண்டு அல்லது ஒதுங்கி தன்னிலையை இழக்கிறது நியாயமா?

**தன் வாலிபத்தைக் காக்க சில பெண்களுக்கு மிகுந்த பிரயாசம் எடுக்கவேண்டிய ஒரு சூழ்நிலையே நம் சமுதாயம் உருவாக்கிக் கொடுத்துள்ளது.**

"அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு?" என்ற காரியத்தினை மாற்றி விட்டோம். பல நுற்றாண்டுகள் கழித்தும் **உலகில் வாழும் நாட்கள் மகளிருக்கே அதிகம் என்பதனைப் புள்ளிவிபரங்கள் சொல்வதினால் அவளே பெலன் படைத்தவள் என்பது நிரூபணம்.** பட்டணங்கள் அழிக்கப்படாமல் எந்திரக்கல் (மா அரைக்கும் கல்) ஒன்றினை அபிமெலேக்கின் தலையில் போட்டுக் காப்பாற்றி, **பெண்ணுக்கு எதுவும் ஆயுதமே என்பதனை நிரூபித்து விட்டாள் பெண்** (நியா 10:53). நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள அவளும் உடன் பங்காளி என்பது உண்மையானால் (1 பேது 3:7), ஏன் இன்னமும் பாரபட்சம் காட்டவேண்டும் **படிக்கவைப்பதிலும், மணம் முடித்துக்கொடுப்பதிலும், கனம் பண்ணுவதிலும் ஏன் அவள் மாத்திரம் பாதிக்கப்பட இடம் தரவேண்டும்.**

ஜான்ஸி ராணிகளையும், ராணி மங்கம்மாளையும் பெற்ற இந்த தேசம் ஆவிக்குரிய உலகில் புதியவைகளைச் சாதிக்கப் பெற்றுத் தரட்டும் பெண்களை. **ஆதியாகமத்தில் ஸ்திரியை வஞ்சித்த பிசாசு (ஆதி 3:13), வெளிப்படுத்தின புஸ்தகத்திலும் அவளை வெள்ளம் கொண்டுபோக தன்வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றிவிடுகிறது (வெளி 12:15). அந்த பிசாசின் பக்கத்தில் நின்று ஸ்திரிகளை துன்புறுத்தாமல் அவர்களை அஸ்திராயுதமாக காண தேவன் நமக்கு கிருபை தருவாராக.**

**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்** (ஆதி 1:27) என்ற வசனம் நாம் எல்லாரும் நன்கு அறிந்த ஒன்றே எனினும் பெண்ணாகிய

ஏவாளை நாம் உற்று நோக்குவோமாகில், மிகப் பெரிய உண்மையை அவளுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் நாம் காணமுடியும். சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, வேதனையைத் தனது வாழ்க்கையில் வருவித்துக்கொண்ட ஏவாளுக்கு, சவாலான ஒரு வாக்குத்தத்தமும் கூடவே கொடுக்கப்பட்டது என்பதை நாம் மறந்துவிடலாகாது. தேவன் சாத்தானிடம் **"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்"** என்றார் (ஆதி 3:15). சத்துருவின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, கீழ்ப்படிந்து பாவஞ் செய்ததால், ஸ்திரீகளுக்கும் சத்துருவுக்கும் உண்டாகிய நேரடிப் பகையை **"உனக்கும் ஸ்திரீக்கும்"** என்று வேதம் குறிப்பிடுவதுடன், ஸ்திரீயின் வித்துக்கும் சத்துருவுக்கும் உள்ள பகையை **"உன் வித்துக்கும் அவள் வித்துக்கும்"** என்றும் சுட்டிக்காட்டுகின்றது. சத்துருவை ஸ்திரீகளுக்கு எதிரியாக தேவன் மாற்றிவிட்டபோதிலும், **"உனது வித்து அவனது தலையை நசுக்கும்"** என்ற வல்லமையுள்ள வாக்குத்தத்தத்தையும் கூடவே ஸ்திரீகளுக்குத் தேவன் கொடுத்தார். என்றாலும், இத்தனை பெரிய வாக்குத்தத்தத்திற்குச் சொந்தக்காரர்களாக உலகம் பெண்களை இன்று பார்க்கிறதில்லை. தனக்கு எதிரியான வித்தை தடுத்துவிடலாம் என்ற சத்துருவின் தந்திரம் இயேசுவின் பிறப்பினால் முறியடிக்கப்பட்டது.

வாக்குத்தத்தங்களுக்கு உரியவர்களாயிருந்தும், கிறிஸ்துவின் ராஜ்யத்திலும், சுவிசேஷம் அறிவிப்பதிலும் உள்ள உரிமையைக் கூட ஸ்திரீகளுக்கு அளிக்கத் தயங்குவோர் உண்டு. தன்னை ஏதேனில் ஏமாற்றிய எதிரியை வீழ்த்த ஸ்திரீகளுக்கும் வாய்ப்பளிக்கப்படவேண்டும் என்பதே வேதத்தின் உண்மை.

வெற்றிக் கொண்டாட்டங்களில் பாடல் பாடுகிறவர்களாய் மாத்திரமல்ல (யாத் 15:20,21, 1சாமு 18:7), அவர்களை வெற்றிக்குப் பங்காளர்களாகவும் மாற்றவேண்டும். இன்றுதான் சமுதாயத்தில் பெண்கள் எல்லா நிலைகளிலும் பயன்படுத்தப்படுகிறார்கள் என்றல்ல, வேதத்தின் நாட்களில் தீர்க்கதரிசிகளாகவும்

(யாத் 15:20, நெகே 6:14, லூக் 2:36, அப் 21:9), நியாயாதிபதிகளாகவும் (நியா 4:4), ராணிகளாகவும் (1இரா 10:1, அப் 8:27), ஆட்சி செய்த ஸ்திரீகள் உண்டே. வேதத்தின் நாட்களில் ஸ்திரீகள் இவ்வளவாய் முக்கியப்படுத்தப்பட்டிருக்க, இந்த விஞ்ஞான யுகத்தில் அவர்களது வாழ்க்கை வலுவடையாமல் முடக்கப்படலாமா? பாராக் ராஜாவாயிருந்தும், "நீ என்னோடே கூட வராவிட்டால் யுத்தத்திற்குப் போகமாட்டேன்" என்று தெபோராளிடம் கூறியதும், இல்க்கியா ஆசாரியனாயிருந்தும் விசாரிக்கும்படிக்கு உல்தாள் எனும் தீர்க்கதரிசியினிடம் சென்றதும் அப்படிப்பட்டோரையும் நடத்த **பெண்களிடமிருந்த தேவ பெலத்தையே வெளிக்காட்டுகின்றது.** உயிர்த்தெழுந்த இயேசுவின் செய்தியை அறிவிக்கும் பெண்களின் வார்த்தைகளை நாம் வீண் பேச்சுக்கள் என்று எண்ணிவிடக்கூடாதே (லூக்24:11, மாற்16:11). உயிரோடு எழுந்த இயேசு, "வாழ்க" என வாழ்த்தி, நற்செய்தியை அறிவிக்க அனுப்பிய ஸ்திரீகளுக்கு நாமும் வழிவிடவேண்டும் (மத்28:9,10).

**"சபையில் ஸ்திரீகள் பேசாமலிருக்கவேண்டும்"** (1கொரி14:34) என்பது அவர்களின் ஒழுக்கத்திற்கடுத்த கட்டளைதானே தவர அவர்களது உரிமைகளை ஒடுக்கும் கட்டளையல்ல.

**"உபதேசம் பண்ண நான் உத்தரவு கொடுக்கிறதில்லை"** (1தீமோ2:12) என்று பவுல் எழுவதின் நோக்கம், ஸ்திரீகள் தங்களுக்கு மேல் தலையாக உள்ள புருஷர்களின் மேலோ அல்லது போதகர்களின் மேலோ அதிகாரம் செலுத்தவோ, ஆட்சி செய்யவோ முற்படக்கூடாது என்பதுதானே தவிர அவைகள் சுவிசேஷம் அறிவிக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகளை அழிக்கும் கட்டளைகளல்ல. பொது இடங்களில் உபதேசம் செய்ய வேதம் அவர்களை அங்கீகரித்திருக்கிறதே (1கொரி11:5) (Proclaims God's message in public worship – GNB).

**"அமைதலாயிருக்கவேண்டும்"** (1தீமோ2:12) என்பதின் அர்த்தம் ஸ்திரீகளின் அடிப்படையான குணத்தைக் குறிக்கவே, சுவிசேஷம் அறிவிக்கும் உரிமையை பறிப்பதற்கல்ல. ஆதித் திருச்

சபையின் ஆராதனைகளிலும் ஜெபங்களிலும் பெண்கள் பங்கு வகித்தார்களே (அப் 1:14, 12:12). ஸ்திரீகளின் தலை புருஷன்தான் என்றாலும், **"அவர்கள் அடிமைகளல்ல, சகோதரிகளாகவே பாவித்து நடத்தப்படவேண்டியவர்கள்"** என்பதை வேதம் அழகாய் கூறுகின்றதே (1கொரி 7:15). இந்த நிலை மறக்கப்படுவதினாலேயே இன்று அநேக குடும்பங்களில் குழப்பங்கள் தலை தூக்கிவிட்டன. அது மாத்திரமல்ல ஸ்திரீகள் **"நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும் அழைக்கப்பட்டவர்கள்"** (1பேது3:7) என்பதினால் அவர்களுக்குரிய கனமும் கொடுக்கப்படவேண்டுமே. இதற்கு விரோதமான எந்த செயலும் புருஷர்களின் ஜெபங்களுக்குத் தடையாக மாறிவிடும் என்பதே வேதத்தின் உண்மை.

தகப்பனின் சுதந்தரத்தில் ஸ்திரீகளுக்கு உள்ள பங்கைக்கூட வேதம் சுட்டிக்காட்டத் தவறவில்லையே! யோபுவிற்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் இருந்தபோது தனது குமாரத்திகளுக்கும் யோபு சுதந்தரம் கொடுத்தானே (யோபு 42:13,15). சட்டங்கள் எல்லாம் இருவருக்கும் சரிசமமானவைகளே என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பரிசேயரும், வேதபாரகரும் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை இயேசுவினிடத்தில் கொண்டுவந்து, அவளைக் கல்லெறியவேண்டும் என்று சொன்னார்கள், ஆனால், அவளிடத்தில் விபச்சாரம் செய்த மனிதனை அவர்கள் ஏன் கொண்டுவரவில்லை? இயேசு **"உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்"** என்று சொன்னபோது, எல்லாரும் தங்கள் மனசாட்சியில் கடிந்துகொள்ளப்பட்டு போய்விட்டது ஏன்? அவளிடத்தில் பாவம் செய்தவர்கள் அவர்களுக்குள் உண்டோ? கையும் மெய்யுமாய் அவர்கள் அந்த ஸ்திரீயைப் பிடித்திருந்தால், தண்டிக்கப்படவேண்டிய வரிசையில் அந்த மனிதனும் இடம் பெறவேண்டுமே. லேவி 20:10-18, எண் 25:8 ஆகிய வசனங்கள் பழைய ஏற்பாட்டின் காலத்தில் தவறிழைத்த இருபுறத்தாருக்கும் கொடுக்கப்பட்ட நியாயமான தீர்ப்புகளை எத்தனையாய் விளக்குகின்றது.

சமுதாயத்தில் மாத்திரமல்ல, ஆவிக்குரிய வட்டத்திலும் பெண்கள் மதிக்கப்படவேண்டியவர்கள், வீடு கட்டுகிறவர்களாகிய நாம் அவர்களை தள்ளிவிடக்கூடாது, அவர்கள் மூலைக்குத் தலைக்கல்லாக இல்லாமலிருக்கலாமே? பெண்கள் பெலவீனமான பாண்டங்கள் என்று தள்ளிவிடாமல், மிரியாம், தெபோராள், உல்தாள், அன்னாள், பிலிப்புவின் குமாரத்திகள் போன்ற தீர்க்கதரிசிகள் சபைகளில் எழும்ப ஊக்கமளிப்போம். **கிறிஸ்துவின் சுவிசேஷப் பணியில் அவர்களும் தங்கள் பங்கினை நிறைவேற்றி ஆத்தும அறுவடையை இக்கடைசி நாட்களில் அதிகரிக்க முற்படுவோம்.**

## 24. பண்டிகையின் குதூகலம்

இயேசுவின் பிறப்பைத் தியானிக்கும்போது, **"இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்"** என்றும் (ஏசாயா 9:2), **"எல்லா ஜனத்துக்கும் சந்தோஷச் செய்தி"** என்றும் (லூக் 2:10) நாம் கூறுவது வேதத்திற்கு ஒத்ததும், நாம் அனுபவிக்கும் பேருண்மை என்பதனை எவரும் மறுக்க இயலாது. அவர் பிறந்த நேரத்தில் காணப்பட்ட அரசியல் உலகையும், ஆன்மீக உலகினையும், உறவுகளின் நிலைகளையும் ஆராய்ந்தால், இன்றைய உலகின் நிலையும் அதுவே என்பதனைக் கண்டுகொள்ளும் அதே நேரத்தில், இந்தச் செய்தி அன்று போலவே இன்றைக்கும் அதிக அவசியம் என்பதனை நாம் கண்டுகொள்ள முடியும்.

ஆனால், அதன் மத்தியிலும் **கீழ்ப்படிகிற இதயம் கொண்டவர்கள் சிலரின் வாழ்வும் இணைந்தபடியினால்தான் பெத்லேகேம் இன்று இரட்சகரைக் கொண்டாடும் இடமாக மாறிற்று** என்பதனை சிந்திக்குங்கால் நம்மையும் மேலும் கீழ்ப்படிதலுக்கு வழி நடத்துகிறது என்பதும் மாறாத சத்தியமே.

அன்றைய அரசியல் நிலை என்ன? **தேவ ஜனங்கள் இறை அதிகாரத்தின் கீழ் இல்லை, மாறாக மாற்றாரின் ஆதிக்கத்திலேயே** அடிமைகளாய் இருந்தது மாத்திரமல்ல, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பத் தருவீர் (அப் 1:6) என்ற ஏக்கக் குரலோடு வாழ்ந்து வந்தனர். அரசின் நிர்வாகத்தில் லஞ்சம் ஏகோபித்து இருந்த காலம் அது (மத் 28:15; லூக் 3:12,14). அரசில் இருந்தவர்கள் செய்ய நினைத்ததைச் செய்யக்கூடாமல் மயக்கத்தில் (மாமிச) இருந்த காலம் (மாற் 6:20,26; லூக் 23:22-25; மத் 27:24). தங்களுடைய பதவி பாதுகாப்பற்றது (insecure) என்பதனால், எதனையும் செய்யத் துணிந்தவர்களாகவும் காணப்பட்டனர். எனவேதான் பால்மனம் மாறா பச்சிளங் குழந்தைகள் கொலை செய்யப்படுவது எளிதாக நடக்கிறது (மத் 2:16). கூடவே, ஆங்காங்கே விடுதலை போராட்டம் என்ற பெயரில் முளைத்து எழும்பின அத்தனை உள்நாட்டு கலவரங்களும்

இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டன. (அப் 5:36,37) தெயுதாஸ், கலிலேயனாகிய யூதாஸ் என்பவர்கள் அரசிற்கு எதிராகப் போர்க்கொடி ஏற்றினபோது அவர்கள் அழிக்கப்பட்டது மாத்திரம் அல்லாமல் அவனோடு இணைந்தவர்களும் சிதறடிக்கபட்டார்கள். நியாயம் பேசி, கடிந்துகொண்டவர்கள் கொடுமையாக நடத்தப்பட்டனர் (லூக் 3:19,20). போட்டிக்கு யாராவது எழும்புகிறார்கள் என்றால் அவர்களை வஞ்சகமாக தீர்த்துக் கட்டவே காரியங்கள் நடைபெற்றது. கலகத்தின் மத்தியில் அனைத்து அரசு தரப்பைச் சார்ந்தவர்களுமே ஆடிப்போயினர் (மத் 2:3,7,8) இன்றைய நிலையும் இதுதானே.

ஆன்மீக உலகின் காரியங்களை கொஞ்சம் சிந்திப்போம். **ஆசனங்களை விரும்பும் ஆசாரியர் கூட்டம்** (மத் 23:6,7), **ஆடம்பரத்தை நாடி ஓடும் பொன் பித்தர்கள்** (மத் 23:16), **மாயத் தோற்றத்தினை உருவாக்கி, பக்தியுள்ளவர்கள் போல வேடமணிந்த வேதபண்டிதர்கள்** (மத் 6:5; 23:27,28). ஒருவனைப் பிடிக்கும்படி சுற்றித் திரிந்தாலும், பிடித்தபின் தங்களுடைய கேடுள்ள வாழ்க்கைக்கு அவர்களையும் பங்காளிகளாக்கி **நரகத்தின் மகனாக மாற்றும் வித்தைகளை** கையாளுவோர் (மத் 23:15). விதவைகளை அல்லது உதவிக்கு வருவோரை தன் **சொந்த இன்ப லாபங்களுக்கு இரையாக்க** முயலும் பிணந் தின்னிக் கழுகுகளாய் உலாவி வருபவர்களைக் கொண்ட பெண் பித்தர்கள் (மத் 23:14). **பொருளாசைக்காரராய்** அதனை சம்பாதிப்பதில் தீவிர திட்டங்களை உருவாக்கி மெய்ப் பொருளைக் கொடுப்பவர்கள் போலக் காட்சி தரும் தந்திரக்காரர்கள் (லூக் 16:14,15). **தேவனையும் தேவாலயத்தையும் மையமாகக் கொண்டு தேவ பக்தியை ஆதாயத் தொழிலாக்கி**, ஜனங்களை வஞ்சனையாய் கொள்ளையடிக்கும் ஆவிக்குரிய கொள்ளைக் கூட்டத்தாரான மார்க்கப் போதகர்கள் (யோவான் 2:14-16, லூக் 19:45,46). தான் பயப்படுவது மாத்திரமல்லாமல் மற்றவர்களையும் **பதுங்கி வாழத் தூண்டும் பாதகங்களால்** நிறைந்த பரிசேயர்கள் (லூக் 13:31). **தேவ வசனத்தைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிப் பேச வல்ல சாதுரியப் பிரசங்கிகள்** (மத் 23:18), **பாரம்பரியங்களையும் மனுஷர் கட்டளைகளையும் தேவ பிரமாணத்தினைக் காட்டிலும் பெரிதாய் மதிக்கும் பெரியவர்கள்** (மத் 15:6, மாற் 7:8), **துதியின் சத்தத்தினைத்**

**தங்களின் கொதிப்பினால் அடக்க நினைக்கும் கொடுமையாளர்கள்** (மத் 21:15). வெள்ளையடிக்கப்பட்டக் கல்லறைகள் (மத் 23:27), **தேவையற்ற காரியங்களுக்கும் குற்றம் காண விளையும் குறு நரிகள்** (மாற் 7:2). இப்படிப்பட்டவர்களைத் தலைமையாகக் கொண்டு செயல்பட்ட ஆவிக்குரிய உலகின் நிலமை எப்படி இருந்திருக்கவேண்டும்; சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

**உறவின் நிலைகளைப் பார்ப்போம்**; பிள்ளைக்குரிய கடமைகளை பணத்திற்காக மாற்றி போதித்து, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உரிய பந்தத்தை மாற்றி அமைத்துக் கொண்ட பொல்லாத காலமாகத்தான் இருந்தது (மத் 15:4,5). பிதாக்களின் இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளின் இருதயத்தைப் பிதாக்களிடத்திற்கும் திருப்பவேண்டிய அளவுக்கு பிளவுபட்டிருந்த காலம் அது (மல் 4:6, லூக் 1:17).

இப்படிப்பட்ட ஒரு காலத்தில் இருந்த அவல நிலைதனை மாற்றி உண்மையான ஒளியாக, ஊழியராக, உறவுகளைச் சீர்ப்படுத்துகிறவராக இயேசு உதித்தார் என்றால் இன்றைக்கும் அந்த இயேசு எத்தனைத் தீவிரமாய் ஜனங்களுக்குள் கிரியைச் செய்ய நாம் முயலவேண்டும். அதற்குக் காரணமாய் இருந்த சிலரையும் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், அது நம்மையும் மறுரூபப்படுத்தவும் மாற்றியமைக்கவும் ஏதுவாக இருக்கும்.

மேற்கண்ட ஆவிக்குரிய உலகில் ஆங்காங்கே தேவன் தம்முடையவர்களை வைக்காமலில்லை, **குற்றமற்றவர்களாய் நடந்த சகரியா-எலிசபெத் தம்பதியினர்** (லூக் 1:6) மேல் தேவனுடைய கவனம் சென்றதில் தவறில்லையே. தேவ தூதன் சொன்னச் செய்தியை நம்ப முடியவில்லை; ஆனால், அபிஷேகம் அவனில் வந்தபோது, அவன் இயேசுவையும் குறித்து தீர்க்கதரிசனம் சொல்கிறான். **நம்மை ஊழியக்காரர்கள் ஆக்கவே இயேசு வெளிப்படுகிறார்** என்றும் தம்முடையவர்களைத் தட்டி எழுப்புகிறான் (லூக் 1:71).

**மரியாள்:**

அவளுக்குத் தேவ திட்டம் நிறைவேற்றப்பட தன் சரீரத்தையும் ஒப்புக்கொடுப்பது எளிதாகவே இருந்தது; **ஆண்டவருக்கு அடிமை**

(லூக் 1:38) என்று கூறிய பின் அங்கே அகம்பாவத்திற்கு இடமில்லையே. எளிமையும் **ஏழ்மையும் இந்த ஒப்புக்கொடுத்தலுக்கு முன் தடைக்கற்களாய் அல்லாமல் படிக்கற்களாய் மாறிவிட்டன**.

## யோசேப்பு:

நீதிமானாகிய அவன் சொப்பனத்தை தேவனே தந்தார் என்பதனை அறிந்து, **தன் ஆசை இச்சைகளையெல்லாம்** பரிசுத்தமுள்ள ஒன்று தன் மனைவியின் கருவில் உருவாகிறது என்கிற எண்ணத்தினால் அடக்கிவிட்டு (மத் 1:25), கட்டளைகள் புறப்பட்ட போதெல்லாம் (எல்லாமே சொப்பனத்தில்தான்) கேள்வி கேட்டு தாமதிக்காமல், செயல்பட ஒப்புக்கொடுத்த விந்தை மனிதன் (மத் 2:14,15; 2:21). **தன் பெலத்தையோ, திறமைகளையோ நம்பாமல் தேவனைச் சார்ந்த வாழ்வு வாழக் கற்றிருந்த உத்தமன்.**

## மேய்ப்பர்கள்:

தேவன் ஏன் அவர்களுக்குத்தான் முதல் செய்தியாக கிறிஸ்மஸ் செய்தியை அறிவித்தாரோ? **ஊருக்குள் இருந்தவர்களுக்கும் உல்லாச அரண்மனையில் இருந்தவர்களுக்கும் இவைகள் அறிவிக்கப்படவில்லை,** அவர்கள் அறிந்தபோது புரிந்துகொள்ளவும் இல்லை (மத் 2:4). **இத்தனைத் திரள் கூட்ட தேவ தூதர்களைச் சந்தித்தவர்கள் தேவ தூதனின் செய்தியையும் பாடல்களையும் கேட்டதோடு, மகிமையில் நின்றவர்கள் இன்றைய ஊழியர்கள் செய்வதுபோல அந்த இடத்தில் கோபுரங்களைக் கட்டி அதனைக் காசாக்கும் பணியில் ஈடுபடாமல் மாறாக தேவனை மகிமைப்படுத்தினார்கள்,** துதித்தார்கள், மற்றவர்களுக்குக் கூறினார்கள் (லூக் 2:8-18). **தீவிரம் காட்டினார்கள், பிரசித்தம் பண்ணினார்கள்** இரட்சகரின் பிறப்பதனை; என்னே வித்தியாசம் இன்றைக்கும் அன்றைக்கும்!

## சாஸ்திரிகள்:

ராஜாவைச் சந்தித்து **தங்களுக்கு ஏதாவது பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணாமல், தங்களுடையதையே அவருக்குத் தருவதற்கு தத்தம் செய்தவர்கள்** (மத் 2:11). முதலில், இயேசுவை சந்திக்க **தங்களின் மூளையறிவை உபயோகப்படுத்தி தோல்வி கண்டவர்கள். பின்னர், தேவ நடத்துதலுக்கு முற்றிலும் விட்டுக்கொடுத்து**

**வெற்றி கண்ட பின்னர் இறை ஆணைக்குக் கீழ்ப்படிய தயக்கம் காட்டவில்லை. ஆதாயத்தைத் தேடி பிள்ளையைக் காணவரவில்லை அவர்கள், மாறாக ஆண்டவரைத் தரிசிக்கவே வந்தார்கள். அறிவு அவர்களை ஆண்டவரைத் தேடவே வழி நடத்திற்று.** தீர்க்கதரிசன பார்வை உடைய காணிக்கைகளையே உவந்து அளிக்க அவர்கள் ஏவப்பட்டார்கள்; பொன் அவரை ராஜா என்று பிரகடனப்படுத்தவும், தூபவர்க்கம் அவர் ஆசாரியர் என்று சொல்லவும், வெள்ளைப்போளம் அவர் பலியாவார் என விளம்பவும் அவர்களுக்கு வெளிப்பாடு உண்டாயிற்று. **இராஜாவினிடத்தில் ஒன்றை எதிர்பார்த்து அல்ல, அவரை பணிய முற்படும் எவருக்கும் வெளிப்பாடுகள் உண்டாவதில் ஆச்சரியமில்லை** (மத் 2:2).

## *சிமியோன்:*

இருண்ட காலத்திலும் தேவ ஆவியினால் நடத்தப்பட்டவன். **400 ஆண்டுகள் தேவ சித்தம் வெளிப்படையாகத் தொனிக்காத நாட்களில், அவனுக்குள் அவர் குரல் தொனிக்கத் தடைகள் இல்லை** (லூக் 2:25-27). அவரை தரிசித்த பின் இவ்வுலகத்தை விட்டுப் போவதற்கு ஆயத்தம் (வச 29). அவரே என் வாஞ்சை, அவரே என் விருப்பம் என்ற வாழ்கைக்கு அல்லவோ அவனை ஆவியானவர் பயிற்சிப்பித்திருந்தார். **இன்றைய ஆவியானவரின் அசைவுக்கும், அன்றைய ஆவியானவரின் அசைவுக்கும் எத்தனை வித்தியாசம்.**

## *அன்னாள்:*

கன்னிப் பிராயத்தில் விவாக வாழ்வினை ஆரம்பித்து **ஏழு ஆண்டுகளே ஆயினும் கணவனை இழந்த இவளுக்கு 50 ஆண்டுகளுக்கு மேல் ஜெப வாழ்க்கையே பெரிதாக இருந்தது. 84 வயது என்ற முதுமை இவளின் ஜெப வாழ்க்கைக்கோ, உபவாச வாழ்விற்கோ முட்டுக்கட்டைப் போட முடியவில்லை. ஜெபத்தில் ஊறின அவளுக்கும் தேவன் இயக்கும் சக்தியாகவே அமைகிறார்.** சரியாக வந்து அவரைத் தரிசித்து **காத்திருந்தக் கூட்டத்திற்கும்** செய்தி சொல்கிறாள்; என்னே அற்புதம்!

இன்றைக்கு நலிந்து, குலைந்து, சீர்கெட்டுப் போய்கொண்டிருக்கும் அரசியல், ஆன்மீக உலகிற்கு இயேசுவை வெளிப்படுத்த இப்படி கீழ்ப்படிந்தோரே தேவை; அதில் நீங்களும் நானும் ஏன் பங்கேற்கக்கூடாது. **பண்டிகை பகட்டுக்காக அல்ல,**

**பரமனை உலகிற்கு அறிவிக்க தரப்படும் அரும் பெரும் சிலாக்கியமான சந்தர்ப்பங்கள். பண்டிகை கொண்டாடி குதூகலிக்க அல்ல, மாறாக நம்மை ஆட்கொண்டவரின் அன்பினைக் காண்பிக்க உபயோகிக்கும் வாய்க்கால்கள்.**

**பண்டிகைப் பாடல் பாடி பரவசப்படுவதற்கு அல்ல, பாடுகள் பட்டு பழிக்கப்பட்டோரை, பாதகர்களை பரமனுக்குச் சொந்தமாக்க விளையும் பல்லக்குகள்.**

**பண்டிகை குடித்து, புசித்து கும்மாளமிடுவதற்கு அல்ல, மயக்கத்தில், மாயையில் வாழ்வோரை மன்னவர் இயேசுவுக்காக சம்பாதிக்கத் தரப்படும் ஆக்கப்பூர்வமான இழக்கக்கூடா பொக்கிம்.**

## 25. பெரிதானவைகளைக் காண்பாய்

**தேவன் நம்மைப் பெரிதானவைகளைச் செய்ய விருப்பம் உடையவர்களாகவே மாற்ற விரும்புகிறார்.** அவரின் இதய துடிப்பினைக் கவனித்துப் பார்ப்போருக்கு இது தெளிவாக விளங்கும். தேவன் நமக்கு விடும் சவாலைக் கவனியுங்கள். "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள், அதை ஆழத்திலிருந்தாகிலும் உன்னதத்திலிருந்தாகிலும் உண்டாகக் கேட்டுக்கொள்" (ஏசா 7:11) என்கிறார். நாமோ ஆகாசைப்போலவே நான் கர்த்தரைப் பரீட்சை செய்யமாட்டேன் என்கிறோம். **தேவன் சொல்லும்போது செய்வது தவறாகாது. ஆனால், இதனை சத்துரு நமக்குச் சொல்லி, அவனுக்கு நாம் செவிகொடுக்கும்போதுதான் தேவனை பரீட்சைப்பார்ப்பதாக மாறிவிடுகிறது** (மத் 4:5-7). இதனை இயேசு அறிந்திருந்ததினால்தான் அவர் அவனைக் கடிந்துகொள்கிறார். அவர் நம்மை ஊக்குவித்து கேட்கச் சொல்லும்போது, **நாம் மாயமான தாழ்மையில் உத்தரவு அருளிச் செய்தால் அது அவரை மிகவும் விசனப்படுத்துகிறது** அல்லது துக்கப்படுத்துகிறது என்பதை அறிந்தவர்கள் எத்தனை பேர்?. "நீங்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது போதாதென்று என் தேவனையும் விசனப்படுத்தப் பார்க்கிறீர்களோ?" (ஏசா 7:13). எனவே, தேவனே அடையாளம் தருகிறார் (வச 14). மனுஷர் எதிர்பார்க்காத, இயற்கையில் சாதகமற்ற, ஆச்சரியப்படத்தக்க ஓர் அடையாளம். "ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்" (வச 14). மரியாளே தனக்குக் காட்சியளித்த தூதனிடம் கேட்கிறாள் "இது எப்படியாகும்? " என்று (லூக் 1:34).

இன்னுமொரு காட்சி; இஸ்ரவேலின் ராஜா எலிசா முன் நிற்கிறான், **எதிர்காலத்தினைக் குறித்த கவலையோடு, எதிரியைக் குறித்து அறிய வாஞ்சிக்கிறான், தன்னுடைய காரியங்கள் எப்படி இருக்கும் என்பதனை** அறிய விரும்புகிறான். அந்நேரத்தில் எலிசா அவனை நோக்கி, "அம்புகளைப் பிடியும்" என்றான், அவைகளைப் பிடித்தான் அப்போது அவன் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி தரையில் அடியும் என்றான் அவன் மூன்று தரம் அடித்து நின்றான். அப்போது தேவ ஆவியினால் நிறைந்த வைராக்கியம் மிகுந்த

அந்த எலிசா சொல்லுவதனைக் கவனியுங்கள். பின்பு அம்புகளைப் பிடியும் என்றான்; அவைகளைப் பிடித்தான். அப்பொழுது அவன் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி: தரையிலே அடியும் என்றான்; அவன் மூன்றுதரம் அடித்து நின்றான். அப்பொழுது தேவனுடைய மனுஷன் அவன்மேல் கோபமாகி: நீர் ஐந்து ஆறுவிசை அடித்தீரானால், அப்பொழுது சீரியரைத் தீர முறிய அடிப்பீர்; இப்பொழுதோ சீரியரை மூன்றுவிசைமாத்திரம் முறிய அடிப்பீர் என்றான் (2இரா 13:18,19). **கவனித்தீர்களா? தேவனுடைய எதிர்பார்ப்பை, பெரியவைகளைச் சாதிக்கவும், செய்து முடிக்கவும் வேண்டிய துடிப்பு நம்மைச் சார்ந்ததே. அது தேவனைக் கனப்படுத்தும்** என்பதனை மறந்துபோகாமல் செயல்பட நம்மை ஏவட்டும்.

இதனால்தான் மிஷனெரி தரிசன தந்தை என அழைக்கப்படும் வில்லியம் கேரியும் **"தேவனுக்கென்று பெரிய காரியங்களைச் சாதி, தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர் பார்"** என்று (Attempt great things for God. Expect great things from God) சவாலிடுகிறார். அதனைச் செய்யாதபோது தேவன் நம்மேல் கோபப்படுகிறார் என்பது மேற்சொன்ன வார்த்தைகளில் தெளிவு. (தேவ ஆவியினால் நிறைந்த எலிசா தேவ ஆவியின் உந்துதலில் தான் கோபமாகிறார்).

**"இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்"** என்பதே இயேசுவின் வாக்கு (யோவா 1:50). இந்த வசனந்தனை நான் அநேகருடைய வேதாகமத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறேன். **இந்த எதிர்பார்ப்போடு வாழவே நாம் அழைக்கப்படுகிறோம்.**

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" (யோவா 14:12). **ஆனால், இந்த வசனம் அநேக நேரங்களில் தவறாக அர்த்தப்படுத்தப்படுகிறது.** இயேசு மரித்தவனை நான்கு நாட்கள் கழித்து உயிர்த்தெழச் செய்தார். இதனைக் காட்டிலும் பெரியகாரியம் செய்ய நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லி, **தங்கப் பல் நிரப்புதல், தங்கத் தூசுகள் விழுதல்** (Gold dust), **எடை குறைதல், மொட்டைத் தலையில் திடீரென்று**

**முடி முளைத்தல் போன்றவற்றினைக் காட்டி இந்த வசனத்தின் அடிப்படையில் அவைகள் செய்யப்படுவதாக சொல்லப்படும் மாயைக்கு விட்டுக்கொடுத்தவர்கள்** அநேகர்.

**சத்திய வேதத்தினை ஒட்டு மொத்தமாக பார்க்க அறியாத சிலரின் காரியத்தினால் வரும் விழைவு இது.** நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? **தேடாதே** (எரே 45:5) என்ற எச்சரிப்பின் சத்தத்தினை அறியாததினாலேயே அபத்தங்கள் அனைத்தும் இன்று ஆவிக்குரிய உலகில் தலை விரித்தாடுகிறது. தங்கம் தேவ மகிமைக்கு அடையாளம் என்றும், அது தோன்றுவதால் தேவ மகிமை விளங்குகிறது என்றும் வாதிட்டு தங்களையே ஏமாற்றிக்கொள்கின்றனர். **தங்கப் பல் நிரப்புவதினால் யாருக்குப் பிரயோஜனம், நமக்கா? மற்றவர்களுக்கா? மொட்டை தலையில் முடி முளைப்பதினால் யாருக்கு பிரயோஜனம் நமக்கா? அல்லது மற்றவர்களுக்கா? எனக்குப் பெரிய காரியங்களைத் தேட வேதம் அனுமதிக்கவில்லையே.**

மாறாக பவுலைப் பாருங்கள், “நான் என் **சுயபிரயோஜனத்தைத் தேடாமல்,** அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல” (1கொரி 10:32) ஒவ்வொருவனும் தன் **சுயபிரயோஜனத்தைத் தேடாமல்,** பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன் (1கொரி 10:24) என்று சொல்லுகிறார். இது கட்டளை அல்லவா!

**எனவே, பெரிய காரியங்களை யாருக்காக எதிர்பார்த்து செயல்படுத்தப்போகிறோம் என்பது மிகவும் முக்கியம்.** இயேசு சொன்ன பெரிய காரியங்கள் ஆயிரம் ஆயிரமானோர் ஆண்டவரின் இராஜ்யத்தில் சேர்க்கப்படுவதனைக் குறித்தே என்பதனை விளங்கிக்கொண்டோர் யார்? **அப்படிப் புரிந்துகொண்டவர்களின் வாழ்க்கை வித்தியாசமானது. எண்ணங்களும் செயல்களும் வித்தியாசமானவை, ஊழியமும் உபயோகமும் வித்தியாசமானவை. அவர்கள் தரும் செய்திகளிலும் அவர் தம் வாழ்க்கையிலும் அது தெளிவாக வெளிப்படும்.** அவரின் ஏக்கமும், விருப்பமும், நினைவுகளும் இதனைக் காண்பிக்கும். வாழ்க்கையினையும் அதற்காகவே ஊற்றிடச் செய்யும்; அதுதானே நடந்தது பரிசுத்தர்களின்

வாழ்வில். அந்த எண்ணங்கள், நோக்கங்கள், செயல்கள் எப்படி இருக்கும் என்பதனைக் புரிந்துகொள்ள, கொஞ்சம் தாவீதைக் கவனியுங்கள். “செய்யவேண்டிய வேலையோ பெரியது, **அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக்** கட்டும் அரண்மனை (1நாளா 29:1). நான் என்னாலே இயன்ற மட்டும் **சவதரித்தேன்** (வச 2), நான் சவதரித்த அனைத்தையும் தவிர எனக்குச் சொந்தமான பொன்னையும், வெள்ளியையும் **கொடுக்கிறேன்** (வச3), இன்றையத் தினம் கர்த்தருக்குத் தன் காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார்” (வச 4) என்று **மற்றவர்களையும் உற்சாகப்படுத்தும்** சவால் நிறை சொற்கள்; மற்றவர்கள் தேவ பணிக்குக் கொடுத்ததனைக்குறித்து மிகவும் **சந்தோஷப்படுகிறான்** (வச 9). எல்லாம் உம்முடையது என்ற **அறிவு** (வச 16), நாங்கள் பரதேசிகளும் அரதேசிகளும் என்ற **அறிக்கை** (வச 15).

**தேவ இராஜ்யத்திற்காக பெரிய காரியங்களைச் செய்ய ஒப்புக்கொடுத்தோர் வாழ்க்கை இப்படித்தான் அமையும்.**

நெகேமியாவைப் பாருங்கள், “நான் பெரிய வேலை செய்கிறேன், **நான் வரக்கூடாது**. நான் அந்த வேலையை விட்டு வருகிறதினால், அது மினக்கெட்டுப் போவானேன்”. (நெகே 6:3) மீண்டும் மீண்டும் அதே உத்தரவு (வச 4). என்னைப் போன்ற மனிதன் **ஓடிப்போவானோ?** என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய் **பதுங்குவானோ?** (வச 11) பொய் தீர்க்கதரிசனத்தைக் குறித்தத் **தெளிவு** (வச 12). ஒரு வயலையாவது நாங்கள் **கொள்ளவில்லை.** அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன் (நெகே 5:16). நான் ஜனங்கள் மேல் **அதிகாரம் செலுத்தவில்லை** (நெகே 5:15), அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கிச் **சாப்பிடவில்லை, ஜனங்களின் கஷ்டத்தை அனுபவித்து தனக்குச் செலவு இருந்தும் உரியவைகளை உதறும் உதாரத்துவம்** (நெகே 5:18).

**இவைகள்தான் வில்லியம் கேரி, C.T. ஸ்டட், டேவிட் லிவிங்ஸ்டன், அதோனிராம் ஜட்சன், ஹட்சன் டெய்லர், கால்டுவெல், ஐடா ஸ்கடர் போன்ற மிஷனரி முன்னோடிகளை இயக்குவித்தவைகள்.**

**ஆனால், இன்றோ அந்தோ பரிதாபம்; மாயையைப் பிறப்பிக்கும் அநேக அற்புதங்களுக்கு இடங்கொடுத்து மலைத்து நின்று அதனையே பேசி, அதனையே வாஞ்சித்து பின்னர் வஞ்சகனின் வலையில் விழுந்து மற்றோரையும் விழச் செய்து பின்னர் விடுதலை அறியமுடியாமற் திக்குத் திணறும் கூட்டம் பெருத்துபோயிற்று.**

நம் தேவன் நாம் பெரியவைகளை அவருக்கென்று சாதிக்க நம்மை அழைக்கிறார்; சந்தேகமில்லை; வாக்களிக்கிறார் அது உறுதி. ஆனால், அனைத்தும் தேவ வார்த்தை அனைவருக்கும் வெளிப்பட வேண்டியும், அவரின் இராஜ்யம் கட்டப்படவேண்டுவதுமே அல்லாமல் வேறொன்றிற்கும் இல்லை. **அவரை நோக்கிக் கூப்பிடும்போது அவர் நமக்கு அறியாததும் எட்டாததுமான பெரிய காரியங்களைக் காண்பிக்கவும் ஆயத்தமாயுள்ளார் என்பதனை அறிந்து ஜெபிப்போம் (எரே 33:3).**

## 26. பிடிக்கப்பட்ட நோக்கம்

நாட்கள் உருண்டோட, **செய்யவேண்டிய பணியோ அதிகமாக** இருப்பதனைக் காணுங்கால் ஒரு புறம் மலைப்பு உண்டானாலும், மறுபக்கம் அவரின் கிருபை போதுமானதாக இருக்கிறதைக் காணுங்கால் அது போதும் என முழக்கமிடச்செய்கிறது. தேசம் வேகமாக மாறிவருகையில், **இளைஞர்களை இயேசுவுக்குள் வேர்விடச் செய்வதின் அவசியத்தை** இன்னமும் அநேகர் உணரவில்லையே என்பது மனதில் வேதனையை உண்டாக்குகிறது. எனினும், பெற்றோரும் வேதத்தின் அடிப்படை உண்மைகளையும் மெய் **கிறிஸ்தவ வாழ்க்கையின் சாரத்தையும்** போதிக்கக் கூடாமல் இருக்கிற நிலை என்னை சிறிது வாட்டுகிறது.

முதலாவது, நாம் அறியவேண்டிய அடிப்படை சத்தியம்; இயேசுவை நான் ஏற்றுக்கொள்ளும்போது நடக்கவேண்டியது அல்லது அறியவேண்டியது, **"எனக்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டார்" என்பது மாத்திரம் அல்லாது, "அவரோடு நானும் சிலுவையில் அறையப்பட்டேன்" என்பதும் அடங்கும்** (கலா 2:20). இயேசுவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன், இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்பது அறிவிக்கப்படாவிடில் பாதி சுவிசேஷமே. பூரண சுவிசேஷ சபைகளில் இந்த சத்தியம் இன்று தொனிப்பதில்லை. **இயேசு எனக்காக அறையப்பட்டார் என்பது சுவிசேஷத்தின் ஒரு பகுதியே.** அது எல்லாருக்கும் தெரிந்ததுதானே. நான் அவரை ஏற்றுக்கொள்ளும்போது, அவரோடு நானும் அறையப்பட்டேன் என்ற நிலைக்கு வருகிறோம் **இதுவே கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பம்.** நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன் (கலா 6:14). கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசையிச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா 5:24) என்பது ஏதோ தத்துவமல்ல.

**முதலாவது என்னில் ஒரு மரணம் நிகழுகிறது;** அதைத்தான் பவுல் “நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்” (ரோ 6:11) என்கிறார். மேலும், “நீங்கள் மரித்தீர்கள் உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது” (கொலோ 3:3) என்றும், “நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தது உண்டானால்” (கொலோ 2:20) என்றும் கூறுகிறார்.

**இந்த மரணம் எளிதில் நிகழுவதில்லை என்பது உண்மை.** முருங்கை மரத்தை வெட்டிச் சாய்த்துவிட்டாலும், தண்ணீர் கண்ட மாத்திரத்தில் அது தளிர்த்துவிடுவதுபோல், இந்த வாழ்க்கையில் ஏற்படும் **பலவித சூழ்நிலைகள் மரித்தது போலக் காணப்படும் காரியங்களைத் துளிர்விடச் செய்ய வல்லமை மிக்கவை** என்பது மறுப்பதற்கில்லை. இதனை அவ்வப்போது சோதித்தறிவது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நல்லது. 30 சதவீதம் அல்லது 60 சதவீதம் என்று அது நாம் கிறிஸ்துவில் வளர வளர அல்லது தேறிவரும்போது அதிகரித்து பின்னர் முற்றுப் பெறுகிறது. இதை முறையாக உபவாசித்து ஜெபிக்கும்போதும், மற்ற வேளைகளிலும் டாக்டர்கள் உடல் உஷ்ணத்தை அளப்பது போல் அளந்து பார்த்து சோதித்தறிவது நம்முடைய நிலையை நமக்குக் காட்டும். சில வேளைகளில் தேவையற்ற **சில உணர்வுகள் உயிர்பெற்று நிற்பதனை அறிய நேரிட்டால், ரோமர் 8:13 ன்படி ஆவியானவரின் ஒத்தாசையோடு அவைகளை அழிக்க தேவ பலன் பெருக வேண்டி நின்றால்,** ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும்.

இரண்டாவதாக, **"நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ** அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" (பிலி 3:12) என்கிற நினைவு. அநேகர் இந்தக் காரியத்தினை அறியவில்லை; மாறாக ஏதோ கிறிஸ்தவ வாழ்க்கை வாழ ஒப்புக்கொடுத்துள்ளார்கள். தேவன் எதைச் செய்தாலும் நோக்கத்தோடுதான் செய்கிறார். உங்களை இரட்சிக்கச் சித்தம் கொண்டார் என்றால், அதன் பின்னால் பெரிய நோக்கம் உண்டு

அல்லவா? அதனை நான் அறியாமல் இருந்தால் **என் வாழ்வில் ஒரு தேக்க நிலை உண்டாகிவிடும்.** “இலக்கை நோக்கி ஓடுகிறேன்” என்பவர் இலக்குக்கும் தனக்கும் இன்னமும் எவ்வளவு தூரம் என்பதனை நிதானித்துக்கொண்டே இருப்பார். சிலவேளைகளில், **½ டிகிரி விலக நேரிட்டாலும்** அது பல நாட்கள் கழித்து இலக்கைவிட்டு எங்கேயோ கொண்டுபோய் விட்டுவிடும். மீண்டும் பிரயாசத்தை அதிகமாக்க வேண்டியது ஏற்படும். **கவனக்குறைவு, திசைத் திருப்பப்படுதல் இன்றைக்கு ஏராளமாக நடைபெற வாய்ப்புகள் சபையிலேயே உண்டாகியுள்ளது. ஏராளமான கள்ளப்போதகர்கள், தவறான ஆராதனை முறைகள், எளிதில் பெற்றுக்கொள்ளத் துடிக்கும் ஆசீர்வாதங்கள், ஆண்டவருக்குத்தான் உபயோகப்படுகிறோம் என்ற மாயையில் சத்துருவின் கையின் ஆயுதமாகுதல் போன்றவை** இன்று ஆவிக்குரிய உலகில் ஏராளம் ஜாக்கிரதை. **மற்றவர்கள் செய்கிறார்கள் ஆகையால் நானும் செய்கிறேன் என்ற மயக்கத்தில்** மாட்டிக்கொண்டோரும் உண்டு. இலக்கை மறந்து பின்னர் தேடி காணமுடியாமல் திசைமாறிப்போனோரும் ஏராளம். திரும்பி அதனைக் கண்டுப் பிடித்து பின்பற்றக் கற்றுக்கொண்டோர் சொற்பம். எனவே அடிக்கடி எனக்கும் நான் அடையவேண்டிய இலக்குக்கும் இன்னமும் எத்தனை தூரம் உண்டு என்பதனை **அவ்வப்போது அளந்துகொண்டு முன்னேறுதல் மிகவும் அவசியம்.**

எனக்குக் கொடுக்கப்பட்ட நோக்கத்தினை நான் நிறைவேற்றுகிறேனா? நான் பெற்றுக்கொண்டதை நிறைவேற்ற எதனையும் அர்ப்பணிக்க ஆயத்தமா? (அப் 20:24) என்பவைகள் அடிக்கடி அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டியவை. இதுவும் அளவிடக்கூடியதே.

மூன்றாவதாக, **"என்னால் பிரயோஜனப்படுபவர்களின் எண்ணிக்கை எத்தனை?"** அந்த எண்ணிக்கை வளர்கிறதா? என்பது அடிக்கடி சோதிக்கப்படவேண்டும் (1கொரி 10:12). **மற்றவர்களை நான் எனக்குச் சாதகமாக எவ்வளவு உபயோகிக்கிறேன் என்பது தன்னலம். இன்றைக்கு அநேக பெரிய ஊழியங்களும், ஊழியர்களும் இதனைச் செய்துவருகின்றனர்.** ஆனால், மாறாக எத்தனைபேர்

என்னால் பிரயோஜனப்படுகிறார்கள் என்பது கேட்கவேண்டிய, அறியவேண்டிய சரியான பதில். முதலாவது ஓரிருவர் என்று ஆரம்பித்து, பின்னர் நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக மாறிவிடுவது நம்முடைய வளர்ச்சியைக் காண்பிக்கிறது. நாம் “உப்பாக அழைக்கப்பட்டோம் அல்லவா”. இரண்டு கிலோ அரிசியைப் பொங்குகிறோம், ஆனால் ஒரு சிறிய கரண்டி உப்பு அத்தனைச் சோற்றுப் பருக்கைகளையும் தொட்டுவிடுகிறதே. நாம் குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களாக இருக்கலாம்; அல்லது, சிறியவர்களாக இருக்கலாம், கவலைவேண்டாம். இதுவும் அளக்கக்கூடியதே எப்படி ஒரு குழந்தையின் வளர்ச்சி உயரம், எடை என்று அளக்கப்படுகிறதோ அப்படியே மேலே குறிக்கப்பட்டவைகள் **அவ்வப்போது அளக்கப்பட்டு சோதித்தறிந்தால் ஆவிக்குரிய தேக்கநிலை உண்டாகாது.** இது மெய்கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேறிப் போக உதவும். அதற்கு விரோதமான தடைகளைக் காணச்செய்து, தாண்டிச் செல்ல பெலனைப் பெற்றுக்கொள்ள உதவும்.

# 27. பிள்ளைகள் – பெற்றோர்கள்

நீங்கள் **எதிர் பார்த்திருக்கும் முடிவை** உங்களுக்குக் கொடுக்கும் படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன். அவைகள் தீமைக்கல்ல, **சமாதானத்துக்கேதுவான நினைவுகளே** (ஏரே : 29:11). அதைச் சொன்னவர் **"**அப்பொழுது நீங்கள் கூடி வந்து, என்னைத் **தொழுது கொண்டு என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்.** நான் உங்களுக்குச் **செவிகொடுப்பேன்".** (வச :12) என்றார்.

**இளைய தலைமுறைக்குப் பண்பட்ட, அனுபவமிக்க, நேர்மையான வயதான தலைவர்கள் தேவை.** முதியவர்களின் ஆலோசனையைத் தள்ளி, தன்னோடு வளர்ந்த இளைஞர்களின் ஆலோசனையைக் கேட்ட ரெகொபெயாம், அரசு **பிரிவதற்கும் சோரம் போவதற்கும் வித்திட்டு** விட்டான் அல்லவா (Iஇரா 12:13&19). முதியோரின் ஆலோசனை என்ன? "நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து (பளுவை எளிதாக்கி), மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள்" என்பதே (1இரா12:7). இன்று இளைஞர்களுக்கும் இப்படிப்பட்ட ஆலோசனை எத்தனையாய் தேவைப்படுகிறது. **சேவகனாக** (Servant - Leader) **விருப்பம் அவர்களில் உண்டாக முடியாதவாறு தடுக்கும் அபத்தங்கள் அனேகம்.** நான் யாருக்கும் அடங்க வேண்டியதில்லை, யாரும் என்னை நடத்த வேண்டாம். யாருக்கும் நான் கணக்கு கொடுக்கத் தேவையில்லை (accountable) என்ற மனோ பாவனையை வளர்த்துக் கொள்ளக் கூடிய ஏராளமான காரியங்கள் நடக்கின்றன.

"என் பிள்ளை நான் வாங்கின சம்பளத்தைக் காட்டிலும் அதிகம் வாங்குகிறான்" என்ற பெருமையில் தட்டிக் கேட்க வேண்டியவற்றையும் தட்டிக் கேட்காத பெற்றோர்" ( **பிள்ளைகளின் மேன்மை – அவர்கள் பிதாக்களே** – நீதி 17:6)

“நான் ஏதாவது கேட்டால் என்னை விரட்டிவிடுவானோ” என்ற **பயத்துடன் வாழும் பெற்றோர்** (தன் தகப்பனைக் கொள்ளையடித்து தன் தாயைத் துரத்திவிடுகிறவன் இலச்சையையும் அவமானத்தையும் உண்டாக்குகிற மகன் - நீதி 19:26)

“என்னைக் காட்டிலும் அதிகம் படித்திருக்கிறான். அவனுக்குத் தெரிந்த அநேக காரியங்கள் எனக்குத் தெரியாது. எனவே அவனுக்குப் புத்தி சொல்ல எனக்கு உரிமையில்லை என **ஒதுங்கும் பெற்றோர்.”** (தகப்பனை பரியாசம் பண்ணி தாயின் கட்டளையை அசட்டை பண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும் - நீதி30:17)

“இந்தக் காலம் வேறு, அந்தக் காலம் வேறு, காலத்துக்குத் தக்கதாகத் தான் வாழவேண்டும்” என்றுச் சொல்லி மனம் போல் அலைய விட்டு விட்ட பிள்ளையைக் குறித்து பின்னர் ஏங்கும் பெற்றோர். **(தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ** தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான். நீதி 29:15) எதுகேட்டாலும் எனக்கு கிடைக்க வேண்டும் என போராடும் பிள்ளைக்கு தன் நிலையையோ, வசதிகளையோ, வருமானத்தையோ விளக்கிச் சொல்லாமல், நான் பாடுபட்டாலும் என் பிள்ளைக்கு கஷ்டம் வரக்கூடாது என அதனைப் பெருந்தன்மையாக நினைக்கும் பெற்றோர். (தன் தகப்பனையும் தன் தாயையும் கொள்ளையிட்டு அது துரோகமல்ல என்பவன் **பாழ்கடிக்கிற மனுஷனுக்குத் தோழன்**. நீதி 28:24)

யாரோடு பழகுகிறாய்? எதனைப் படிக்கிறாய்? ஓய்வு நேரத்தை எப்படி செலவழிக்கிறாய்? என்ற காரியங்களைப் பிள்ளையிடத்தில் கேட்கக் கூசும் பெற்றோர். (பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும். அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும். நீதி 22:15)

ஏழைக்கு இரங்க வேண்டும், திக்கற்றோரை நேசிக்க வேண்டும், பகிர்ந்தளிக்கப் பழகிக்கொள், தன்னயமாக வாழாதே எனச் **சொல்லிக் கொடுக்கத் தவறும் பெற்றோர்.** (ஏழையின் கூக்கூரலுக்குத்தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன் தானும் சத்தமிட்டு கூப்பிடும் போது கேட்கப்படமாட்டான். நீதி 21:13)

பிள்ளைகளை CID போல கவனிக்காவிட்டாலும், கண்டு கொள்ளாமல் எதையும் அறியாமல் பேதையாய் வாழவும் இடமில்லை. இது என் வேலையல்ல என்றுச் சொல்லி வாழும் பெற்றோர். **(பிள்ளையானாலும் அதின் செய்கை சுத்தமோ, செம்மையோ என்பது அதின் நடக்கையினால் விளங்கும்.** நீதி 20 :11)

என் பிள்ளை என்னை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்கள் மத்தியில் மதிப்பாய் வாழ வேண்டும் என்பதே என் கவலை என வேதாந்தம் பேசும் பெற்றோர். **(தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோம். நீதி 20:20)**

என் பிள்ளை வெறும் பேச்சுதானே பேசுகிறான் நேரப் போக்கு அவ்வளவு தான். மற்றபடி அவனை யாரும் குறைசொல்ல முடியாது என்று கூறும் பெற்றோர் (மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும். மத் 12:36)

**பிள்ளைகளே, வந்து எனக்குச் செவி கொடுங்கள். கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்** (சங் 34:11) என்று ராஜா தாவீது அழைக்கும் அழைப்பு எத்தனை அருமையானது.

இன்றைய இளையமுறைக்கு மிகவும் தேவையான **"கர்த்தருக்குப் பயப்படும் பயம்" வாழ்க்கை சித்தாந்தங்கள்** ( Principles of life) **வாழ்க்கையின் நெறிகள்** (Values) **நோக்கங்கள்** (Purpose) **சொல்லிக்கொடுக்க** முன்வர வேண்டிய பெரும் பொறுப்பு முதிய சமுதாயத்திற்கு உண்டு.

கூடவே, **வாழ்ந்து காட்டி** (role model), **செய்து முடித்து, தொடர் ஓட்டத்தினைத் தொடர உற்சாகப்படுத்தும் மாபெரும் கடமையும் அவர்களுக்கு உண்டு.** இளைஞர்களை, தேவன் உயர்த்தும் இந்த நேரத்தில் அடிப்படையான உபதேசங்கள் மாற்றப்பட்டு **வெறும் உற்சாக வார்த்தைகளைக் கூறினால் மட்டும் போதாது.** அவைகள் தேவைதான்; ஆனால் அவை **அஸ்திபாரம் இடுவதில்லை** என்பது மறக்கப்படலாகாது. பிரசங்க பீடத்திலும் இன்று உற்சாக மூட்டும் வார்த்தைகளும் ஆடம்பர பரவசமூட்டும் வார்த்தைகளும் அதிகம் பிரயோகிக்கப்படுவதனைக் கண்டு நான் வேதனை படுகிறேன்.

**இன்றைய இளைய சமுதாயம் காண விரும்புவது எல்லாம் "சவாலான வாழ்க்கை" "வாழ்ந்து காட்டிப் போதிக்கும் போதகம்" "தன்னலமற்ற சேவைதனைத் தரும் தலைமை" "மற்றவர்களை உருவாக்கும் இதயத்துடிப்பு" "பித்தலாட்டமில்லாத கபடமற்ற உண்மை இருதயம்" "நலிந்தோருக்காகப் பரிதபிக்கும் மனப்பான்மை" "மாற்றாரையும் நேசித்துப் போற்றும் உண்மை நாவு" "கிரயம் செலுத்தினாலும் இலக்கை அடையத் துடிக்கும் நெஞ்சம்" "உரிமைகளையும் விட்டு கொடுக்க ஆவல் கொண்ட அலாதியான பண்பு" "உள்ளான இறையன்பு" போன்றவைகளே.** இதனை அவர்கள் அன்றும் இன்றும் இயேசுவில் கண்டதினால் தான் இளைய வயதில் வாழ்ந்த இயேசுவுக்காய் **உயிர் தர துணிந்தக் கூட்டம் இருந்தது. இன்னமும் இருக்கிறது.**

நமது பிள்ளைகளின் படிப்பு, திருமணம், வேலை போன்ற வாழ்க்கைக் காரியங்களைக் குறித்துத் தீர்மானங்கள் எடுக்கும் தேவ பிள்ளைகளாகிய நாம், அதுவும் அவரது பணியில் ஏதோ ஒரு விதத்தில் ஈடுபட்டிருக்கிற நாம் எப்படி செயல்படவேண்டும் என்பதை அறிந்துகொள்வது நல்லது.

படிப்பின் காரியங்களைத் தீர்மானிக்கும் போது அநேக நேரங்களில் மற்றவர்களின் பிள்ளைகளைப் பார்த்து, நம் பிள்ளையும் அப்படித்தான் ஆகவேண்டும் என்கிற ஆசையினால், **நம்முடைய பிள்ளையைக் குறித்த தேவ சித்தத்தினையோ, பிள்ளையின் திறமைகளையோ, பிள்ளையின் விருப்பத்தினையோ, பிள்ளையின் உடல் நலத்தையோ, கவனிக்காமலேயே நம்முடைய விருப்பத்தை நிறைவேற்ற வேண்டி பிள்ளைகளை அதற்குள் திணிக்க முயலும்போது ஏற்படும் சிக்கல்கள் ஏராளம்.** கூடவே, அதனால் எழும்பும் பிரச்சனைகள் சிலநேரங்களில் பூதாகரமாக வெடித்துக் கிளம்ப வாய்ப்புண்டு.

அன்னாள் பிள்ளை கேட்டாள்; ஆண்டவரிடம் பொருத்தனையும் செய்துகொண்டாள். "உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்" என்றாள் (1சாமு 1:11). **கேட்டது அப்படியே கிடைத்தபோது** தன் வார்த்தையின்படியே, "பால் மறந்த உடனேயே பச்சிளம் பாலகனை

(பிள்ளை இன்னமும் குழந்தையாய் இருந்தான் 1 சாமு 1:24) **ஆண்டவர் பணியில் கொண்டு விட்டாள்** (1சாமு 1:25,28). இடையிடையே அவனை உற்சாகப்படுத்தும்படி வருஷந்தோறும் சட்டையையும் தைத்துக் கொண்டுவந்து கண்டு மகிழ்ந்தாள்.

ஆனால், இன்றோ **அநேகர் பொருத்தனைச் செய்வது கிடைக்கும் வரைதான்**. அதற்குப் பின் சாக்குப்போக்குச் சொல்ல ஆரம்பித்துவிடுகின்றனர். “நான் பொருத்தனைச் செய்தேன்; இனி பிள்ளையின் தீர்மானம்தான்” என்பர். அந்தப் பிள்ளைக்கு, தான் பெற்றுக்கொண்ட வகையைக் கூறி **அதனை நிறைவேற்ற உற்சாகப்படுத்துவோரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவே.**

வேறு சில பிள்ளைகள் எனக்கு MBBS ல் இடம் கிடைத்தால் அல்லது அந்தக் கல்லூரியில் இடம் கிடைத்தால் ஆண்டவருக்காகச் சேவைச் செய்வேன் என்பர். ஆனால், கிடைத்தபின் கல்லூரி நாட்களிலோ அல்லது கற்றுத் தேறின பின்னரோ, இத்தனைப் பணம் செலவழித்துப் படித்திருக்கிறேன், நான் சம்பாதிக்க வேண்டாமா? அனுபவிக்க வேண்டாமா? என்பர். இல்லையெனில், என் திருமண வாழ்க்கையை சவுகரியமாக நடத்த முடியாதே என்று கண்ணீர் வடித்து, காரியத்தினை மறந்து போவர்.

வேறு சிலருடைய நிலை கொஞ்சம் வித்தியாசமானது. எந்த ஒரு நோக்கமும் இல்லாமல், பிள்ளைகளை ஏதாவது படிக்கவைத்துவிட்டால் போதும், பின்னர் ஒரு பிள்ளையை அல்லது வரனைப் பார்த்து **திருமணம் முடித்துவிட்டால், "நம் வேலை முடிந்தது"** என்று எண்ணுவது. எப்படியாவது வாழ வழி காட்டிவிடவேண்டும் என்பதனைக் காட்டிலும், **இப்படித்தான் வாழவேண்டும் என்பதனை வரையறுத்துக் காட்டுவோர் எத்தனை பேர்?** எப்படியாயினும் பிள்ளையின் திறமை, ஆர்வம், நோக்கம், உடல்நிலை அனைத்தையும் மனதில் கொண்டு அதற்கு அதனைப் புரியவைத்து, தேவ ஒத்தாசையோடு அதற்குப் போதித்து, பின்னர் தேவச் சித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்ற ஆவலை முடுக்கிவிட்டு, பின்னர் **தேவ நடத்துதலைப் புரிந்துகொண்டு பிள்ளைகளைப் படிக்க வைக்கும் பெற்றோர் எத்தனைபேர்?**

வீணாக, கூடாத காரியத்தில், பண பலத்தின் மூலம் அல்லது செல்வாக்கின் மூலம் பிள்ளையைத் திணித்து, பின்னர் அது படும் கஷ்டத்தினைக் கண்டு மலைத்து அல்லது வெறுத்து, தேவ சமாதானத்தை இழந்தவர்கள் எத்தனை பேர்? பிள்ளைக்கு வழிகாட்ட வேண்டியது நம்முடைய கடமைதான் எனினும், **தேவ சித்தத்தைப் புரிந்துகொண்டு வழி நடத்துதல் பெருங்காரியங்களைச் சாதிக்கும்** என்பதனை மறவாதிருப்போம்.

இளம் வயதிலேயே அதனைப் புரிந்துகொண்டவர்களாய், புரிந்துகொள்ளச் செய்பவர்களாய் செயல்பட்டால், ஏற்ற காலத்தில் குழப்பம் இல்லாமல் நடக்கவும், தேவ தயவைப் பெற்றுச் செயல்படவும் தேவன் உதவுவார்.

இதனைப் போன்றே திருமண காரியங்களை நிச்சயிக்கும் போது தேவன் நம்மைச் செயல்பட அழைக்கிறார். தாயை இழந்து விட்ட ஈசாக்குக்குத் துணை செய்யவும், ஆறுதல் செய்யவும், தன் குடும்ப பாரத்தினைச் சுமக்கவும் ஓர் பெண் தேவை என உணர்கிறான் ஆபிரகாம். பெண் எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டும் என்பதனைக் காட்டிலும், தன் மகன் பின்திரும்பி நான் **விட்டு வந்த தேசத்திற்குப் போய்விடக்கூடாது** என்பதில் தான் அவனுடைய கவனம் அதிகம் இருந்தது (ஆதி 24:3-8). அழகைப் பற்றியோ, சுறுசுறுப்பைப் பற்றியோ, குடும்பத்தை நடத்தக் கூடிய திறமைகளைப் பற்றியோ அவன் பேசவில்லை. ஊழியக்காரன்தான் சுறுசுறுப்பான பெண்ணையும், உதவி செய்யக்கூடிய மனதுடையவளையும் தேடினானே அன்றி ஆபிரகாம் அல்ல. தங்களுடைய காரியத்தில் அவன் தெளிவாய் இருந்ததால் “மகா ரூபவதியும், தேவனைத் துணையாகக் கொண்டவளும், பணிவிடைச் செய்ய தத்தம் செய்தவளுமாகிய ரெபெக்காளைப் பெற்றான். (ஆதி 24:16, 25:22, 24:19,20)

ஆனால், இன்றைக்கு **நாமோ அழகு, படிப்பு, சம்பாத்தியம், வரவுக் கணக்கு இவைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து, முதலாவது நாடவேண்டியவற்றை நாடாமல், குடும்ப வாழ்க்கைகளை நரகமாக்க ஆரம்பித்துவிட்டோம்.** அன்றைக்கு ரெபெக்காள் மூலம் ஈசாக்கு ஆறுதல் பெற்றான். இன்றைக்கு நம் மக்கள் துக்கத்தின் பெரும் சின்னமாகவே மாறிவருகின்றனர்.

இன்றைக்கு அநேக கிறிஸ்தவ குடும்பங்களில் விவாகரத்து என்பது வெகு சாதாரண வார்த்தையாக மாறுவதற்குக் காரணம் தேவ நோக்கத்தைப் புரிந்து கொள்ளாத மனநிலை, புரிந்துகொள்ள இயலாத சூழ்நிலையே காரணம். திருமணத்திற்கு முதல் கட்டமாகவே **பணம் தான் என்கிற நிலை மாறாதபோது அபாயங்களே அதிகம் காணப்படும்.**

பொதுவாக தேவ மக்கள் குடும்பத்தின் நிலை, தேவனுக்குப் பயப்படும் பயம், கல்வித் தகுதிகள் இவைகளை ஆராய்ந்து அறிந்த பின்னர் தேவ சித்தத்தை நாடி, ஜெபித்து தீர்மானிக்க ஆலோசனைக் கூறுகிறேன்.

கூடவே இன்றைய இளைஞர்களைச் சுற்றி ஏராளமான இச்சைகளைத் தூண்டிவிடும் காரியங்கள் நடைபெறுகிறபடியினாலும், பத்திரிக்கைகள், TV, Internet போன்றவைகள் மூலம் அதிக அவசியமற்ற உலகத்தின் காரியங்கள் அவசியமானவைகளாகக் காண்பிக்கப்பட்டு அவர்களை இழுக்கிறபடியினாலும், போன் போன்றவைகளும், SMS-ம் உலகின் அசுத்தங்களை உபயோகிக்கவும், இவர்களை இழுத்துப்போடும் சாதனங்களாக மாறியிருப்பதினால், ஏதோ ஒரு விதத்தில் மாற்றுப் பாலரோடு தொடர்பை உண்டாக்கி, ஒருதலைக் காதலையோ அல்லது இணைந்து காதலிக்கவோ தங்களை விற்றுப்போட்டவர்கள் ஏராளம். இது திருமணத்தை ஒழுங்கு செய்யும்போது விசுவரூபம் எடுக்க சிலர் திருமணத்தைத் தட்டி விடுவர். சிலர் பெற்றோருக்கும் ஆம் என்று விட்டு, காதலிப்பவருக்கும் ஆம் என்று சொல்லி விட்டு “இரட்டை வேடம்” போட திருமணத்திற்குப் பின்னரும் தொடர்பை விட முடியாமற் தவித்து, தன்னையும் மற்றோரையும் கெடுத்துப்போடக்கூடிய வாய்ப்புகள் இன்று ஏராளம். எனவே, பிள்ளையின் மனநிலையை அறிய **நெருக்கமாக அன்பாக, கரிசனையோடு அதனிடத்தில் பேசி** அவர்களைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது மிகவும் அவசியமாக மாறிவிட்டது. இதிலும் கவனம் செலுத்தாத பெற்றோர் இன்றைக்குக் கண்ணீரோடு தான் வாழ்ந்து வருகின்றனர்.

திருமணக் காரியங்களைப் பேசும் முன்னதாக பிள்ளைகளைக் கூப்பிட்டு தெளிவாக்க வேண்டிய அத்தியாவசியம் இன்றைக்கு உண்டு.

அடுத்ததாக, வேலையைத் தெரிந்துகொள்ளுதல் என்ற காரியத்திலும், வேலை ஸ்தலத்தை தெரிந்துகொள்ளுதல் என்ற காரியத்திலும் நம்முடைய நாட்டின் சூழ்நிலைகள் மாறிவருகின்ற இந்த நேரத்தில் வாய்ப்புகள் பெருகுவதினால், தெரிந்தெடுக்க வேண்டிய சூழ்நிலைகள் உண்டாகியுள்ளன. அதாவது வேலை கிடைத்தால் போதும் என்கிற மனநிலையில் உள்ளோர் அநேகம் உண்டு; எனினும், என் **ஆவிக்குரிய காரியத்தினைப் பாதிக்காத வேலையாய் இருக்க வேண்டும்** என்று வாஞ்சிக்க நம் பிள்ளைகளைப் பழக்குவிப்பது மிகவும் அவசியம். இன்றைக்கு அநேக வேலைகள் மிகுதியான சம்பளத்தைத் தரலாம் அல்லது முன்னேற வாய்ப்புகளை வாரி வழங்கலாம்; ஆனால், சத்துரு தந்திரமானவன்; இந்தக் காரியங்களை முன்னிறுத்திக் கொஞ்சம் கொஞ்சமாக நம்மை ஆவிக்குரிய குளிர்ச்சிக்குத் தள்ளிவிட வாய்ப்புண்டு. எனவேதான், உயர் பதவிக்குச் செல்லச் செல்ல அநேகர் ஆண்டவரின் அன்பை விட்டுத் தூரச் சென்றுவிடுகின்றனர். கூடவே, கடமைக்காக மாத்திரம் செயல்படுவோராக மாறிவிடுகின்றனர்.

தேவனை மகிமைப்படுத்த, தேவனுக்கு ஏதாவது ஒரு வழியில் ஊழியம் செய்ய, தேவ பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ள வசதியான காரியங்களைத் தெரிந்துகொள்ள வாஞ்சையுள்ளவர்களாக மாறவேண்டிய கட்டாயம் உண்டு. இந்த மாபெரும் தேசத்தின் வருங்காலக் காரியங்களை நிர்ணயிக்கிறவர்களாக வல்லவர்களாக நம் பிள்ளைகளை மாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு என்பதனை மறக்கலாகாது.

தீவிரப்பட வேண்டிய நாட்கள் இவைகள் தீவிரம் காட்டுவோம். தேசம் தேவனை அறியவும், திசையெங்கும் விடுதலையின் சத்தம் தொனிக்கவும், தேவ ஜனங்கள் எழும்புவதினால் தேசத்தில் அமைதியும் ஆனந்தமும் உண்டாகவும் ஜெபிப்போம்.

## 28. பிரிக்கப் படித்துக்கொள்

**இன்றைய அநேக விசுவாசிகளின் பிரச்சனை உலகத்தின் காரியங்களையும் மற்றும் தேவக் காரியங்களையும் வேறுபிரிக்கத் தெரியாமலிருப்பதே** (Worldliness & Godliness). உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்பதனை அறிந்திருந்தாலும் (யாக் 4:4), நீங்கள் உலகத்தாரல்ல (யோவான் 17:16) என்பதனை அறிக்கையிட்டாலும், நீங்கள் உலகத்தாரல்லாததினால் உலகம் உங்களைப் பகைக்கிறது (யோவான் 15:19) என்பதனை இயேசு கூறிச் சென்றதால் அதனை எதிர்பார்க்கிறவர்களாக வாழ்ந்தாலும், உலகமும் அதின் இச்சைகளும் ஒழிந்துபோம் (1யோவான் 2:17) என்பதனைப் புரிந்துகொண்டிருந்தாலும் வேறு பிரிக்கத் தெரியாத குழப்பம் இன்று திருச்சபையில் காணப்படுவது வேதனைக்குரியதே.

**அநேக திருச்சபையில் நடக்கும் விழாக்கள் (சில ஆராதனைகள் கூட) உலகத்தின் காரியங்களையும் மிஞ்சிவிட்ட நிலையில், இன்றைய விசுவாசிகள் இப்படித்தான் ஆவிக்குரிய உலகமும் செயல்படவேண்டும் என்ற முடிவுக்குள் வந்துவிட்ட அபாயநிலை உண்டு.**

அநேக வெளிநாட்டு சபைகளில் நான் அவர்களின் ஆவிக்குரிய நிலைமையைக் காணக் கையாளும் ஒரு முறை என்னவெனில், தேசிய அளவில் உள்ள விவாகரத்துக்களின் சதவீதம் மற்றும் ஆவிக்குரிய உன்னத நிலையில் இருக்கிறோம், எங்களுக்கே அதிகக் கூட்டம் உண்டு, எங்களின் வருமானம் பெரிது, எங்களுடைய காரியங்கள் (activities) அதிகம் என்று மார்தட்டும் சபையின் விவாகரத்துக்களின் சதவீதமும் எப்படி என்று காண முயற்சிப்பது. அநேக நேரங்களில் தலைக்குனிய வேண்டியதாகவே இருந்தது. அது அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் அப்படியே காணப்பட்டது. அப்படியிருக்க, உலகத்தாருக்கும் ஆவிக்குரியவர்களுக்கும் வித்தியாசம் எங்கே?

**அன்னப் பறவை தண்ணீரையும் பாலையும் பிரித்துக் குடிக்கக் கற்றுக்கொண்ட ஓர் பறவை** என்பர் தமிழ் இலக்கியத்தில்; அதற்குக் காரணம் அதன் அலகில் உருவாகும் ஒரு திராவகமே. அது பாலில் பட்ட உடன் அதனைத் தயிராக மாற்ற வல்லமை கொண்டது. தன் அலகினால் தயிரை மட்டும் சாப்பிட்டுவிட்டு தண்ணீரை விட்டுவிட்டதினால் அதனைக் குறித்து ஜனங்கள் வியப்படைந்தார்கள். அந்த திராவகத்தைக் (acid) காட்டிலும் **அநேக மடங்கு வல்லமை கொண்ட அபிஷேகம் பெற்ற விசுவாசிகளாகிய நாம் எத்தனைச் சிறப்பாகச் செயல்படமுடியும்**; ஆனால் நிலைமையோ வித்தியாசமாக உள்ளதே.

இயேசு எவ்வளவு அழகாக வேறுபிரித்துக் காட்டுகிறார் பாருங்கள் (மத் 6:32, லூக் 12:30). **அஞ்ஞானிகள்** இவைகளை (அன்றாடத் தேவைகளை சந்திக்கும் காரியங்களை) **நாடி, தேடுகிறார்கள்** என்று அடையாளம் காட்டிக்கொடுக்கிறார். நம்முடைய **நாட்டமும் தேட்டமும் எது என்பதை அடையாளம் கண்டுகொண்டால் எத்தனை நலமாயிருக்கும்.**

பவுலைக் கேட்டுப்பாருங்கள் “நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல்” (1 தெச 4:13) என்று அழகாக வேறுபிரிக்கிறார். **மரித்தவர்களின் நிமித்தம் துக்கித்து அறிவற்ற காரியங்களைச் செய்வதனைச் சுட்டிக்காட்டுகிறாரே.** ஆனால், இன்று ஆவிக்குரியவர்கள் என அழைக்கப்படும் நாம் சிலருடைய மரணங்களை முன்னிறுத்தி நம்மையே பாடுகளுக்குட்படுத்திக்கொள்வது வேதத்தின் அடிப்படையில், தேவ நோக்கில் தவறாய் இருக்குமே.

**விழாக்கள் எடுக்கப்படுவதும், பாராட்டு விழாக்கள் நடைபெறுவதும் இன்றைய கிறிஸ்தவ உலகில் அத்துப்படி.** “மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது” (லூக் 16:15) என்று சொன்ன இயேசுவின் வார்த்தைகள் விளக்குவது என்ன? “தேவனால் மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல் **ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்** (யோவான் 5:44); விசுவாசிகள் என்று அழைக்கப்படத் தகுதியற்றவர்கள் என்கிறாரே.

**ஆராதனை என்ற பெயரில் நடத்தும் கிளப் டேன்ஸ்க்கு ஒத்த நடவடிக்கைகள் தேவனுக்கு மகிமை சேர்க்கும் என்று சொல்வதை சுய நினைவில் வாழும் பாமர மக்கள் தானும் ஏற்றுக்கொள்வதில்லையே.** சினிமாவுக்கு ஒத்த ஆட்டங்கள், பாட்டுகள், இசைகள் ஒரு பரவசத்தைத்தான் கொண்டுவருகிறதே தவிர பக்தியை அல்ல என்பதனை நடத்துபவர்களும் ஒத்துக்கொள்வார்களே. அப்படியிருக்க இளம் வயதினரை இழுக்க இதுவே வழி என்று உலகத்தின் வழியைப் பின்பற்றும் ஊழியர்கள் தேவனுக்கு முன் நிற்கத் தகுதி பெற்றவரா? என்பது கேள்விக்குறியே. "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் **எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது"** (1கொரி 10:23) என்பது வேதம் தரும் புத்திமதியல்லவா.

**அலங்காரம், சிங்காரம் தேவன் தருவது; ஆடம்பரம் சத்துருவினுடையது** (ஏசா 61:3, 14:1). நம் வாழ்வில் ஆடம்பரம் என்ன என்பதனை விளங்கிக்கொண்டிருக்கிறோமா? **ஆடம்பரம் அநேக நேரங்களில் தனி நபரின் துதிபாடத்தான் உபயோகப்படுத்தப்பட்டது** என்பது மறுக்க முடியா உண்மை.

**கலாச்சாரம் என்கிற போர்வையிலும் உலகம் நுழைந்துவிடுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.** அது திருமண நேரங்களில் தலைவிரித்து ஆடுகிறது. விருந்துகளில் இயேசு கூறிய முறை அநேக நேரம் மாற்றப்படுகிறது. "பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்து ஜனங்களையாகிலும் ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்கவேண்டாம். அழைத்தால், அவர்களும் உங்களை அழைப்பார்கள் அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும். நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. **அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய் அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள். நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்"** (லூக் 14:12-14). இது இன்றைக்கு நடைமுறைக்கு உதவாதோ?

ஆடை அலங்காரம் என்பதில் நாம் அநேகமாக உலகத்தையே பின்பற்றுகிறோம். பார்ப்பதற்கு நேர்த்தியாய் கண்ணியமாக உடுத்துவதனைத்தானே வேதம் கற்றுத் தருகிறது.

ஆனால், **இன்று சில ஆவிக்குரிய சபைகளுக்கும் சென்றால் ஏதோ fashion parade பார்ப்பது போன்ற உணர்வுதான் உண்டாகிறது.** கூடவே மேடையில் பாடுவோரின் உடை பலரைக் கவிழ்க்கப் போதுமானதாக உள்ளது. "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே, நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக. நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு **உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்"** (லேவி 20:26) என்று பெரிய நோக்கத்தை உள்ளடக்கிய அவரின் செய்கை கெட்டுப்போகாதிருப்பதாக. "கர்த்தருடைய சந்நிதியில் அவர்கள் அங்கிகரிக்கப்படும்படிக்கு **கர்த்தருக்குப் பரிசுத்தம்"** என்ற பட்டம் அவன் நெற்றியின் மேல் இருக்கவேண்டும்" (யாத் 28:38) என்பது மாறாத பிரமாணம்; இதனை மறக்கலாகாது.

**குடும்ப உறவுகளைக் காத்துக்கொள்வதிலும் இன்றைய விசுவாசிகள் சாதாரணமாக உலகத்தினரைப் போலவே காட்சி அளிக்கிறார்கள்.** மனைவியோடு பேசாத கணவர்கள், கணவனைப் புரிந்துகொள்ளாத மனைவிகள், பிள்ளைகளைக் கண்டிக்கவோ வழிகாட்டவோ இயலாத தாய் தகப்பன்மார் என்று தான் பட்டியல் நீளுகிறது. "நானும் என் வீட்டாருமோவென்றால் அடையாளமாகவும் அற்புதமாகவும் இவ்வுலகில் வாழ்கிறோம்" (ஏசா 8:18) என்று சவால் விட முடியாத நிலைக்கு உலகத்தையே பின்பற்றுகின்றனர்.

தீர்மானங்களை எடுக்கவேண்டிய சூழ்நிலைகளில் நாம் அனைவரும் எப்போதும் தள்ளப்படுகிறோம். ஆவிக்குரிய அனுபவமுள்ள நம்முடைய தீர்மானங்ளை எடுக்க உதவும் பின்னணியும், பிரச்சனைகளும், முடிவுகளும் உலகத்தாரின் அணுகுமுறையாகவே இருக்குமானால் "உம் சித்தம் போல் நடத்தும் கர்த்தாவே நீர் நித்தம் என்னை" என்று பாடுவது மாய்மாலமே. "நான் பயப்படுகிற நாளில் கர்த்தரையே நம்புவேன்" (சங் 56:3) என்கிற அறிக்கை உதட்டளவிலேயே. "நாங்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" (2கொரி 5:6) என்பது பித்தலாட்டமே. "எதைச் செய்தாலும் கர்த்தரின் மகிமைக்கென்று செய்யுங்கள்" (1கொரி 10:31)

என்பதுவும் கட்டளை என்பதனை மறக்காமல் இருப்போமாக. விசேஷமாக திருமணங்களைத் தீர்மானிக்கும்போது, நாள் குறிக்கும்போதும், திருமண விழாக்களை நடத்தும்போதும், கொடுக்கல் வாங்கலிலும் நமக்கும் உலகத்தாருக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதே புரிவதில்லை.

பொருள்களை வாங்கும்போதும் நாம் உலகத்தாரோடு போட்டிப்போட்டு அவர்கள் போக்கிலேயே கடந்துசென்று, நம்முடைய **திராணிக்கும் மிஞ்சி வாங்க முயன்று** (வெறும் பகட்டிற்காக) கூடவே கடனிலேயும் சிக்கி, சில வேளைகளில் ஞானமற்றவர்களைப் போலவே வாழ்ந்து வந்தால், தேவ பிள்ளைக்கும் உலகத்தாருக்கும் என்ன வித்தியாசம். "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" (1தீமோ 6:6) என்பது நம்முடைய வாழ்நிலைப் பிரமாணம் ஆகவேண்டியது எத்தனை அவசியம்.

வியாதி, துன்பம், உபத்திரவங்கள் வரும்போது உலகத்தாரைப்போல அங்கே ஓடி இங்கே ஓடி யாரையாகிலும் பற்றிக்கொள்ளவேண்டும் என்று பதறுவோமானால், "தேவ மகிமை விளங்க, கிருபையை பெருகப் பண்ணும் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க சோர்ந்து போகாமல், "எங்கள் புறம்பான மனிதன் அழிந்து உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறானே என்றும், அதி சீக்கிரத்தில் நீங்கும் இந்த லேசான உபத்திரவம் அதிக கன மகிமையைக் கொண்டுவரும் என்ற துதிப்பாடல் தொனிக்கவேண்டிய உதடுகள்" கெடுக்கப்படும் அல்லவா! (2கொரி 4:15-17).

பதிலுக்குப் பதில் செய்ய வாய்ப்பு கிடைக்கும்போது, நாம் உலக சுபாவத்தையே வெளிக்காட்ட எராளமான வாய்ப்புகள் உண்டாகிறது. "பழிவாங்குதல் எனக்குரியது நானே பதிற்செய்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறதே (ரோமர் 12:19). நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு (வச. 21); தீமைக்குத் தீமையையும் உதாசினத்துக்கு உதாசினத்தையும் சரிக்கட்டாமல் அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி

அழைக்கப்பட்டீர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள் (1பேது 3:9) என்பது நம்முடைய அழைப்பை உறுதியாக்கத் தேவன் தரும் காரியம் அல்லவா. மிருக சுபாவத்தையே அநேக நேரங்களில் காட்டிவிடுகிறது நல்லதா?

**குறுக்கு வழியில் காரியங்களைச் செய்ய** அவகாசம் தேடும் உலகத்தாரைப் போலவே நாமும் செயல்பட்டால் பரலோக ராஜ்ய பிரஜை என்று சொல்லத் தைரியம் உண்டாகுமோ?

பொழுதுபோக்கு, களியாட்டம் இவைகளில் மனதைச் செலுத்தி பணத்தையும் பெலத்தையும் விரயம் செய்யும் கூட்டம் மிகுந்தது இந்த உலகம். அதில் வாழ்கிற தேவ மக்களாகிய நாம் எதில் நாட்டம் செலுத்தி நேரத்தை விரயமாக்குகிறோம் என்பது முக்கியமல்லவா!

"நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல் ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்" (எபே 5:15,16) என்ற வார்த்தைகள் தேவனைத் தொழுதுகொள்ளுகிற நமக்கல்லவோ கொடுக்கப்பட்டுள்ளது.

"நீங்கள் **முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும்,** கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்" (எபே 2:2) என்பது நம்முடைய கடந்த கால அனுபவமாக மாத்திரம் இருப்பதாக. இப்பொழுதோ நம்முடைய நடை, உடை, பாவனை, பேச்சு, செயல், யோசனை, விருப்பம், கொண்டாட்டம், ஆராதனை அத்தனையிலும் நாம் உலகத்தாரல்ல என்பது தொனிப்பதாக.

## 29. பொய்யை எதிர்க்க...

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட **விசுவாசத்திற்காக நாம் தைரியமாகப் போராடவேண்டும்** (யூதா 3). "தி டாவின்சி கோடு" என்ற ஆங்கிலப் படத்திற்கு மத்திய அரசு திரையிடும் அனுமதி வழங்கிவிட்டதே என்று அங்கலாய்த்தனர் அநேகர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையினைக் கறைப்படுத்தும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் படத்தைத் தயாரித்தவரை உயிரோடு அல்லது பிணமாகக் கொண்டுவந்தால் ரூ.11 லட்சம் தருகிறேன் என்று வீறுகொண்டு எழுந்தவர்களும் உண்டு.

இயேசுவை இப்போதுதான் இந்திய சமுதாயத்தினர் கொஞ்சம் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளனர். இதுவரை அவரை ஆங்கிலேயர்களின் தெய்வமாகவே பார்த்தவர்கள், இப்போதுதான் தெளிவு பெற்றுவருகிறார்கள். இந்நிலையில் இப்படி அவரின் பரிசுத்த வாழ்வை, கொச்சைப்படுத்தி அவரை அறிய முற்படுபவர்களுக்கு இடறுதலை போடுகிறதே இந்தப் படம், எனவே எப்பாடு பட்டாகிலும் இது தடுக்கப்படவேண்டும் என்பது கூட்டத்தாரின் ஏக்கக்குரல்.

பெருகிவரும் இளம் திருச்சபைகளுக்கு இது ஒரு பெரும் முட்டுக்கட்டை. இளம் விசுவாசிகளும் இளைஞர்களும் பின்வாங்கிவிடுவர். எனவே இதனை திரையிடும் திரையரங்குகளுக்கு முன் "தர்ணா" பண்ணி ஜனத்தை எச்சரிக்கலாம் என்றனர் ஒரு சிலர். இது ஆபத்து கொண்டது என்று அறிவித்து இப்படிப்பட்ட சிந்தையே நரகத்திற்குக் கொண்டுச் சென்றுவிடும் என்று எச்சரிக்கைக் கொடுப்பது என்பது அவர்களின் வாதம்.

காரியங்கள் இப்படியிருக்கும்போது, முஸ்லீம் நண்பர்கள் பலர், முகம்மது நபியை கேலி செய்து கார்ட்டூன் வரைந்த வேளையில், பல வெடிகுண்டுகளை ஆங்காங்கே வெடித்து அப்பாவி மக்களின் உயிரைப் பறித்ததனை முன்நிறுத்தி, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாம் கோழைகள் அல்ல என்று உலகிற்கு நிரூபிக்கவேண்டும் என்று கங்கணம் கட்ட ஆரம்பித்தனர் சில மூர்க்க வெறிகொண்ட

இளைஞர்கள். வேதத்தின் வெளிச்சத்தில் இதனைக் கண்டால், நாம் செயல்படவேண்டிய முறையினைத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். இது அந்திக்கிறிஸ்து வேகமாக கிரியை செய்யும் காலம் என்பதனை நாம் மறக்கக்கூடாது. 1யோவா 2:18 சொல்கிறது, பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள். எனவே, பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய சாத்தான் இயேசுவின் பரிசுத்தத்தைக் கேலி செய்யும் வண்ணம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்பதனை நாம் அறியவேண்டும். அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது (2தெச 2:7). அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி... கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியினால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார் (2தெச2:9-12). எனவே, இதனுடைய பின்னணியினைக் கண்டு காலத்தைப் புரிந்துகொண்டவர்களாக செயல்பட தேவன் நம்மை அழைக்கிறார்.

இரண்டாவதாக, இதற்குப் பதிலடி கொடுக்க நாம் என்ன செய்யவேண்டும்? **இயேசு பரிசுத்தர் என்பதனை நிரூபிக்க நாம் இன்னமும் பரிசுத்தமாக வாழவேண்டும்**. ஏனெனில், நான் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் என்று அழைத்தவர் பரிசுத்தமாயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கையெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் (1பேது 1:15,16). **நம்முடைய** (விசுவாசிகள் அனைவரின்) **பரிசுத்த வாழ்க்கைதான் நம்முடைய நாதர் இயேசுவை இந்த உலகிற்குப் பரிசுத்தராகக் காட்ட முடியும்.** ஆனால், இன்றைக்கோ அநேக தேவ ஊழியர்களும், தலைவர்களும் பரிசுத்தக் குலைச்சலாக நடப்பதனைக் காணுங்கால் உள்ளம் வேதனை அடைகிறது. மேலும், சில போதகர்கள் தங்கள் பரிசுத்தமற்ற வாழ்க்கையை மக்களுக்குக்

காட்டுவது மாத்திரம் அல்லாமல், அதனை நேர்மை எனக் காட்ட சில வேத வசனங்களையும் காண்பிக்க ஆரம்பித்துள்ளனர். அநேகரை இடறிப்போகப்பண்ணும் இவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாயிருக்கும் (கலா 5:12). **எதிர்மறையை எதிர்மறையால் வெல்ல முடியாது** என்பதனை மறக்காமல், **பரிசுத்த வாழ்வுக்கு ஒப்புக்கொடுங்கள் மற்றவர்களையும், பரிசுத்தமாக வாழ சவால் விடுங்கள்.** பரிசுத்தத்தைக் குறித்த பிரசங்கங்களும் எச்சரிப்புகளும், கடிந்துகொள்ளுதலும் சபை பீடத்தை நிரப்பட்டும். மேற்பூச்சான பிரசங்கங்கள் அகற்றப்படட்டும். கட்டுக்கதைகள் மலிந்துபோய் வெறும் நேரப்போக்கிற்காக செய்யப்படும் பிரசங்கங்களையும் பிரசங்கிகளையும் ஒதுக்குவோம். பரிசுத்தமாகிறவன் இன்னமும் பரிசுத்தமாகட்டும் (வெளி 22:11).

மூன்றாவதாக, இப்படிப்பட்ட புரளிகளை உண்டாக்கும் கற்பனைக் கதைகளை சபை ஆரம்பத்திலேயே சந்தித்திருக்கிறது என்பதனை மறக்கவேண்டாம். **ஆதித்திருச்சபை அதனை எப்படி கையாண்டது என்பதனை கவனிக்க தவறவேண்டாம்**. இயேசுவின் வாழ்வின் முக்கிய அம்சம் அவரின் உயிர்த்தெழுதல். ஏனெனில், தேவனுடைய சுதனென்றும் (குமாரனென்று) மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரன் அவர் (ரோமர் 1:5). கூடவே கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள் (1கொரி 15:17) என்பதனை நன்கு அறிந்த சத்துரு, அவர் உயிர்த்தெழுந்தபோது லஞ்சம் கொடுத்து காரியத்தை திசை திருப்பப்பார்த்தான்.

மூப்பரோடே கூடிவந்து ஆலோசனைப் பண்ணி, சேவகர்க்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து நாங்கள் நித்திரைப் பண்ணுகையில் அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள். இது தேசாதிபதிக்குக் கேள்வியானால் நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள் (மத் 28:12-15). ஆனால், இயேசுவோ இந்தப் பொய்யைச் சந்திக்க வேதபாரகர்களுக்கும்,

பிரதான ஆசாரியர்க்கும், பிலாத்துவுக்கும் உயிர்த்தெழுந்து காண்பித்து அதனைப் பொய் என்று நிரூபிக்க முயலாமல், **தம்முடைய சீஷர்களுக்கே தம்மை வெளிப்படுத்தி அவர்கள் மூலமே அல்லது அவர்களையே சாட்சியாக ஏற்படுத்தி அதனை முறியடித்தார்.** எனவேதான் ஆதித்திருச்சபை அவர் உயிரோடெழுந்ததற்கு நாங்கள் சாட்சிகள் என்று முழக்கமிட்டனர் (அப் 2:32; 3:15; 4:33; 5:30; 7:56; 13:34; 13:37; 17:18); அதுவே அவர்களின் முக்கியச் செய்தியாகவும் இருந்தது.

இன்றைக்கும் இதனைத்தான் நாம் செய்யவேண்டும். கட்டுக்கதைகளுக்குச் செவிகொடுத்து சாய்ந்துபோகும் காலம் (Fiction) என்று பவுல் நம்மை எச்சரிக்கவில்லையா? (2தீமோ 4:4). எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக உபதேசத்திலும் விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக என்று (தீத்து 2:8) கட்டளையிடவில்லையா? சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல், நீ கண்டிப்பாய்க் கடிந்துகொள் (தீத்து 1:13) என்று சபையைத்தானே சீர்திருத்தச் செய்கிறார். எனவே, **இன்றைய முதல் தேவை வாழ்ந்து காட்டும் பிரசங்கிகளும், வாழ்வு காட்ட ஆரோக்கியமான பிரசங்கிகளுமே அல்லாமல் திரைப்படத்திற்கு எதிராக குரல் எழுப்புவது அல்ல.** வைராக்கியம் கொள்ளுவோம், பொய்யர்களின் பொய்யை அம்பலமாக்க இன்னமும் சபையிலே பரிசுத்த முழக்கங்கள் உண்டாகட்டும். சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்கிற தொனி சபையிலே, வாழ்விலே, போதகத்திலே தொனிக்கட்டும்; இதுவே அதற்குரிய நேரம்.

# 30. போராட வா...

தேவன் மகிமையாய் வெற்றி சிறக்கிறவர். தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆசை அவர்களிடத்தில் திருப்தியாகும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சங்கரிக்கும் என **கொக்கரிக்கும் சத்துருவை** அவர் **தண்ணீர்களில் ஈயம் போல அமிழ்ந்துபோகச் செய்கிற அவருக்கு ஒப்பானவர் யார்?** (யாத் 15:1,9-11). அவர் நம்மையும் போராடவும், வெற்றிக்கொள்ளவும் அழைக்கிறார் என்பது எத்தனை நிச்சயம். "வேதப் பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்; **வேதப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களோ அவர்களோடே போராடுகிறார்கள்"** என்பது (நீதி 28:4) மாறாத பிரமாணம் அல்லவா!

இன்றைக்கு **வேதத்தினை கைக்கொள்ள விருப்பம் இல்லாதபடியினால்தான், துன்மார்க்கரோடும் துன்மார்க்கத்துக்கு விரோதமாகவும் போரிடும் வல்லமையை நாம் இழக்க நேரிடுகிறது.** கிறிஸ்தவ ஜீவியம் ஒரு போராட்ட ஜீவியம் என்பதினை அறிந்தவரும், அறிவிப்பவரும் அதனை வாழ்வின் நடைமுறையாக்குவோரும் மிகச் சிலரே.

நம்முடைய போராட்டத்தினை நாம் முதலாவது புரிந்துகொள்ளுதல் அவசியம்; போராடவேண்டிய அவசியம் அப்பொழுதுதான் நமக்குத் தெரியும்.

ஆத்துமாக்களை வேட்டையாடும்படிக்குச் சகல கைகளுக்கும் தழுவணைகளை உண்டுபண்ணுகிறவர்கள் ஏராளம் (எசேக் 13:18). **ஜனத்தினைப் போராடச் செய்யவேண்டியவர்கள் அவர்கள் போராடக்கூடாதபடிக்கு சொகுசு வாழ்விற்கு வழிநடத்தி தூக்க மயக்கத்தினை உண்டாக்கச் செய்பவர்தான் எத்தனை பேர்!**

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்; ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும்,

இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபே 6:11,12). போரில் வெற்றி நமதே, ஆயினும் சில காயங்கள் பட ஏதுவுண்டு. அதனை குணமாக்கும் கீலேயாத்தின் பிசின் தைலமாம் இயேசுவும் கூட உண்டு.

தந்திரமுள்ள ஒரு சேனையை நாம் எதிர்த்து நிற்க அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதனை யார் மறுக்கக்கூடும். **சத்துரு மனக்கண்களைக் குருடாக்கி** மற்றவர்களின் முகத்தில் திரை ஒன்றினைப் போட்டு **செயலற்றவர்களாக மாற்றிவிட்ட** கொடுமை நாம் அறிந்ததே (2கொரி 4:4).

பிசாசானவனுடைய இச்சைகளின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டிருக்கிற கூட்டமும் விசுவாசிகளின் மத்தியிலும் உண்டு. முதல் கூட்டம் சுவிசேஷத்தினைப் புரிந்துகொள்ளக் கூடாமற் தடவித்திரிகிறது. இரண்டாம் கூட்டம் பிசாசிற்குத் தன்னைக் கையளித்துள்ளது (2தீமோ 2:26). முதல் கூட்டத்தினருக்கு தேவை கிறிஸ்துவின் முகத்திலுள்ள சுவிசேஷ ஒளி, இரண்டாம் கூட்டத்தினருக்குத் தேவை சம்பூரண அர்ப்பணிப்பு. இந்த இரண்டு காரியத்தினையும் செய்ய சத்துரு விரும்பவில்லை. எனவே, அநேகரைத் திசை மாற்றிவிடுகிறான்.

அதனைச் செய்ய சத்துரு தன்னுடைய மக்களை உபயோகிக்கிறான். பர்யேசு என்ற மாயவித்தைக்காரன் செர்கியுபவுலை அவன் விவேகமுள்ளவனாயிருந்த போதிலும், அதிபதியாய் இருந்த போதிலும், விசுவாச வார்த்தையிலிருந்து திசை திருப்ப முயற்சித்தான் (அப் 13:7-9). பவுலின் போராட்ட ஜெபமும், கட்டளையுமே கர்த்தரை விசுவாசிக்க, தேவனுக்கு ஒப்புக்கொடுக்க அவனை விடுதலைச் செய்தது (அப் 13:12).

இதனைச் செய்யும்போது, ஒப்புக்கொடுத்து ஊழியத்தில் உடன் நடந்தவர்களும் பிரிய நேரிடலாம் மாற்குவைப் போல (அப் 13:13). அதன் நிமித்தம் பின்னர் பர்னபாவும், பவுலும் கூட ஒருவரை விட்டு ஒருவர் பிரிய நேரிடுகிறது (அப் 13:27-41). அந்த போராட்டத்தின் தாக்கம் எத்தனை தூரம் போய்விட்டது பார்த்தீர்களா?

**மற்றொரு போராட்டம் ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கானது** (யூதா 3). இதன் அவசியம் காவற்காரன் தூங்கிப்போய், பக்க வழியாய் நுழைந்த சிலரின் வாக்கு சாதுரியம், வாழ்க்கை முறை, மாம்சத்தின் இச்சையின்படி நடக்க ஒப்புக்கொடுத்தவர்களால் உண்டானது, விசுவாச மக்களைக் காவல் செய்ய நியமிக்கப்பட்டவர்களின் கவலையின்மை, உறக்கம், இதனை எளிதாக செய்து முடித்துவிடுகிறது. இந்த குறையினை மாற்ற, தட்டி எழுப்பவேண்டியவர்களை எழுப்பி ஆதி நிலைக்குத் திரும்பச் செய்யவேண்டியக் காரியம் போராட்டத்திற்கே ஒப்பிடப்பட்டுள்ளதனைக் கவனியுங்கள்.

**மாம்சத்தால் கறைபட்டிருக்கிற வஸ்திரங்களை வெறுத்துத் தள்ள திராணியில்லாதவர்களால் இக்காரியம் நடைபெறாது** (வச 23). ஏனெனில், இந்த பக்க வழியாய் தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாக புரட்டுகிறவர்களும் (வச4), சொப்பனக்காரர்களும், மாம்சத்தை அசுசிப்படுத்துகிறவர்களும். இறுமாப்பானவைகளைப் பேசி, தற்பொழிவை நாடி, முகஸ்துதி செய்பவர்கள், கூடவே தங்கள் இச்சைகளினால் இயக்குவிக்கப்படுபவர்கள் (வச 8.16). எனவே மாய்மாலத்திற்கும், சுகபோகத்திற்கும் அங்கு குறைவிராது. அவபக்தி அவர்களுக்கு கைவந்த கலை, மற்றவர்களையும் தேவனற்ற ஆராதனைக்குக் எளிதாய் மாம்சத்தின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு வழி நடத்துபவர்கள்.

இவர்கள் ஆவிக்குரிய விருந்துகளில் பங்கேற்று, உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, கேட்டுக்கு அடிமையான இவர்கள் மற்றவர்களுக்கு சுயாதீனத்தை வாக்குப்பண்ணி ஏமாற்றுகிறபடியால், இந்த போராட்டத்திற்கு அதிக சக்தி செலவழிக்க வேண்டியிருக்கலாம் (2பேது 2:13-19).

சிலவற்றை வேதம் துஷ்டமிருகங்களோடு போராடுவதோடு ஒப்பிடுகிறது (1கொரி 15:32). இது ஒரு பெரிய ஆவிக்குரிய போராட்டம். பிற ஆவிகள் இவைகள், மாம்சத்திலிருந்து பிறப்பவைகள். இதுவும் பல நிலைகளில் நம்மைத் தாக்கலாம். இதன் தாக்கம் வேதனை தருவதாகவும் இருக்கலாம். **ஆனால், போராடுவதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.**

இதனால்தான் பவுல் தன் ஜெப வாழ்வினை போராடும் வாழ்க்கையோடு ஒப்பிட்டு நம்மையும் **போராட்ட ஜெபத்திற்கு** அழைக்கிறார் (ரோமர் 15:32).

கூடவே கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படும்படிக்கும், துர்க்குணராகிய **பொல்லாத மனுஷர் கையிலிருந்து தான் விடுவிக்கப்படவேண்டிய போராட்டத்தினையும்** அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

தேவ வசனத்தை புறஜாதியினருக்குக் கூறி அறிவிக்க புறப்படும்போது, அது ஒரு போராட்ட வாழ்க்கையே.

பெரிதும் அனுகூலமுமான கதவு திறந்திருந்தாலும், விரோதம் செய்கிறவர்களின் எண்ணிக்கையும் அதிகம் உண்டு (1கொரி 16:9). இந்த போராட்டத்தில் உதவி செய்ய உடன் நிற்பவர்கள் தேவை (கொலோ 4:3,4). சுவிசேஷத்திற்காகத் தீங்கு அனுபவிக்க அழைக்கப்பட்டவர்கள் நாம் (2தீமோ 1:8).

விசுவாசத்திற்கான நல்ல போராட்டத்தில் (1தீமோ 6:12), நாம் அநேகருடைய முகமூடிகளைக் கிழிக்கவேண்டிய அவசியம் உண்டு. மாயத் தோற்றத்தினை அடையாளம் காட்டிக்கொடுக்கவேண்டிய அவசியம் உண்டு.

போர்க்களத்தில் பயமின்றி, சுத்தமனசாட்சியினைக் காத்துக்கொண்டு, மரித்து உயிர்த்த அவரை நினைத்துக்கொண்டு, வாடாத கிரீடம் பெற **மகிழ்ச்சியாய் போரிடவே நாம் அழைக்கப்படுகிறோம்.**

பாவத்துக்கு விரோதமாய் போராடும் போராட்டத்தில் ஒருவேளை இரத்தம் சிந்த நேரிடலாம் (எபி 12:4); சேதங்களும், தியாகமும் ஏன் சிறைச்சாலையும் நமக்குத் தரப்படலாம். இரத்த சாட்சி கூட்டத்திலும் சிலர் பங்கெடுக்க நேரிடலாம். ஆனாலும், **அது நம்மை அசைக்காதபடி அவரின் அன்பு நம்மை நிரப்பட்டுமே** (ரோமர் 8:36).

மிஷனரி வாழ்வில் இது சாதாரணம். ஆனால், இது அவர்களுக்கு மாத்திரம் தரப்பட்டதல்ல. அனைத்து விசுவாச வீரர்களுக்கும்

உரியது. கரங்களைப் போருக்கும், விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கும் கர்த்தர் (சங் 144:1), இந்தக் கடைசி நாட்களில் நம்முடைய மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடிக்கச் செய்து, பெலவீனர்களை பெலவான்களாக மாற்றிவிடுவாராக. (யோவேல் 3:10)

யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள். யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறி வரக்கடவீர்கள் என்ற கர்த்தரின் கர்ஜனையை கேட்போர் யார்? (யோவேல் 3:9,16).**இது இரத்தம் சிந்த அல்ல, இரத்தம் சிந்தியவருக்காக தியாக காணிக்கை; இது மனிதர்களை அழிக்க அல்ல இரட்சிக்க ஏற்பட்ட தர்ம யுத்தம்; செயல்பட்டால் கிரீடம்.** (1கொரி 9:25)

# 31. பிரபஞ்சத்தின் பிள்ளைகள்

சில மனிதர்களின் பெருமையும், ஆணவமும், அதிகாரப் பசியும் ஜனங்களின் வாழ்க்கையினைச் சீர் குலைத்து வருகின்றன. வாய் கிழிய வக்காலத்து வாங்கும் அரசியல் தலைவர்கள், தங்களுடைய சொத்துக்களைக் குறித்து அரசுக்கு சில காரியங்களை வெளிப்படுத்தும்போது (மறைக்கப்பட்டவைகள் ஏராளம்), **பல கோடி பணத்திற்குத் தாங்கள் சொந்தம் என்று கூறினாலும்,** மனித நேயம் பேசும் இவர்கள் அதற்கு எத்தனை கோடி கொடுத்தார்கள் என்றால், அது கேள்விக்குறியே! **இவர்கள் வடிக்கும் கண்ணீர் அனைத்தும் முதலைக் கண்ணீரே.**

தேர்தல் நேரத்தில் நாம் கேட்கும் அனைத்துக் குற்றச்சாட்டுகளும் ஒருவரோடு ஒருவர் குலாவிக்கொண்டிருந்தபோது தெரியவில்லையே என்று கேட்கச் செய்கிறது. மேலும், **ஒருவர் மேல் ஒருவர் சாக்கடையை வீசி பேசும் காரியங்கள் நம்மை அருவருக்கவே செய்கிறது.**

இப்படி **அரசியல் கோமாளித்தனங்களும் கூத்துக்களும், கேலியும் பரியாசமும் தனி நபரைக் குறிவைத்து** (தங்களுக்கென்று ஒரு தெளிவான கொள்கையில்லாததாலும், மக்களின் நலனின் மேல் நாட்டம் இல்லாததாலும்) **தாக்குதல் நடத்தியும் வருவதைக் கவனிக்க நேரும் நேரங்களில், இடையிடையே சில கற்றுக்கொள்ள உதவும் காரியங்களும் நடைபெறுகிறது.**

இயேசு கூறினது போல, "இவ்விதமாய் **ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்"** (லூக்கா 16:8). சில சம்பவங்கள் கிறிஸ்துவை அறிந்த அடியவர்களுக்கும் ஊழியர்களுக்கும் சவாலாக அமைந்துள்ளது.

தன் மீது பத்திரிக்கையாளர் ஒருவர் **"ஷூ"** (Shoe) வைக் கழட்டி எறிந்தபோது, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவரை மெதுவாக நடத்துங்கள். அவர்மேல் வழக்குப் போட்டு விடாதீர்கள் **(Treat him gently, gently, Do not file an F.I.R on him)** என்று

கேட்டுக்கொண்ட காட்சி நம்மை மெய்சிலிர்க்கச் செய்தது. தனக்கு அதிகாரம் இருப்பதனை அவர் காண்பிக்கவில்லை; **மாறாக சகிப்புத் தன்மையை வெளிப்படுத்துகிறார். இன்றைக்கு கிறிஸ்தவ அதிகார பீடத்தில் இருக்கும் அனைவரும் கற்று, காண்பிக்கத் தவறியதனை கிறிஸ்துவை சொந்த இரட்சகராக அறியாதவர் காண்பிக்கிறார்.** அவமானத்தைச் சகித்த கிறிஸ்துவின் அச்சடையாளங்களைக் காண்பிக்கத் தவறிய பிஷப்புக்கள், பெரும் தீர்க்கதரிசிகள், போதகர்களைக் காட்டிலும் இவர் எத்தனை சிறந்தவர் என்று யோசிக்க வைக்கிறது. **விட்டுக்கொடுத்தலை அறியாத அதிகார துர்ப்பிரயோகம் செய்யும் ஆவிக்குரிய தலைவர்களுக்கு முகத்தில் செருப்பால் அறைந்ததுபோல இருந்தது சிதம்பரத்தின் செயல்.** முக்கியமான கட்சியின் தலைவர்களுள் ஒருவர் குற்றமற்றவர் என்ற தீர்ப்பைப் பெற்ற பின்னரும், சிலருடைய போராட்டத்தினால் தங்கள் கட்சிக்கு அவப் பெயர் வந்துவிடக்கூடாது என்ற காரணத்தினால் அவர் தேர்தலில் போட்டியிட கட்சி அவருக்கு அனுமதி மறுத்துவிட்டபோது, நான் இந்தக் கட்சியின் ஊழியன்; தலைமைக்கு பணிந்து போகிறவன் என்று அறிவித்து **அடக்கத்தையும், தலைமைக்கு அடங்கிப்போவதையும்** காண்பித்தபோது, கிறிஸ்தவ உலகில் இன்றைக்கு இத்தனைப் பிரிவுகளும், சபைகளும், சங்கங்களும் உண்டான காரணங்களை ஆராய்ந்து பார்த்தால், **உலகில் அரசியல்வாதிகளை விட நாம் சீர்கெட்டுப் போயிருக்கிறோம் என்பது தெளிவாகும்.** கட்சியின் கோட்பாடுகளுக்குத் தன்னை விட்டுக்கொடுத்து, தன் கட்சியின் வெற்றிக்கு என்னுடைய நிலை பாதகம் விளைவித்துவிடக்கூடாது என்பதில் ஒரு அரசியல் தலைவன் கவனமாயிருப்பானாகில் **நாம் அதனைக் காட்டிலும் எத்தனை மடங்கு கவனமாயிருக்கவேண்டும்.**

ஹேமந்த் என்ற புலனாய்வுத் துறை உயர் அதிகாரி மும்பை தாக்குதலில் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டபோது BJP தலைவர்களில் ஒருவரான நரேந்திரமோடி ஒரு கோடி ரூபாய்க்கு செக் எடுத்துக்கொண்டு அவருடைய மனைவிக்குத் தர வந்தபோது, அவரைப் பார்க்கக் கூட விரும்பாமல், **"என் கணவர் தன் இலட்சியத்திற்காகவே மரித்திருக்கிறார்"** அதுவே எனக்குப் பெருமை

என்று அவருடைய மனைவி காமினி சொன்னது, **பணத்திற்காக நான் எதையும் செய்ய ஆயத்தம் என்று வலம் வரும் பிரபல ஆவிக்குரிய தலைமைகளுக்கு கொட்டு விழுந்தது போல இருந்தது.** பணத்திற்குத் தங்களை விற்றுப் போட்டு தந்திரங்களைக் கையாண்டு அதுவே தங்கள் இலட்சியம் என்று வாழ்கின்ற நம்முடையவர்கள் அநேகர் **"கிறிஸ்தவத்தின் அவமானச் சின்னங்கள்"** அல்லவா?

"பிரியங்கா" வை (சோனியாவின் மகள்) கேள்வி கேட்டார்கள்: உங்கள் தாயாரும், தம்பியும், நீங்களும் அரசியலுக்கு வந்த காரணம் என்ன? என்று. என் தாயோ, நாங்களோ விரும்பாமல்தான் இருந்தோம். என் தாயின் குணநலன்கள் (அதிகம் பேசத் தெரியாது போன்றவை), எங்களுக்கு ஏற்பட்டிருந்த சோர்வு, திகில், சுற்றியிருந்த பயங்கரம் இவைகளின் மத்தியில் **இந்த தேசத்திற்கு எங்களுடைய கடமை உண்டு (Duty) என்ற உணர்வு எங்களை உந்தித் தள்ளி அரசியலுக்குக் கொண்டுவந்துவிட்டது** என்று சொன்னபோது இன்றைய கிறிஸ்தவர்களாகிய நமக்கு பொறுப்பும், கடமையும் உண்டல்லவா! "சுவிசேஷத்தை நான் பிரசங்கிப்பது என்மேல் விழுந்த கடமை; அப்படி செய்யாவிட்டால் அது எனக்கு ஐயோ" (1கொரி 9:16) என்ற பவுலின் வார்த்தைகள் நம்மில் தொனிக்க வேண்டுமே. அரசியல்வாதிகளைவிட நாம் கேடு கெட்டவர்களா?

மேலே குறிப்பிட்ட நான்கு சம்பவங்கள் (இன்னும் அநேகம் உண்டு) **நம்மை பொறுமையைக் காண்பிக்கவும், மன்னிக்கவும், கீழ்ப்படியவும், இலட்சிய வாழ்வுக்கு ஒப்புக்கொடுக்கவும், பொறுப்பையும் கடமையையும் உணரவைக்குமானால்** (ஒப்பிட்டுப் பார்ப்பதின் மூலம்) எத்தனை நலமாயிருக்கும்.

**தேவ ஆவியானவரைப் பெற்றிருக்கிற நாம் வாழும் வாழ்க்கை, செயல்பாடுகள், மனோபாவனை அனைத்தும் நம்மை இந்த உலகத்திற்கு மேலானவர்கள் என்று அடையாளம் காட்ட வாழ்ந்து காட்டுவோம், வாழச் சொல்லித் தருவோம்,** தரணியில் நம் இரட்சகரின் புகழ் பாட தேவன் உதவுவாராக.

சேற்றின் மத்தியிலும் செந்தாமரைகள் தோன்றுகின்றன, தன்னயத்தின் மத்தியிலும், சாக்கடை அரசியலிலும் கூட சில முன்னோடிகள் உள்ளனர். இது நம்மைச் சவால் பெறச் செய்யட்டும். இரட்சகரின் இலட்சியக் கூட்டமாக உயர, வாழ்ந்து சாதிக்க தேவ ஆவியானவரின் அசைவாடுதல் சபைதனை, ஸ்தாபனங்களை, தனி மனிதர்களை ஆட்கொள்வதாக.

**எந்த வெயிலையும் பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்யும் அரசியல் தலைவர்கள் இந்த அழிந்துபோகிற, நிலையற்ற அரசினை ஸ்தாபிக்க இப்படிச் செய்தால், அழியாத, நிலைத்திருக்கிற ராஜ்யத்தினை ஸ்தாபிக்கப் பாடுபடுகிற நாம் எப்படி செயல்படவேண்டும்** என்பதனையும் யோசித்துப் பார்ப்போம். வீண் தம்பட்டங்களை தள்ளிவிட்டு ஒருவனும் கிரியைச் செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது என்பதனை உணர்ந்தவர்களாய் செயல்பட தேவன் நம்மை அழைக்கிறார் (யோவான் 9:4).

# 32. சபையின் நடுவிலே பாபிலோனின் ஆவி

இன்றைய நாட்களில் சபையின் நடுவிலே பாபிலோனிய ஆவி, யேசபேலின் ஆவி, அந்திக்கிறிஸ்துவின் ஆவி அதிகமாகக் கிரியை செய்ய ஆரம்பித்திருக்கிறது. உலகமெங்கிலும் இதனுடைய அச்சடையாளங்கள் தெளிவாகத் தெரிகிறது. மேலே கூறப்பட்ட இந்த வஞ்சக ஆவிகள் தேவ சபையை தேவனிடத்திலிருந்து திருப்புவது மாத்திரமல்லாமல், தேவ நோக்கத்தைச் செய்யவிடாமல் தடுத்துவிட்டு, தேவ கோபாக்கினைக்குக் காரணமாகிவிட தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன. **சத்துருவை அடையாளம் கண்டுகொள்வது மாத்திரமல்லாமல், அதனை மேற்கொள்ளவும், அவன் இடம்பெறாதபடிக்குச் செயலாற்றவும் தேவன் நம்மை உபயோகிப்பாராக.**

சத்துரு நமக்குள் எப்படி கிரியைச் செய்ய வாஞ்சிக்கிறான்? என்பதனைப் புரிந்துகொள்ள ஏதுவாக 1 இராஜா 20 வது அதிகாரத்தை உங்கள் முன் வைக்க வாஞ்சிக்கிறேன். **சத்துரு வெள்ளம்போல் வரும்போது ஆவியானவர் கொடி ஏற்றுவார்** என்பதனை மறக்காமல் தைரியமாக முன்னேற (ஏசாயா 59:19) தேவ ஆவி நம்மை நிரப்புவாராக.

இஸ்ரவேலின் மேல் ஆகாப் ராஜாவின் காலத்தில் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் 32 ராஜாக்களைக் கூட்டிக்கொண்டு யுத்தம் செய்ய வருகிறான். சத்துருவின் தந்திரத்திற்குப் பெயர்போன அவனும், அவனுடைய சகாக்களும் சத்துரு நம்மை எப்படி வஞ்சிப்பான் என்பதனை வெளிக்காட்டும் பாத்திரங்களாக நமக்கு முன் நிறுத்தப்படுகின்றனர். ஆகாபினிடத்தில் அவன் சொல்லிவிடும் வார்த்தைகளைக் கவனியுங்கள், "உன்னுடைய வெள்ளியும் உன்னுடைய பொன்னும் என்னுடையது, உன்னுடைய ஸ்திரீகளும் உன்னுடைய குமாரருக்குள் சமர்த்தராய் இருக்கிறவர்களும் என்னுடையவர்கள்" (வச 3). **சத்துரு எப்பொழுதும் நம்முடைய நலமானவைகளை, நம்முடைய பிள்ளைகளில் தேர்ந்தவர்களை தனக்குச் சொந்தம் பாராட்டிக்கொள்ளத் தயங்குவதில்லை.** இயேசுவிடத்தில் வந்தபோதும் இவைகளெல்லாம் என்னுடையது

என்றுதானே அவன் கூறினான் (லூக்கா 4:6). இன்றைக்கும் அதையே செய்கிறான். ஆனால் அநேக நேரங்களில் நாமும் அவனுடைய சொல்லை அப்படியே ஏற்றுக்கொண்டவர்களாக, ஆகாபைப் போல, “என் ஆண்டவனே உம்முடைய வார்த்தைகளின்படியே நானும் எனக்குண்டான யாவும் உம்முடையவைகள்தான்” (வச4) என்று ஒத்துக்கொள்ளும்போது, அவன் அதையே சந்தர்ப்பம் ஆக்கிக்கொண்டு நம்மிடத்தில் தன்னுடைய சேனைகளின் பகுதியை அனுப்பத் துணிகிறான். **பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்** (எபே 4:27) என்பதனை நாம் மறக்குங்கால் இவைகள் தாராளமாய் சபைகளிலும் வீடுகளிலும் புகுந்து “சோதித்து உன் கண்ணுக்குப் பிரியமானவைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள்.” (வச 6).

நம்முடைய வாழ்விலும் பிசாசின் அறிக்கைகளை நாம் எற்றுக்கொள்ளும்போது, அதையே நம் வாயின் சொல்லாக மாற்றும் போது, பிசாசுக்குக் கதவுகளைத் திறந்து விடுகிறவர்களாக மாறுகிறோம். **பயத்தின் மிகுதியால் ஒத்துப்போகுதல் வரும்போது, பொல்லாக ஆவிகளின் செய்கைகளுக்கு இடம் உண்டாக்கப் போதுமான வாய்ப்பு உண்டாகிறது.** அவனுடைய சில வார்த்தைகளை நமதாக்கிக் கொள்ளும்போது, அவன் பூரண சுதந்திரமாய் நமக்குள்ளே உலாவர ஆரம்பிக்கிறான். ஆகாப் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள். “நான் கொடுக்கமாட்டேன் என்று மறுக்கவில்லையே” (வச 7), “நீர் முதல் விசை உமது அடியானுக்குச் சொல்லி அனுப்பின யாவும் செய்வேன். இந்தக் காரியத்தை நான் செய்யக்கூடாது” (வச 9) என்றான். சபைகளில் வீடுகளில் பாதி நான் பிசாசுக்கு இடம் கொடுப்பேன் என்கிறவர்களுக்குப் பிசாசினுடைய பூரணத் தாக்குதல் உண்டாவதை நாம் மறக்க முடியாது.

ஆனாலும், தேவன் பாதுகாப்பிற்கு இடைபடுகிறார், தீர்க்கதரிசியை அனுப்புகிறார். தான் கர்த்தர் என்பதனை விளங்கப்பண்ண வெற்றி உனக்குத் தருவேன் என்று முழக்கமிடுகிறார் (வச 13), மறுபடியும் சத்துரு உன்னைத் தாக்க வாய்ப்பு உண்டு என்பதனை விளங்கப் பண்ணுகிறார் (வச.22), மீண்டும் மீண்டும் வெற்றியைத் தருவேன் என்பதை நிரூபிக்கிறார் (வச. 28).

கர்த்தருடைய செய்கைகளைப் பாருங்கள். ஒரே நாளில் சீரியரில் ஒரு லட்சம் காலாட்களை மடங்கடித்தனர் இஸ்ரவேலர் (வச. 29). மீதியாய் இருந்த 27 லட்சம் பேர் மேல் அலங்கம் இடிந்து மாண்டார்கள் (வச 30). கர்த்தர் நின்று யுத்தம் செய்யும்போது கலங்கி நிற்க காரணங்கள் இல்லையே. சத்துரு புறமுதுகு காட்டி ஓடிட அவனுடைய வார்த்தையை நம்பி அவர் அனுப்பின தூதுவனுக்குக் கீழப்படிந்து, **அவரின் பெலத்தில் சத்துருவை எதிர்கொண்டால் எப்பொழுதும் வெற்றியே.** அவரின் வார்த்தை நம் வார்த்தை ஆகட்டும். அவருடைய யுத்தமுறை நமது செயலாகட்டும். **அவரின் சத்தம் நமது சித்தமாகட்டும்.** அவரின் செயல் நம்மை பிரமிக்கச் செய்யும்.

மீண்டும் சத்துரு வருகிறான்; வித்தியாசமான ரூபத்தில். சுயமான ரூபத்தைத் தள்ளி யுத்தம் பண்ணுகிறவனாக அல்லாமல் தலைவிரி கோலமாய் தாழ்த்திக்கொண்டவர்களைப் போல நடிக்கிற சிலரை நம்மிடத்தில் அனுப்புகிறான் (வச. 31,32). யுத்தம் பண்ண வந்தபோது சத்துருவினை அடையாளம் கண்டுகொண்ட ஆகாப் இப்போது அவனை சகோதரன் என்கிறான். **மீண்டும் தன் வாயின் வார்த்தையினாலே பிடிபடுகிறான்.** அவனோடு உடன்படிக்கையும் செய்துகொள்கிறான் (வச 32-34). இதினிமித்தம் சத்துரு சிலவற்றைத் திரும்பத் தருவதற்கும், சத்துருவின் எல்லைக்குள் நாம் சென்று உலாவிவர வீதிகளை உண்டாக்கவும் வழி உண்டாக்குகிறான். நடந்தது என்ன? 1,27,000 சத்துருவின் சேனையை அழித்திருந்தபோது வெற்றிதனைக் கொண்டாட முடியாதவனாய் சலிப்பும் விசனமுமாய் தன் வீட்டிற்குத் திரும்புகிறான். இன்று அநேக ஆண்டவருடைய பிள்ளைகளின் நிலமையும் சபையின் நிலமையும் இதுதான்.

தாவீதைப் பாருங்கள், என் சத்துருக்ளைப் பின்தொடர்ந்து பிடிப்பேன் நிர்மூலமாக்கும் வரைக்கும் திரும்பேன் அவர்கள் எழுந்திருக்க மாட்டாதபடிக்கு என் பாதங்களின் கீழ் விழத்தக்கதாக அவர்களை வெட்டினேன் என்று முழக்கமிடுவதோடு, யுத்தத்திற்கு நீர் என்னை பெலத்தால் இடைகட்டினீர், என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கடிக்கப்பண்ணினீர் என்று ஆண்டவரின் பெலத்ததைப் பாடி முழக்கமிடுகிறான் (சங் 18:37-39). கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர்

துதிக்கப்படுவாராக (சங் 18:46). **சத்துருவை முழுவதும் மேற்கொள்ளவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.** அவன் யுத்தம் பண்ணுகிறவனாய் வந்தாலும், வஞ்சகனாய் வந்தாலும் அவனை அடையாளம் கண்டுகொண்டவர்களாய் **அவனை அழிக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம்** என்பதனை மறவாதிருப்போமாக. **வெற்றி கீதம் பாடவேண்டியவர்கள் விசனமாய்த் திரியக் கூடாது. சத்துருவோடு ஒத்துப் போகுதல் ஒருநாளும் காரியத்திற்கு உதவாது. சாத்தானுக்கு இணங்கி அவனுடைய வார்த்தைகளை நமதாக்கிக்கொள்ளும்போது அதுவே நமக்குக் கண்ணியாகிறது.**

எந்த ரூபத்திலும் அவனுடைய செயல்களுக்கு இடம் கொடுக்காதபடி நம்மைக் காத்துக்கொள்வோம். இறுதி கால சபை இதனைப் புரிந்து கொள்ளுமாயின் எத்தனை நலமாயிருக்கும். “நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள்” (ஆதி 11:4) என்ற பாபிலோனிய ஆவியும், பிதாக்களின் சுந்தரத்தைப் பாதுகாக்க நினைக்கும் நாபோத்துக்களை உபவாச ஜெபம் என்ற பெயரில் கொலை செய்யத் துணியும் யேசபேலின் ஆவியும் (1 இராஜா 21:12-14), கிறிஸ்துவுக்குப் பதிலாகத் தன்னிடமே ஆள் சேர்க்க நினைக்கும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியும் (2 தெச2:9-10), துணிச்சலாய் சபைகளுக்குள் ஓடித் திரிந்து எக்காளமிடும் வேளையில் ஆவியானவரின் கிரியைகளை வெளிப்படுத்தி அவருக்காக யுத்தங்களை நடப்பிக்கிற யுத்த வீரர்கள் இன்று தேவை.

அலங்கோலமாக்கும் ஆவிகள், அடங்காமை எனபதனை அணிந்து கொண்டு திரியும் அர்ப்பணமற்ற ஆவிகளை உடையோர், பெருமையையே ஆடையாகக் கொண்டு, இறுமாப்பையே வார்த்தைகளாகக் கொண்டு, அகங்காரமே அணிகலன்களாக மாறி, அழிவையே முடிவாகக் கொண்ட இந்த ஆவியுடையோரைக் காண, கண்டுபிடிக்க ஆவியானவர் நம்மை பலப்படுத்துவாராக. யார் வார்த்தையை நீ நம்புவாய்? கர்த்தரின் வார்த்தையை நான் நம்புவேன் - விடுதலையானேன் அவர் வார்த்தையால் என்பதோடு நிற்காமல், விடுதலை இல்லாமல் தவிப்போரை விடுவிக்கும் பணியும் நமக்குண்டு என்பதனை மறக்காமல் செயல்பட நம்மை அர்ப்பணிப்போம்; அதுவே இன்றைய தேவை. இதுவே இப்போதைய அவசரத் தேவை.

## 33. சபையின் ஒளியை அணைக்கும் சக்தி

**உலகத்திற்கு வெளிச்சமாகக் கொடுக்கப்பட்ட தேவ மக்களால் நிரம்பிய சபை, இன்று அநேக நேரங்களில் மங்கி எரிகிறது;** தேவ தயவுதான் அதனை அணைந்துபோகாமல் காத்துவருகிறது. இந்த வெளிச்சம் மங்கிப்போனதற்கான காரணங்களை உற்று நோக்குங்கால் பல உண்மைகள் தெரியவருவதோடு அதனை மீண்டும் ஒளி பெறச் செய்யவேண்டிய காரணங்களும் நமக்கு நன்றாக விளங்கக்கூடும். **கொழுந்துவிட்டு எரியச் செய்கிற ஆவியானவர் சபையில் கிரியை செய்யக்கூடாதபடி, வேறு ஆவிகள் கிரியை செய்ய இடம் கொடுக்கப்படும்போது, அது ஆவியின் கிரியைகளையும், கிருபைகளையும் அழித்துப்போட வல்லதாக இருக்கிறது** என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை.

எனவே, தேவப் பிள்ளைகள் இன்றைக்கு **ஆவிதனை பகுத்து அறியத்தக்கவர்களாகி,** ஜாக்கிரதையாய் சபையின் **ஒளியை அணைக்க வல்ல சக்திகளை அடையாளம் கண்டு,** அதில் அகப்பட்டுக்கொண்டோரை விடுவிக்கவேண்டிய அவசியம் அனைவருக்கும் உண்டு; தேவ ஒத்தாசையோடு செயல்படுங்கள்; ஜெபித்து முன்னேறுங்கள்; மற்றவர்களுக்குக் கற்றுத்தாருங்கள்.

சபையில் நடமாடும் பொல்லாத ஆவிதனையோ, அசுத்த ஆவிதனையோ அடையாளம் கண்டுகொள்வது அநேக வேளைகளில் எளிது. ஏனெனில், அது பொல்லாப்பை உண்டுபண்ணி **விரோதங்களை எழுப்பிவிடும் (நியா 9:23), பிரிவினை தலை விரித்து ஆடும், கோள் சொல்லுதலும், புறங்கூறுதலும் எல்லா இடங்களிலும் செழித்தோங்கும் (நீதி 17:9, 11:13). கொலைவெறியும் சண்டையும், சச்சரவும், ஒத்துப்போகாமையும், எதற்கெடுத்தாலும் எதிர்த்து நிற்கும் சுபாவமும் தண்ணீர் ஊற்றி வளர்க்கப்படும்.** ஒருவர் முகத்தை மற்றவர் பார்ப்பதனையே பாவம் என்ற உணர்வைத் தூண்டிவிட்டு, இல்லாத பொல்லாதவைகளை ஏவிவிட்டு **பகையென்னும் தீயை எரியச்செய்து** அது அணையாதபடிக்கு எண்ணை ஊற்றிக்கொண்டேயிருக்கும். எனவே, அப்படிப்பட்ட ஆவி சபையில் கிரியை செய்யும்போது **ஆண்டவரின் பேரில் அன்பு கொண்டவரும் அவருடைய சரீரமான சபையை நேசிப்போரும், தேவ இராஜ்யத்தினைக் குறித்து அக்கறை கொண்டோரும்** இதனை எளிதாகக் கண்டு கொள்வார்கள்.

அசுத்த ஆவியின் சுபாவங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்ல. **நிர்வாணமாக்குதல், சுத்தமாக இருக்க விடாமல் கட்டிப்போடுதல், தன்னையும் மற்றவர்களையும் காயப்படுத்துதல், அசுத்தத்தை நடப்பிப்பதற்கு அசுசிபடாதிருத்தல், கெட்ட வார்த்தைகளை அள்ளி வீசுதல், மற்றவர்களின் மனதில் அசுத்த எண்ணங்களைத் தூண்டிவிடும் காரியங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்கள் அசுத்தத்தில் விழும்போது ஆனந்தம் கொண்டு "சபாஷ்" போடுதல், பாவத்தை விட்டு ஓயாத அவயவங்களாக தன்னுடைய அவயவங்களை (கண், காது, நாக்கு போன்றவை) மாற்றிக்கொள்ளுதல்** போன்றவை இந்த அசுத்த ஆவியினை அடையாளம் கண்டுகொள்ளப் போதுமானவை.

ஆனால், வஞ்சிக்கிற ஆவியின் நடமாட்டத்தையோ, செயல்பாடுகளையோ புரிந்துகொள்வது ஆவிக்குரிய பழக்கமில்லாதவர்களுக்கோ, தேவனோடு நெருங்கி நடக்காதவர்களுக்கோ, தேவப் பிரசன்னத்தை நாடுவதற்கு தன்னை விட்டுக்கொடுக்காதவர்களுக்கோ எளிதல்ல.

**உலகத்தின் ஆவியும் இன்று சபைகளை நிரப்பிவருகிறது.** அது பிதாவினிடத்திலிருந்து வரவில்லை; ஆகையால், (1யோ 2:15,16) சில வேளைகளில் அதன் இழுப்பு அதிகமாக இருந்தபோதிலும் **எதிர் நீச்சல் அடிக்கக் கற்றுக்கொண்டோருக்கு** அதனை மேற்கொள்வது எளிதானதே. **உலகின் வழியில் சென்றுதான் உலக மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவரமுடியும் என்ற வாதம் உலக இன்பங்களை அனுபவிக்கத் துடிக்க முயல்வோரின் சாக்குப் போக்கே.** இயேசுவும் "நான் உலகத்தான் அல்லாததுபோல அவர்களும் உலகத்தார் அல்ல" (யோ 17:16). உலகம் உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் (யோ 16:1, 19) என்று கூறி தம்முடைய நிலையையும், நம்முடைய நிலையையும் ஆணித்தரமாகக் கூறி தெளிவு படுத்தியதோடு நம்மைக் காக்க உலகத்தின் ஆவியைத் தராமல் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே தந்தருளியிருக்கிறார் (1கொரி 2:12). பவுலும் இதனைக் காண்பிக்க எண்ணி, நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம் (1கொரி 4:9) என்றதோடு நில்லாமல், "அவரால்

உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" (கலா 6:14) என்று கூறுகிறார். எனவே **உலகத்தின் ஆவி எத்தனைதான் ஆவிக்குரிய வேடம் அணிந்தாலும் அது பட்சிக்கிற ஓநாய் ஆட்டுத் தோலைப் போர்த்தியதற்குச் சமானம்.** அதனுடைய பசியினையும் ஆகாரத்தையும் கவனித்தாலே அது ஆட்டுக்குட்டியா? ஓநாயா? என்பது விளங்கிவிடும். அது புல் போன்ற மென்மையானவைகளை வாஞ்சிக்காமல் மாம்சத்தையே தேடும் அல்லவா? **அது இரவிலேயோ அல்லது மற்றவர்கள் கவனிக்காமல் இருக்கும்போதுதானே கிரியை செய்யும்.** அது மந்தையின் பெருக்கத்தினை அல்ல அழிவையேத்தான் நாடும். அப்படியே மந்தை பெருகினாலும் அதின் இரை அந்த மந்தையின் இரத்தத்தினை உறிஞ்சிக் குடிப்பதில் தான் கவனமாக இருக்கும். அதனுடைய பற்களும் கோரமானவைகள் அல்லவா.

அது சில நேரங்கில் நன்றாக நடந்து நீதியின் வழியில் நடந்தோரையும் பற்றிக்கொள்ளும் (அப் 20:29-30). இதற்கு இரையாகிப் போனவர்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை. **இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் இருக்க, புதிதாக்கப்பட்ட மனமும் மறுரூபமாகவேண்டும் என்ற வாஞ்சையும்தான் காரணம்.** தேவன் அதினை உங்களுக்கு அருளிச்செய்வாராக.

அன்று **ஏதேன் தோட்டத்தில்** இந்த வஞ்சக ஆவியின் செயல்பாடு வெளிப்பட்டது. "ஆகிலும் சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல..." (2கொரி 11:3). **கடைசி காலத்தில்** இதனுடைய நடப்புகள் மிகுதியாகும் என்பதனையும் வேதம் சொல்லுகிறது. "ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி **பிற்காலங்களிலே** மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினால் சிலர் **வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்** பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" (1தீமோ 4:1). ஏனென்றால், இரட்சிக்கப்படத்தக்கதாய் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால்... அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞசகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் (2தெச 2:10,12).

அது **அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கு சாதகமாக** சகல வல்லமைகளோடும் அடையாளங்களோடும் அற்புதங்களோடும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்" (2தெச 2:9,10).

**அந்திக்கிறிஸ்துவுக்கு உறுதுணையாக வரப்போகும் கள்ளத் தீர்க்கதரிசியும் பூமியின் குடிகளை மோசம்போக்குவதையே குறியாகக் கொண்டு செயல்படும்; அதற்காக அற்புதங்களை நடப்பிக்கும்** (வெளி 13:13,14). அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் ராஜாக்களையும் வஞ்சிக்கும் வல்லமை பெற்றவை, **அவை குறிப்பாக வாயிலிருந்து புறப்படுபவைகளே** (வெளி 16:13,14).

எப்படி பொய்யுரையாத தேவன் பொய்யை விசுவாசிக்கத்தக்க வஞ்சகத்தை அனுப்புவார் (2தெச 2:12) என்பது விளங்கவில்லையே என அங்கலாய்ப்போருக்காக தேவன் பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவத்தை எழுதிவைத்துள்ளார். தேவன் அனுமதிக்கிறார் என்பது தெளிவு.

1இராஜா 22ம் அதிகாரத்தில் ஆகாபின் மரணத்திற்கு காரணமான யுத்தத்தையும் தீர்க்கதரிசனங்களையும் உற்று நோக்குங்கால் இதனைப் புரிந்து கொள்வது எளிது. விக்கிரக ஆராதனைக்குத் தன்னை விற்றுப்போட்டு, தேவனுக்கு விரோதமாக ஜனங்களைத் திரும்பப் பண்ணின அவனுடைய முடிவை, தேவன் தீர்மானித்து அதனை நிறைவேற்றுவதற்கு அவனாகத் தேடிப்போன ஓர் யுத்தத்தின் செய்தி இந்த அதிகாரத்தை நிரப்புகிறது.

அதிலே வஞ்சக ஆவி எப்படி கிரியை செய்கிறது என்பதனை உண்மை தீர்க்கதரிசியாகிய மிகாயா விளக்குகிறான் வச 19-28 வரை படித்துப்பாருங்கள். **ஆகாபை வழி தடுமாறச் செய்ய உதவினவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளே. ஒரு ஆவி (பொய்யின் ஆவி) 400 பேர் மூலமாக செயல்பட முடியும் என்பதும் அதுவும் தாங்கள்தான் ஆவியானவருக்குச் சொந்தக்காரர்கள்; மற்றவர்களிடம் கிரியை நடப்பிப்பதற்கு தங்களைக் கேட்டுக்கொண்டுதான் அவர் செயல்படுவார் என்பது போல பேசும் கள்ளத் தீர்க்கதரிசிகளின் தலைவன் சிதேக்கியாவும் (வச. 24) இன்றையை சூழ்நிலையில் எத்தனையாய்ப் பொருந்துகின்றனர்.**

சாத்தான் தான் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமானவன் என்பதும், தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான் என்பதும் நாம் அறிந்ததே (யோவா 8:44). **அவன், விட்டுக்கொடுக்கும் எவனையும் எளிதாய் நிரப்பிவிடுகிறான்** என்பது ஆதி விசுவாசிகளான அனனியா சப்பிராளுடைய வாழ்வில் நடைபெற்றதும் நமக்குத் தெரிந்ததே (அப் 5:1-3). **தனக்குப் பெயர் வரவேண்டும், தன்னை மற்றவர்கள் பாராட்டவேண்டும் என்பதனையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் எவரும் சத்துருவுக்கு தன்னை விட்டுக்கொடுத்து வாழ்வது வெட்டவெளிச்சம்.**

"வஞ்சகம்" என்பதனை "பொல்லாப்பு செய்ய இணங்கப் பண்ணுதல்" எனவும் கூறலாம். அதனை ஆங்கிலத்தில் "enticing" என்கிறோம். நியமிக்கப்படாத ஒரு கன்னிகையை ஒருவன் **மோசம் போக்கி** (enticing) அவளோடே சயனித்தால்... என்று கூறும் வேதம் (யாத் 22:16) ஒருத்தின் கற்பை சூறையாடுவதனை "வஞ்சகமான செய்கை" என்கிறது. **இன்று அநேக தேவ மக்கள் "தீட்டுப்படக் காரணமாக வாழும், பேசும், தீர்க்கதரிசனங்களை கூறும் ஊழியங்களும், ஊழியர்களும் எந்த விதத்திலும் இவர்களுக்குக் குறைந்தவர்கள் அல்லவே**; அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

உபா 13:1-10 வசனங்களில் உன்னை ஜீவ தேவனை விட்டு திசை திருப்பும் (வச 10) எந்த மனிதனும் சாக வேண்டும் என்று கடுமையாக உரைக்கும் ஆண்டவர் "enticing" என்ற வார்த்தையே உபயோகிக்கிறார். கூடவே, தண்டிக்கபட வேண்டியதினை வெளிப்படுத்துகிறார். ஒருவேளை இன்றைய புதிய ஏற்பாட்டு யுகத்தில் நாம் கொலை செய்ய அல்ல, **அவர்களை ஓரம் கட்டுவதற்குக் கற்றிருக்கவேண்டும். அவர்களை ஒதுக்கி வைப்பதற்குப் பதிலாக மாலை போட்டு வரவேற்று, வாழ்த்துப்பாடி புகழாரம் சூட்டி அவர்களை நீதிமான்களாகக் காண்பிக்க சபை உந்தப்படுமாயின் வெளிச்சம் மங்கத்தானே செய்யும்.**

"துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவன்..... கர்த்தருக்கு அருவருப்பானவன்" என்று வேதம் சொல்லுகிறதே (நீதி 17:15). **அருவருப்பு உள்ள இடத்தில் தேவன் அசைவாட முடியாதே** ஒத்துக்கொள்வோம்; சபையின் பிரகாசம் பெருக பாடுபடுவோம். "உன் ஒளி வந்தது கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.

உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு இராஜாக்களும் நடந்து வருவார்கள். கடற்கரையின் திரளான கூட்டம் உன் வசமாகத் திரும்பும். **ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்திற்கு வரும்** (ஏசா 60:1,3,5)." சபை பெருகட்டும், தேசம் அசையட்டும், வெற்றி வேந்தர் இயேசு, மங்கி எரிகிற திரியை அணையாதவர் மாத்திரம் அல்ல **பொங்கி எரிய எண்ணெய் ஊற்றுபவர்.** எழுந்து பிரகாசியுங்கள் மற்றவர்களையும் எரியப்பண்ணுங்கள் சபைகள் எரிந்து பிரகாசிக்கட்டும் தேசத்தில் இருள் நீங்கி வெளிச்சம் உதிக்கட்டும் செயல்படுவோம்.

# 34. சிட்சித்து போதிக்கிறவனே பாக்கியவான்

நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் (வெளி 3:19) என்று முழக்கமிடுபவர் நம் தேவன். அடிக்கடி சில பெரியவர்களும், நண்பர்களும், வேண்டியவர்களும் எனக்குத் தரும் அன்பின் அறிவுரை, உங்கள் **பிரசங்கம் மற்றும் எழுத்து மிகவும் கடிந்துகொள்கிறதாயிருக்கிறது** என்பதே. சிலர் இந்த நாட்களின் தேவை அதுதான் என்பர். இன்றைக்கு பிரசங்க பீடத்தில் அனல் குறைந்துபோய்விட்டது என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. காரணத்தைக் கண்டுகொண்டவர்கள் சிலர்தான். குறிப்பாக இந்த கடைசிக் கால மனிதன் கடிந்துகொள்ளுதலை சற்றும் விரும்புவதில்லை என்பதும் உண்மை. வீட்டில் கட்டப்பட்டு ஒழுங்காக நேரத்திற்கு அன்பும், அன்னமும், ஆதரவும் தந்து வளர்க்கப்படும் நாய்க்குட்டி அநேக நேரம் அதட்டப்படுவதும், சில வேளை அடிக்கப்படுவதும் அன்பின் அடிப்படையிலேயே. ஆனால், தெருவில் ஊரைச் சுற்றும் நாய்க்கோ அப்படி எதுவும் இல்லை; எனவே, இன்றைக்கு கடிந்துகொள்ளுதலை அல்லல் தட்டுவோரும் தெருநாயின் நிலையில்தான் வாழவிரும்புகிறதைப்போலக் காட்சி அளிக்கிறது.

சிட்சித்து போதிக்கிறவனையே வேதம் பாக்கியவான் என்கிறதை மறக்கலாகாது (சங் 94:13). துன்மார்க்கனைப் பார்த்து நீதிமானாயிருக்கிறாய் என்று சொல்லுகிறவனை ஜனங்கள் சபிப்பார்கள். பிரஜைகள் அவனை வெறுப்பார்கள்; அவனைக் கடிந்துகொள்ளுகிறவர்கள் மேல் பிரியமுண்டாகும்; அவர்களுக்கு (இருசாராருக்கும்) உத்தம ஆசீர்வாதம் கிடைக்கும் (நீதி 24:24-25) என்பது ஞானியின் கூற்று அல்லவோ? உத்தம ஆசீர்வாதங்களை ஒதுக்கிவிட்டு, ஓடிப்போகும் ஆசீர்வாதங்களை நேசிப்போர் தொகை பெருகியதால் வரும் கேடு எத்தனைக் கொடியது.

கடைசிக் காலத்தின் அலங்கோலத்தினை, சபையின் நடுவில் பொறுப்பினை ஏற்கப் போகும் தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் இதனை வலியுறுத்தியிருப்பதைக் கவனித்தால் எத்தனை நலமாயிருக்கும். நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு புத்தி சொல்லு (2தீமோ 4:3). ஏனெனில், தங்களுக்குத் திரளான போதகர்களை ஜனங்கள் சேர்த்துக்கொள்வார்கள், அவர்கள் அவர்களுடைய காதுக்கினிய வார்த்தைகளை கூறுவார்களேயல்லாமல், கர்த்தரின் வார்த்தையைக் கூறமாட்டார்கள் (வச 4).

“விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய் கடிந்துகொள்” (தீத்து 1:14). ஏனெனில், சத்தியத்தை விட்டு விலகி போதிக்கிறவர்களை ஜனங்கள் சார்ந்துகொள்ளக்கூடாதல்லவா! (வச 13).

இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள் (தீத்து 2:15). நோக்கம், ஜனங்கள் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணவேண்டும் என்பது அல்லவோ (வச 12).

**மறைவான சிநேகத்தைப் பார்க்கிலும் வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது என்பது மறக்கப்படும் காலமிது** (நீதி 27:15).

இயேசு அன்பானவர், மனதுருக்கம் நிறைந்தவர், ஆறுதல் செய்பவர் என்பது எத்தனை உண்மையோ, அத்தனை உண்மை அவர் கடிந்துகொள்பவரும் கூட என்பதும். விசேஷமாக தன்னால் பெரிய காரியங்களைச் செய்யும்படி அழைக்கப்பட்ட சீஷர்களைக் கடிந்துகொண்ட அத்தனை சம்பவங்களையும் கவனிக்கும்போது விளங்கும். இன்றைய சபையை தேவன் வைத்திருக்கும் நோக்கம், தன்னுடைய பெரிய திட்டமாய் சுவிசேஷத்தைக் கடைசி மனிதன் வரைக் கேட்கவேண்டும் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. அதனை நிறைவேற்ற தடைகளைக் காணும்போது இயேசு சபையையும் கடிந்துகொள்வார் என்பது திண்ணம்.

மத் 8:26 – ல் காற்றையும் கடலையும் கடிந்துகொள்ளும் முன்னர், சீஷர்களையே கடிந்துகொள்கிறார். **அற்ப விசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள்?** என்று. இயேசு தூங்கிக்கொண்டிருக்கிறார் (வச 24); சீஷர்களோ நாங்கள் மடிந்துபோகிறோமே (வச 25) எனக் கூறுகின்றனர். Self-Pity என்று கூறப்படும் சுயபரிதாபம் இவர்களை எத்தனையாய் தாக்கி உள்ளது பாருங்கள்; இது ஒருவித ஆவியே. சுயபரிதாபத்திற்குத் தங்களை விற்றுப்போட்டவர்கள் சீக்கிரத்தில் மன அழுத்த நோயினால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு (Depression). மனிதன் தன்னைக் குறித்தும் தன் பாதுகாப்பையுமே முன்னிறுத்தி கதறுகிறவன் என்பதற்கு சீஷர்கள் நல்ல உதாரணம். சுய பரிதாபத்தினை உருவாக்க மனிதர்கள், ஏன் ஊழியரும் கூட எத்தனையாய் பிரயாசப்படுகின்றனர். உதவி பெறுவதற்கு இதனையே ஆயுதமாக்கிக் கொண்டவர் எத்தனைபேர்? இது கடிந்துகொள்ளுதலுக்குரியது என்பதனை இயேசு இங்கே கோடிட்டுக் காட்டுகிறார். சுயபரிதாபம் தன்னுடைய திறமைகளையும் விழுங்கிவிட மனிதர்களை முடுக்கிவிடுகிறது என்பதனை மறக்கலாகாது.

மத் 17:17-ல் தோற்றுப்போய் நிற்கும் சீஷர்களையே பிசாசை அதட்டும் முன் அதட்டுகிறதைக் காணலாம். **விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே** என்று, இதற்குக் காரணம் அவர்களுடைய ஜெப வாழ்வின் குறைதனை சுட்டிக்காட்டுவதனை தொடர்ந்து வரும் வசனங்கள் விளக்குவதனை வாசித்து புரிந்துகொள்ளலாம் (வச 21). பின் வரும் நாட்களில் நான் செய்யவேண்டியவைகளைச் செய்து முடிக்க தெரிந்துகொள்ளப்பட்ட கூட்டம் ஜெப வாழ்வினையும், தேவனோடு ஐக்கியம் கொள்வதனையும் எத்தனையாய் குறைத்து மதிப்பிட்டுள்ளனர் என்பது இயேசுவைக் கவலைக்குள்ளாக்கிக் கடிந்துகொள்ளச் செய்கிறது. பெரிய பெரிய சவால்களை முறியடிக்கப்பட்ட தேவ சேனையாம் அவை இன்று சின்ன சின்ன விஷயங்களிலும் தோற்று நிற்கிறதே. காரணம், தனக்கு முன் இருக்கும் பெரிய பெரிய சவால்களைப் போக்கிடவோ, சிந்திக்கவோ கூடாதபடி மாறிவிட்ட நிலையினாலேயே?

மத் 19:13-ல் அதட்டும் சீஷர்களை அதட்டும் இயேசுவைக் காணலாம். **"அப்பொழுது"** என்ற வார்த்தையினைக் கவனியுங்கள். அங்கே நடக்கும் சம்பாஷனை, சிறு பிள்ளைகளுக்கு ஏற்றதில்லை

என்பது உண்மைதான். தாம்பத்திய வாழ்வினைக் குறித்த விளக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறார் இயேசு. இப்படிப்பட்ட நேரத்தில் சிறு பிள்ளைகளைக் கொண்டுவந்தது சீஷர்களைப் பாதித்திருக்கலாம். இது பெரியவர்கள் கேட்கவேண்டியவை, இந்த நேரத்தில் சிறுவர்களுக்கு என்ன வேலை என்ற கேள்வியினிமித்தம் பரலோக இராஜ்யத்தில் தாம்பத்திய வாழ்வில்லை என்பதனைக் குறித்து பேசுவது போல அவர்களை அதட்டுகிறார். கூடவே, பரலோக இராஜ்யத்தில் பிள்ளைகளின் இடம் பறிக்கப்பட்டுவிடக்கூடாது என்பது இயேசுவின் தீவிரமான உபதேசமல்லவா? "Focus" **மாற்றப்படும் எந்த காரியத்தினையும் இயேசு கடிந்துகொள்ளத் தவறவில்லை** என்பதனை இயேசுவின் வாழ்க்கை முழுவதும் காணலாம் (லூக் 18:17).

மாற்கு 8:33-ல் இயேசு பேதுருவைக் கடிந்துகொள்வதனைக் காணலாம். பேதுரு இயேசுவை தனியே அழைத்துப் போய் தான் கடிந்துகொண்டான் (வச 32), ஆனால், இயேசுவோ (வச 33) சீஷர்களைப் பார்த்து அவர்களுக்கும் போதிக்கும் வண்ணம் கடுமையான வார்த்தைகளையே உபயோகிக்கிறார். **"சாத்தானே"** அல்லது சாத்தானுடைய ஆவி உன்னை ஆட்கொள்ள இடங்கொடுத்து விட்டாயோ என்று கூறுகின்றார். பரலோக சத்தம் கேட்பவனுக்கு (மத் 16:17), இந்தத் தாக்குதலைக் கவனிக்க முடியாமற் போயிற்றே என்று அங்கலாய்த்த இயேசு, அந்தத் தாக்குதலுக்கு விட்டுக் கொடுத்துவிட்ட **அவனைக் கடிந்துகொண்டு, மற்றவர்களையும் எச்சரிக்கிறார்.** கூடவே, மனித சிந்தை ஆட்கொள்ளவும் செய்துவிட்டார். இன்று எத்தனை ஊழியர்களில் இவைகள் உண்மை, சத்துருவின் தந்திரத்திற்கும் மனித மார்க்கத்திற்கும் விற்றுப்போட்ட நிலையைக் கண்டு இயேசு சும்மா இருப்பாரோ? தேவ ஆவியால் நடத்தப்படும் மனிதர், அதனைக் கண்டு சும்மா பாராமல் இருப்பாரோ, முடியாதே. அப்படி செய்யாவிட்டால் கணக்குக் கொடுக்கும் நாளில் என்ன செய்வான்.

லூக் 9:55-ல் சீஷர்களை அவர் மீண்டும் கடிந்துகொள்கிறார். பெற்ற அபிஷேகத்தின் இரகசியம் தெரியாமல் தடுமாறுகிறார்கள் அவர்கள். அவர்கள் விரும்பினது எல்லாம்

("Power demonstration") **வல்லமையின் வெளிப்பாட்டை மாத்திரமே.** ஆனால், கொடுக்கப்பட்ட நோக்கம் அதுவல்லவே. பிசாசு அவரை கோபுரத்தின் உச்சியிலிருந்து குதித்து "power demonstration" செய்யத் தூண்டி சோதனையில் அகப்படுத்த முயற்சித்தபோது ஜெயித்தவர் அல்லவா அவர் (லூக் 4:9-12).

வல்லமை உபயோகப்படுத்தப்படுவது சொந்த விளம்பரத்திற்கோ, லாபத்திற்கோ செயல்படுத்தப்படுவதனைக் கண்ட இயேசு சும்மா இருப்பார் என்று நினைக்கிறீர்களோ! இன்றைக்கு, அநேக மேடைகளில் நடக்கும் கூத்துக்கள் எத்தனை? வல்லமை வசீகரிப்பதற்காக மாத்திரம் என்ற நிலையில்தானே இன்று தாங்கள் வல்லமை ஊழியர் என்று அழைப்போர் காட்டிவருகின்றனர்; தேவன் மன்னிப்பாராக.

மாற்கு 9:33,34-ல் அவர்களுக்குள் பலத்த போட்டி, யார் பெரியவர் யார் அங்கீகரிக்கப்படுவார்கள்? என்ற கேள்விகளில், தங்களை அழைத்து இயேசுவின் இடத்தில் யார்? என்ற பாவனையில் தர்க்கம் செய்த சீஷர்களை அவர் அதட்டி "உங்களுக்குள் அப்படி இருக்கலாகாது" என்பதனை எத்தனைப் பக்குவமாகச் சொல்லித்தருகிறார் (மத் 20:26-28).

சபைகளில், ஸ்தாபனங்களில் ஏன் தன்னைத் தியாகமாக்கின மிஷனரி ஸ்தாபனங்களிலும் மேற்கண்ட செய்கைகளைக் காணலாம். உலகின் அரசியலைவிட இங்கே அதிக மோசமாகிவிட்டது என்று மனம் சலிக்கச் செய்துவிட்டது. **பதவி மோகம், யார் பெரியவர் என்ற மாயை ஊழிய வட்டாரத்திற்குள் வந்து அலைக்கழிப்பது அவருடைய இராஜ்ஜிய விஸ்தாரத்திற்கு எத்தனைத் தடையாய் உள்ளது.** கூட்டங்கள் நடத்தப்படும்போது, இதுவே பெரிய நோக்கமாகிவிட்டக் கொடுமையைக் கண்டு இயேசு செயலற்று இருப்பார் என்று நாம் யோசித்தால் அது மடமை அல்லவா!

சில வேளைகளில் ஜெபம் எதனைக் குறித்து என அறியாமற் கேட்கப்படும் வேண்டுதல்கள் தேவனை மன நோகச் செய்வது இல்லையா? (மத் 20:21-22). சில வேளைகளில் பேசுவது என்னவென்று தெரியாமலேயே உளறுகிறது, தேவனை இடைப்பட்டு கடிந்துகொள்ளச் செய்கிறது என்பது மத் 17:4, லூக் 9:33 வசனங்களை படிக்குங்கால் தெளிவாகுமே.

திரும்பத் திரும்ப தன்னை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்த பின்னரும், நம்பக்கூடாமற் மனம் கடினப்பட்ட சீஷர்களை அவர் கடிந்துகொண்டதும் உண்டு அல்லவா (மாற் 16:14; மத் 28:17). நான் நம்புகிறவர்கள் தன்னை நம்ப முடியாமற்போகிறார்களே என்றும், இத்தனை பெரிய வேலைதனை இவர்களை நம்பிக் கொடுக்கப்போகிறேனே என்ற ஏக்கமும் இயேசுவைக் கடிந்துகொள்ளச் செய்கிறது.

மேற்கண்டவைகளைப் படிக்கும் உங்களுக்குள் இப்போது, இயேசுவின் மறுபக்கம் நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். இப்படிப்பட்டவர்களைக் காணும்போது, இயேசுவின் ஆவியினைப் பெற்ற எந்த நபரும் அவரோடு ஐக்கியம் கொண்டுள்ள யாரும், அவரோடு இணைந்து நடக்கும் அனைவரும் கடிந்துகொள்ளவோ, சீர்திருத்தவோ முயற்சி செய்யாமல் இருக்கமாட்டார்கள். அவர்களை “குறை சொல்லும் ஆவி” உடையவர்கள் என்று கூறி ஓரம் கட்டுவதோ, கண்டனம் பண்ணி வெறுப்பதோ, பரலோகத்தை ஒதுக்குவதற்கு ஒப்பானது என்பது என்னுடைய எண்ணம். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

# 35. சோர்வு

இன்றைய பிரச்சனைகளில் ஒன்று, **அடிக்கடி ஏற்படும் சோர்வுகள். சோர்வுகள் மூன்று நிலைகளில் தாக்குவதனை உணர்ந்தவர்கள் சிலரே. ஆவியில் சோர்ந்துபோவதும், ஆத்துமாவில் சோர்ந்துபோவதும் பிரித்துப் பார்க்கப்பட வேண்டியவைகள்.** அதேபோன்று, அதன் காரணங்களைக் கண்டுபிடித்து அதற்கான விடையைப் பெற்று முன்னேறவேண்டியவர்கள் நாம்; இல்லையென்றால், சோர்வு நம்மை மூழ்கிடச் செய்து, **செயலற்றவர்களாக மாத்திரமல்லாமல், மற்றவர்களையும் செயலற்றவர்களாக மாற்றிவிடக் கூடிய வலிமை பெற்றது.** சோர்ந்துபோன ஒருவரின் தாக்கம் (influence) பெரியது வலிமையானது என்பதனை மறக்காதீர்கள் (உபா 20:8).

**ஆவிக்குரிய தாக்கம் சோர்பை ஏற்படுத்தும்**; அது ஆவியில் சோர்வினை உண்டாக்கும்; இது மிகவும் ஆபத்தானதும், அறியப்படாததுமாக மறைந்திருக்கும் சக்தி கொண்டது. எலியா போன்ற விசுவாச வீரர்களையும், எழுப்புதல் வீரர்களையும் இது தாக்கி செயலற்றவர்களாக மாற்ற வலிமை கொண்டது. யேசபேலின் வார்த்தைகளுக்குப் பயந்துபோனவனாகத்தான் காணப்படுகிறான் எலியா (1இராஜா 19:12). ஆனால், உற்றுப் பார்த்தால், அது **யேசபேலின் ஆவியின் தாக்குதல்** என்பதனையும், அதனால் பாதிக்கப்பட்ட எலியாவை எழுப்பிவிடுவது எத்தனை கடினமான காரியமாக மாறிவிட்டது என்பதும் புரியும்.

தேவன் அவனைத் தூதனை அனுப்பி போஷித்துப் பார்த்தார்; திரும்பவும் அதனைச் செய்தார்; பின்னதாக பலத்த பெருங்காற்றாக, பூமி அதிர்ச்சியாக, அக்கினியாக காரியங்களைக் கடந்துபோகச் செய்து, அவனுடைய கவனத்தை இழுக்கப்பார்த்தார். மெல்லிய சத்தம் தொனித்தது, ஆயினும் **அவனை எழும்பச் செய்வது கடினமாகக் காணப்படும் அளவுக்கு சோர்வு அவனை மேற்கொண்டது.** எனவேதான், ஆண்டவர் அவன் ஸ்தானத்தில் மற்றவர்களை எழுப்பவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது (1இராஜா 19:15,16)

யேசபேலின் ஆவி இன்றைக்கும் அநேகரைத் தாக்கிக்கொண்டுதான் வருகிறது. **அந்திக்கிறிஸ்துவின் ஆவிக்கு பலியானவர்கள் எத்தனை பேர்?** ஏனெனில், அந்திக் கிறிஸ்துவின் ஆவி (1யோவா 2:18) இன்றைக்கும் கிரியைச் செய்கிறதே. ஐரோப்பாவில் வாழ்கிற மக்களின் மேல் அந்த ஆவியின் தாக்கம் அதிகமாய் இருக்கிறதை நீங்கள் காணமுடியும். **யேசபேலின் ஆவி "தேவனுக்கு நேராய் ஜனங்களைத் திருப்ப முயற்சிக்கும்" அனைவரையும் தாக்கும். தன் இஷ்டத்திற்கும் தங்களின் ஆசைகளுக்கும் மற்றவர்களை அடிமையாக மறுக்கும் அனைவரையும் அது சோர்ந்துபோகச் செய்யும்.** அதுதானே நாபோத்திற்கு நேர்ந்தது (1இராஜா 21:3-16). அந்த ஆவி, **பட்டணத்தின் மூப்பர்களையும், பெரியோர்களையும்** தன் ஆசைகளை நிறைவேற்ற உபயோகப்படுத்த **இழுக்கும்** வல்லமை பெற்றது (வச:8). பேலியாளின் மக்களையும் உபயோகப்படுத்த கூலிக்கு அமர்த்திக்கொள்ள வல்லமைப் பெற்றது (வச:10). உபவாசம் என்று ஆவிக்குரிய முகமூடியை மற்றவர்கள் அணிந்து கொண்டால் போதும் என்ற **மாயத் தோற்றத்தினை உருவாக்கவும்** இந்த ஆவிக்கு பெலன் உண்டு (வச:12). **தன் சொத்துக்களை அதிகமாக்க இலகுவான, ஆனால் ஆவிக்குரிய காட்சி தருகிற முறைமைகளை உபயோகிக்கவும் அந்த ஆவி எளிதாக கிரியை செய்யமுடியும்.**

இதைப்போலத்தான் பொல்லாத ஆவிகளின் நிலையும்; உங்களை ஜெபிக்கவும், தேவனை அறியவும், வேதம் வாசிக்கவும், மற்றவர்களுக்கு ஆண்டவரின் வழிகளை அறிவிக்கவும் விடாதபடி உங்கள் ஆவியைத் தாக்கி சோர்ந்துபோகச் செய்து செயலிழக்கச் செய்துவிடக்கூடும்.

சிலர் தங்களுக்கு "டல்லாக" இருக்கிறது என்று சொல்வார்கள், அது ஆவிகளின் உலகிலிருந்து வரும் தாக்குதல் என்பதனை அவர்கள் அறிவதில்லை. சகோதரி ஒருத்தி என்னிடம் கேட்டாள்: என் பக்கத்தில் இருக்கும் அசுத்த ஆவியின் போராட்டத்தை நான் உணருகிறேன். ஆனால், அதனைக் கட்டவோ அல்லது வெளியேற்றவோ என்னால் முடியாதபடி ஒருவித பயம் என்னை ஆட்கொண்டுவருகிறது; அதற்குப் பின் என்னால் ஜெபிக்கவும் இயலாமல் போய்விடுகிறது, ஏன் என்று தெரியவில்லை? என்றாள்; காரணம் என்ன?

அபிஷேகம் பெற்ற ஒருவனை ஆவிகள் தொடமுடியாது என்பது உண்மை (1யோவா 5:18); ஆனால், **பயம் என்ற ஒரு மெல்லிய போர்வையை நம்மைச் சுற்றி விரிக்கப்பார்க்கிறான் சத்துரு.** அந்த நேரத்தில் நாம் அதற்கு விட்டுக் கொடுத்தால் அது நம்மைத் தாக்கி செயலற்றவர்களாக மாற்றவும், சோர்வினை உண்டாக்கவும் போதுமானதாக இருக்கிறது; எனவேதான் **தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைத் தராமல்** என்று வேதம் கூறுகிறது (2தீமோ 1:7).

**இப்படிப்பட்டத் தாக்குதல் உண்டாகும்போது, வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு துதித்து, தேவ ஆவியில் நிறைந்து வாழ்ந்து அதனை முறியடிக்க முடியும்.** இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்த பொக்கிஷத்தை மண் பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை (2கொரி 4:7-9).

அடுத்தாற்போல், **ஆத்துமாவில் (soul) ஏற்படும் தாக்கம்** அல்லது மனநிலையில்; **இந்தத் தாக்குதலினால் ஏற்படும் சோர்வு அநேக நேரங்களில் நம்முடைய இச்சைகளினால் (lust) உண்டாகிறது என்பதனைக் கவனிக்கவேண்டும்.**

சங்கீதம் 78:25-30 ன் படி, தூதர்களின் அப்பத்தினை உண்டுகொண்டிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் இச்சையுள்ளவர்களாகி (எண் 11:4), **தேவன் சமநிலை உணவாகத் தந்திருந்த "மன்னா" வைச் சாப்பிட்டு உள்ளம் வாடிப்போகிறது என்று கூறி** (எண் 11:6) மாம்சம் கேட்டார்கள்; அவரும் அவர்கள் இச்சித்ததைக் கொடுத்தார்; ஆனால், அவர்கள் **ஆத்துமாவிலோ இளைப்பைக் (சோர்வை) கட்டளையிட்டார்** (சங் 106:15). இந்த வகை சோர்வு நம்முடைய ஆத்துமாவில் (மனம்) உண்டான தாக்கத்தால் உண்டானது.

தேவன் நமக்கு நலமானவைகள் என்ன என்று அறிந்திருக்கிறார்; அவைகளைத் தந்தும் இருக்கிறார்; இஸ்ரவேலுக்கு மன்னாவைத் தந்ததுபோல. ஆனால், அநேக வேளைகளில் **அவர் நமக்குத் தரக்கூடியதுதான் எனினும், தராமல் விட்டவைகளை நாம்**

**வாஞ்சித்து, நாடி, போராடிப் பெற்றுக்கொள்ளும்போது,** அவர்கள் கேட்டதைக் கொடுத்தார் (சங் 106:15) என்பது போல, **அவருடைய ஆலோசனைக்குக் காத்திராமல்** (சங் 106:13) கேட்டவைகளைத் தந்தாலும் அது சோர்வை வாழ்க்கையில் கொண்டுவர ஏராளம் வாய்ப்புகள் உண்டு.

**இது திருமணக்காரியத்தில், வேலை விஷயத்தில், குடும்ப வாழ்க்கையில் ஏன் ஊழியத்திலும் நடைபெற வாய்ப்புள்ளது. இன்றைக்கு அநேக ஊழியங்களில் தேவன் அவர்களுக்கு வைத்த பங்கையும்விட அதிகமாக இச்சித்து, போராடி கேட்டு பெற்றிருந்தாலும் அவர்கள் சோர்வுக்குள்ளாவதற்குக் காரணம் இதுவே.** போதுமென்ற மனதோடு கூடிய தேவ பக்தியே **மிகுந்த** ஆதாயம் (1தீமோ 6:6).

இப்படிப்பட்ட சோர்வுகள் நம்மைத் தாக்கும் வேளைகளில் நாம் செய்யவேண்டியது என்ன? ஒருவேளை, பெற்றுக்கொண்டவைகளை மாற்றக்கூடாமல் போகும்போது என்ன செய்வது? என்ற கேள்விகள் எழலாம். "திருப்தி" "மன ரம்மியம்" என்ற காரியங்கள் நம்மை நிரப்பவேண்டும். **எந்த நிலைமையிலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன் (பிலி 4:11). எனவே கற்றுக்கொண்ட காரியம் என்ன என்பதனை நினைத்து, தேவனை ஆராதிப்பதும் அமைதியாய் இருப்பதும் நமக்கு மிகுந்த பலனைத் தருவதோடு சோர்வை மேற்கொள்ளவும் வகை செய்யும். மற்றவர்களைப் பார்த்து நமக்கில்லையே என்ற ஏக்கத்தையும், மற்றவர்களோடு ஒப்பிட்டு நம்மையே குற்றப்படுத்தி, மற்றவர்களையும் ஏன் தேவனையும் குற்றப்படுத்துகிற தீமையினின்று நம்மைக் காக்கும். தேவையற்றவைகளுக்காக கனவு கண்டு ஏமாற்றமடைவதிலிருந்து நம்மை விலக்கும். இளைப்படையாமல் ஓடிமுடிக்க உதவும்.**

மூன்றாவது வகை சரீரக் களைப்பினால் ஏற்படும் சோர்வு. களைத்துப்போன சரீரம், மனதையும் ஆவியையும் குன்றிப்போகப் பண்ணும். **வேலையின் நிமித்தம், வியாதியின் நிமித்தம், தொடர்ச்சியான பெலவீனங்கள் நிமித்தம் நாம் சரீரத்தில் களைத்துப்போக வாய்ப்புண்டு.** அப்போது நம்மை அறியாமலேயே நாம் சோர்ந்துபோய் அமர்ந்துவிடுகிறோம். செய்யவேண்டியவற்றினையும் கூட செய்யக்கூடாதபடிக்கு சோர்ந்துபோக நேரிடலாம்.

**தேவையற்ற வேலைதனை இழுத்துப் போட்டுக்கொள்பவர்களும், தான் தான் செய்யவேண்டும் மற்றவர்கள் அதனை செய்துவிடக்கூடாது என்று வாழ்கிறவர்களும், பகிர்ந்து கொடுத்து வேலை செய்ய அறியாதவர்களும், வேலையின் நிமித்தம் தேவ சமூக பழக்கத்தைக் கைவிடுகிறவர்களும்,** ஏதோ உலகமே இவர்கள் தலையில்தான் இயங்குகிறது என்பதுபோல தங்களைக் காட்ட விரும்புகிறவர்களும் சரீரத்தில் சீக்கிரம் களைத்துப்போவார்கள்.

**மற்றவர்களுக்குத் தங்களை அடிமையாக்கிக் கொண்டவர்களின் நிலைமையும் அவ்வாறே. இன்னமும் சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கமும் இதில் அடங்கும்.** இந்த வகையான சோர்வை மேற்கொள்ள இளைப்பாறுதல் (rest) இன்றியமையாதது. வலுக்கட்டாயமாக இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ள வகை கண்டுகொள்ள வேண்டும். இயேசு இந்த உலகில் வாழ்ந்தபோது **"வாருங்கள் சற்றே இளைப்பாறும்படிப் போவோம்" என்று சீஷர்களை அழைக்கவில்லையா?** (மாற் 6:31). மனிதன் இளைப்பாறவேண்டும் என்று சொல்லித்தானே தேவன் உலகில் இரவைத் தந்துள்ளார். போதிய இளைப்பாறுதல் உங்களுக்குத் தேவை; அதுவும், இப்படிப்பட்ட நிலை வரும்போது நிச்சயமாகத் தேவை.

சோர்ந்து போகிறவர்களுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார் என்ற வாக்குத்தத்த வசனம், ஓடினாலும் நடந்தாலும் என்றே முடிகிறது (ஏசா 40:29-31). **இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கு ஏற்ற வார்த்தை சொல்ல... என்று கூறி, ஆத்துமாவில் வரும் சோர்வினைப் போக்க ஏற்ற வார்த்தைகளே தேவை என்று சொல்லுகிறது** (ஏசா 50:4). அத்தேனே பட்டணத்தில் விக்கிரகங்களைக் கண்ட பவுல் ஆவியில் மிகுந்த வைராக்கியங் கொண்டு என்று எழுதப்பட்டுள்ளது (அப் 17:16).

எனவே **எந்த பகுதி என்னைச் சோர்வுக்குள்ளாக்குகிறது என்பதனை புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயல்பட்டு மேற்கொள்ளவும், விரைந்தோடி தேவ பலத்தில் காரியங்களைச் சாதிக்கவும் தேவன் உங்களுக்கு உதவுவாராக.**

இந்த ஆபத்துக்கள் நிறைந்த காலத்தில் நாம் சோர்ந்து போனால் நம் பெலன் குறுகியது (நீதி 24:10).

# 36. தடுமாறும் தலைவர்கள்

கர்த்தருடைய சேனையின் அதிபதியாக வெளிப்பட்டு, யார் கர்த்தர் பட்சத்தில் நிற்கிறார்களோ, அவர்களுடைய பட்சத்தில் நின்று அடைக்கப்பட்ட எரிகோவையும் ஜெயிக்க பலன் தருகிறவர் நம் தேவன் (யோசு 5:13; 6:1). அவருடைய முறைகள் மனிதனுடைய முறைகளிலிருந்து வேறுபட்டவைகள். அவை ஆச்சரியமானவை, அற்புதமானவை, **கீழ்ப்படிதல் ஒன்றை மாத்திரம் மையமாகக் கொண்டு இயங்குபவை.** அந்தக் கீழ்ப்படிதல் நம்மனைவரிலும் உண்டாவதாக. அது வெற்றிகளைக் குவிக்கட்டும். அடைக்கப்பட்டப் உலகினைக் கர்த்தருக்காக ஜெயிக்க உதவட்டும்; அதிலுள்ளவைகளை அவருக்காக சேர்க்க நம்மை உற்சாகப்படுத்தட்டும் (யோசு 6 :24) மீண்டும் கீழ்ப்படிதல் கொடி ஏந்தி பவனிவரட்டும்.

சபைத் தலைவர்களுக்காக நாம் எத்தனையாய் போராடி ஜெபிக்க வேண்டும் என்பதனை உணர்த்துவிப்பது நலம். நாம் அவர்கள் நமக்காக ஜெபிக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம். தவறல்ல, ஏனெனில், "உங்களை நடத்துகிறவர்கள் (Leader) உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால்" என்றே வேதம் கூறுகிறது (எபி 13:17). ஆயினும், **அவர்களுக்காக நாமும் நிச்சயமாக ஜெபிக்க வேண்டும் என்பதனையும் மறக்கலாகாது** (கொலோ 4:4; எபே 6:20; ரோமர் 15:32) அதனுடைய அவசியத்தையும், அவசரத்தையும் அறிந்தால் மிகவும் நலமாயிருக்கும்.

மேய்ப்பனை (Leader) வெட்டு அப்போது ஆடுகள் சிதறடிக்கப்படும் என்பதும் (சகரி13:7), மேய்ப்பனிலில்லாததினால் ஆடுகள் தொய்ந்து போவதனையும் (மத் 9:36), மேய்ப்பனில்லாத ஆடுகளுக்கு எஜமான் இல்லை (I இரா 22:17) என்பதும் நாம் அறிந்த உண்மை.

கூடவே, இந்த ஆவிக்குரியத் தலைவர்கள் நிலையைச் சார்ந்ததே தேசத்தின், விசேஷமாய் சபையின் நிலையாகும் என்பதனையும் மறுப்பதற்கில்லை.

"உங்கள் நிமித்தம் சீயோன் வயல் வெளியைப்போல் உழப்பட்டு எருசலேம் மண்மேடுகளாய்ப்போம். ஆலயத்தின் பர்வதம் காட்டு மேடுகளாய்ப்போம்" என்று நேரடியாகக் குற்றம் சாட்டும் கர்த்தர் (மீகா 3:12); அதற்குக் காரணத்தையும் சொல்லாமல் விடவில்லை.

"சீயோனை இரத்தப்பழியினாலும், எருசலேமை அநியாயத்தினாலும் கட்டுவிக்கிற யாக்கோபு வம்சத்துத் தலைவர்களே, இஸ்ரவேல் வம்சத்து அதிபதிகளே, இதைக் கேளுங்கள் அதின் தலைவர்கள் **பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள்.** அதின் ஆசாரியர்கள் **கூலிக்கு உபதேசிக்கிறார்கள்.** அதின் தீர்க்கதரிசிகள் **பணத்துக்குக் குறி சொல்லுகிறார்கள்.** ஆகிலும், அவர்கள் கர்த்தரைச் சார்ந்து கொண்டு, கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள் மேல் வராது" என்கிறார்கள் (மீகா 3:10,11) என்ற குமுறலின் சத்தம் தேவனிடத்திலிருந்து தொனிக்கிறது. எனவே தலைவர்களுடைய நடவடிக்கைகள் சபையைப் பாழாக்கவும், மண்மேடாக்கவும் போதுமான வல்லமையுள்ளவை, என்பது தெளிவு.

ஏழை கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வறுமையை ருசித்து, அதனால் எப்படியும் படித்து முன்னேற வேண்டும் என்று விடாப்பிடியாக, பெற்றோரின் மிகுந்த தியாகத்தில் வளர்க்கப்பட்டு ஒரு இன்ஜினியரிங் முதுநிலைப்பட்டதாரியாகிய பெண் தன் குடும்பத்தினை ஏழ்மையிலிருந்து தூக்கிவிடவும் அவர்கள் தனக்காக பட்ட வேதனைகளுக்கு ஆறுதல் செய்யவும் கிறிஸ்தவ சபையால் நடத்தப்படும் இன்ஜினியரிங் கல்லூரிக்கு வேலைக்கு விண்ணப்பித்தபோது, அவளிடத்தில் 2 லட்சம் எதிர்பார்க்கப்பட்டது. அவளோ எனக்கு வேலை தந்து என் சம்பளத்தில் அதனைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று கண்ணீரோடு மன்றாடியும் சபை தலைமையில் உள்ள அந்த நிர்வாகிகள் அவளைத் தூக்கி வெளியே தள்ளினதுதான் மிச்சம். **"பணம் இருந்தால் வா" இல்லையென்றால் வராதே என்ற இந்த நச்சுப்பாம்புகள் கையில் இந்த மக்கள் படும் பாடு சபையை வனாந்தரமாக்கி விடாதோ?**

"அவர்களில் சிறியோர் முதல் பெரியோர் மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர். இதுவுமல்லாமல் தீர்க்கத்தரிசிகள் முதல்

ஆசாரியர் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர்" (எரே 6:13) இந்த ஜனத்தை நடத்துகிறவர்கள் (மூப்பன், பொய் போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசி) எத்தருமாய், அவர்களால் நடத்தப்படுகிறவர்கள் நாசமடைகிறவர்களுமாய் இருக்கிறார்கள்." (ஏசா 9:15,16)

**"அநேக மேய்ப்பர்கள் என் திராட்சைத் தோட்டத்தை அழித்து, என் பங்கைக் காலால் மிதித்து, என் பிரியமான பங்கைப் பாழான வனாந்திரமாக்கினார்கள்; அதைப்பாழாக்கி விட்டார்கள். பாழாய்க் கிடக்கிற அது என்னை நோக்கிப் புலம்புகிறது. தேசமெல்லாம் பாழாயிற்று"** (எரே 12:10, 11) என்று அங்கலாய்க்கும் காத்தரின் சத்தம் இந்தக் காரியம் நடந்ததற்குக் காரணக்கர்த்தரான தலைவர்களேயே குற்றம் சாட்டுகிறது. அவர்களுடைய பொருளாசை செய்யும் இந்த வினோத பாழாக்குதல் அவரை அதிரச் செய்கிறது.

இதன் நிமித்தம் உண்டாகும் தேவ கோபாக்கினை, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி கவிழ்த்துப் போடச் செய்து விடுமே. (ஏசா 24:1)

அது அனைவரையும் தாக்கி விடக்கூடுமே; எனவே, நாம் ஒதுங்கி நிற்கக் கூடாதே. ஏனெனில், **"அப்பொழுது ஜனத்துக்கு எப்படியோ அப்படியே ஆசாரியனுக்கும், வேலைக்காரனுக்கு எப்படியோ அப்படியே எஜமானுக்கும் வேலைக்காரிக்கும், கொண்டவனுக்கு எப்படியோ அப்படியே விற்றவனுக்கும், கடன் கொடுத்தவனுக்கு எப்படியோ அப்படியே கடன் வாங்கினவனுக்கும், வட்டி வாங்கினவனுக்கு எப்படியோ அப்படியே வட்டிக் கொடுத்தவனுக்கும் எல்லாருக்கும் சரியாக நடக்கும். தேசம் முழுவதும் கொள்ளையாகி முற்றிலும் வெறுமையாகும்."** (ஏசா 25:2)

மேய்ப்பர்களைக் குறித்து சொல்ல ஆரம்பித்த ஆண்டவர் அவர்களை வழி தப்பப்பண்ணின தீர்க்கதரிசிகளைக் குறித்தே புலம்பித் தவித்து, தீர்க்கதரிசியும் ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள்; **என் ஆலயத்திலும் அவர்களுடைய பொல்லாப்பைக் கண்டேன்** என்றே சொல்லுகிறார் (எரே 23:1,11). மேலும், தீர்க்கதரிசிகளை நினைக்கையில் தன்னுடைய எலும்புகள் அதிருகிறதாகவும், அவர்களுக்கு தான் விரோதி என்றும் சூளுரைக்கிறார் (எரே 23:9,31). பிரயோஜனமற்ற இந்தத் தலைவர்கள் கேட்டையும் வரவழைத்து விடுகிறார்களே, (எரே 23:32)

எனவே வழிதப்பி நடக்கும் இந்தத் தலைவர்களை, மற்றவர்களையும் வழி தப்பி நடக்க ஏவிவிடும் இவர்களை (II இராஜா 21:9), தேவ சமூகத்தில் கொண்டு வந்து போராடி ஜெபிக்கத் தவறுவோமானால் நாமும் சபையின் பாழடிப்புக்குப் பங்காளியாகிவிடுவோமே.

இராணுவத்தில் பணி புரிந்து பின்னர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் ஒருவருக்கு குடும்பத்தில் கொஞ்சம் கடன் இருந்தது. இந்துக் குடும்பத்தில் இருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவருக்கு ஒரு லட்சம் ரூபாய் இராணுவப்பணியிலிருந்து வந்தது. தான் செல்லும் சபையின் போதகரிடத்தில் அதனைத் தந்து ஜெபித்து வாங்கித் தன் கடன் சுமையை மாற்ற நினைத்த அவர், அந்த பணத்தினைப் போதகருக்குத் தர, போதகர் சில நாட்கள் கழித்துத் தருகிறேன் என்று சொல்லி, பின்னும் சில நாட்களில் “நீ அதனை ஊழியத்திற்குத்தானே தந்தாய்” என்று ஏப்பம் போட்ட காட்சியைக் கண்ட அந்தக் குடும்பமே தற்கொலை செய்ய எத்தனித்த போது, தேவ தயவினால் காப்பாற்றப்பட்டனர். இது கொள்ளைக்காரரை விட மோசமாயிருக்கிறதே.

பறிகாரரின் கூட்டங்கள் ஒருவனுக்குக் காத்திருக்கிறதுபோல, சீகேமுக்குப் போகிற வழியிலே கொலைச் செய்கிற ஆசாரியரின் கூட்டம் காத்திருக்கிறது; தோஷமான காரியங்களையே செய்கிறார்கள் (ஓசியா 6:9). ஆவியைப் பெற்ற மனுஷர்கள் பித்தங்கொண்டவர்களுமாயிருக்கிறார்கள். எப்பிராயீமின் காவற்காரர் என் தேவனோடு எதிர்த்து நிற்கிறார்கள். தீர்க்கதரிசி தன் வழிகளில் எல்லாம் குருவி பிடிக்கிறவனுடைய கண்ணியாகவும் தன் தேவனுடைய ஆலயத்திலே பகையாளியாகவும் இருக்கிறான். (ஓசியா 9:7,8)

ஐயோ! தலைமைத்துவம் நடக்கும் நடக்கை தேவனைப் புலம்பச் செய்கிறதே. மனம் வேகாதோ, அழுகை அவரோடு சேர்ந்து இணையாதோ? அவர் சத்தம் நம்மில் தொனிக்காதோ? தேசமும், சபையும் மண்மேடாகாமல் தடுக்க எழும்புவோம்.

சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியளவாய் கண்ணீர் விடு. ஓய்ந்திராதே உன் கண்ணீர் கறுப்பு விழி சும்மாயிருக்க வொட்டாதே. எழுந்திரு இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு (புல 2:18,19)

அப்படிச் செய்யும் போது, தேவன் வைராக்கியம் கொண்டு, தம் ஆடுகளை அவர்கள் கையில் இருந்து கேட்டு வாங்கி, **மேய்ப்பர் இனித் தங்களையே மேய்க்காதபடி, மந்தையை மேய்க்கும் தொழிலை விட்டு அவர்களை விலக்கி, ஆடுகளை அவர்கள் வாய்க்குத் தப்பப் பண்ணுவார்.** (எசே 34:10)

கூடவே, அவர் ஆதரிக்கிற தாசர்களை எழும்பப்பண்ணி, அவர்கள் மேல் பிரியமாயிருந்து தம்முடைய ஆவியை அவர்கள் மேல் அமரப்பண்ணுவார். அவர்கள் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்கள். அவர்கள் நெரிந்த நாணலை முறிக்காமல், மங்கி எரிகிற திரியை அணைக்காமல் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்கள் (ஏசா 42:1,2). ஏனெனில், அவர்கள் கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக் கொண்ட அவருடைய ஊழியக்காரர் (II கொரி 11:3). **அவலட்சணமான ஆதாயத்திற்கு அல்ல, உற்சாக மனதோடு ஊழியம் செய்ய ஒப்புக்கொடுத்தவர்கள் மந்தைக்கு மாதிரியாக திகழ்பவர்கள்** (I பேது 5:2,3). பெரிய மேய்ப்பன் வரும் போது (எபி 13:20) வெட்கப்படாத ஊழியக்காரர். தேவனுக்கு முன்பாக உத்தமராக நிறுத்தும் படி ஜாக்கிரதையிருப்பவர்கள். (II தீமோ 2:15)

அப்பொழுது, சபையினிடத்திற்கு எல்லா ஜாதிகளும் ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் அவர் பாதையில் நடக்க ஒப்புக்கொடுப்பார்கள். கர்த்தரின் வெளிச்சத்தில் நடப்பது அவர்களுக்கு ஆனந்தமாகும். (ஏசா 2:1-3; மீகா 4:1-4) இது இன்றைய அவசரத் தேவை.

# 37. தரிசனம் பெற்றவன்

சில நேரங்களில் அவரின் வார்த்தைகளையும், தரிசனங்களையும் நாம் மாத்திரமே கேட்க, காண நேரிடலாம். தானியேலாகிய நான் மாத்திரம் அந்தத் தரிசனத்தைக் கண்டேன். என்னோடே இருந்த மனுஷரோ அந்த தரிசனத்தைக் காணவில்லை. அவர்கள் மிகவும் நடுநடுங்கி ஓடி ஒளித்துக்கொண்டார்கள். நான் தனித்து விடப்பட்டு அந்த பெரிய தரிசனத்தைக் கண்டேன். என் பெலனெல்லாம் போயிற்று. என் உருவம் மாறிப்போயிற்று திடனற்றுப்போனேன். அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டபொழுது நான் முகங்கவிழ்ந்து நித்திரைப் போகிறவனாய்த் தரையில் முகங்குப்புற விழுந்தேன். (தானியேல் 10:7-10)

இது எப்போது நடந்தது? தானியேல் மூன்று வாரமுழுவதும் துக்கித்து, ருசிகரமான அப்பத்தைப் புசிக்காமல், பரிமள தைலம் பூசிக்கொள்ளாமல், அறிவை அடைவதற்கும் தேவனுக்கு முன்பாக தன்னை சிறுமைப்படுத்துவதற்கும் தன்னை ஒப்புக்கொடுத்து, **தன் ஜனத்தினுடைய நிலையினைச் சிந்தித்து கவலையோடே இருக்கும்போது நேரிட்டது.** (தானியேல் 10:2,3,12,14)

கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் நன்றாக விளங்கும். இப்போது தனியேலுக்கு 90 அல்லது 91 வயது. பெர்சியாவில் ராஜாவாகிய கோரேஸ் தன்னுடைய முதல் வருடத்திலேயே தேவ ஆவியினாலே உந்தப்பட்டு, தனக்கு இந்த உயர்வு எப்படி வந்தது? ஏன் வந்தது? என்பதனை உணர்ந்தவனாக, “எருசலேமின் ஆலயம் கட்டப்படவேண்டும்” என ஆவல் கொண்டு, அதற்காக காரியங்களைச் செய்யத் தொடங்குகிறான் (எஸ்றா 1:1-8). உற்சாகமாக தேவ ஆவியினால் ஏவப்பட்ட ஜனங்கள் பொன்னோடும் பொருளோடும் பாபிலோனை விட்டு புறப்பட்டுப் போகிறார்கள். ஆனாலும், அங்கேயுள்ள ஜனங்களுக்குப் பயந்து முதலாவது பலிபீடத்தைக் கட்டுகிறார்கள் (எஸ்றா 1:3). பின்னர் ஆலயம் கட்ட ஆயத்த வேலைகளைச் செய்கிறார்கள். ஆனால் இதற்குள் அங்கே இருந்த புறஜாதிகளால் எதிர்ப்பு தோன்ற தேவ வேலை நின்றுபோகிறது (எஸ்றா 4:1-5).

இதனை அறிந்த தானியேல் (தான் பாபிலோனில் வயதின் நிமித்தமாக தங்கிவிட்டபடியினால்) கவலை கொள்ளுகிறான்; வேதனைப்படுகிறான். தேவ ஆலயத்தின் மேலும், தேவ ஜனங்கள் மேலும் அலாதியான வாஞ்சையுள்ள அவனுக்கு (தானி 9:1-3) தேவனுடைய பணி நின்றுபோனதைக் குறித்து பெருங்கவலை. உணவு உட்கொள்ள முடியவில்லை, அலங்காரமும் பிடிக்கவில்லை. வயதின் காரணமாக தான் போகமுடியவில்லை என்ற கவலை ஒரு புறம். எனவேதான், பெர்சியா ராஜா கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வருடத்தில் இப்படிப்பட்ட ஒரு உபவாசத்தினை மேற்கொள்ளுகிறான். (தானி 10:1)

ஏசாயா மூலம் கோரேசைக் குறித்து, **"அவன் என் மேய்ப்பன், அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான்"** என்று தேவன் உரைத்திருந்தார் (ஏசா 44:25). அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தினை நிறைவேற்றவேண்டிய ஜனம் புறஜாதியினரால் தடுக்கப்பட்டுவிட்டார்களே என்ற ஆதங்கம், கரிசனை அவனை ஒடுக்கச் செய்து தேவனை நோக்கி கதறச் செய்ததினால்தான் தேவன் தானியேலுக்கு தரிசனத்தையும் தந்து காரியங்களையும் தெளிவுறச் செய்கிறார்.

**இன்றைக்கும் அனைவரும் தேவ தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் காரணம் இதுதானோ?** வயது ஒரு தடையாயிருக்காது தரிசனங்களைக் கண்டு தேவ வார்த்தைகளைப் பெறுவதற்கு. பலவீனங்கள் தடையாக மாற வாய்ப்பில்லை. உள்ளத்தினை உறுத்தும் காரியங்கள் எது என்பதனைக் கண்டுகொண்டு தேவ வார்த்தை, வாக்குத்தத்தங்களின் தெளிவு நம்மை இப்படிப்பட்ட நிலைக்குத் தள்ளிவிட்டால் எத்தனை நலமாயிருக்கும்.

நான் இதில் ஈடுபடவில்லை என்று தானியேலினால் ஒதுங்க முடியவில்லை. புறப்பட்டுப் போனவர்களைக் குறித்த பாரம், தேவ பணியினைக் குறித்த வைராக்கியம், தேவ ஜனங்களைக் குறித்த அழுத்தம் அவனை சும்மா இருக்கவிடவில்லை. விளைவு, முடிவு காலம் வரை நடக்கப்போகும் காரியங்களைக் குறித்து தேவன் அவனோடு பேசுகிறார். இன்று அவை தீர்க்கதரிசன வார்த்தைகள்.

தேவ ஜனங்கள் பக்கத்தில் ராஜாவின் கட்டளை இருந்தது. ராஜாதி ராஜாவின் வாக்குத்தத்தம் இருந்தது. ஆனால், **தேவ ஜனங்கள் பயந்ததினால், விசுவாசம் இல்லாமல் செய்யவேண்டிய வேலையைச் செய்யவில்லை.** இன்றும், தேவாதி தேவனுடைய இறுதி ஆணையும் கட்டளையும் நமக்குத் தரப்பட்டாலும், அதனை நிறைவேற்ற ஏற்றச் சூழ்நிலைகள் இருந்தாலும், **நம்முடைய தரிசனக் குறைவு நம்மைச் செயலற்றவர்களாக மாற்றிவிட வாய்ப்புகள் உண்டு** என்பதை மறக்கலாகாது.

கூடவே, போர்க்களத்தில் யுத்த வீரர்களாய் புறப்பட்டுச் சென்றிருக்கும் மிஷனரிகளைக் குறித்த கரிசனையும் நினைவும் நம்மையும் பாதிக்கவேண்டிய அவசியம் உண்டு. வேலைகள் தடை செய்யப்படும் பயமுறுத்துதல்களால் அவர்கள் செயலற்றுப் போகவிடக்கூடாது, விசுவாசக் குறைவு அவர்களைக் குன்றிப்போகச் செய்யக்கூடாது.

அப் 10-ம் அதிகாரத்திலும் தேவன் பேதுருவின் மூலம் தன்னுடைய திட்டத்தினை அறிவிக்கிறார். புறஜாதிகளும் ஆண்டவரை அறிய நான் கிரியை செய்ய ஆரம்பித்துவிட்டேன்; ஆகையினால், **நீ உன் எல்லைகளைத் தாண்டிப் பார்க்கக் கற்றுக்கொள்** என்பது போலப் பேசுகிறார்; தரிசனமும் அதற்கொப்பத் தரப்படுகிறது. யூதரல்லாதவர்களும் ஆண்டவருக்கு உரியவர்களே என்பதனை உணர, யூத குலத்திலே தோன்றிய பேதுருவுக்கு புரிய நேரம் பிடிக்கிறது. தேவன் கிரியை செய்கிற கொர்நேலியுவின் குடும்பத்தினரைக் காணவும், அவர்களுக்குத் தன் இரட்சிப்பின் செய்தியினை எடுத்துரைக்கவும் தேவன் அவனுக்கு பெரிய தரிசனத்தைத் தரவேண்டியுள்ளது.

**தரிசனம் பெற்றவன்தான் கிரியைச் செய்ய தன்னை ஒப்புக்கொடுக்கமுடியும்.** கூடவே அதனை எதிர்ப்போருக்கும் விளங்கச் செய்யமுடியும் (அப் 11:1-19). இன்று தேவன் கிரியைச் செய்கிற ஸ்தலங்களைக் கண் கூடாகக் காணும் பாக்கியம் பெற்றவர்கள் யார்? தேவ தரிசனத்தையும் தேவ இராஜ்ய எல்லைப் பெருக்கத்தினையும் கண்டவர்களே. **குறுகின பார்வையுள்ளோருக்கு இப்படிப்பட்ட தரிசனங்கள் கிடைப்பது அரிது.**

**"அந்த பரம தரிசனத்திற்கு கீழ்ப்படியாதவனாக இருக்கவில்லை"** (அப் 26:19) என்ற பவுலின் கூற்று தெளிவான தரிசனத்தினைத் தனியாக கண்டதினால்தான். அந்த தரிசனத்தினைப் பார்த்தபோது, கூட நின்றவர்கள் அதனைக் காணவோ அந்த சத்தத்தினைக் கேட்கவோ கூடாமற்போயிற்று (அப் 22:9). **கர்த்தரின் சித்தம் செய்ய ஒப்புக்கொடுத்த மனுஷனே அதனைக்காண்பான்** (அப் 9:6). இன்றைக்கு அநேகர் மிஷனரி ஊழியத்தினைப் புரிந்துகொள்ளவோ, தேவனின் இதயத்துடிப்பை அறிந்துகொள்ளவோ கூடாமற்போகிறார்கள். சிலருக்கு அதனுடைய தேவை விளங்கவில்லை. சிலருக்கு அதனுடைய மேன்மை தெரிவதில்லை. சிலருக்கு அதனுடைய அவசரம் புரிவதில்லை. தரிசனம் பெற்றவர்களுக்கோ அது தெளிவாகத் தெரிகிறது. அவர்களும் தீவிரப்படுகிறார்கள் அதற்கு, எத்தனை பெரிய கிரயமும் செலுத்த ஆயத்தமாயுள்ளனர்.

அதனை அந்தியோகியா சபை அறிந்தது (அப் 13:2). இழக்கவும் ஆயத்தமாயிற்று. தேவனின் விருப்பம் செய்ய ஒப்புக்கொடுத்தது. கூடவே, **"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களான"** பர்னபா பவுல் என்பவர்கள் (அப் 15:25) புறப்பட்டுப் போனதினால் தேசங்கள் தேவனை அறிந்தது. கர்த்தருடைய வசனம் பிரசித்தமாயிற்று.

இன்றும் தேவன் அப்படிப்பட்ட தேவ மனிதர்களையும், தேவ சபைகளையும் தேடுகிறார்; தரிசனம் தர வாஞ்சிக்கிறார். தன் இராஜ்யத்தின் எல்லையைப் பெருக்க விரும்புகிறார். ஆனால், இன்றைக்குத் தரிசனம் கண்டேன் என்று சொல்லுகிறவர்களின் அபத்தம் அதிகம்.

இதனைத்தான் எரேமியா, எதுவரைக்கும் இப்படியிருக்கும்? பொய் தரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் இருதயத்தில் ஏதாகிலுமுண்டோ? இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்கள்.

என் ஜனத்தின் பிதாக்கள் பாகாலினிமித்தம் என் நாமத்தை மறந்ததுபோல, இவர்கள் தங்கள் அயலாருக்கு விவரிக்கிற தங்கள் சொப்பனங்களினாலே என் நாமத்தை அவர்கள் மறக்கும்படி செய்யப்பார்க்கிறார்கள். சொப்பனங்கண்ட

தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக. என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக **கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம்?** என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 23:26-28)) எனக் கூறி பொறுமுகிறார். அப்படிப்பட்டவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்பதனையும் கூறுகிறார் (எரேமியா 23:32).

ஏசாயா ஒரு தரிசனம் காண்கிறார், (ஏசாயா 6ம் அதி) அதைக் கண்டு, அவர் பயந்து நடுங்குவதோடு மட்டுமல்லாமல், அந்த தரிசனம் அவரை அர்ப்பணிக்கச் செய்வதோடு, தேவன் தேடும் நபராக மாற்றிவிடுகிறது. தேவ அங்கலாய்ப்பை நிவிர்த்தி செய்ய தேவன் கையில் எடுக்கும் பாத்திரமாக மாற்றிவிடுகிறது. தான் சுத்திகரிக்கப்பட்டுவிட்டேன் என்ற நிலையில் அல்லது தான் தேவனுக்குரியவனாய் தேவ பணியைச் செய்யவேண்டியவன் என்பதனை உணர்ந்து தேவ சித்தம் நிறைவேற்ற ஒப்புக்கொடுக்கும் மகனாக மாற்றிவிடுகிறது எத்தனை உண்மை! தரிசனம் பெறுவோம் தனித்து தேவ சமூகத்தில் நிற்கும் வேளையில். தேவ சத்தம் கேட்போம் அதனையே கூவி அறிவிப்போம்.

## 38. தெரிந்து கொள்ளப்படுவதற்கான தகுதி

**"தேசத்தில் பக்தியுள்ளவன் அற்றுப்போனான்; மனுஷரில் செம்மையானவன் இல்லை; அவர்களெல்லாரும் இரத்தஞ் சிந்தப் பதிவிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் சகோதரனை வலையிலே பிடிக்க வேட்டையாடுகிறான். பொல்லாப்புச் செய்ய அவர்கள் இரண்டு கைகளும் நன்றாய்க் கூடும்; அதிபதி கொடு என்கிறான்; நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான்; பெரியவன் தன் துராசையைத் தெரிவிக்கிறான்; இவ்விதமாய்ப் புரட்டுகிறார்கள்"(மீகா 7:2,3)**

**அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின்மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற்காலமாகிறபோது அதை நடப்பித்து, வயல்களை இச்சித்துப் பறித்துக் கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக் கொண்டு, புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்குகிற ஒரு கூட்டத்தையும் மீகா காண்பிக்கிறான். (மீகா 2:1,2)**

**இப்படிப்பட்ட புலம்பலின் சத்தம் சேத்தினைக் குறித்து தீர்க்கனாகிய மீகாயாவுக்கு உண்டானது போல நமக்கு உண்டாயிருந்தாலும்,** தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என பறை சாற்றும் தேவ ஜனங்களுக்குள்ளும் உண்டாயிருக்கும் கொடுமைதான் நம்மை திகைக்கவைக்கிறது. "அதின் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள். அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள். அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்கு குறி சொல்லுகிறார்கள். ஆகிலும் அவர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டு கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ தீங்கு எங்கள் மேல் வராது என்கிறார்கள்" (மீகா 3:11) என்ற வார்த்தைகள் இன்றைய ஆவிக்குரிய நிலைமைதனை நமக்குச் சுட்டிக்காட்டவில்லையா? காரணம், தேவ ஜனத்தின் காவற்காரர்கள் (மீகா 7:4) **யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கத் தவறி, நிரப்பப்படவேண்டிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்படாமல் (மீகா 3:8),** மனம்போன போக்கில் நடந்து, அபத்தமானதை உரைத்து, வெறி கொள்ளச் செய்பவைகளைப் பிரசங்கித்து (அது பொருளாசையை

சார்ந்து, பரவசத்தினால் நிரப்பப்படுதலைக் குறித்துமே உள்ளது), தாங்களே ஜனத்திற்கு ஏற்ற பிரசங்கி எனக் கூறி (மீகா 2:11) ஏமாற்றித் திரியும் கூட்டம் ஆவிக்குரிய உலகில் மிகுந்துவருகிறது; **ஜெபிப்போம். தெளிவு பெறுவோம், போராடுவோம்.**

**தெளிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக** "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" நாம்.

**இயேசு இதனை அழகாய்ச் சொன்னார். நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன் (யோவான் 15:16). அதின் ஆழத்தினைப் புரிந்துகொண்டால் எத்தனை நலமாயிருக்கும்.**

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நிமித்தமே உலகின் உபத்திரவத்தின் நாட்கள் குறைக்கப்படுகின்றன (மத் 24:22). தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமே ஜெபங்கள் கேட்கப்படுகின்றன (லூக்கா 18:7). தெரிந்துகொள்ளப்பட்டவர்களை யாரும் குற்றப்படுத்த முடியாது (ரோமர் 8:33). தெரிந்துகொள்ளப்பட்டவர்களே அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறவர்கள் (1பேது 2:9). தெரிந்துகொள்ளப்பட்டவர்களே தூதர்களால் இறுதி நாளில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். பூமியில் உள்ளோர்கள் புலம்பும்போது தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கூட்டப்படுவார்கள் (மத் 24:30,31).

ஆனால், இன்றைய வேதனை என்னவெனில், **தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படத்தக்கதாக காரியங்கள் நடைபெறுகிறது** என்பதே (மத் 24:24). அந்த வஞ்சகத்தினைப் புரிந்துகொள்ள தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் யார்? என்பதனை வேதத்தின் வெளிச்சத்தில் காண்பது ஏற்றதாய் இருக்கும்.

இதனை இயேசு உவமைகளால் நன்றாக தெளிவாக விளக்கியுள்ளார். மத்தேயு 21:28 முதல் மத்தேயு 22:14 வரை சொல்லப்பட்ட மூன்று வரிசையான உவமைகளில் அதனைத் தெளிவாக விளக்குகிறார். அந்த உவமைகளைச் சொன்ன பின்னரே **"அந்தப்படியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர்"** என்ற முழக்கமிடுகிறார் (மத் 22:14).

அழைப்பு அனைவருக்கும் உரியது, ஆனால் தெரிந்துகொள்ளப்படுகிறதற்கானத் தகுதியினை பெறுவது நம் கையில் உள்ளது என்பது இவைகளில் நன்றாக விளக்கப்பட்டுள்ளது. முதலாவது அழைப்பு எதற்காக என்பதனைக் காண்போம்.

- ❒ மத்தேயு 21: 28-32 **பணி செய்ய அழைப்பு**
- ❒ மத்தேயு 21: 33-43 **பாதுகாக்க அழைப்பு**
- ❒ மத்தேயு 22: 1-14 **பந்திக்கு அழைப்பு**

முதலாவது உவமையில் சொல்லளவில் தான் கீழ்ப்படிவது போல காண்பித்து பின்னர் அதனை செய்யாமல் விட்ட இளைய மகனை ஆண்டவர் குறிப்பிடுகிறார் (மத் 21:30). ஆனால், மூத்த மகனோ என் தகப்பன் வீட்டு திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்வது எனக்குத் தானே லாபம் என்பதனை உணர்ந்து மனந்திரும்பி பணிக்குப் புறப்படுகிறான் (வச 29). **வாய்ச் சொல்லில் மாத்திரம் கீழ்ப்படிவோர் எத்தனை பேர், செயலில் அதனைக் காணவே இயலவில்லையே.** சொல்லிய வார்த்தைகளைக் கேட்டும், ஒப்புக்கொடுக்காமல், செயல்படாமல் இருப்போரைத்தானே வேதம் மணலின் மேல் கட்டியவர்களோடு ஒப்பிடுகிறது (மத் 7:26).

இதனைத்தானே ஏசாயா "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படும் பயம் மனுஷனாலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" (ஏசாயா 29:13) என்று புலம்புகிறான். எத்தனையான ஆராதனைகள், பாடல்கள், ஆரவாரங்கள் இன்று சபைகளிலே, சங்கங்களிலே அத்தனையும் உதட்டளவில்தானே. வாழ்வில் அதனைக் காண்பிக்கும் அர்ப்பணமும் கீழ்ப்படிதலும் எங்கே?

அதனைக் கண்ட கர்த்தரும், ஓசியாவின் வாயின் மூலமாக "உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒழிந்துபோகிறது" (ஓசியா 6:4) என்று கூறுகிறாரே! பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம் அல்லவா! (1சாமு 15:22). **கீழ்ப்படியாமை விக்கிரக ஆராதனை அல்லவா!**

ஆக, **தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வரிசையில் காணப்பட தேவன் எதிர்பார்ப்பது கீழ்ப்படிதலே, அதுவே முதலாவதும் முக்கியமானதுமாகும்.**

இரண்டாம் உவமையில் ஆண்டவர் கூறுவது (மத் 21:33-43), **நாம் சொந்தக்காரர்கள் அல்ல, உரிமையாளர்கள் அல்ல, உக்கிராணக்காரரே.** நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட வாழ்வு, நேரம், தாலந்துகள், கிருபைகள், சந்தர்ப்பங்கள், பணம், செல்வாக்கு, அந்தஸ்து, ஆட்கள் அனைத்திற்கும் **நாம் உக்கிராணக்காரர்களே, உரிமையாளர்கள் அல்ல.** இதனைப் புரிந்துகொண்டவர்கள் எத்தனை பேர். தன்னுடைய பங்கைப் தந்தவர் கேட்கும்போது நாம் எப்படி செயல்படுகிறோம் என்பது எத்தனை முக்கியம் (வச 34, 35).

நமக்குத் தேவன் தந்துள்ள அனைத்திலும் அவரின் பங்கு அவருக்கு சேர நான் துடிக்கிறேனா! பீகாரில் நிலத்தை உடையவன் குத்தகைக்கு விட்டால் அதில் பயிரிடுகிறவன் பாதியை அவருக்குச் செலுத்தவேண்டும். உழைப்பும், உரமும், விதையும், தண்ணீரும், பாதுகாப்பதும் பயிரிடுகிறவனுக்குக் கொடுக்கப்படும் வேலை. நிலத்தின் சொந்தக்காரருக்கு அதன் பலனில் பாதி போய் சேரவேண்டும். நாமோ "தசமபாகம் கர்த்தருக்குரியது" எனச் சொல்லி நம்மையே வஞ்சித்து வாழ கற்றுக்கொடுக்கப்படுகிறோம், கற்றுக்கொண்டோம்.

வாயில் **"அனைத்தும் கிறிஸ்துவுக்கே"** என்ற பாடல் தொனித்தாலும், அதில் அர்த்தம் சேர்ந்ததில்லை. **அவருக்குரிய பங்கை, எல்லாவற்றிலும் அவருக்குத் தர ஆயத்தமானோரே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வரிசையில் நிற்கத் தகுதி பெறுவார்கள் அல்லவா!** (வச 43). கொஞ்சம் இதனை அனைவரும் ஏன் ஊழியர்களும் யோசித்துப் பார்த்தால் எத்தனை நலமாயிருக்கும். போரடிக்கிறவனுக்கு அனுபவிக்க தேவன் அனுமதி கொடுத்திருக்கிறார் என்றாலும் (1கொரி 9:10) இன்று **அவர் தந்த அனைத்தும் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் என்று வாழ்வோர் எத்தனை பேர்**!

அப்படி தேவனுக்குரிய பங்கினை தரமுடியாதவர்கள் கொலைகாரர்களாகவும் மாறிவிடும் கொடுமைதான் என்னே? (மத் 21:35,39)

மூன்றாவது உவமையில் (மத் 22:1-14) பந்தியிருக்கத்தான் அழைக்கிறார்; தான் உண்டுபண்ணிய பெரிய விருந்துக்குத்தான் அழைக்கிறார். ஆனால், **அவர்களின் அசட்டை அவர்களை கொலையாளிகளாக மாற்றவும் தயங்கவில்லை** (வச 5,6); காரணம் முன்னுரிமை தரப்படவேண்டிய ராஜா வீட்டின் அழைப்பு நிராகரிக்கப்பட்டு. நிலத்தினைத் தேடுவதும், எருதுகள் பரிசோதிக்கப்படுவதும், திருமணமும் தடையாய் மாறுகிறது (லூக் 14:18-20); போதாக்குறைக்கு மன்னிப்பையும் கோருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு **மன்னிப்புக் கொடுக்கப்படவில்லை** (மத் 22:7) **மாறாக நியாயத்தீர்ப்பே தரப்பட்டது.**

**நம் வாழ்வில் முதலுரிமை பெறுபவை பின்னுக்குத் தள்ளி வைக்கப்படும்போது நடப்பது என்ன? தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வரிசையில் காணப்படாமற்போவதே**!

தெரிந்துகொள்ளப்பட்டவர்களே ஆட்டுக்குட்டியானவரோடு ஜெயமெடுப்பவர்களாக யுத்தத்தில் நிற்பவர்கள் (வெளி 7:14). மறக்காமல், மறுக்காமல் நமது வாழ்வினை சரிசெய்துகொள்ள தேவ பலனும் ஒத்தாசையும் நமக்குப் பெருகட்டும்.

கீழ்ப்படிதலும், உணர்வும். சரிசெய்தலும் நம்மைத் தகுதிப்படுத்த போதுமான வல்லமை உள்ளவை. தேவன் நம்மைப் பார்த்து "என் சிநேகிதனாகிய ஆபிரகாமின் சந்ததியே, நான் பூமியின் கடையாந்தரங்களினின்று உன்னை எடுத்து அதின் எல்லைகளிலிருந்து அழைத்துவந்து நீ என் தாசன்; நான் உன்னைத் தெரிந்கொண்டேன்; நான் உன்னை வெறுத்துவிடவில்லை" (ஏசாயா 41:9) எனச் சொல்லுவாராக.

# 39. திருத்து அல்லது தகர்த்துவிடு

செருபாபேலை தேவன் எருசலேம் தேவாலயப் பணிக்கு என்றும், இடிந்துபோனதைக் கட்டவும் அனுப்பினார். கட்டப்படும் தேவாலயம் நேராகக் கட்டப்படுகிறதா? என்பதினை அவ்வப்போது சரிபார்த்து கட்டுகிறதற்கு ஒப்புக்கொடுத்தவர்களைத் **திருத்தும் அதிகாரத்தைப் பெற்றிருந்தான்** அந்தத் தலைவன். அவன் அதனைச் சரியாக செய்துவந்தபடியால் **தேவன் அதனை சந்தோஷமாய் பார்த்தார்** என எழுதப்பட்டிருக்கிறது.

இன்றைக்கும் ஆவிக்குரிய உலகில் தேவ இராஜ்யத்தினைக் கட்ட அழைக்கப்பட்டவர்கள் சரியாகக் கட்டுகிறார்களா, என்பதனை அவ்வப்போது **சோதித்துப் பார்க்கும் தலைவர்கள் தேவை.** வேத வசனத்திற்குட்பட்டு, போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுவின் மேலும், அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகளின் உபதேசத்தின் மேலும் கட்டப்படுகிறதா? (எபே 2:20) என்பது அவ்வப்போது கவனித்தறியப்படவேண்டியது மாத்திரமல்லாது, சரியாக இல்லாதபோது திருத்தப்படவேண்டும், அல்லது தகர்த்து எறியப்படவேண்டும்.

ஆனால், பரிதாபம் என்னவென்றால் இன்றைக்கு **"அறியாமல்" "நினையாமல்" "புரியாமல்" செய்யப்படும் காரியங்கள் ஆவிக்குரிய உலகில் ஏராளம்.**

"எலிசாவின் வேலைக்காரனுக்கு எலிசா ஒரு கட்டளை கொடுக்கிறான். பஞ்ச காலத்தில் பட்டினியாயிருக்கும் தீர்க்கதரிசிகளின் புத்திரர் என்று அழைக்கப்பட்ட ஊழியருக்கு உணவு ஆயத்தம் செய்" என்று. அப்படிச் செய்யும் வேளையில் தீர்க்கதரிசியின் புத்திரன் ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய், ஒரு பேய்க்கொம்மட்டிக் கொடியினைக் கண்டு, அதின் காய்களை மடி நிறைய அறுத்து வந்து அவைகளை அரிந்து கூழ்ப்பானையிலே போட்டான். அது இன்னதென்று அவர்களுக்குத் (தீர்க்கதரிசியின் புத்திரருக்கு) தெரியாதிருந்தது. சாப்பிடும்போதுதான் அது சாவுக்கு ஏதுவானதென்று தெரியவந்தது (2இராஜா 4:38-40).

"நல்ல காரியம்தான் செய்கிறோம்" என்று நினைத்து **சோதித்து அறியாமல் இன்றைக்கும் சபைகளிலும் வெளியிலும் நடத்தும் காரியங்கள் எத்தனை?** பார்ப்பதற்கு ஆவிக்குரியத் தோற்றமளிக்கும் அநேகக் காரியங்கள் ஆவிக்குரிய போர்வையைத் தரித்தவைகளே. உதாரணமாக இன்று 48 மணி நேரம் 72 மணி நேரம் தொடர் துதி ஆராதனை என்ற காரியங்கள், ஆவிக்குரிய உலகில் ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பி அடித்து செய்யும் செயல். இவைகளுக்கு ஆதாரம் என்ன? அப்படிச் செய்வதினால் நடைபெறும் காரியம் என்ன? ஜனங்கள் மூன்று நாட்கள் தூக்கத்தினைக் கெடுத்து தொடர்ந்து பாடுவதனை எந்த வேத பகுதியில் (புதிய ஏற்பாட்டில்) நாம் செய்கிறோம். விளைவுகளைக் குறித்து நமக்கு கவலையில்லையா? மதிக்கப்படக்கூடிய தேவ மனிதன் டேவிட் வில்கர்சன் கதறுகிறார் **"இன்று சபையை இசையும், அர்த்தமற்ற துதியும் ஆக்கிரமித்து அதின் சாரத்தை இழக்கவைத்துவிட்டது"** என்று.

தேவனைப் புரிந்துகொண்டு, அவருடைய வார்த்தைகளைத் தெளிவாகத் தியானித்து, கீழ்ப்படியவேண்டியவைகளுக்குக் கீழ்ப்படிந்து, அர்ப்பணிக்கவேண்டியவைகளை அர்ப்பணித்து, **உலக சிநேகிதத்தினைத் தள்ளி செய்யும் ஆராதனை அல்லவோ தேவன் விரும்புவது.** மாறாக விடாமல் இசையின் பெருக்கத்தில் உற்சாகமாக வெறும் வாயின் வார்த்தைகளின் ஜாலத்தில் செய்யும் ஆராதனை கூரையையும் தாண்டுவது இல்லையே.

"மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ, இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார். பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்" என்றுதானே ஞானி சொல்கிறான் (நீதி 21:2,3). எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள் தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை (இயேசுவை) ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து சிலுவையில் அறைந்து ஜீவாதிபதியைக் கொலை செய்தனர் (அப் 13:27); அது பரிசுத்தமும் நீதியுள்ளவரை மறுதலிக்கவும், கொலைபாதகனை

(பரபாசை) தங்களுக்காக விடுதலை செய்யவும் இவர்களைத் தள்ளிற்றே (அப் 3:14). அப்படியே, அறியவேண்டிய பிரகாரமாய் தேவனையும் அவரை ஆராதிக்கும் முறையையும் அறியாததினால், தங்களுக்குப் பிரியமானதைப் பிடித்துக்கொண்டு அதனையே மற்றவர்களுக்கும் வார்த்த தீர்க்கதரிசியின் புத்திரர்களாக காட்சி அளிப்பவர்கள் ஏராளம்; கொண்டு வந்தது சாவே. **சத்துரு நம்மை நயவஞ்சகமாகத் திருப்பிவிடுகிறான் ஜாக்கிரதை.** அதனை மாற்றும் எலிசாக்கள் இன்று எழும்பித்தான் ஆகவேண்டும்.

"ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான் அது இஸ்ரவேலுடைய ராஜாவின் கவசத்து சந்துகளுக்குள் பட்டது" (1இராஜா 22:34). **வில் உண்டு, அம்பு உண்டு ஆனால் எங்கே குறிவைக்கிறோம் என்ற நோக்கமிலை.** ஏதோ செய்கிறோம் என்ற மனப்பாங்கு; போர்க்களத்தில்தான் இந்த மனுஷன் இருந்தான்.

இன்றைக்கும் தேவனுடைய போர்க்களத்தில் வில்லையும் அம்பையும் சுமந்திருக்கும் அநேகர் ஏனோ தானோ என்றே போரிடுகிறார்கள். ஒருவேளை யாரையாகிலும் அது சாகடிக்கட்டும் என்ற நோக்கு. ஊழியப்பாதை உல்லாசப் பாதை அல்ல. அது யுத்தக் களம்; கவனமாக குறிப்பாக தாக்கவேண்டியவைகளும் தகர்க்கவேண்டியவைகளும் உண்டு.

"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2கொரி 10:4,5). அநேக கூட்டங்களின் முடிவில் நாம் **"நல்ல கூட்டம் வந்தது" "பணமும் கிடைத்தது" என்றுதானே முடிக்கிறோம்.** ஏதாவது நடக்கட்டுமே என்ற நோக்கில் செய்யப்படும் பிரசங்கங்கள் எத்தனை? தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எத்தனை? எத்தனையாய் தேவனுடைய பணம் துர்ப்பிரயோகம் செய்யப்படுகிறது. தாவீது ஒரு கல்லை வீசினாலும், அது கோலியாத்தின் நெற்றியைப் பதம் பார்க்குமே (1சாமு 17:49). குறிவைத்து இராட்சதர்களை

வீழ்த்தும் செயல் இல்லாததினால், இன்றைக்குக் கொக்கரிக்கும் இராட்சதர்கள் எத்தனை பேர். எதிரியின் வாயை அடக்க நமக்குப் பலமில்லையா? அல்லது நினைப்பின்றி, குறியின்றி, கொள்கையின்றி நாம் நடந்துகொள்வதால் உண்டாகும் வேதனையா?

சில வேளைகளில் "சுயமாய்ச் சொல்லாமல்" அல்லது புரிந்துகொள்ளாமல், என்ன செய்கிறோம் என்ன சொல்கிறோம் என்பதினைக் குறித்து கவனமில்லாமல் அநேகர் செயல்படுகின்றனர்.

சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தான் காய்பா: மற்றவர்களை "உங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று எல்லாரையும் முட்டாளாக்குகிறான். தான் அனைத்தையும் அறிந்தது போல் "இயேசு ஜனங்கள் அனைவரையும் கெடுக்கிறார்" என்கிறான். மற்றவர்களைக் கொலையாளிகளாகவும் குற்றவாளிகளாகவும் ஆக்க தீவிரம் காட்டுகிறான். **தான் என்ன சொல்கிறேன் என்பதினை அவன் சரியாய் புரிந்துகொள்ளவில்லை** என்றே வேதம் சொல்கிறது. அது ஒரு தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் குறிக்கும் தீர்க்கதரிசன வார்த்தை என்றபோதிலும், சொல்வதனைக் குறித்து ஒரு அறிவும் இல்லை (யோவான் 11:40-53). இதன் நிமித்தம் **தேவாலயக் காசை (காணிக்கையை) எடுத்து காட்டிக் கொடுப்பவனுக்கு லஞ்சம் கொடுக்கவும் அவர்கள் அஞ்சவில்லை.**

நம்முடைய வார்த்தைகள் மக்களை எப்படிப்பட்டக் காரியத்திற்குத் தூண்டுகிறது. "ஊழியத்திற்கு உதவ கடன் வாங்கியாகிலும் தாருங்கள்" என்கிறார் ஒரு தொலைக்காட்சிப் பிரசங்கியார். நீங்கள் கோடீஸ்வரராக மாற இவைகள் வழிகள் என்று கற்றுத் தருகிறார் ஒரு பிரபல பிரசங்கியார்.

"நீ நோயுற்று வாழ்ந்தாலோ, தரித்திரத்தில் வாழ்ந்தாலோ நீ தேவன் இல்லாதவன்" என்று கூறுகிறார் இன்னொரு பொருளாதார ஆசீர்வாதத்தினை மட்டும் கூறும் போதகர். இந்தப் போதனை எந்த வேதத்தில் காணப்படுபவை? இவைகள் செய்து முடித்தக் காரியங்கள்தான் என்ன? "காணிக்கைக் காசை இரத்தக் கிரயமாக்கி பின்னர் அதனை சாபக் காசாக்கிவிடும் பிரதான ஆசாரியர்கள்

(ஊழியர்கள்) தான் எத்தனை பேர் (மத் 27:3-8). அது அநேகர் தற்கொலை (ஆவிக்குரிய) செய்துகொள்வதற்குத்தான் உதவியது (அப் 1:18) ஜாக்கிரதை. என்ன சொல்கிறோம் ஆலோசனையாக, என்ன செய்ய மற்றவர்களை ஏவுகிறோம் என்ற காரியங்களை பிரசங்கிகள் சிந்தித்துப் பேசினால், எத்தனை நலமாக இருக்கும்.

அறியாமையும், புரியாமையும், தெரியாமையும் நம்முடைய திராட்சைத் தோட்டங்களை கெடுக்கும் குள்ள நரிகளும் குழிநரிகளுமே. அதனை அடையாளம் கண்டுகொள்ளவும், அழிக்கவும், தேவ ஜனத்தின் பலன் பெருகவேண்டிய கட்டாயம் உண்டு. வசனத்தின் வெளிச்சத்தில் தெளிவு பெறவேண்டிய அவசியம் உண்டு. செருபாபேலின் கையில் உள்ள தூக்கு நூல் அனைத்தையும் சரிபார்க்கட்டும்.

“பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது தேவதூதன் நின்று என்னை நோக்கி: நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார்” என்ற சத்தம் (வெளி 11:1) தொனிக்கும் நாள் தூரத்தில் இல்லை; நினைவு கூறுவோம் ஜாக்கிரதைப்படுவோம்.

# 40. துரோகிகள்

கடைசி நாட்களின் ஒரு அடையாளமான துரோகத்தினை நினைப்பூட்டுவது நல்லது. இறுதி நாட்களில் மனுஷர் **"துரோகிகளாக இருப்பார்கள்"** என்பது நமக்குத் தரப்படும் எச்சரிக்கை (2தீமோ 3:4).

**விசுவாசத் துரோகம்** முந்தி நேரிடும் என்பதும் அந்திக் கிறிஸ்துவின் வருகைக்கு முன்னடையாளமாகவே உள்ளது (2தெச 2:2). எனவே இதனைக் குறித்த தெளிவு நமக்கு இருப்பது நல்லது.

அந்திக்கிறிஸ்துவை அடையாளம் காட்டும் வேதம், அவன் **உடன்படிக்கைக்குத் துரோகம் செய்வான்** என்பதனைக் காட்டுவதோடு (தானி 9:17, 11:30), துரோகம் செய்கிறவர்களைக் **கள்ள மார்க்கத்தாராக மாற்றவும்** செய்வான் என்பது அதிர்ச்சித் தரும் எச்சரிக்கை ( தானி 11:32). அதனைச் செய்யவைப்பதற்கு இச்சகமான வார்த்தைகளையும் அவன் உபயோகிக்கிறான் என்பதும் இவ்வசனத்தில் தெளிவு. **இச்சக வார்த்தைகளுக்கு மயங்கித் திரிபவர்கள் அதி சீக்கிரத்தில் துரோகிகளாக மாறுவார்கள் என்பது நிச்சயம்.** அந்திக்கிறிஸ்துவின் ஆவி இப்பொழுதும் உலகத்தில் இருந்து கிரியை செய்கிறபடியினால் (1யோ 4:3), அவனுடைய உடன்படிக்கைதனை முறிக்கும் குணம் அநேக குடும்பங்களில் கிரியைச் செய்து, **உடன்படிக்கையின் மனைவி / கணவனுக்குத்** துரோகம் செய்ய அவர்களை ஏவிவிடுகிறது (மல் 2:14). அந்த அந்திக்கிறிஸ்துவின் **ஆவி, உலகில்** கிரியை செய்து மனிதனைத் தள்ளிவிட ஏதுவாக்குவதினால் (மல் 2:15,16), கள்ளத்தனம் பெருக ஏதுவாகிறது. இதனால்தான் இன்றைக்கு அநேக குடும்பங்களில் இப்பிரச்சனைத் தலைவிரித்தாடுகிறது. **கணவன் மனைவியின் உறவினைப் போலத்தானே தேவ, மனித உறவும்.**

"ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வது போல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம் செய்தது மெய்" என்றுதான் கர்த்தர் தம் ஜனத்தினைக் குறித்து அங்கலாய்க்கிறார். (எரே 3:20)

அதுவும், விசேஷ நன்மைகளைச் செய்து உடன்படிக்கையின் நிமித்தம் காக்கப்படும் ஜனம் என்று அழைக்கப்பட்ட யூதாவின் துரோகத்தினை அவர் சகிக்க முடியவில்லையே. (எரே 3:7,13)

**இன்றைக்கும், உலக சிற்றின்பத்தினை நாடி, உலக சிநேகத்தில் மூழ்க விரும்பும், (தன்னால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட) தம் சபையினை தேவன் நோக்கும்போது, அது துரோகம் செய்து வருகிறதே என்றுதானே சொல்லுவார்** (யாக் 4:4). ஒரு வருடத்தில் 365 நாளில் 364 நாட்கள் உன்னோடு இருப்பேன் ஒரு நாள் மாத்திரம் வேறொருவனோடு வாழ்வேன் என்று சொல்லும் மனைவியை துரோகி என்று சொல்லாமல் வேறெந்த பெயரிட்டு அழைக்க முடியும். அவளுடைய 364 நாளின் சிநேகம், சேவையும் மறக்கடிக்கப்பட்டுவிடுமே. அது கேலிக்குரியதும் சந்தேகத்துக்குரியதுமாகிவிட வாய்ப்புண்டே.

இது இராஜாவாகிய நம்முடைய மணவாளனுக்குச் செய்யும் **இராஜ துரோகம்** அல்லவா? “இராஜ துரோகி” மரணத் தண்டனைக்குட்பட்டவன் அல்லவா? (எஸ் 2:23).

பல பெண்களை மணமுடிப்பதனை தவறாக பார்க்காதிருந்த சமுதாயத்திலும், மனைவியின் இந்த செயல் துரோகமாகவேத்தானே பார்க்கப்படுகிறது. (நியா 19:2)

துரோகம் செய்பவர்களைக் கள்ள மார்க்கத்தாராக மாற்றும் **அந்திக்கிறிஸ்துவின் ஆவி இன்று அநேகரை மாய்மாலக்காரராக மாற்றியிருப்பது ஆச்சரியமல்லவே!** (Hypocrites) **பேசுவது வேதம் வாழ்க்கையோ விபரீதம்.**

அந்திக்கிறிஸ்து உடன்படிக்கைதனை உடைக்கிறவனும், உடைப்பதற்கு உதவுகிறவனுமாகவே இருப்பான். ஆனால், கிறிஸ்துவோ உடைத்துப் போடப்பட்ட (மனுஷரால்) உடன்படிக்கைதனை புதிதாக்கி **புதிய உடன்படிக்கைதனை உண்டாக்க எந்த விலைக்கிரயத்தினையும் செலுத்த ஆயத்தமாயுள்ளார்.** (லூக் 22:20)

ஆகையால், முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்துகொள்வதற்காக புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். (எபி 9:15)

எனவேதான், கிறிஸ்துவின் ஆவியையுடையவன் உடன்படிக்கைதனைக் காத்துக்கொள்ள விரும்புவதனைக் காண்பிக்கவே, தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கைதனை ஞானஸ்நானத்தின் மூலம் உறுதிப்படுத்துகிறார். (1பேது 3:11)

**உடன்படிக்கைக்கு உட்பட்ட நாம் எப்படி அவருக்குத் துரோகம் செய்ய முடியும்?** அவர் துரோகிகளுக்கும் நன்றியறியாதவர்களுக்கும் நன்மை செய்கிறவர் அல்லவா. (லூக் 6:35)

**துரோகிகள்** என்றால் **"சுய நலக்காரர்கள்" என்றும் "கீழ்ப்படிய மறுக்கிறவர்கள்" என்றும் அர்த்தப்படுத்துகிறது ஆங்கில அகராதி;** இது எத்தனை உண்மை. இங்கிலாந்து நாட்டின் சட்டத்தில் இராஜதுரோகம் மரணத்தண்டனைக்குரியது என்பது நாடறிந்த காரியம். அது மன்னிக்க முடியாக் குற்றம் என்று கருதப்படுகிறது. “நம்பிக்கைத் துரோகம்” என்ற வார்த்தையை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோமே. **நம்மை நம்பி அவர் தந்த பொறுப்பதனைக் காக்காமல், செயலாற்றாமல் அவரை நாம் ஏமாற்றிவருவோமானால்,** அது நம்பிக்கைத் துரோகம் தானே.

என்னால் இரத்தம் சிந்தி மீட்கப்பட்ட ஜனம், என் இரட்சிப்பைக் கூறி அறிவிக்கும் என்று நம்மை நம்பினாரே, தூதர்களை அவர் நம்பாமல், நம்மை நம்பி உலகத்தினைச் சுவிசேஷமயமாக்கும் பணிதனை நமக்குத் தந்தாரே! ஏமாற்றிவிட முடியுமா?

பழைய ஏற்பாட்டில் “அத்தாலியாள்” என்ற பெண் தன்னுடைய குமாரனாகிய அகசியா ராஜா இறந்தபோது, எழும்பி ராஜ வம்சத்தார் அனைவரையும் கொலை செய்து, தான் ராணி என்று பிரகடனப்படுத்தி அரசாண்டாள். பின்னர் ராஜாவின் குமாரன்

யோவாஸ் 7 வயதானபோது, ஆசாரியனான யோய்தா அவனை ராஜாவாக்கினதைக் கண்ட "அத்தாலியாள்" அதனை "துரோகம் துரோகம்" என்று அலறுகிறாள் (2இராஜா 11:1-16). இன்றும் அப்படியே, **இராஜா இருக்கவேண்டிய ஸ்தானத்தில் தான் இருந்து கொண்டு சொகுசு அனுபவிக்கும் பலர் அவர்களுடையக் காரியங்கள் அம்பலப்படும்போது அதனை "துரோகம்" என்று கூறி தங்களின் துரோகத்தினை மூடி மறைக்க முயலுகின்றனர்.** தாங்கள் "இராஜாங்க துரோகிகள்" என்பதனை மறைக்க தேவ இராஜ்யத்திற்குத் துரோகம் இழைக்கும் இப்படிப்பட்டவர்கள் மற்றவர்கதைத் "துரோகி துரோகி" என்று அழைத்து தங்களை ஆவிக்குரியவர்களாகக் காண்பிக்கும் பொல்லாத காரியம் இன்றைக்கு ஆவிக்குரிய உலகில் மலிந்தே காணப்படுகிறது. **அத்தாலியாள்கள் அகற்றப்பட்டால்தான் தேவசபைகளில் அமரிக்கை உண்டாகும் (2நாளா 23:21), மகிழ்ச்சி பிறக்கும்.**

# 41. உல்லாச ஊழியர்கள்

நாட்கள் வேகமாக உருண்டோடி, நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையான பிரசன்னமாகுதலை எதிர்பார்க்குதலை **(தீத்து 2:13)** தீவிரமாக்கிக் கொண்டிருக்கும் **இந்நாட்களில் ஊழியங்களிலும், ஊழியர்களிலும் காணப்படும் காரியங்கள் நம்மை வேதனைக்குட்படுத்துகிறது.** கர்த்தரின் நாமத்தைக் கூறி உழைப்பவர்கள் மூலமே கர்த்தரின் நாமம் தூஷிக்கப்படுகிறதே (ரோமர் 2:24) கதறுவோம் அன்பரை நோக்கி. எக்காளச் சத்தமிடுவோம் ஜனத்தை நோக்கி. செயல்படுவோம் இந்த கறைதனை நீக்க. இது செயல்படுங்காலம்.

ஒரு வாலிபர் முகாமில் பேசிக்கொண்டிருந்தபோது, என்னைப் பேட்டிக் கண்ட பத்திரிக்கையாளர் ஒருவர், பிரபல ஊழியர் ஒருவர் அப்பட்டணத்தில் நடத்திய ஆடம்பர "திருவிழா" ஒன்றின் காரியங்களைக் குறித்துக் கூறி, அதனால் உள்ளூர் ஊழியங்கள் அழிக்கப்படும் அவல நிலையை எடுத்துரைத்து தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினார். அதே பிரபல ஊழியர், மிகக் குறைவான விசுவாசிகளைக் கொண்ட "பாட்னா" (பீஹார்) வில் நடத்திய கூட்டத்தில், அரை மணி நேரத்திற்கும் மேல் காணிக்கையைப் பற்றிப் பேசி ரூ 100 க்கு குறைத்து யாரும் போடாதீர்கள் என்று உற்சாகப்படுத்தியதையும், ஆத்தும பாரமோ, ஜனங்களின் மேல் கரிசனை அற்றவர்களாகவே நடக்கும் அவர்கள் ஜனத்திற்காக ஜெபிப்பதுபோல் நாடகமாடினார்கள் என்று கூறி அங்கலாய்த்தார். கிறிஸ்தவத்தின் எதிரிகள் இதனைத் தங்களுக்குச் சாதகமாக்கிவிடுவார்களே எனவும் கூறி பதபதைத்தார். இவர்கள் இயேசுவின் பெயரைச் சொல்லி பணம் பறிப்பவர்கள் என்றும் அதனைத் தங்கள் உல்லாச வாழ்விற்குச் செலவழிப்பவர்கள் என்றும் இது அதிக நாட்கள் செல்லாது, ஒரு நாள் வெடிக்கத்தான் போகிறது என்றும் அவர் என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

அவர் பகிர்ந்துகொண்ட இரண்டே வாரத்தில் வேறொரு பத்திரிக்கையில் வெளியான செய்தி என்னை இவ்விரண்டையும் இணைத்துப் பார்க்கச் செய்தது. அப்பத்திரிக்கையின் கட்டுரை

வேத வசனத்தோடுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. **"நரிகளுக்குக் குழிகள் உண்டு ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகள் உண்டு மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (மத் 8:20)** என்ற வசனத்தைச் சொன்னவரைக் குறித்து பிரசங்கிக்கும் பிரசங்கிகளின் நிலமையைத்தான் அது விவரித்திருந்தது.

அதில் எழுதப்பட்ட விஷயங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

பிரபல ஊழியர்கள் (சிலரின் பெயரையும் நடவடிக்கைகளையும் குறித்து) இப்படி **உல்லாச வாழ்க்கை** வாழ இவர்களை ஏவுவது எது?

இவர்களைச் சுட்டிக்காட்ட ஒருவரும் இல்லையா? **யாருடைய காணிக்கைப் பணம்** இப்படி விரயமாக்கப்படுகிறது?

இந்த பிரபல (இந்திய) ஊழியர்கள் பிறந்த பூமியில் சுற்றித் திரிந்த மிஷனெரி **கால்டுவெல் போன்றவர்களின் வாழ்க்கையை இவர்கள் அறிந்ததும் இல்லை. அவர் படுத்திருந்த அறை தன் கைகளை நீட்டினால் தட்டக்கூடிய அளவிலேயே இருந்தது என்பதனை புரியவும் இல்லை.** அவர்கள் எல்லாம் பிடி அரிசி காணிக்கை எடுத்து ஊழியங்களைக் கட்டினவர்கள். அவர்களுடைய தியாக வாழ்க்கையைக் காணாதபடி, இவர்களின் கண்களை அடைத்திருப்பது எது?

இவர்கள் பின்பற்றும் வெளிநாட்டு ஊழியர்களின் **உல்லாசமே** இவர்களையும் வழி தப்பி நடக்கப் பண்ணிற்றோ? இவர்கள் மற்றவர்களை மோசம் போகிறதற்கு வழி செய்கிறார்களோ?

தேவன் மனிதனை உண்டாக்கினார். ஆனால் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதனோ பணத்தைத் தங்களுக்கு உண்டாக்கிக்கொண்டு அதில் புரளுகின்றனரே?

பல கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டச் சொத்தினை சில கோடிகளுக்கே வாங்கினோம் என்று குறைத்துச் சொல்லப்படுகிறதே! **மீதி பணம் எல்லாம் கருப்புப்பணம் தானே.** அது கை மாறும் விதம் எப்படி? வந்த விதம் எப்படி?

**பெரிய பண முதலைகளும், தொழிலதிபர்களும் வெட்கப்படக்கூடிய அளவு உல்லாச வாழ்க்கை** வளர்ந்தது எப்படி?

பெரும் அரசியல் புள்ளிகளைத் தங்களுக்கு அடைக்கலமாகக் கொள்வதில் தீவிரம் காட்டுவது ஏன்?

கொடிகட்டிப் பறக்கும் ஊழியங்களான இந்த உல்லாசப் பிரியர்களின் ஊழியங்கள் வெற்றி ஊழியங்கள் போல் காட்சியளிக்கப்படுகிறது. அதனை நம்பி மக்களும் ஏமாந்து மோசம் போய்க்கொண்டிருக்கின்றனர். வேத வசனத்தையும் இவர்களின் வாழ்க்கையையும் சேர்த்துப் பார்த்தால் இதனை அடையாளம் கண்டுகொள்வது எளிது.

“பொருளாசை” யைக்குறித்து இயேசு பேசினபோது அதனைக் கேட்ட பரிசேயர் அவரைப் பரியாசம் பண்ணினார்கள் (லூக்கா 16:14). அவர்களுக்குப் பதில் சொல்லும் வண்ணமே இயேசு கூறினது லாசரு ஐசுவரியவானின் உவமை. ஆனால் அதற்கு முன் அவர் கூறிய வசனங்களைக் கவனித்துப் பாருங்கள். “நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள். தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். **மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது"** (லூக்கா 16:15) ஐசுவரியவானின் பாவம் என்ன? விபச்சாரமோ, துன்மார்க்கமோ அல்ல, உல்லாச வாழ்க்கை, அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்த வாழ்க்கை (வச. 19). அது அவனைப் பாதாளம் கொண்டுசேர்த்தது (வச. 23). நீ பூமியிலே உயிரோடிருக்குங்காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய். அதை நினைத்துக்கொள் (வச 25). **வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இவர்கள் கூட்டங்களை நடத்தும்போது உலாவிவரும் கடைவீதிகள் உலகின் பெரும் புள்ளிகள் பணத்தை செலவழிக்கும் இடங்கள் என்பதனைத்தான் அப்பத்திரிக்கை எழுதியுள்ளது. இந்த ஊழியங்களைப் பின்பற்றியே அநேக இளம் ஊழியர்களும் தங்களுடைய ஊழிய "ஸ்டைலை" மாற்றிவிட்ட அகோரம் "இந்தியாவை" தீட்டுப்படுத்திவருகிறது;** திருச்சபைகளைப் பாழாக்கிவருகிறது. இதனையும் இவர்களால் காணமுடியாதபடி “ஐசுவரியத்தின் மயக்கம்” (மத் 13:22) இவர்களின் கண்களை அடைத்திருக்கிறது.

பேதுருவும் யோவானும் “வெள்ளியும் பொன்னும் எங்களிடத்திலில்லை” என்றனர் (அப் 3:6) ஆனால் இன்றைய பிரபலங்களோ “விலையுயர்ந்த இரத்தின கற்கள்” இல்லை எனவும் சொல்லக்கூடாத நிலையில் மாறிவருகின்றனர்.

இயேசு ஊழியத்தினை ஆரம்பித்தபோது எருசலேம் தேவாலயத்தில் நடந்த காரியங்களைக் கண்டு அதனை சுத்திகரிக்க கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டாக்கி அவர்களை எச்சரித்தார். அப்போது தேவாலயம் **"வியாபார" வீடாக்கப்பட்டிருந்ததை** அவர்களுக்குச் சுட்டிக்காண்பித்தார் **(யோவான் 2: 13-16).** பார்ப்பதற்கும் கேட்பதற்கும் நல்லவை நடப்பது போலத்தான் அப்போது தேவாலயம் காட்சியளித்தது. வெளி நாட்டிலும், ஊரிலும் இருந்து வருபவர்கள் கையில் எடுத்துக்கொண்டுவருவது சிரமம்; எனவே, இங்கேயே வாங்கி செலுத்திவிட்டால் என்ன? என்ற நிலையில் தான் அது விற்கப்பட்டது. பல நாட்டவர் கூடும் பண்டிகையில் பணத்தை மாற்றவேண்டியதை ஆலயமே ஏன் செய்யக்கூடாது என்றுதான் ஆரம்பித்தது, ஆனால் தேவனோ "ஒரு மனிதன் தன் வீட்டிலிருந்து அதனைக் கொண்டுவரும்போது அதனைக் காணும் அனைவரும் இவன் தேவனோடு ஒப்புரவாகப் போகிறான் என்பதனைக் காண்பர். அது அவன் சாட்சியாவதற்கு ஏதுவாகும் என்பதற்காக அதனை கூறியிருந்தார். சுலபமாக்கப்பட்ட முறை **தேவாலயத்தை "வியாபார ஸ்தலமாக்கிற்று"**

ஆனால், கிட்டதட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இயேசு அதே காரியத்தை தேவாலயத்தில் செய்ய நேரிட்டது (மாற் 11:15-17). ஆனால், மீண்டும் கடின இருதயத்தோடு துணிகரமாக செய்யப்பட்ட அந்தக் காரியங்கள் தேவாலயத்தைக் **"கள்ளர் குகையாக்கிற்று"** என்று குறிப்பிடுகிறார். இன்றைய பெரும் ஊழியப் புள்ளிகள் நடத்தும் ஊழியங்கள் கருப்பு பண சந்தையாகவே மாற்றப்பட்டுள்ளது எத்தனை வெட்கத்துக்குரியது. "அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது" (எசேக்கியேல் 33:31) எத்தனை உண்மை. "பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்." (2பேதுரு 2:15)

இந்த உல்லாச வாழ்க்கை வாழ்வது யாருடைய பணத்தில்? என்கிற கேள்விக்குப் பதில் கண்டுபிடித்தால் நம்முடைய காணிக்கைப் பணம் எப்படி வீணடிக்கப்படுகிறது என்பது விளங்கும். **அநேக ஆயிரம் மக்களைச் சந்திக்கிற ஒரு மனிதனுக்கு, உடல் நலம் இல்லாத ஊழியருக்கு சில விசேஷ கவனிப்பு அவசியம் என்பதனை நாம் மறக்க இயலாது, ஆயினும் கிறிஸ்தவ வாழ்வில்**

**உல்லாசத்திற்கு இடமில்லை என்பதனையும் மறக்கக்கூடாது.** ஏழைகள், கஷ்டப்பட்டோரிடத்திலிருந்து வாங்கும் காணிக்கை கர்த்தருக்குக் கொடுக்கப்படுகிறது என்ற பேரில் வாங்கப்பட்டு, **விரயமாகுவது** எந்தவிதத்திலும் குற்றமானதே. ஒரு ஊழியர் குடும்பம் 500 கி.மி வந்து தங்கி ஊழியம் செய்துவிட்டுப்போக ஓரிடத்தில் செலவழித்த பணம் பல லட்சங்கள். அனைத்தும் ஆண்டவரின் பிள்ளைகள் கொடுத்த காணிக்கைப் பணமே. அதுவும் கர்த்தருடைய ஊழியத்தின் பேரில் பெறப்பெற்றவையே. இதற்கு யார் பொறுப்பாளி? இதனைத் தானே ஏலியின் மக்களான ஓப்னி, பினெகாஸ் செய்தனர்; அவர்களுடைய மனிதர்கள் செய்தார்கள். **"அது கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதான பாவமாயிருந்தது"** என்று வேதம் சொல்லுகிறதே (1 சாமுவேல் 2:17). அப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்ட சாமுவேலை தேவன் தெரிந்துகொள்ளவில்லையா? (1சாமுவேல்2:26). **"பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்"** என்று வேதம் நம்மை எச்சரிக்கவில்லையா? **(2தீமோத்தேயு 3:13)** இவர்கள் நடத்தும் ஊழியத்தில் ஜனங்கள் இரட்சிக்கப்படுகிறார்களே? விடுதலையடைகிறார்களே! ஆகையினால் இதனை எப்படி தேவன் அனுமதிக்கிறார் என்பது மற்றொரு வாக்குவாதம். யோனாவின் சரித்திரம் படிப்பவர்களுக்கு இது ஆச்சரியமில்லை. **யோனா கீழ்ப்படியாமல் போன சந்தர்ப்பத்திலும் அதனை தேவன் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டாரே அந்த கப்பலில் இருந்த அனைவரையும் அவர் இரட்சித்துவிட்டாரே. அதனால் யோனா செய்த செயல் சரியென்று வாதிடலாமோ?**

தேவ ஜனங்கள் இன்றைக்கு கீழ்க்கண்ட கேள்விகளுக்கு உத்தரவு காணவேண்டும். **யாருக்கு நான் காணிக்கை தருகிறேன்? அது எப்படி செலவழிக்கப்படுகிறது? அது எனக்கு பரலோகத்தில் பங்கினைப் பெற்றுத் தருமா? எந்த நோக்கத்தோடு என்னிடத்தில் காணிக்கை கேட்கப்படுகிறது?** தேவ ஜனங்களுக்கு தேவன் விவேகத்தைத் தருவாராக. கூடவே மோசம் போக்கிக் கொண்டிருப்பவர்கள் அடையாளம் காட்டிக்கொடுக்கப்படவேண்டும் அந்த மோசங்கள் குறைக்கப்படவேண்டும். தேவன் கிரியைச் செய்வாராக. **இன்னொரு மார்டின் லூத்தரை எழுப்புவாராக.**

# 42. உப்பிலாப் பண்டமாகிவரும்...

பெருவெள்ளங்கள், பூமி அதிர்ச்சிகள், கலவரங்கள், குழப்பங்கள், இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் அழிவுகள், புயல்கள் போன்றவைகளின் செய்திகள் தொடர் செய்திகளாக மாற்றப்பட்டு வரும் (increased frequency) இந்த நாட்களில், தேவனைப் பற்றிக்கொள்வது எத்தனை அவசியம் என்பதனை உணர்ந்து வாழ தேவன் நமக்கு உதவி செய்வாராக. கூடவே **தேவன் கொடிய காலங்கள் என்று குறிப்பிடும் காரியங்கள் அனைத்தும் (2தீமோ 3: 1-5) தேவ மக்கள் மத்தியில் தாராளமாகக் காணப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, அவைகளே போதிக்கப்பட்டு தேவ சிந்தையை எடுத்துப்போடும் நாட்கள் இவைகள்.** தற்பிரியம், பணப்பிரியம், சுகபோகப்பிரியம் இவைகளின் மூலமாகத்தான் இன்று தேவ பக்தியைக் கொண்ட ஊழியர்களும், ஊழியங்களும் பெருகிவிட்ட இந்த நாட்களில் மிகுந்த ஜாக்கிரதையோடு ஜீவிக்காவிடில், வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து சீக்கிரமாய் வேதம் சொல்லித் தரும் விசுவாச வாழ்க்கையை விட்டு விலக நேரிட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை (1தீமோ 4:1). முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே ஆக்கினைக்குட்படுவார்கள் (1தீமோ 5:12) என்பது எச்சரிப்பின் வார்த்தை அல்லவா.

21-ம் நூற்றாண்டின் நிலையை எடுத்துக்கூறும் ஒரு செய்தித் துணுக்கை செய்தித்தாள் ஒன்று வெளியிட்டிருந்தது. அது நம்முடைய அன்றாட வாழ்வினைப் பாதிக்கும் காரியங்களைக் கூறியது.

| | |
|---|---|
| தொடர்பு (Communication) | - இணைப்பு இல்லாதது (Wireless) |
| ஆடை (Dress) | - மேலாடை அற்றது (Topless) |
| சமையல் (Cooking) | - நெருப்பில்லாமல் (Microwave) |
| ஆகாரம் (Food) | - கொழுப்பு இல்லாதது (Fatless) |
| நடத்தை (Conduct) | - ஆகாதவை (Worthless) |
| சிந்தை (Thought) | - கவனமற்றவை (Careless) |
| அரசியல் (Politics) | - வெட்கமற்றது (Shameless) |
| கல்வி (Education) | - தரமற்றவை (Valueless) |

கலந்துரையாடல் (Debates) ஆதாரமற்றவை (Baseless), வேலை (Work) நன்றியற்றது (Thankless) என்ற அலசல் எத்தனை உண்மையானதோ, அப்படியே இன்றைய சபையின் ஊழியங்களின் நிலைமையையும் ஆராய்ந்து பார்த்தால் சில உண்மைகள் தெளிவாகத் தெரியும்.

"சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, உன் காயம் சமுத்திரத்தைப் போல் பெரிதாயிருக்கிறதே; உன்னைக் குணமாக்குகிறவன் யார்?"

உன் தீர்க்கதரிசிகள் அபத்தமும் வியர்த்தமுமான தரிசனங்களை உனக்காகத் தரிசித்தார்கள். அவர்கள் உன் சிறையிருப்பை விலக்கும்படி உன் அக்கிரமத்தை எடுத்துக்காட்டாமல் அபத்தமானவைகளையும் கேடானவைகளையும் உனக்காகத் தரிசித்தார்கள் (புல 2:13,14) என்று எரேமியா புலம்பினான்.

இன்றைய ஆவிக்குரிய உலகின் நிலை

1. Christless - Christianity
(கிறிஸ்துவற்ற கிறிஸ்தவம்)
2. Powerless - Church
(வல்லமை இழந்த சபை)
3. Characterless- Ministries
(நன்னடத்தையற்ற ஊழியங்கள்)
4. Crossless - Crown
(சிலுவையற்ற மகுடம்)
5. Faithless - Strategy
(விசுவாசமற்ற செயல்திட்டங்கள்)
6. Visionless - Mission
(தரிசனமற்ற ஊழிய காரியங்கள்)
7. Loveless - Activity
(அன்பற்ற நடவடிக்கைகள்)
8. Passionless - Leadership
(பாரமற்ற தலைமைத்துவம்)

9. Aimless - Team Walk

(குறிக்கோளற்ற குழு முயற்சிகள்)

10. Purposeless - Evangelism

(நோக்கமற்ற சுவிசேஷ ஊழிய முயற்சிகள்)

1. **கிறிஸ்துவற்ற கிறிஸ்தவம்: கிறிஸ்துவை மையமாகக் கொண்டதுதான் கிறிஸ்தவம்**. மற்ற மார்க்கங்களுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இருக்கும் பெரும் வித்தியாசம் இதுதான். இந்து மதத்திலிருந்து ராமரையோ, கிருஷ்ணனையோ எடுத்துவிட்டாலும் அதில் மாற்றமோ, குறைபாடோ இருக்கப்போவதில்லை. முகமது நபியை இஸ்லாமிலிருந்து எடுத்துவிட்டால் அதிலும் அப்படியே. ஆனால், கிறிஸ்தவமோ அப்படியல்ல. **கிறிஸ்து எடுக்கப்பட்ட கிறிஸ்தவம் ஒன்றுமில்லாமற் போய்விட்ட வெறும் சடங்காச்சாரமாகவே மாறிவிடும்; கிறிஸ்துவே அதன் மையம்**; அவரே எல்லாம். கிறிஸ்துவைத் தள்ளி வெளியே விட்டுவிட்ட லவோதிக்கேயா சபையைப் போலத்தான் (வெளி 3:20) இன்றைய திருச்சபை காட்சியளிக்கிறது. ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் அங்கு உண்டு அவரின் பெயரால், ஆனால் அவர் அங்கே உண்டா? என்றால், அதனை நினைத்துப் பார்க்கவும் நேரமில்லை என்பர். அவர் உன் ஆராதனையைக் குறித்தும், உங்களின் ஜெபத்தினைக் குறித்தும் என்ன நினைக்கிறார் என்றால் "ஜனங்களை அது திருப்திப்படுத்துகிறதே அது போதும்" என்கிறார்கள்.

"உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன், உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை. உங்கள் தகனபலிகளையும் போஜன பலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன். கொடுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திர பலிகளையும் நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்."

"உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று. உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்" (ஆமோஸ் 5:21-23) என்று ஆண்டவர் சொல்லுவதனைக் கேட்க ஆராதனை வீரர்கள் என்று சொல்பவர்களோ, ஆர்ப்பரிப்பான தலைவர்கள் என்று புகழாரம் சூட்டப்படுபவர்களோ, சாதனையாளர்கள் என்று தப்பட்டம் அடித்துக்கொள்கிறவர்களோ செவி சாய்க்கவில்லை.

2. **வல்லமை இழந்த சபை** உலகில் வல்லமையைத் தக்கவைத்திருப்பதைப் போன்ற ஒரு மாயத்தோற்றத்தினை உலகிற்குத் தந்துகொண்டிருக்கிறது. வல்லமையைக் குறித்துப் பேசும் அநேகருக்கு **அந்த வல்லமை எதற்குத் தேவை?** என்பதனைக் குறித்து ஒரு அறிவும் இல்லை என்றே சொல்லுவேன். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப் 1:8). இன்றைக்கு பேசாமல் வல்லமை வந்தால் கீழே விழ வைக்கவேண்டும் என்பதில்தான் அதிக கவனம் செலுத்தப்பட்டு நிற்கிறவர்களைத் தள்ளிவிடுவதில்தான் வல்லமை விளங்கும் என்ற **மாயத்தோற்றத்தினைச் சத்துரு வஞ்சகமாக சபையில் கொண்டுவந்து நம்பச் செய்து** வீறு நடைபோடுகிறான்.

3. **மறுரூபமாக்கப்படாத மனிதன்** (விசுவாசி) பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துவது மாத்திரமல்லாமல் "பரிசுத்த ஆவியானவரின் திருவிளையாடல்கள்" என்பதுபோல அவரைத் தனக்குள் கிரியைச் செய்யவிடாமல் நடத்தையில் கெட்டு சீரழிந்தவர்களை உள்ளடக்கிய ஊழியர்களை உலாவவிட்டு, சபையின் வீரியம் குறைக்கப்பட்டுள்ளது.

"ஆவியாயிருக்கிற கர்த்தரால் (அவருடைய), அந்த சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறதற்காகத் தரப்பட்ட ஆவியானவர் என்கிற விடுதலையின் ஆவியானவர்" (2கொரி 3:17.18), இன்றைக்கு விளையாட்டுப் பொருளாக எண்ணப்பட்டு அவரில்லாமல் ஆனால், அவரின் பெயரால் வஞ்சனையான மனிதர்களையும் வஞ்சிக்கப்பட்ட வஞ்சிக்கிற ஊழியங்களையும் தாராளமாய் ஏற்றுக்கொண்ட சபையாக மாற்றப்பட்டுவிட்ட கொடூரங்களை, அடையாளம் கண்டுகொண்டோர் எத்தனை பேர்?

4. **சிலுவையற்ற மகுடம்: பாடுகளில்லாத வாழ்க்கை** பாலைவன வாழ்க்கை என்பேன். உல்லாசப் பிரியருக்குப் பாடுகள் நமக்கில்லை என்பது வாதம். இயேசு பாடுகளைச் சுமந்தார், நான் சுமக்கத் தேவையில்லை என்ற பகட்டுப் பிரச்சாரம் இன்று கொடிகட்டிப் பறக்கிறது

**"அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்"** (2தீமோ 2:12) என்றோ, கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2தீமோ 3:12) என்றோ, பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகிக்க அழைக்கபட்டிருக்கிறோம் (1பேது 2:19,21 என்றோ, துன்பப்படவேண்டியது அவசியம் (1பேது 1:6) என்றோ, உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கவேண்டும் (அப் 14:22) என்றோ ஜனங்களுக்குச் சொல்லிக் கொடுக்க விரும்பாமல், தங்களுடைய பொக்கிஷங்களை, ஆஸ்திகளை பெருகப்பண்ணும் நடவடிக்கைகளுக்காகப் பல திட்டங்களை வகுத்து, அதனைப் பெறுவதற்கு வியாபார யுக்திகளைக் கையாண்டு அது கொடுத்தால் இது, இது கொடுத்தால் அது என்று ஜனத்தைப் பொருளாசையில் (தாங்கள் விழுந்து கிடப்பது போல) விழச் செய்து, பாடுகளற்ற ஒரு மகுடத்தைத் தரிக்க (Cross Crown) ஏவிவிட்டு, செழிப்பு உபதேசத்தினை வாய் கூசாமல் பேசி பல்லாயிரக்கணக்கான பணத்தில் பகட்டு உடையணிந்து பகற்கொள்ளைக்காரராய், பறிகாரரின் கூட்டமாய் (ஓசி 6:9), குருவி பிடிக்கிற கண்ணிகளாய் (ஓசி 9:8) மாறிப்போய்விட்டதால், தேவனும் தேவ சபையும் வேதனைப்படுகிறதைக் கண்டீர்களோ?

5. **விசுவாசமற்றசெயல்திட்டங்கள்:** செயல்திட்டங்கள்(strategy) தீட்டப்படுகிறது, ஆனால் அதனை நிறைவேற்றும் உந்து சக்தியாம் விசுவாசம் (faith) இறை வாக்கினால் (word of God) உண்டாக்கப்படாமல் (ரோமர் 10:17), இவர்களில் நிர்வாகத் திறனால் (managerial skill) பேச்சுத் திறனால் (oratorical skill), **வியாபாரத் திறனால்** (commercial skill) **இயக்குவிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்** பொல்லாத காரியங்கள் பரலோகத்திற்கு அருவருப்பானவை என்பது மறக்கப்படுகிறது. பரலோகம் பின்பற்றும் முறைகளோ அங்கீகரிக்கும் முறைகளோ அற்பமாக எண்ணப்பட்டு அசட்டை செய்யப்படுகிறது.

6. **தரிசனமற்ற ஊழிய காரியங்கள்:** தரிசனமில்லாத செயல்திட்டங்களைக் கொண்ட ஊழியங்கள் பெருகி மலிந்துவருகின்றன. செல்போன் தயாரிப்பவனும் குளிர்பானக் கம்பெனி நடத்துபவனும் இத்தனை ஆண்டுகளில் அத்தனை பேர் கையிலும் அது கிடைத்துவிடவேண்டும் என்று செயல்படும்போது, கல்வாரி அன்பினை, கர்த்தரின் இரட்சிப்பின் செய்தினை அனைவருக்கும் இத்தனை ஆண்டுகளில் அடையச் செய்வதற்கு நம்மை, நம்முடைய மக்களை, விசுவாசிகளை எப்படி மாற்றவேண்டும் எனற காரியங்களில் கவனம் செலுத்தாமல், தேவையற்ற காரியங்களில் அதிக கவனம் செலுத்தி அவர்கள் காதுக்கினிய, இதயத்திற்கினிய மயக்கும் வார்த்தைகள் பேசும் செயல் திட்டங்களையே ஊழியங்களும் ஊழியர்களும் உடையவர்களாகிவிட்ட கொடுமையை என்ன சொல்லுவேன், நேர்ந்தது என்ன?

7. **அன்பற்ற நடவடிக்கைகள்:** அன்பற்ற ஆசாரியன், லேவியனைப் போன்று நடவடிக்கைகள் (activities) (லூக் 10:31,32). குழந்தைகளின் நாவு தாகத்தால் மேல் வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது, பிள்ளைகள் அப்பங் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கொடுப்பாரில்லை (புலம்பல் 4:4). சத்தமிடுகிற வெண்கலம், ஓசையிடுகிற கைத்தாளம், மலைகளைப் பெயர்க்கும் விசுவாசம், சரீரத்தைச் சுட்டெரிக்கத் தரும் தீவிரம் அனைத்தும் உண்டு; ஆனால் **அடிப்படை அன்பு இல்லை** (1கொரி 13:1-3). வரங்கள் உண்டு, வரங்களின் நாட்டம் உண்டு, அதற்கான ஊட்டம் (seminar) உண்டு; அதைப் பெற்றுக்கொள்ள தேட்டம் (Fasting Prayer, Tarry Meetings) உண்டு; ஆனால் குற்றுயிராய் கிடக்கும் மனிதனை, கள்வர்களால் **காயம்பட்டவரைக் கவனிக்க ஆளில்லை.** இயேசுதான் நல்ல சமாரியன் என்று அறிவித்து, ஆர்ப்பரித்து தன்னுடைய கடமையைப் புறக்கணித்த புல்லர் கூட்டம் மிகுந்தது, ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் எனவே மனந்திரும்பு.

8. **பாரமற்ற தலைமைத்துவம்:** இந்த நிலைமை தொடர்ந்ததினால் உருவாக்கப்பட்டத் தலைவர்கள் கண்ணீரும், கரிசனையும் அற்றவர்கள். அவர்கள் கற்றதும், பெற்றதும் அநேகப் பட்டங்கள், பதவிகள் (Degrees & Positions) மூளையறிவிலும் பல்கலைக்கழக அறிவிலும் சாதிக்க நினைக்கும் அவர்கள் கெத்சமனே பூங்காவில் கதறும் நேசருடைய சத்தத்தையோ கண்ணீரையோ கேட்டதும் இல்லை; அனுபவித்ததும் இல்லை (எபி 5:7). கல்லுக்குள் ஈரம் என்பர். இந்தக் கல் நெஞ்சம் கொண்டவர்களோ கல்வாரியின் சிநேகிதத்தைக் கண்டவர்கள் அல்ல. கல்லூரிகளைத்தானே கண்டார்கள். சட்டம் தெரியும் பட்டங்கள் பெற்றார்கள். ஆனால், "மனிதனுக்காகவே ஓய்வு நாள், ஓய்வு நாளுக்காக மனிதன் அல்ல" என்றவரின் மனத்தாக்கத்தினையோ கண்ணீர் மல்கும் கண்களையோ சந்தித்தவர்கள் அல்ல (லூக் 19:41). போலீஸ் ஸ்டேஷனுக்கு நடக்கத் தெரிந்த இந்த தலைவர்கள், பேராயர்கள், காணாமற்போன ஆட்டைத் தேடி நடக்கத் தெரியாதவர்கள். அவர்கள் நிமித்தம் (பேச்சால், செயலால், பிரசங்கத்தால்) மந்தையில் சேர்ந்தவர்களைக் காட்டிலும், மந்தையை விட்டு சிதறடிக்கப்பட்டவர்களே ஏராளம். ஏன், ஓநாய்களுக்கு மந்தை இரையாவதற்கு, ஓநாய்களுக்கு கதவைத் திறந்துவிட்டவர்கள் இவர்கள். தங்கள் மார்க்கத்தானாக்கும்படி, (குழுவில் சேரும்படி) சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித்திரிகிறவர்கள். ஆனால், மார்க்கத்தானானபோது, தங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்குவதில் கைதேர்ந்தவர்கள் (மத் 23:15).

9. **குறிக்கோளற்ற குழு முயற்சிகள்:** குழுவுண்டு, ஆனால் குறிக்கோள் இல்லாதது. எனவே, இயேசு கிறிஸ்துவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்

(பிலி 3:11-14), இது பவுல். ஆனால், இன்றைய ஆவிக்குரிய உலகில் உள்ளவர்கள் கூடி குழுவாக எவனை விழுங்குவது, எவனைக் கவிழ்ப்பது, எவனை அடையாளம் தெரியாமல் ஆக்குவது, எவனைத் தடைசெய்வது என்பதில் அதிக கவனம் செலுத்தி **குப்பைகளையும் கூடவே கூட்டிக்கொள்கிறவர்கள். எல்லாவற்றிலேயும் லாபம் தேடுகிறவர்கள்.** இந்த இலக்கு என்ன என்பதனையே அறியாமல் ஓடுகிறவர்கள்.

10. **நோக்கமற்ற ஊழிய முயற்சிகள்:** கூட்டங்கள் (எழுப்புதல், சுவிசேஷ, சுகமளிக்கும், பிரார்த்தனைத் திருவிழாக்களும், பெருவிழாக்களும்) ஏராளமாய் நடத்தப்பட்டு தங்களுக்குப் பெயர் பிரஸ்தாபத்தை பெருக்கிக் கொள்வதில் கவனமாயிருந்து, தோரணங்கள் கட்டி, கட்அவுட்கள் வைத்து, கம்ப்யூட்டர் உலகின் சாதனைகள் மூலம் ஓர் மாயத்தை உருவாக்கி நோக்கம் எதுவுமே இல்லாத (Purposeless) கூட்டங்களை நடத்தி, பல இலட்சங்களை மேற்கண்டவற்றிற்குத் தாரை வார்த்து, இறுதியாய் கணக்குப் பார்த்தால் ஒன்றையுமே சாதித்திராத (ஒரு சபையும் ஸ்தாபிக்கப்பட்டதுமல்ல, ஒரு சுத்திகரிப்பும் சபையில் ஏற்பட்டதுமில்லை. ஒரு தரிசனத்தையும் தேவ மக்கள் பெற்றதுமில்ல) விரயங்களே மிஞ்சும். நாங்கள் மற்றவர்களுக்குக் குறைந்தவர்களில்லை என்பதனை பறைசாற்றும் "துன்மார்க்கர் போடும் வெளிச்சம்" (நீதி 21:4) இன்றைய ஆவிக்குரிய உலகை ஆக்கிரமித்துள்ளது என்றால் மிகையாகாது.

இதனைக் கண்டு கண்ணீர் வடிப்பதா? கதறுவதா? புலம்புவதா? என் ஜனத்திற்குச் சொல்லித் தருவார் யார் என ஏக்க பெரு மூச்சு விடுவதா? அது தேவனையும் சிங்காசனத்தில் வீற்றிருப்பவரையும் அசைக்காதோ? (யாத் 2:24)

எனவே கூடுமானால் இணைந்து கதறுவோம். தீமைக்கு எதிராக குரல் கொடுப்போம். ஏழையாயினும், ஞானமுள்ளவர்களாய், ஞானத்தினால் பெரிய ராஜாவாய், பெரிய கொத்தளங்களைப்

போட்டு என் ஜனத்தினை அடைத்து வைத்திருக்கும் சத்துருவின் வஞ்சனையினின்று விடுவிப்போம். நாம் அசட்டைப் பண்ணப்பட்டாலும் அதனைச் செய்ய நம்மை ஒப்புக்கொடுப்போம். இது அவசரத் தேவை. எழும்புவோம்! எழுப்புவோம்! மற்றவர்களுக்குக் கற்பிப்போம்; மணவாளனின் வருகைக்கு சபைதனை ஆயத்தப்படுத்தவும், தேசத்தினைச் சுதந்தரிக்கவும் தெளிவற்றவர்களைத் தெளிவாக்கவும் நம்மால் இயன்றதைச் செய்து இறை இராஜ்யம் ஸ்தாபிக்க முழங்காலை முடக்குவோம். இறுதி வெற்றி இயேசுவுக்கே; இயேசுவின் வீரர்களுக்கே.

# 43. வாலிபரைத் தொடும் சத்துரு

**பிள்ளைகளின் திருமணத்தின் காரியங்களைக் குறித்து** அநேகம் பெற்றோர்களுக்குப் போராட்டங்கள் வந்துள்ள நாட்களில் வாழ்கிறோம். **ஈசாக்குக்கு நாற்பது வயதான பின்னரும்** தகப்பன் தனக்குத் தேவையான துணையினைக் கொண்டுவருவதில் ஈடுபடுவார்; **அவர் தேடும் பெண் சரியான வாழ்க்கையை என்னோடு நடத்துவாள் என்ற நம்பிக்கையில் தளர்ச்சி இல்லை.** அதனை ஆபிரகாமும் தன்னுடைய வேலைக்காரரின் உதவியினாலும், தேவ தயவினாலும் அழகாகச் செய்து முடித்து ரெபெக்காளைக் கொண்டுவந்து கொடுத்தார் (ஆதி 24 அதி); இது ஒரு ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம்.

ஆனால், அந்த ஈசாக்கு பெற்றெடுத்த இரண்டு பிள்ளைகளாம் ஏசா, யாக்கோபு காலத்தில் பெரிய மாற்றம். ஏசா தானாகவே தனக்குப் பெண் பார்த்துக் கொள்கிறதை நாம் வேதத்திலே காண்கிறோம் (ஆதி 27:46, 28:6,7).

இதனைக் கண்ட ஈசாக்கு, ரெபெக்காள் தன் இளைய மகனை ரெபேக்காளின் வீட்டுக்கு அனுப்பி தன் குடும்பத்தில் அவன் **பெண்ணைத் தானாகவே தெரிந்துகொள்ளும் உரிமையைக் கொடுத்து யாக்கோபை பதான் அராமுக்கு அனுப்புகிறதைக் காண்கிறோம்.**

கருத்துக்கள் மாறிவிட்டது இப்போது; காரியமும் (Trends) மாறிவிட்டது. மாறிவிட்ட சூழ்நிலையினை மனதில் கொண்டு தங்களுடைய திருமணம் பெரியவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுத்தான் நடந்தது; எனவே தன்னுடைய பிள்ளைகளின் திருமணமும் அப்படித்தான் நடக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்காமல் யாக்கோபுக்கு சுதந்தரம் அளிக்கின்றனர். ஆனால், சில நிபந்தனைகளையும் அவர்கள் இணைத்தே அந்த சுதந்தரத்தை வழங்குவதனை நாம் படிக்கிறோம். **1.** லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள். **2.** சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதிக்கவேண்டும் என்பதனை மனதில் கொள். **3.** நீ சுதந்தரிக்கவேண்டிய **இந்த தேசத்தினை** (சீரியா – லாபானின் வீடு) மறந்துவிடாதே. அதுதான் உன்னைக் குறித்து தேவ நோக்கம்.

4. பூமியிலே பரதேசியாகத்தான் தங்கவேண்டும்; தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்குக் காத்திருக்கவேண்டும் என்றெல்லாம் "நிபந்தனைகளை உள்ளடக்கிய சுதந்திரம்" கொடுத்து, அவனை ஆசீர்வதித்து, கட்டளைக் கொடுத்து அனுப்பினார்கள் (ஆதி 28:1-5; எபி 11: 9-10). அந்த யாக்கோபு சென்று ராகேல் ரூபவதியாய் பார்வைக்கு அழகுள்ளவளாய் இருந்தபடியால், ராகேலுக்காக ஏழு வருடம் வேலை செய்யவும் ஒப்புக்கொடுத்து, அவள் பேரில் வைத்த பிரியத்தினால் அந்த நாட்கள் கொஞ்ச நாட்களாக தோன்றினபடியினால் உற்சாகமாக அவளை மணம் முடிக்கிறான் (ஆதி 29:17-20). **அதாவது, அவனுடைய இழுப்பு (Liking) ராகேலைச் சார்ந்திருந்தபடியினால், அவனாகவே தீர்மானித்து ஆயினும், தாய் தகப்பனுடைய பிரமாணங்களையும் உடைக்காமல் திருமணம் செய்த விதத்தினை வேதம் நமக்கு விவரிக்கின்றது.**

இந்த நாட்களில் வாலிபர்கள் மத்தியில் சிறுவயதிலேயே தனக்கென்று ஒரு காதலன் / காதலி இருக்கவேண்டும் என்ற எண்ணம் அதிகமாக வேர்பிடிக்க ஆரம்பித்துள்ளது. கூடவே, உணர்வுகளைத் தூண்டும் சினிமாக்கள், T.V நிகழ்ச்சிகள் இன்டர்நெட் வசதிகள், புத்தகங்கள் ஏராளம் ஏராளம். இதுவுமல்லாமல் உயர்நிலை பள்ளியில் Boy friend / Girl friend இல்லாதவர்கள் "கையாலாகாதவர்கள்" எனக் கருதப்படுவதினால் (Chicken என்று அழைக்கப்படுவதினால்) எப்படியாவது ஒருவரை அல்லது ஒருத்தியை சிநேகிக்கவேண்டும் என்ற துடிப்பில் தள்ளப்படுபவர்கள் ஏராளம் ஏராளம். இந்த உறவு அநேக நேரங்களில் தவறாக முடிகிறதையும் கண்கூடாகக் காணமுடிகிறது. இன்று அநேக வாலிபப் பிள்ளைகள் தங்கள் கற்பினை இழந்தவர்களே (சொல்வதற்கு கஷ்டமாக இருந்தாலும் இது உண்மை). இயேசுவின் வார்த்தைகளை உபயோகிக்கவில்லை; சரீர உறவில் ஈடுபட்டவர்களையே குறிக்கிறேன்.

இந்நிலையில், **திருமணக் காரியங்கள் பேசப்படும்போது, தன்னுடைய பழைய உறவினைக் குறித்து பெற்றோரிடம் சொல்லி போரிடுவோரும், சொல்லமுடியாமல் தவிப்போரும் பெருகிவருகின்றனர்.** நல்ல பக்தியான குடும்பங்களிலும், வேத வசனத்தை அறிந்த பிள்ளைகள்

மத்தியிலும் இது காணப்படுவது ஆச்சரியத்தையளிப்பதோடு, பெற்றோர் அந்த உறவினை எதிர்க்க நேரிடும்போது தாங்களாகவே வாழ்க்கையினை அமைத்துக்கொண்டோரும், அதற்கு உதவி செய்யும் நண்பர்கள், உறவினர்கள் "இது காலத்தின் கோலம். வாழப்போகிறவர்கள் அவர்கள்தானே பின் ஏன் அவர்கள் விரும்புகிறவரை மணந்துகொள்ளக்கூடாது" என்று வாதிடுவோரும், **குடும்பத்தின் பெயர், சாட்சி கெட்டுப் போக வாய்ப்புண்டே என்ற காரியத்தினைக் கருத்தில் கொள்ளாமல் வாழத் துடிக்கும் இளம் உள்ளங்களும்,** அவமானம் தாங்காமல் ஊரைவிட்டே புறப்பட்ட பெற்றோரும் இன்றைக்கு ஏராளம் ஏராளம்.

தேவனுக்குப் பிரியமாய் வாழ விரும்பும் அநேக வாலிபப் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட கால கட்டத்தில் எப்படி வாழ்வது என்பது தெரியாமற் போய்விடுகிறது. இதிலே எப்படிச் செயல்படவேண்டும்.

வாலிப பிராயத்தில் வயதின் காரணமாக தேவன் தந்தருளிய ஓர் ஈர்ப்பு மறுபாலரோடு உண்டாவது இயற்கை. **இதை தேவனே செய்திருக்கிறார்.** அதனை முறைப்படி செயல்பட மாத்திரம் அனுமதிக்கவேண்டும். அது ஒரு விருப்பமாக மாறும்போது (Liking) **அதுதான் முடிவு என்று எந்தப் பிள்ளையும் வந்துவிடக்கூடாது.** அந்த ஈர்ப்பு மோகத்தினாலும் (Lust) உண்டாக வாய்ப்புண்டு. 1சாமு 13:1,2-ல் அம்னோன் என்ற தாவீதின் மகன் தன் ஒன்றுவிட்ட சகோதரியாகிய தாமாரினிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்பட்டதாகக் கூட நாம் காண்கிறோம். அது விருப்பத்தினால் உண்டானதல்ல, மோகத்தினால் உண்டானது. ஆகையால் தான், பின்னதாக அவனுடைய நாடகம் முடிந்த பின்னர் அவளை வெளியே தள்ளி, அவமானப்படுத்தி, அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும் அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது.

**உண்மையான அன்பு அநேக நேரங்களில் உடனே வெளிப்படுவதில்லை. விருப்பம் வந்தவுடன் அதனை நிறைவேற்றத் துடிக்கும் எந்த வேட்கையும் ஆபத்திலேயே முடியும்.** சிம்சோன் பின்னதாக விழுந்துபோனவனாகக் காணப்பட்டாலும், வாலிபத்தின் ஆரம்பத்தில் "என் கண்களுக்குப் பிரியமானவள், அவளையே

எனக்குக் கொள்ளவேண்டும்" என்று அடம் பிடித்தாலும், **தன் தாய் தகப்பனிடத்தில் போய் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறான்.** அவர்களும் பின்னதாக அவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவனோடு கூட "பெண் பார்க்கச்" செல்லுகிறார்கள் (நியா 14:1-5). **"விருப்பம்" என்ற காரியம் முளைக்கும்போது அது தெரிவிக்கப்படவேண்டிய நபர் "விரும்பினவர் / விரும்பினவள் அல்ல" மாறாக பெற்றவர்கள், பெரியவர்கள், கரிசனை உடையவர்கள்.**

**நல் ஆலோசனைச் சொல்லக்கூடியவர்கள், ஆவிக்குரிய தலைமையில் உள்ளவர்களிடம் கூறுவதே நல்லது. மாறாக எதிர்பாலரோடு இதனைத் தெரிவித்து பின்னர் இக்கட்டில் மாட்டிக்கொண்டு முழிப்பது சரியல்ல.**

இந்திய கலாச்சாரமும், வேதக் கலாச்சாரமும் நமக்கு போதிப்பது குடும்ப உறவின் முக்கியத்தையே. எனவே திருமணம் ஏதோ இரண்டு தனி நபர்கள் மத்தியில் நடக்கும் காரியம் அல்ல, **இரண்டு மனங்கள் இணைக்கப்படுவது உண்மைதான், இருப்பினும் இரண்டு குடும்பங்களும் இணைக்கப்படுகின்றன என்பது மறக்கமுடியா மாறாத காரியம்.** எனவே ஒருவனையோ ஒருத்தியையோ விரும்புகிற (மோகிக்கிறது அல்ல) ஆள், தன் குடும்பத்தின் நிலை (Status), சூழ்நிலை (environment) (உதாரணமாக **படித்தவர்கள் நிரம்பிய குடும்பத்தில் படிக்காத ஒரு மகளைக் கொண்டுவருவது அவளுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் பெரும் பாதிப்பைக் கொண்டுவர அதிகம் வாய்ப்புண்டு**) ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை, எதிர்பார்ப்புகள் (acceptance) போன்றவற்றில் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் உண்டு. இதில் தவறுகிறவர்கள் பின்வரும் சந்ததிக்குத் தடைகற்களை வைத்துவிட்டு போகிறார்கள் என்பது கவனிக்கவேண்டியது. குடும்பத்தின் அனைத்துக் காரியங்களையும், அனைத்து நபர்களையும் திருப்திப்படுத்தமுடியாது, ஆயினும் கூடியமட்டும் இவைகளையும் கருத்தில் கொண்டு விருப்பம் உள்ள நபர்களை தராசில் வைத்துப்பார்ப்பது நல்லது. **ஜாதி என்கிற போர்வையில் இதனைக் காண்பதற்கு நான் சொல்லவில்லை. அது வேதத்திற்கு விரோதமானது.** விசுவாசியான ஒரு நபர் அவிசுவாசியான ஓர் நபரை ஏற்றுக்கொண்டு அவர்களை நான் மாற்ற முடியும் என்று நினைப்பது வேதம் போதிக்கும் முறை அல்ல; அதில் அநேகம் ஆபத்தில் தான் முடிந்திருக்கிறது

(2 கொரி 6:14,15). ஜாதியை மாத்திரம் அடிப்படையாக வைத்து பார்க்கும்போது தேவனை நாம் துக்கப்படுத்துகிறோம் என்பதனை மறக்கலாகாது. ஆபிரகாம் தன் இனத்தார் இடத்திலிருந்து தான் பெண் கொள்ளவேண்டும் என்று கட்டளையிடவில்லையா என்று கேட்கலாம். அந்த **விருப்பம் இருப்பது தவறல்ல, ஆனால் அதுவே தீர்மானிக்க உதவும் முக்கிய காரணமாகுவது பாவமே.** குணநலன்கள் இல்லாத, தேவனை அறிகிற அறிவோ, தேவ பயமோ இல்லாத சொந்த ஜாதியில் இருக்கிறார் என்பது எத்தனை ஆபத்தைக் கொண்டுவந்துவிடும். **சிலர் மொழி வித்தியாசம் உள்ளவர்களையும் கலாச்சார வித்தியாசம் உள்ளவர்களையும் தேடிக்கொள்ளும்போது அநேக நேரங்களில் மற்ற குடும்பத்தினர் அப்படிப்படிப்பட்டவர்களை புரிந்துகொள்ளவோ, பழகவோ கூடாமற்போகிறபடியினால் உறவுகளில் விரிசல் உண்டாகி பின்னர் பிரிவினைக்கும், சண்டைச் சச்சரவுக்கும் வித்திட்டு விடுகின்றன.** புரிந்துகொள்ளுதல் மிக்க குடும்பமாயிருந்தால் இதில் பாதகமில்லை. பணத்தினை அடிப்படையாகக் கொண்டு காரியங்களைத் தீர்மானிக்கவும் இடமில்லை, ஏனெனில் பணம் சிறகடித்து பறக்கக்கூடிய வல்லமை உள்ளது. கூடவே, பணம் அநேகரைக் கறைப்படுத்தி குழியில் தள்ளவும் திறைமைகொண்டது. **ஆனால், குடும்பத்திற்கு வரும் நபருக்கு தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவிக்க வகையில்லாதபடி பார்த்துக் கொள்வது "வருமுன் காப்பதற்குச் சமானம்".**

அடுத்தப்படியாக மிக முக்கியமான ஒன்று. **திருமணம் செய்ய விருப்பம் உள்ள இரண்டு பேருக்கும் இடையில் தங்கள் வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து கொண்டதோடு இரண்டு பேரும் சேர்ந்து அவைகளை நிறைவேற்ற வாய்ப்புண்டா? என்பதனை நன்றாக தீர ஆராய்ந்து அறிதல் மிகவும் முக்கியம்.** ஆதிவாசிகள் மத்தியில் பணிசெய்யவே தேவன் என்னைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்று உணர்ந்து ஒப்புக்கொடுத்த ஓர் நபர், சுகபோகத்தையும், வசதி வாய்ப்புகளையம் விரும்பி அதற்கேற்ற சூழ்நிலையில் வாழவும், ஏன் ஊழியம் செய்யவும் ஒப்புக்கொடுத்திருக்கிற நபரை எப்படி வாழ்க்கை துணையாக்கமுடியும். எனவே துணையைத் தேடும் முன் வாழ்க்கையில் தேவ திட்டத்தினை, தனக்கு வைத்திருக்கும் தேவ நோக்கத்தினைப் புரிந்து கொள்ள நேரமெடுத்து, பின்னர் அதற்கு இணைந்து போகும் ஓர் நபரைத் தெரிந்துகொள்வதே

புத்திசாலித்தனம். தன்னுடைய வாழ்வின் நோக்கத்தினை அறியாத, அறிந்திருந்தாலும் அலட்சியம் பண்ணின சிம்சோன் போன்றோர் வாழ்வு சீரழிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. **இன்றைக்குச் சபையின் தலையாயக் கடமை, தன் மக்கள் ஒவ்வொருவரும் தேவ நோக்கத்தைக் கண்டவர்களாக மாற்றப்படவேண்டும் என்பதே.** ஆனால், ஏதோ ஓர் ஆராதனை, பரவசமூட்டும் ஆராதனை என்பதில் தான் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. **அநேக விசுவாச குடும்பங்களும் இன்று தத்தளிப்பதற்குக் காரணம் இதுதானே. இனியாவது வாலிபப் பிள்ளைகளைக் குறித்தக் காரியத்தினை விளக்க சபை முன்வருமா?**

இளம் உள்ளங்களுக்கு நான் சொல்லுவேன் **"வாழ்க்கையில் உன்னைக் குறித்த தேவ நோக்கத்தைப் புரிந்துகொள்ளும் முன் திருமணத்தைக் குறித்து யோசிக்காதே"** என்று.

விரும்பிய நபர், குடும்பத்திற்கு ஏற்றவராக, ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவராக, தேவ நோக்கத்தில் இணைந்து ஓட தகுதிப் பெற்றவராக இருந்தாலும், கடின சூழ்நிலையின் பாதையில் அவர் நடக்க நேரிடும்போது எப்படி செயல்புரிவார், குணத்தை வெளிப்படுத்துவார் என்பதனைக் கண்காணிப்பது நல்லது. அதுவே உண்மை குணநலன்களை வெளிப்படுத்தும் (Character), இதனைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வாய்ப்புண்டு, **(நம்பத்தக்கவர்களிடத்தில், வாழ்க்கை ஓட்டத்தினைப் புரிந்து கொண்டவர்களிடத்தில்)** அல்லது கவனித்துப் பார்க்க நேரமிருந்தால், வசதியிருந்தால் கவனித்துப் பார்ப்பது நல்லது. **குணசாலிகளே வாழ்க்கையில் நம்மை ஏந்தி சுமக்கக்கூடியவர்கள் இது இருபாலருக்கும் பொருந்தும்** (பிர 7:26; நீதி 31:10). சோதிக்கப்பட்ட குணநலன்களை ஒரே நாளில் கண்டுபிடிக்க முடியாது (Proven Character); ஆயினும் அதற்குப் பிரயாசம் எடுக்காமல் **வெளிநாட்டு மாப்பிள்ளை என்று நம்பிக் கெட்டவர்கள் எத்தனைபேர்.** முடிவுக்கு வருமுன் இதற்கும் சரியான சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படவேண்டும். சில வேளைகளில் இதற்குத் தாமதம் ஆகலாம்; ஆனாலும், தாமதமாகிறது நல்லது;ள பின்னதாக ஏங்கி

தவிப்பதனைக்காட்டிலும், **எல்லாம் நலமாயிருக்கும்போது எல்லாருமே நன்றாகத்தான் தெரிவார்கள்; இன்னல் ஒன்று வரும்போது தான் உண்மையான ரூபம் தெரியும்.** அப்படிப்பட்ட வேளைகளில் எப்படி நடக்கிறார் / நடக்கிறாள் என்ற காரியத்தினைக் குறித்த அறிவு திருமணத்திற்கு முன்பே இருப்பது நல்லது.

இறுதியாக என்றாலும் எல்லாவற்றைக் காட்டிலும் **தேவ சித்தத்தை அறிந்து திருமணத்திற்கு ஒப்புக் கொடுப்பது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும். இதற்காக அங்கே இங்கே ஓடித் திரிய வேண்டிய அவசியமில்லை. மாறாக தேவனிடத்தில் காரியத்தினை ஒப்புக்கொடுத்து பின்னர் தேவ சமாதானம் இருதயத்தில் உள்ளதா? என்பதனை அறிந்தாலே போதும்.**

மேற்சொன்னமுறைகளை வரிசையாகப் பின்பற்றினால் அநேக பிள்ளைகள் - பெற்றோர் உறவும், விருப்பம் உள்ளவர்கள் உறவும், திருமண உறவும் போற்றிப் பாதுகாக்கப்படும்; உடைவுகள் (divorce) நிறுத்தப்படும்.

**இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்தில் இத்தனை செலவுகள் செய்தும், விலைக்கிரயம் செலுத்தியும், கூட்டங்கள் நடத்தியும், சுவிசேஷம் பரவக் கூடாமல் தடுக்கும் சக்திகளில் கிறிஸ்தவ குடும்பங்களில் நடக்கும் காரியங்களும் ஒன்று என்பதனை மறக்கலாகாது.** "கூட்டிக்கொண்டு ஓடிவிட்டான், ஓடிப்போய்விட்டாள்", திருமணம் நின்றுவிட்டது, உறவுகள் உடைந்துபோயிற்று" என்ற வாசகங்கள் இன்று மலிந்து காணப்படுகிற குடும்பங்கள் பெருகும் வேளையில், என் சிறு ஆலோசனை வாலிபப்பிள்ளைகளுக்கு ஒரு சிறு வெளிச்சம் காட்டும் என நம்புகிறேன்.

- கல்லூரிக்குப் போகிறாயா? காதலிக்கப் போகிறாயா? ......
- கல்யாணம் கட்ட வக்கில்லாதவன் ஏனடா காதலிக்கிறாய்......
- பெற்றோர் தான் பெரிதென்றால் ஏன்? என்னோடு சுற்றினாய் .......
- உங்கள் ஆண்டவர் தான் பெரியவர் என்றால் முன்னதாக ஏன்? எனக்குச் சொல்லவில்லை; நான் உன்னை நேசித்திருக்கமாட்டேனே......

- நீ இவ்வளவு பெரிய, உயர்ந்த குடும்பம் என்று அறிந்திருந்தால் என்னை உனக்குத் தந்திருக்கமாட்டேன். இப்போ என் நிலை என்னாவது?

- உன் வாழ்க்கையின் நோக்கத்தையும் தீர்மானத்தையும் நீ முன்னதாவே சொல்லியிருந்தால் அன்றைக்கே டாடா காட்டியிருப்பேனே.........

- கூட சுற்றி வந்து படங்கள் எடுத்தபோது நன்றாயிருந்தது இப்போது கசக்கிறதா......

- இத்தனை உணர்ச்சி வசப்படுபவர் என்று அறிந்திருந்தால் முதல் நாளிலேயே முழுக்கு போட்டிருப்பேன்........

போன்ற உரைநடைகளைக் கேட்டு எனக்கு சும்மாயிருக்கத் தோன்றவில்லை. என்னிடத்திலும் தேவ ஆவி உண்டென்று அறிந்திருக்கிறேன் (1 கொரி 7:40). சீறு கொண்ட சத்துரு வாலிபத்தைத் தொட எழும்புகிறான்; சீர் பெற்ற சபை அவனையும் அவன் சதியையும் முறியடிக்க; சீரான உபதேசத்தையும் வாழ்க்கை நெறிதனையும்; சிறாரின் உள்ளத்திலேயே பதித்துவிடவேண்டும்.

# 44. வஞ்சிக்கும் மூத்த ஊழியர்கள்

இலைகளெல்லாம் பூக்களாவதில்லை; பூக்களெல்லாம் காய்களாவதில்லை; காய்களெல்லாம் கனிகளாவதில்லை, அதுபோல, வளர்ந்து வருகின்ற, எழுந்து வருகின்ற தேவனுடைய பாத்திரங்களை (emerging leaders) திசை திருப்ப, தீய்ந்துபோகச் செய்கின்ற சில மூத்த ஊழியர்கள், விசுவாசிகளைப் பற்றிய ஒரு படப்பிடிப்பை 1இராஜாக்கள் 13-ம் அதிகாரத்தில் காணலாம். இந்த அதிகாரத்தில் இரண்டு தீர்க்கதரிசிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவனை கிழவனான ஒரு தீர்க்கதரிசி (வச 11) என்று வசனம் கூறுகிறபடியால், இன்னொருவன் இளம் தீர்க்கதரிசி என்று புரிந்துகொள்ள முடிகிறது.

வளர்ந்து வருகின்ற தேவபாத்திரங்களிடத்தில் ஏழு விதமான நற்காரியங்களைக் காணமுடியும்.

முதலாவது, அவன் **"தேவனுடைய மனிதன்" என்று அழைக்கப்பட்டவனாகவும், அறியப்பட்டவனாகவும் இருந்தான்.** அவனது **ஊழியம் அங்கிகரிக்கப்பட்டதாக இருந்தது** (வச 1,4,5,7,8,11,12,14,26,29,31). இந்த அதிகாரத்தில், குறைந்த பட்சம் 12 முறை அவனை "தேவனுடைய மனிதன்" என்று வேதம் அழைக்கிறது. இரண்டாவதாக, அவன் கீழ்ப்படிவதற்கு வைராக்கியமுள்ளவனாக இருந்தான். எதுவும் உண்ணாதே, எதுவும் அருந்தாதே, போன வழியாய் திரும்பாதே என்று ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளுக்குக் கொடுக்கப்பட்டது போன்ற எளிமையான கட்டளை அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (வச 9). **எளிமையான கற்பனையை அற்பமாக எண்ணாமல், அதற்குக் கீழ்ப்படிவதற்கு வைராக்கியமுள்ளவனாக இருந்தான்.**

மூன்றாவதாக, **அவன் தேவனுடைய வார்த்தையை முழுமையாக விசுவாசித்தான்.** அந்த இளம் ஊழியனின் பெயர் கூட வெளியே தெரியாது. கர்த்தரோ அவனை தேசத்தின் அரசனிடம் அனுப்புகிறார். அரசனின் செயல்களுக்கு எதிராக தேவனுடைய வார்த்தை உண்டானது. ஆனாலும், வார்த்தையை விசுவாசித்து தைரியமாக அரசனிடம் பகிரங்கமாக அறிவித்தான் (வச 2,3).

நான்காவதாக, **அவனது ஊழியம் நிரூபிக்கப்பட்டதாக இருந்தது.** "பலிபீடம் வெடித்து சாம்பல் கொட்டிவிடும்" என்றான். அப்படியே சம்பவித்தது. அவனைப் பிடியுங்கள், என்று கூறியவாறு கையை நீட்டின அரசனின் கை மரத்துவிட்டது (வச 3-5); சொன்னதெல்லாம் நடந்தது. எதிர்த்தவர்களைக் கர்த்தர் பகிரங்கமாக சந்தித்தார்.

ஐந்தாவதாக, **அவன் மனதுருக்கமுள்ள ஊழியனாக விளங்கினான்.** அரசன் மரத்துப்போன தனது கையின் சுகத்திற்காக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டபோது, "வருந்தி" விண்ணப்பம் செய்தான் (வச 6).

ஆறாவதாக, **அவன் மூத்த ஊழியர்களை மதிக்கிறவனாக விளங்கினான்.** ஒரே நாளில் தேசியப் புகழ் பெற்றபோதிலும், புகழற்ற, வயதான ஒரு தீர்க்கதரிசி சொன்ன வார்த்தைகளை நம்பினான் (வச 14-19).

ஏழாவதாக, **காணிக்கைகள் அவனை கவரவோ, ஈர்க்கவோ முடியவில்லை** (வச 7). "என் வீட்டுக்கு வா வெகுமானம் தருவேன்" என்ற அரசனின் அழைப்பு அவனை ஈர்க்கவில்லை. பணம் அவனது ஊழியத்தில் ஒரு பெரிய காரியமாக இருக்கவில்லை. இத்தகைய ஏழு குணலட்சணங்களைக் கொண்டு வளர்ந்துவருகின்ற, எழும்பிவருகின்ற இளம் ஊழியர்களை கர்த்தர் எச்சரிப்பாராக! அவர்கள் மூத்த ஊழியர்களால் வஞ்சிக்கப்படாதபடி கர்த்தர் காப்பாராக.

## மூத்த ஊழியர்களின் இடறல் கற்கள் இதோ:

முதலாவதாக, **மூத்தவர்கள் இளையோரை திசை திருப்பிட முடியும்.** அப்பொழுது அவன் இவனோடே திரும்பிப் போய்... (வச19). இளம் ஊழியன் போய்க்கொண்டிருந்த பாதையிலிருந்து அவனை முற்றிலும் திரும்பச் செய்துவிட்டான் மூத்த ஊழியன்.

இரண்டாவதாக, **மூத்தவர்கள் இளையோரின் வைராக்கியத்தை அழித்துவிடமுடியும்.** இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை தண்ணீர் குடிப்பதுமில்லை (வச 8) என்ற வைராக்கியத்தை விட்டுவிட்டு தனது வீட்டில் தன்னோடே புசிக்கவைத்துவிட்டான் மூத்த ஊழியன்.

மூன்றாவதாக, **மூத்தவர்கள் இளையோரின் அர்ப்பணிப்பை பெலவீனப்படுத்திவிடமுடியும்.** அரசனின் அச்சுறுத்தலும் என்னை மாற்ற முடியாது, அரசனின் ஆசை காட்டலும் எனது நிலையை அசைத்துவிட முடியாது என்ற இளம் ஊழியனை மூத்த ஊழியன் அசைத்துவிட்டான். வஞ்சகமாக அவனது அர்ப்பணிப்பில் தண்ணீர் ஊற்றிவிட்டான் (வச18).

நான்காவதாக, **மூத்தவர்கள் இளையோரின் பக்தியைக் கலைத்துவிட முடியும்.** "கர்த்தர், கர்த்தருடைய வார்த்தை" (வச 1,2) என்று இருந்தவனை "நானும் தீர்க்கதரிசிதான்" "ஒரு தூதன்... என்னோடே சொன்னான்" (வச 18) என்று கூறி, மனிதன், தூதன் என்று அவனது பக்தியைக் கலைத்துப்போட்டான் மூத்த ஊழியன்.

ஐந்தாவதாக, **மூத்தவர்கள் இளையோரை, தேவனை விட்டு தூரப்படுத்திவிட முடியும்.** கர்த்தருடைய வார்த்தையின்படி வந்தவனை, "கர்த்தர் உரைக்கிறார்" என்றவனை, எதற்கெடுத்தாலும் ஜெபித்தவனை (வச 1,2,6), கர்த்தரின் சத்தத்தையும் கேட்க முடியாதவனாக, ஜெபிக்கவும் எண்ணமில்லாதவனாக, மூத்த ஊழியன் தேவனை விட்டு தூரப்படுத்திவிட்டான்.

ஆறாவதாக, **மூத்தவர்கள் இளையோரை கர்த்தருடைய நாமத்தைக் கூறி வஞ்சித்துவிட முடியும்...**"ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான்" என்று பொய் சொல்லித்தான் மூத்த ஊழியன் இளம் ஊழியனைக் கவிழ்த்துப் போட்டான் (வச 18).

ஏழாவதாக, இளம் ஊழியர்கள் விழும்போது, **மூத்த ஊழியர்கள் நீலிக்கண்ணீர் வடிக்க முடியும்.** "அவன் பிரேதத்தை தன்னுடைய கல்லறையிலே வைத்தான்".

எட்டாவதாக, **மூத்தவர்கள் தங்கள் வாயாலேயே இளையோரின் அழிவை முன்னறிவிக்க முடியும்.** "அவர்கள் பந்தியில் உட்கார்ந்திருந்தபோது, அவனைத் திருப்பிக்கொண்டுவந்த தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டானதினால்,

அவன் யுதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனைப் பார்த்து சத்தமிட்டு, உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்கிறார் என்றான்" (வச 13:22). இவ்வாறு, மூத்தோரின் இடறுதலினால் தங்கள் ஆயுளையும், தங்கள் ஆத்துமாவையும், தங்கள் ஊழியத்தையும் இழந்தவர்கள் அநேகர்.

**மூத்தோரே இளையோரை அழித்துவிடாதீர்கள். இளையோரே மூத்தோரைக் கண்ணை மூடிக்கொண்டு நம்பி, கவிழ்ந்துபோகாதீர்கள்.**

## 45. வசனமே விளக்கு

இன்றைக்கு தேவ மக்கள் மிகவும் ஜாக்கிரதையாக நடக்கவேண்டிய அவசியமுண்டு. அநேக காரியங்கள் **ஆவிக்குரியவைப் போலக் காட்சி அளிக்கலாம்**; ஆனால், அவைகள் ஆராய்ந்து அறியவேண்டியவை என்பதனை மறக்க இயலாது.

ஏவாளை வஞ்சித்த வஞ்சகன் சாத்தான். அவளைப் பார்த்து, "நீங்கள் தேவன் விலக்கின கனியைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள்.... தேவர்களைப்போல் இருப்பீர்கள்" என்றும் கூறினபோது (ஆதி 3:5), அது அவர்களுடைய ஆவிக்குரிய நிலைதனை உயர்த்தும் என்றுதானே அவள் நினைத்திருக்கவேண்டும். **நாம் உண்டாக்கப்பட்டதே "அவர் சாயலில்தானே" என்பதனை அவள் ஒரு கணம் யோசித்திருந்தால்,** அவனுடைய வஞ்சக யோசனைக்குக் கீழ்ப்படிந்திருக்கமாட்டாளே. தேவனை நித்தமும் நேருக்கு நேர் சந்திக்கும் பாக்கியத்தினை விட இன்னமும் கண் திறக்கப்பட்டு எனக்கு நிகழப்போவது என்ன? என்று கேட்டிருந்தால் விழுகை ஏற்பட்டிருக்காதே.

பிரபல ஊழியர் ஒருவர் தன்னுடைய கூட்டத்தில், இனி இயேசு சரீரப் பிரகாரமாகத் தோன்றுவார் எனக் கூறினபோது, ஜனங்கள் 'அல்லேலூயா' என்று ஆர்ப்பரித்தனர். கேட்பதற்கு அது ஆவிக்குரிய பெரிய அனுபவம் போலக் காணப்பட்டது. ஆனால், கேட்ட ஜனங்கள் "நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2கொரி 5:16) என்பதனை மறந்துவிட்டனரே.

அதே ஊழியர் என்னுடைய ஊழியத்தினை எதிர்க்கிறவர்கள் சபிக்கப்படுவார்கள். அவர்களை கர்த்தரின் நாமத்தில் சபிக்கிறேன் என்று முழங்கினார். (அநேக கேள்விக்குரிய காரியங்களை அவருடைய ஊழியத்தில் காணலாம்; அதனை வசன ஆதாரத்தில் எதிர்ப்பவர்களைத்தான் அவர் அப்படிச் சபித்தார்). அதனைக் கேட்ட ஜனங்கள் பயந்தார்கள், நடுங்கினார்கள், ஆமேன் என்று அலறினார்கள்; ஆனால் ஊழியரும், அவரைக் கேட்ட ஜனங்களும்,

"நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள்" என்ற அன்புக் கட்டளைதனை (1பேது 3:9), **பிசாசையும் சபிக்க அதிகாரமில்லை** என்பதனை (யூதா 9) மறந்துபோய்விட்டார்கள் அல்லவா!

இதற்குக் காரணம் என்ன? **தேவ வார்த்தைதனைப் புறக்கணித்த ஏவாளைப் போல தேவ வார்த்தையைக் காட்டிலும் தோற்றத்தின்படி ஆவிக்குரியதாய் தோன்றியவற்றினை ஏற்றுக்கொண்டதே.**

இயேசுவைக் கவனியுங்கள்; பிசாசு அவரிடம் "நீர் தேவனுடைய குமாரனேயானால் தேவாலயத்து உப்பரிக்கையின் மேலிருந்து தாழக் குதியும், ஏனெனில் உம்மைக் காக்கும்படிக்கு தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் என்றும் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்றும் எழுதியிருக்கிறது" என்று சொன்னான். வேத வாக்கியங்களை இணைத்து ஆவிக்குரிய தோரணையில் பேசுகிறான். ஆனால், அவனுடைய உள்ளான எண்ணங்களை அறிந்த நம் ஆண்டவர், தான் தேவ குமாரன் என்று சில நாட்களுக்கு முன் பிதா கொடுத்த அறிக்கைதனை நன்றாக அறிந்தவராய், **தன்னைச் சோதித்துப் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை என்பதனைப் புரிந்தவராய்** அவனை மடங்கடித்தார். நான் இப்படிச் (குதித்து) செய்துதான் தேவகுமாரன் என்பதனை நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை. தேவன் என்னைக் குறித்து சொன்ன சாட்சி **வசனமே போதும்** என்பதனைத் தெளிவாக்குகிறார்.

இன்றைக்கு அநேக ஊழியங்களில் காணப்படும் வேதனை இதுதான். வேத வசனங்களில் **தங்களுக்குச் சாதகமானவைகளை மாத்திரம் தெரிந்தெடுத்து அதனை ஆதாரமாகக் கொண்டு** உபதேசங்களையும், ஊழிய முறைகளையும் தெரிந்துகொள்ளும்போது சத்துரு இதனைத் தனக்குச் சாதகமாக மாற்றி இவர்களை உபயோகிக்க ஆரம்பித்துவிடுகிறான். வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை... அவர்கள் அண்ணாந்து

பார்ப்பார்கள், பூமியையும் நோக்கிப் பார்ப்பார்கள்; ஆனாலும் இதோ, இக்கட்டும் அந்தகாரமும் இருக்கும்; இடுக்கத்தால் இருளடைந்து, அந்தகாரத்திலே தள்ளுண்டு அலைவார்கள் (ஏசா 8:20,22) என்பதுதானே தேவனின் நீதி.

கிழட்டு தீர்க்கதரிசியின் பொய் வாக்கினை, துடிப்பான வைராக்கியமான இளம் தீர்க்கதரிசி அடையாளம் காண முடியாமற்போனதற்கும் காரணம் இதுவல்லவோ! போன வழியாய் திரும்பாமலும் இருவென்று **கர்த்தர் தம்முடைய வார்த்தையால் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்** என்று அவன் கூறியதில் தெளிவு இருந்தது. அது கட்டளை எனவும் அறிந்திருந்தான் (1இராஜா 13:9), ஆனால் எனக்கு **ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான்** என்று பொய் சொன்ன கிழட்டு தீர்க்கதரிசியின் வார்த்தையில் காணப்பட்ட கபடமான "தூதன் சொன்னான்" என்ற வார்த்தையை சோதித்திருந்தானேயானால் தன் ஜீவனை இழக்க நேரிட்டிருக்காதே! (1இராஜா 13:18,24). இன்றைக்கும் அநேக ஊழியர்கள் தேவ வார்த்தையைச் மீறி தூதன் சொன்னான் என்றே கூறி ஜனத்தினை திருப்பிவிட்டிருப்பது நாம் அறிந்ததே. பார்வைக்கு ஆவிக்குரிய கோலம் போட்ட அனைத்து திட்டங்களும், ஆலோசனைகளும், ஊழியங்களும் இந்த வகையைச் சார்ந்ததே; விழிப்பாயிருப்போம்.

சில வேளைகளில் கர்த்தரின் வார்த்தைக்குக் காத்திராமல், நம்முடைய அனுபவங்களை மாத்திரம் சார்ந்து, நம்முடைய கருத்தினை வெளிப்படுத்தி ஆலோசனைச் சொல்லவும் சோதனை உண்டாகலாம். நாத்தான் தீர்க்கன் செய்தது அதுதானே, "தாவீது ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும் கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம் பண்ணும்போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறது" என்றார். அப்பொழுது நாத்தான் இராஜாவை நோக்கி "நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும், கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே" என்றான் (2சாமு 7:2,3). ஆனால், அது அவனுடைய அனுபவத்தையும், எண்ணத்தையும் சார்ந்ததே. தேவன் இடைப்பட்டு தம்முடைய திட்டத்தைத் தெளிவாக்குகிறார். இந்த ஆபத்தினையும் அடையாளம் கொண்டு செயல்படுவது நல்லது.

**அனுதாபம், பற்று இவைகளும் சில வேளைகளில் ஆவிக்குரிய உடையினைத் தரித்து நம்மைச் சந்திக்கலாம்.** பவுலின் வாழ்வினை உற்றுப் பாருங்கள். அகபு தீர்க்கன் மூலம் பவுல் எருசலேமில் கட்டப்பட்டு புறஜாதிகள் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாரென்று தீர்க்கதரிசனம் உண்டாகிறது. அதனைக் கேட்டவர்கள் பவுலின் மேல் கொண்ட பாசத்தின் மிகுதியினால், எருசலேமுக்குப் போகவேண்டாமென வேண்டி, கெஞ்சி நிற்கின்றனர் (அப் 21:10-12). ஆனால் பட்டணங்கள் தோறும் ஆவியானவர் சொல்கிறதனைத் தெளிவாகக் கேட்டு தனக்குள் உறுதியான தீர்மானமாக, "அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன், என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோட முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" என்ற முழக்கம் இன்றைக்கும் கேட்கப்பட்டால் நலமாயிருக்குமே. **அனுதாபம், பாசம், பற்று சொந்த பந்தமல்ல; தேவ வார்த்தையின் நிறைவேறுதலே நமக்கு முக்கியம் என்பதனை வாழ்ந்து காட்ட தேவ மனிதர்கள் தேவை.**

ஆபத்தினைச் சந்திக்கும் வேளைகளில் ஆவிக்குரிய கவசம் அணிந்த ஆலோசனைகள் ஆபிரகாமிடத்திலிருந்து சாராளுக்கு வந்ததுபோல வரலாம். "உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும் நீ உன்னை சகோதரி என்று சொல்" என்ற ஆலோசனை (ஆதி 12:13). தேவன் எகிப்திலும் கேராரிலும் அவனைக் காப்பாற்ற இடைப்பட்டிருக்காவிடில் இந்த தேசத்தாரை அழிவுக்கு நேராக வழிநடத்தியிருக்குமே (ஆதி 12:17, 20:9). என்னைக் காத்துக்கொள்ள, நான் மேற்கொள்ளும் ஆவிக்குரிய வேஷம் என்னைச் சுற்றியிருப்போரின் அழிவுக்குக் காரணமாக மாறிவிட்டால் அது எத்தனைப் பெரிய துக்ககரமானது. **என் மூலம் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவேண்டுமே ஒழிய, என் மூலம் அவர்கள் அழிக்கப்பட்டுவிடக்கூடாதே.**

சத்துருவினிடத்தில் கூலி பெற்றிருந்த செமாயா என்பவன் நெகேமியாவை நோக்கி, “நாம் இருவருமாய் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய் தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும்; உம்மைக் கொன்றுபோட வருவார்கள், இரவிலே உம்மைக் கொன்று போட வருவார்கள்” என்றான் (நெகே 6:10). எத்தனையான **ஆவிக்குரிய முலாம் பூசப்பட்ட பொய்,** ஆனால் ஜெபத்தினால் தேவனோடு ஒன்றிப் போய்விட்டவனும், தேவ காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தவனும், தேவனுக்குப் பயந்து நன்மைச் செய்பவனுமாகிய நெகேமியாவை அது அசைக்கவோ, ஏமாற்றவோ முடியவில்லை. மாறாக அவன் சொல்வதனைப் பாருங்கள்! என்னைப் போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய் பதுங்குவானோ? என்ற இடி முழக்கக் குரல் (நெகே 6:11). அந்தப் பொய்யை அடையாளம் கண்டுகொள்ள நேரம் எடுக்கவில்லை.

**வெளி வேஷத்தில் மேன்மை பாராட்ட விரும்பும் ஒரு கூட்டம்** எப்போதும் உண்டு; அது இருதயத்தில் அல்ல. அது **தங்களையே மெச்சிக்கொள்ளும், தங்களுக்கே புகழ் தேடும்.** அதற்காக யாரையும் பலிகொடுக்கவும் தயங்காது (2கொரி 5:12). வெளித்தோற்றத்தின்படி மாத்திரம் பார்த்து ஏமாந்து போகாமல் தேவன் நம்மைக் காப்பாராக (2கொரி 10:7). பொல்லாங்கானதாகத் தோற்றமளிக்கிறவைகள் அநேக வேளைகளில் ஆவிக்குரிய தோற்றம் போலக் காட்சி தர ஏராளமான வாய்ப்புகள் உண்டு. இது கடைசி காலம் **கன்னியாக வாழவேண்டிய சபைதனைக் கறைப்படுத்திவிட சத்துருவாகிய சாத்தான் பலவித சாகசங்களைக் கையாளும் வேளையிது** (2கொரி 11:3).

கவனமாக வாழ்வோம் கர்த்தரின் ஆலோசனையாம் கர்த்தரின் வார்த்தைதனை நன்கறிவோம். காலத்தின் கோலத்தினைப் புரிந்துகொள்வோம். கருத்தாய் ஜீவிப்போம், கிருபைதனைச் சார்ந்த வாழ்வு பெற்றிடுவோம், கண்களில் தெளிவு உண்டாக்கும் கர்த்தரின் நியாயங்களால் எச்சரிக்கப்பட்டவர்களாய் வாழ்வோம்

(சங் 19:8-11). எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறிவோம் (1யோவா 4:1). **தேவனால் உண்டானவைகள் தேவ வார்த்தையால் முத்தரிக்கப்பட்டு தேவனால் அங்கீகாரம் பெற்றிருக்கும்.** கலப்பு அதிலே காணப்படாது. தேவனால் உண்டானவைகள் அல்லாமல் தேவ நாமத்தைத் தரித்துக் கொள்பவை அந்திக்கிறிஸ்துவின் அடைக்கலத்தால் உண்டானவை என்பதனை மறந்துவிடாதீர்கள்.

பல வருடங்களுக்கு முன்னர் நான் எழுதிய பாடல் வரிகள்...

வேதமே எந்தன் வெளிச்சமே
வழிகாட்டியும் அதுவே
இரவும் பகலும் தியானிப்பேன்
இடறிடேன் என்றென்றுமே
பிழைப்பது தேவ வார்த்தையினால்
மாத்திரம் என்றறிவேன்
குழந்தையைப் போல வாஞ்சிப்பேன
பதறிடேன் என்றென்றுமே

இன்று அநேகருடைய வாழ்விலும், ஊழியத்திலும் வேதத்தின் முக்கியத்துவம் அசட்டைச் செய்யப்படுவதனையும், மறக்கப்படுவதனையும் காணுங்கால் உள்ளம் வேதனை அடைகிறது. வேத புத்தகம் மந்திர புத்தகம் போல் மட்டுமே பாவிக்கப்படுவதனையும் கண்டு மனம் புழுங்குகிறது.

“நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்” (ஓசி 4:6) என்று தேவன் கூறாதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது நம் கடமை.

“என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன், அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்” (ஓசியா 8:12) என்று அங்கலாய்க்கும் தேவனைக் கண்டவர்கள் எத்தனை பேர், மற்ற மதங்களைப் போல நம் கையில் தேவன் அருளிய புத்தகமாகிய **வேதம், ஏதோ ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், சடங்குகளில், விழாக்களில் ஓதுவதற்கு அருளப்பட்டது அல்ல.**

மாறாக அன்றாடக வாழ்வில் அதனை ருசித்து அவருக்குள் தேறினவனாக மாறி, நற்கிரியைகளைச் செய்யத் தகுதி பெற்றவர்களாகி, **தேவனுக்கு உகந்தவர்களாக மாற்றுவதற்காகவே தரப்பட்டுள்ளது** (2தீமோ 3:16,17) என்பதனை நாம் மறக்கலாகாது.

ஆயிரம் ஸ்தோத்திரபலிகளைச் சொன்னால் போதும் என்ற நிலைக்கு இன்று அநேகர் மாற்றப்பட்டிருப்பது நமது அவல நிலையையே சுட்டிக்காட்டுகிறது. வேதத்தினை ஆராய்ந்து அறியவும், தேடி வாசிக்கவும் (ஏசா 34:16) இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாகக் கற்றுக்கொள்வதும் (2தீமோ 3:15) அதன் அடிப்படையில் மற்றவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்துவதும் நம்முடைய கடமைகளில் ஒன்றாகும்

அநேக நேரங்களில் வேதம் புறக்கணிக்கப்பட்டு, ஜெபங்கள் மணிக் கணக்கில் ஏறெடுக்கப்படுகிறது. விண்ணப்பங்கள் பரலோகத்தை நோக்கி தான் செய்யப்படுகிறது. **தன்னுடைய செவிதனை வேதத்திற்கு விலக்கும் எந்த ஜெபமும் பரலோகம் அங்கிகரிக்காதவை** என்பதனை அறியுங்கால் அந்த பிரயாசம் எத்தனை வீணாக செலவழிக்கப்படுகிறது என்பது உண்மை (நீதி 28:9). வேதத்தினை தியானித்து தன் வாழ்வினை ஆராய்ந்து அதன் அடிப்படையில் தேவ சமூகத்தில் சேரும்போது, நம் வாயில் வார்த்தை பிறக்கும் முன்னமே தேவன் பதில் அளிக்கிறார் என்ற உண்மையினை அறிந்தவர்கள் எத்தனை பேர்?

அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன். அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன் (ஏசா 65:24) என்ற வாக்கு அவரின் இராஜ்யத்தின் பிள்ளைகளுக்குச் சொந்தமல்லவா!

வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை (ஏசா 8:20) என்பது மாறாத பிரமாணம்.

அநேகர் வேதத்தினைக் கேட்க விரும்பாததற்குக் காரணம், அது அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்ற தடை செய்துவிடும் என்பது. அழுதாகிலும் அவரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதும்,

யாராகிலும் ஜெபித்தாகிலும் வாங்கித் தந்துவிடுவார்கள் என்பதும் போன்ற விநோத எண்ணங்களை உள்ளடக்கி வாழ்வதாலேயே **சிலர் கர்த்தருக்குக் காணிக்கைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாமென தப்புக்கணக்குப் போடுகின்றனர்.** அவரோ நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன், பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே என்கிறார் (சங் 50:12). **சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய்** என்பதே அவர் சொல்லும் குற்றச்சாட்டு (சங் 50:17).

இன்னொரு கொடுமை இந்த நாட்களில் நடக்கிறது; அது என்ன? **வேத வாக்கியங்களை தப்பாகப் புரிந்துகொண்டதனால் உண்டாகும் பிரசங்கங்கள்** (மாற் 12:24). பரலோகத்தில் அநேகர் வீடு அற்றவர்களாய் திரிவார்கள் என்றார் ஒரு பிரபல தமிழ் பிரசங்கியார். தாவீது தன் மடியில் குளிருக்காகக் கொடுக்கப்பட்ட அபிஷாகை அறியவில்லை, காரணம் உணர்த்துதலின் ஆவியால் நிறைந்திருந்தார் என்றார் பிரபல தொலைக்காட்சிப் பிரசங்கியார். நீ கோடி கோடியாய் பணம் பெறுவது தேவ நோக்கம் என்றார் தீர்க்கதரிசி என்று தன்னை அழைத்துக்கொள்ளும் பிரபல ஊழியர் ஒருவர், பவுலுக்கு திருமணத்திற்கு வெளியே பெற்ற ஒரு குமாரன் இருந்தான், அவன்தான் சரீரத்தில் முள்ளாய் விளங்கினான் என்றார், தன்னை பெரிதான வெளிப்பாடுள்ளவனைப் போல காண்பிக்க விரும்பும் மற்றும் ஒரு ஊழியர். ரெபெக்காள் ஒட்டகங்களுக்குத் தண்ணீர் காட்டினாள், ஆகையால் நீ எனக்கு மட்டுமல்லாமல் நான் ஏறும் வாகனத்திற்கும் பெட்ரோல் ஊற்று என்றார் ஒரு பழம் பெரும் போதகர். தசம பாகம் உன் ஆசாரியன் கையில் மாத்திரமே தரப்படவேண்டும் என்றார் பழைய உடன்படிக்கையைத் தனக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள விரும்பும் ஒரு போதகர். அசீரியனைக் குறித்து தேவன் குறிப்பிடும் வரிகளான “இதோ திராணியும் வல்லமையுமுடைய ஒருவன் ஆண்டவரிடத்தில் இருக்கிறான்” (ஏசா 28:2) என்பதனை, பரிசுத்த ஆவி என்று போதிக்கும் பிரபல உலகப் புகழ் ஊழியர் ஒருவரும் உண்டு. ஏதேனில் பாய்ந்த முதலாம் ஆறு பைசோன் ஆவிலா தேசம் முழுவதும் சுற்றி ஓடும் என்பதனை “ஆவியில்லா” தேசம் என்று ஆராய்ச்சி செய்து வெளிப்பாடு பெற்றதுபோல பேசும்

வேதாகமக் கல்லூரி பேராசிரியரும் இதில் அடங்குவர். எத்தனை எத்தனை அபத்தங்கள் ஆவிக்குரிய உலகில்; இதனையும் கேட்டு "அல்லேலூயா" என்று ஆர்ப்பரிப்பவர்களும் உண்டு. இவரைப்போல பேசுபவர்கள் இல்லை என புகழ் பாடுவோரும் உண்டு. **ஆசாரியர் உதடுகளில் வேதத்தை தேடுவார்கள் என்பதை மறக்கலாகாது** (மல் 2:7).

என் ஜனம் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் என்று தேவன் உரைப்பது (ஓசி 4:6) இதனைத்தானோ?

இன்று **கிறிஸ்துவை அறியாதோர் நம்மிடத்தில் ஓடி வருவதற்கு வேதம் உயர்த்தப்படவேண்டுமே.** எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் **சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்** (ஏசா 2:2,3) என்பது வாக்குத்தத்தம் அல்லவா!

வேதம் போற்றப்படாத, மதிக்கப்படாத, விரும்பப்படாத இடங்களில் தீர்க்கதரிசிகளுக்கு தரிசனம் கிடைப்பதில்லை என்பதனை மறக்கலாகாது (புல 2:9). நீதி 29:18 –ஆம் வசனமும் இதனைத்தான் வலியுறுத்துகிறது. தரிசனமற்ற அநேகருடைய வாழ்வுக்குக் காரணம் வேதம் போதிக்கும், உணர்த்துவிக்கும், உந்தித்தள்ளும் உண்மைதனையும், முழு வேதாகமம் அருளும் விளக்கத்தினையும் அவர்கள் காணக்கூடாதபடி கண் சொருகி இருப்பதினாலேயே, தரிசனம் அற்ற ஒரு வாழ்க்கையில் உத்வேகம் காணப்படாமல், உள் நோக்கத்தின் அடிப்படையில் சுயலாபம் தேடும் காரியங்கள் அதிகமாகக் காணப்பட ஏதுவாகும். அதுவும் **தேவன் தராத தரிசனங்கள் ஜனத்தினை வேறு திசைக்குக் கொண்போய்விடுமே**!

எனவே வேதத்தின் அறிவைப் பெருக்குவோம், நேசிப்போம், அது என் மனமகிழ்ச்சி என்று முழங்குவோம், ஆராய்ந்து காலத்தினையும் புரிந்துகொண்ட வாழ்விற்கு ஒப்புக்கொடுப்போம். கடமைதனை செய்ய கர்த்தரின் பெலத்தினையும் பெற்றுக்கொள்வோம். வருங்கால

சந்ததிக்கும் கற்றுத் தருவோம் நாமும் கற்றுத் தேறுவோம். நாம் தேறுகிறது மற்றவர்களுக்கு விளங்குவதாக (1தீமோ 4:15) அது தேசத்தினை அசைக்கப் போதுமான பெலனுள்ளது.

**தேவன் அருளிய வேதம் நம் இருதயத்தில் இருந்தால் நம்முடைய நடைகள் பிசகுவதில்லை** (சங் 37:31).

அவருடைய வசனம் நம்மை நிரப்பினால் **அவருடைய சித்தத்தினை அறிந்துகொள்வதும் அவருக்குப் பிரியமானதைச் செய்வதும் மிகவும் எளிதாகிவிடும்** (சங் 40:8).

தேவ **வார்த்தைகளைக் கற்று அதில் நடக்க முயற்சி செய்வோர் கறையற்ற பழுதற்ற வாழ்க்கை வாழ்வதனை அனுதினமும் அனுபவிப்பார்கள்** (சங் 119:1).

**வேதத்தினை நேசித்து அதன்படி நடக்க ஒப்புக்கொடுத்தோர் மாயையான வழிகளுக்குத் தங்களை ஒப்புக்கொடாமல், ஏமாற்றும் பாதைகளில் நடவாமல் காப்பாற்றப்படுவார்கள்** (சங் 119:29).

**தேவ வார்த்தைகள் நமக்கு மனமகிழ்ச்சியானால், நாம் அமிழ்ந்து மாண்டு போகாமல் (அது துக்கத்தினாலேயோ, உபத்திரவத்தினாலேயோ) காக்கப்படுவோம்.** (சங் 119:92).

தெளிந்த புத்தியும் நல் உணர்வும் கொண்ட வாழ்க்கைதனை வாழச் சிறந்த வழி வேதத்தினை இதயத்தில் காத்துக்கொள்வதே (சங் 119:34). வீண் சிந்தைக்கும் பேச்சுக்கும் நம்மை விலக்கி இருமனம் கொண்ட வாழ்வில் இருந்து தற்காக்க வேத வார்த்தைகளுக்கே வல்லமை உண்டு (சங் 119:113).

என்னை பெரியவனாக்கி **முதியோர்களையும் விட ஞானமுள்ளவனாக மாற்ற உதவுவது வேத தியானமே** (சங் 119:99.100).

அடுக்கிக்கொண்டே போகலாம்; இலையுதிரா வாழ்வு, செய்யும் காரியங்களில் வெற்றி, எத்திசையிலும் பயனுள்ள வாழ்வு, புத்தியுள்ள மேன்மையான வாழ்வு, தேவ பிரசன்னத்தை ஏந்திச் செல்லும் பாத்திரமாக மாற்றப்படும் பாக்கியம் (சங் 1:4; யோசுவா 1:7,8).

**எனவே கர்த்தாவே உம் வேதத்தின் அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்** எனக் கெஞ்சுவோம் (சங் 119:18).

## 46. வீணடிக்காதீர்

**அவர் நாம் ஒப்புவித்ததனைக் காக்கிறவர் மாத்திரமல்ல, நமக்கு ஒப்புவிக்கப்பட்டவைகளைக் குறித்தும் கருத்தாய் இருப்பவர்.** அவர் நம்மை நம்பி மக்களை, நேரத்தினை, தாலந்துகளை, கிருபைகளை, பணத்தை, சாதனங்களை, ஊழியத்தினை ஒப்புக்கொடுத்திருப்பது நாம் அறிந்ததே. அதிலே நாம் கவனமாய் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதும் நமக்குத் தெரிந்ததே! **அவைகளை வீணடிக்க நம் யாருக்கும் உரிமையில்லை** என்பதோடு, வீணடித்தால் அதற்கு நாம் உத்திரவாதிகளானதால் கணக்குக் கொடுக்கும் நாளிலே தண்டனைக்குரியவர்களாவோம் என்பதனை வேதத்தின் பல சந்தர்ப்பங்களிலும் காணலாம்.

தாலந்துகளைக் குறித்த உவமைதனை யாவரும் அறிந்திருக்கிறோம். அதனை உபயோகப்படுத்திப் பெருக்காதவனை தண்டனைக்குள்ளாக்குகிறது (மத் 25:15-30). ஆனால், கொடுத்ததனை குலைத்துப் போட்டவர்கள் எத்தனை பேர்? தொலைத்தவர்களும் அநேகர். **வீணடிப்பதனை அறியாமல் வாழும் கூட்டமும் தேவ மக்கள் மத்தியில் உண்டு.** கொஞ்சம் கவனமாய் இதனை ஆராய்ந்தால் எத்தனை நலமாயிருக்கும்.

பவுல் தன்னைப் பற்றிக் கூறுகையில், நான் அவருடைய **கிருபையை விருதாவாக்கவில்லை** என்றும் (கலா 2:21); அது **வீணடிக்கப்படவில்லை** என்றும் அடிக்கடி கூறுகிறார். இதனை தைரியமாகக் கூற எல்லா தேவ மக்களும் தயவு பெற்றுக்கொண்டது மாத்திரமல்லாமல், போதுமான பெலமுள்ளவர்களாய் இருக்கவேண்டியது அவசியம். "நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்குதே, மீட்பர் வர காலமாகுதே" என்ற பாடல் மாய உலகை நம்பி வாழ்ந்திடும் மானிடர்க்கு மாத்திரமல்ல, அனைத்துப் பேருக்கும் பொருந்தும் என்பதனை நாம் மறக்காதிருப்போமாக (2கொரி 6:1). **சொல்லும் வார்த்தைகள் வீணாக இருக்குமானால், அது நியாயத்தீர்ப்புக்குரியது** என்று இயேசு சொன்னாரே (மத் 13:26). அப்படியானால், அதாவது நம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு வாயில் வெளிவரும் வார்த்தைகளுக்கே நாம் கணக்குக் கொடுக்கவேண்டும்

என்றால், மற்ற அனைத்திற்கும் இது பொருந்தாதோ! அவரிடத்தில் மன்னிப்பும் இரக்கங்களும் உண்டு; என்றாலும், ஜாக்கிரதையாக வாழவேண்டிய காலம் இதுவே.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்; இன்றைய கிறிஸ்தவ உலகில் வீணடிக்கப்படும் காரியங்கள் தான் எத்தனை? நிகழ்ச்சிகள் என்ற பெயரில் செலவாகும் பணத்தினை விட விரயமாக்கப்பட்ட பணமே அதிகம் (ஓசி 9:4). இதற்கு யார் பொறுப்பாளிகள்? அந்த செலவின் பின்னர் தேவ இராஜ்யம் பெற்ற பலன் என்ன? இத்தனை பணம் செலவழித்து நடத்திய நிகழ்ச்சியின் பின்னர் தேசம் பாதிக்கப்பட்டதாகவோ, ஜனங்கள் வீறுகொண்டு எழுந்தார்கள் எனவோ காண்பது அரிது. ஐக்கியம் என்ற வடிவில் நடத்தப்படும் விழாக்களில் ஏற்படும் நஷ்டம் நம்மை கதிகலங்கச் செய்திடுதே. அலங்கரிப்பு தேவை, **ஆடம்பரம் குழி தோண்டிப் புதைக்கவேண்டிய ஒன்று.**

செல்வச் செருக்காய் வாழும் வாழ்வு பாபிலோனுக்குச் சொந்தம் (வெளி 18:7,9). சம்பிரமாய் வாழும் வாழ்வும் அதற்கே சொந்தம் (வெளி 18:14). ஆத்துமா இச்சித்தவைகளைக் கொண்டு கொழுமையாய் வாழுவதும் அதற்குரியது (வெளி 18:14); உச்சிதமான சம்பூரணமும் அந்த வேசிக்குரியது (வெளி 18:19); இவை அனைத்தும் தேவனின் நியாயத்தீர்ப்புக்குத் தப்புவதில்லை (வெளி 18:20; 19:2). அந்த நியாயத்தீர்ப்பைக் கண்டவர்களே அல்லேலூயா எனக் கூறி ஆர்ப்பரிப்பர் (வெளி 19:1,3). இவைகள் போதிப்பது என்ன? **விரயம் செய்ய நமக்கு (தேவ ஜனங்களுக்கு) அனுமதியில்லை** என்பதனையே!

இன்றைய தலைவர்களில் அநேகர் தங்கள் நிலையினை மறந்து தனக்கடுக்காததனில் தலையிட்டு சமயத்தினையும், கிருபைதனையும் வீணடிக்கின்றனர். தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனுக்கு ஒப்பானவன் அல்லவா! (நீதி 26:17; தீத்து 3:9). இன்டர்நெட் பைத்தியமும், கிரிக்கெட் பைத்தியமும், அரட்டை சங்கப் பைத்தியமும் இதனை சாதிப்பதில் கைதேர்ந்தவைகள். பொல்லாங்காய்த் தோன்றுகிற அனைத்தும் விட்டுவிடப்படவேண்டியவையே (1தெச 5:22). தேனையும் மிகுதியாய் உண்பது நல்லதல்ல என்று கூறும் வேதம், அதனைக் கண்டால் சாப்பிடு, மித மிஞ்சிச் சாப்பிட்டால் வாந்திப் பண்ணிப் போடுவாய் என்றே சொல்கிறது (நீதி 25:16).

**உங்கள் நேரத்தினை தேவையில்லாமல் சாப்பிடும் காரியங்களைக் கண்டுபிடித்து விலகியிருக்கிறீர்களா? உங்கள் குணநலன்களைச் சாப்பிடும் காரியங்களைக் கண்டுகொண்டு உதறியிருக்கிறீர்களா? கிருபையை விருதாவாக்கும் ஊழியங்களைக் கண்டு ஓடியிருக்கிறீர்களா?**

வீணும் வியர்த்தமுமாய் உழைக்கிறேன் என்று புலம்பும் ஊழியரும் உண்டு (ஏசா 49:4; மல் 3:14). நான் விருதாவாகவே என் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டேன் என்று புலம்பும் பரிசுத்தவான்களும் உண்டு (சங் 73:13). விருதாவாகவே உழைக்கும் பலசாலிகளும் உண்டு (சங் 127:1); ஆனால், **தெரிந்தும் வீணடிக்கும்** மக்களே ஏராளம்.

இன்றைய கிறிஸ்தவ உலகில் நடக்கும் ஊழியங்களையும், நிகழ்ச்சிகளையும், விழாக்களையும், ஆராதனைகளையும், கூட்டங்களையும் கொஞ்சம் உற்று நோக்கினால், எத்தனை பணம், முயற்சி, உழைப்பு முதலானவை வீணடிக்கப்படுகிறது என்பது விளங்கும். அவைகள் கருத்தாய் தவிர்க்கப்பட்டால், இந்த நாடு சுவிசேஷமயமாக்கப்படுவதற்குப் போதுமான அனைத்தும் இங்கே உண்டு என்பது விளங்கும்.

உலகில் இன்று விளையும் விளைச்சல் 17 பில்லியன் மக்களுக்குப் போதுமானது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அப்படியிருக்க, இரண்டு பில்லியன் மக்களுக்கு ஒரு வேளை உணவு கூட அரிதாவதற்குக் காரணம் என்ன? வீணடிக்கும் 4 பில்லியன் அதாவது, மூன்றில் இரண்டு பங்கு மக்களின் கவனக் குறைவும் அகங்காரமுமே. இதுபோலவே சுவிசேஷ ஊழியத்திலும் நடைபெறுகிறது. பாதிக்குப் பாதி கிறிஸ்துவை அறிய வாய்ப்பற்ற நிலைமையில் வாழ்வதற்குக் காரணம், கிறிஸ்துவை அறிந்தோம் எனக் கூறும் மக்களின் விரயமாகும் ஊழியத்தின் நிலையே. இது மாறாவிடில், தேவ நோக்கம் தேசத்தில் நிறைவேறுவது கூடாதே.

**தேவ நாமத்தை வீணாக வழங்குபவர்களையும், உபயோகிப்பவர்களையும் தேவன் நியாயத்தில் நிறுத்துவார் என்பது சத்தியம்** (யாத் 20:7); அவர்களைத் தண்டியாமல் விடார் என்றே வேதம் கூறுகிறது. அப்படியானால், எத்தனை ஆராதனை

முறைமைகள் இன்று மாற்றி அமைக்கப்படவேண்டும். கர்த்தரை முழு இருதயத்தோடு சேவிக்காதபோது அனைத்தும் வியர்த்தமும் வீணுமே (1சாமு 12:20,21).

நாம் வீண் என்று சொல்வதனை நேசர் வீண் என்று சொல்லாமல் இருக்கலாம் (மாற் 14:4-9). அதனை அவர் நற்கிரியையென்று சொல்லக்கூடும்; ஆனால், நாம் அதனை வீண் என்று அறியாமையால் சொல்கிறோம். ஆனால், அறிந்து, விளங்கி, ஆலயங்களில் அலங்காரம் என்ற பெயரிலும், விழாக்களில் பாராட்டு என்ற பெயரிலும், கூட்டங்களில் விளம்பரம் என்ற பெயரிலும் கொள்கையற்ற, முறையற்ற, வேதம் காட்டித் தராதவைகள் பின்பற்றப்பட்டு முக்கியத்துவம் பெறும்போது, அவைகளுக்காக நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதனை மறவாதபடி காத்துக்கொள்வோம்.

திருமண விழாக்களின்போது, சந்தோஷம் வெளிப்படுத்தப்படுவது இயற்கை. பிறந்தநாளின்போது நன்றி அறிதல் என்ற காரியம் பிரஸ்தாபப்படுவது நலமே. இறந்த வீட்டில் ஆறுதல் கூட்டம் என்ற பேரில் அன்னாரின் சாட்சிப்பகறப்படுவது அழகானதே. பரீட்சைகளில் வெற்றி பெறும்போதும், வேலை உயர்வு உண்டாகும்போதும், நற்காரியங்கள் நடக்கும்போதும் நண்பர் குழாமில் நன்றிப் பெருக்கு இணைவது தடுக்கப்படுவதற்கு அல்ல. ஆனால், **தியாகமும், தேவனும் தள்ளிவைக்கப்பட்டு ஆசரிக்கப்படும் எதுவும் அருவருப்பே.** அவை தேவனுக்கு வெறுப்பைக் கொண்டுவர வல்லமைப் பெற்றவை (ஏசா 1:13,14).

கவனமாக வாழவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (எபேசி 5:15-17) மதியற்று வாழ்வது நம்மை உண்டாக்கியவருக்கு இகழ்ச்சி. சமயமும், சந்தர்ப்பங்களும் திரும்ப வருவதில்லை. பணமும், தாலந்துகளும் திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடியவை எனினும், நாம் உக்கிராணக்காரர் என்பதனை மறக்கவே கூடாது. இந்தியத் திருச்சபைகளில் இன்று ஆவிக்குரிய சபைகளிலும் வீணடித்தலும் விரயமும் பெருகிவருகின்றது. இவைகள் அடையாளம் கண்டுகொள்ளப்படாவிடில், அழிவுக்கு வழிநடத்திவிடும். ஆடம்பரப் பிரியரான சில ஊழியர்களும், ஆண்டவரின் இராஜ்ய

விரிவாக்கத்தினை உணராத சில தலைமைகளும், தங்களுக்குப் பெயரும் புகழும் ஏற்படவேண்டும் என வாழ்வோராகவே இருப்பர்.

**தவிர்ப்போம் விரயத்தினை; தண்ணீரை விரயமாக்காதீர் வருங்கால சந்ததியினை நினைவில் வையுங்கள் என்று மற்றவரை எச்சரிக்கும் நாம்; நம்மையும் சோதித்தறிந்து, வருங்கால சந்ததியையும், இக்கால கிறிஸ்துவை அறியா சந்ததியையும் நினைவில் கொண்டால் இது சாதாரணமாக சாத்தியம்.**

"இயேசு ஜனங்களைப் போஷித்தார். அவர்கள் தங்களுக்கு அப்பம் வேண்டும் என்று கேட்கவில்லை. அவரே அவர்களின் தேவையைக் கண்டார், சீஷர்களிடம் சொல்லி அதற்கான அற்புதத்தைச் செய்தார்." இன்றும் அவர் நம்மேல் அத்தனை கரிசனை உள்ளவரே. ஆனால் கூடவே அவர்கள் திருப்தி அடைந்த பின்னர் சீஷர்களை நோக்கி இன்னுமொரு கட்டளைக் கொடுக்கிறார். **"ஒன்றும் சேதமாகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்து வையுங்கள்"** என்றார் (யோவான் 6:13). இன்றும் அதே நிலையில் தான் அவர் செயல்பட விரும்புகிறார் என்று நாம் அறிந்தால் எத்தனை நலமாயிருக்கும்.

தேவனுடைய ஆசீர்வாதத்தினால் இன்று அநேக சபைகளும் விசுவாசிகளும் பல நிலைகளில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மை. அதின் நிமித்தம் பலரும் தேவ காரியங்களுக்காகவும், ஊழியங்களுக்காவும் ஒழுங்காகவும் அதிகமாகவும் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். விசேஷமாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஊழியங்களைத் தாங்கும் வாஞ்சை பெருகியிருப்பதனை நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம். ஆனால் கூடவே அந்த பணங்களும், சக்தியும் விரயமாகுவதை அநேக இடங்களில் அநேக முறைகளில் காணும்போது, இந்த **மூலதனங்கள்** (Resourses) **முறையாக உபயோகப்படுத்தப்பட்டு விரயம் தடுக்கப்பட்டால்,** இந்த தேசத்தில் தேவனுடைய கிரியை இன்னமும் அதிகமாக நடக்க ஏதுவாகும்.

உதாரணமாக, நாம் நடத்தும் "சுவிசேஷக் கூட்டங்கள் அநேக நேரங்களில் எதற்காக நடத்தப்படுகிறது என்பதும், அதனுடைய விளைவுகள் என்ன என்பதும் தெரியாமலேயே போய்விடுகிறது." கூட்டத்தின் வெற்றியை நாம் வெறும் எண்ணிக்கையை வைத்துத்

தீர்மானித்துவிடுவதினால் உண்டாகும் ஆபத்துக்கள் உண்டு. எண்ணிக்கையைக் குறியாகக் கொள்ளாமல் விளைவுகளையும் (Results) சேர்த்துப் பார்த்தால் நாம் எத்தனைப் பெரிய தவறைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பது விளங்கும்.

“கலந்து கொள்ளும் மக்கள் யார்?” இந்த கேள்விக்கு பதில் சொன்னால் 99.99 சதவீதம் **இயேசுவைப் பற்றிக்கொண்டோரே** என்பதும் அவர்கள் இன்னமும் வளருவதற்கானக் காரியங்கள் தான் அறியவேண்டும் என்பதும் தெளிவாகும். ஆனால், கூட்டத்தில் பிரசங்கிக்கப்படுபவை சாதாரணமான **அநேகமுறை இவர்கள் கேட்ட சுவிசேஷ வார்த்தைகளே.** எத்தனை முறை எல்லாரும் நடத்துகிறார்கள் நாமும் நடத்தவேண்டும் என்ற நோக்கில் நடத்தப்படுவதினால், கூட்டத்திற்கு ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாதவரும், அறியாதவரும் அதிகம் வருவதற்கு ஏற்றவாறு மாற்று முறைகள் உபயோகிக்கவேண்டிய அவசியம் மறக்கப்படுகிறது.

பல லட்சங்களை விழுங்கும் இந்தக் கூட்டங்கள் சாதித்தவை மிகவும் குறைவானதே. சுவிசேஷம் அறிவிக்கும் முறையில் ஒரு மாற்றம் உண்டாக, அனைத்து விசுவாசிகளும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவர்களாக மாற்றப்படவும், தீவிரப்படவும், முனைந்து நின்று செயல் புரிய அவர்களைப் பயிற்றுவிக்கவும், அனைவரும் உபயோகப்படுத்தப்படுவதற்கான வழிமுறைகளை நாம் செயல்படுத்தவேண்டிய நேரம் இது. மாறாக **ஒரு நபர்தான் சுவிசேஷம் அறிவிப்பார் மற்றவர்கள் அதற்கு உதவிசெய்யவேண்டும் என்ற முறையில் இன்று மாறுதல் ஏற்பட்டால் விரயங்களைத் தவிர்க்க வாய்ப்புண்டு.**

ஒரு கூட்டத்தை நடத்துவதில் ஆகும் செலவு, சக்தி, நேரம் அனைத்தையும் சேர்த்துப் பார்த்து அதனால் உண்டான பலனைக் கணக்கிடுங்கால் பெரிய ஏமாற்றங்களே தெரியும்.

வியாபாரி ஒருவன் உட்கார்ந்து கணக்குப் பார்ப்பதில் தவறில்லை. சுவிசேஷக் காரியத்தில் மாத்திரம் நாம் பரலோகம் பார்த்துக்கொள்ளட்டும் என்று சொல்லிவிட்டு விடக் கூடுமோ? சில நேரங்களில் எனக்குத் திருப்தியைக் கொடுக்கிறது, மனதுக்கு

நன்றாக இருக்கிறது எனவே கூட்டங்களை நடத்துகிறேன் என்று சொல்வோரும் உண்டு. அல்லது யாரோ ஒருவர் பணம் தருகிறார் (ஒருவேளை வெளிநாட்டவர் ஒருவர்) அவரை திருப்திப்படுத்துவது மாத்திரம் போதும் என்ற நிலையில் நடத்தப்படும் கூட்டங்களும் உண்டு. ஒட்டப்படும் நோட்டீஸ்கள் எத்தனை? இரவில் விழித்தவர்கள் சுகமும், பெலமும் உபயோகப்பட்டதே. செய்யப்படும் விளம்பரங்கள் ஜனத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டுவரக்கூடாதவைகளாகவே இருப்பதினால் ஏற்படும் விரயம் வேறு. வேறு ஒரு சபையினர் போட்டனர்; நாம் போடாவிட்டால் நம் ஜனங்கள் அவர்களுடைய உற்சாகத்தில் பங்குபெற போய்விடுவார்களோ? என்ற அச்சத்தில் மறு சபையினரும் அதேவிதத்தில் செயல்படுவதனை எத்தனை முறை பார்க்கின்றோம். ஒரே நாளில் நடத்தப்படும் ஒரே விதக் கூட்டங்களுக்கும் கணக்கில்லை. இவைகள் எல்லாம் இணைந்து ஏன் நடத்தப்படக்கூடாது?

சில நேரங்களில் "ஆண்டாண்டு தோறும் நடத்துவது" என்பது வழக்கமாகிவிட்டது; **கலந்துகொண்ட மக்களே மீண்டும் வருகின்றார்கள்;** ஆயினும் ஒரு ஆத்துமாவுக்காகவாவது நடத்துகிறோம் என்று சொல்கிறவர்களும் உண்டு. மாறாக சபையின் மக்கள் தங்கள் வாழ்க்கையால், வார்த்தையால், நற்கிரியையினால், அந்த நபரை ஆண்டவருக்குள் நடத்தினால் எத்தனை பேர் வழிநடத்தப்படமுடியும். அதே பணமும், சக்தியும், நேரமும் மற்ற ஊழியத்தில் செலவிட ஏதுவாக்கினால் எத்தனை நலமாக இருக்கும்.

இன்றைய இந்தியா இளைஞர்ளை அதிகம் உள்ளடக்கிய நாடு. 55 சதவீதத்தினர் 25 வயதுக்குட்பட்டவரே. இவர்களை இழுக்க வணிக உலகமும், கலை உலகமும், கல்வி உலகமும், பாவ உலகமும் பல முறைகளைக் கையாண்டு, முழு மூச்சாய் செயல்பட்டுவருகின்றன. அவைகளின் இழுப்பும் தொடர்ச்சியாக இருக்கிறது. எனவே நம் முறைகளை அவர்களுக்கு ஏற்றாற்போல் மாற்றி அமைக்க தேவை உண்டு. மறுபக்கத்தில் அவர்கள் திருப்தியாகவில்லை. வெற்றிடமும் வெறுமையும் அவர்களை ஆட்கொள்ள, ஏமாற்ற நிலையில் உள்ள இவர்களை தேவனண்டை நடத்த நம்முடைய சுவிசேஷக்கூட்டங்கள் எத்தனை உதவுகின்றன என்பதனை ஆராயுங்கால் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

சிறுபிள்ளைகளும் அநேக நேரங்களில் "தொல்லைத் தரும் பிரிவாகவே" பார்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு அந்த சுவிசேஷக் கூட்டங்களில் ஒன்றும் கிடைப்பதில்லை. சில இடங்களில் அவர்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு கூட்டங்கள் நடத்துகிறது உண்மை என்றாலும், வெளிக்கூட்டநேரங்களில் அநேக தடவை அப்படி நடக்கவில்லை அது கூடியதாகவும் இல்லை. முகாம்களில் மாத்திரமே அது சாத்தியமாகிறது. கூட்டிக் கழித்துப் பார்த்தால், வெளிக்கூட்டங்கள் அத்தனை லட்ச ரூபாய்கள் செலவழிக்கப்பட்ட நோக்கமும் அதில் குறிவைக்கப்பட்ட ஆத்துமாக்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவானது என்பதோடு, ஆன செலவு விரயமாக்கப்பட்டது என்பது தெளிவாகும்.

சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்கள் ஆயிரமாயிரமாயிருக்கும் போது, இந்த முதலீடுகள் அதில் செலவழிக்கப்பட்டால் எத்தனை நலமாயிருக்கும். தற்போது TV மூலம் நடத்தப்படும் சுவிசேஷ ஊழியங்களிலும் எல்லாரும் இணைந்து தெளிவான ஒரு பாதை வகுக்கப்பட்டு அதன்மூலம் ஊழியங்கள் நடத்தப்பட்டால் எத்தனை நலமாயிருக்கும். நானும் TV ல் பேசுகிறேன் ஊழியம் செய்கிறேன் என்ற நிலைமாறி, அனைத்து TV ஊழியம் செய்வோரும் ஒன்றுகூடி சிந்தித்து, **ஒரே முறைதனை மாற்றி மக்களுக்குத் தேவையான, ஏற்றுக்கொள்ளக்கூடிய பக்குவமான, கவர்ந்திழுக்கும் நிகழ்ச்சிகளை, சிந்திக்கவைக்கும் நிகழ்ச்சிகளை உருவாக்கி, அவரவர்களுடைய திறமைகளையும், தாலந்துகளையும், வரங்களையும் ஒருமுகப்படுத்திச் செயல்பட்டால் எத்தனை விரயங்கள் தடுக்கப்படலாம்.** ஒருசில வெற்றி சாட்சிகளை மாத்திரம் மனதில் கொண்டு அதனையே சித்தரித்து, முக்கியப்படுத்தி காண்பிக்கப்படும் நிகழ்ச்சிகள் இருதயத்தில் இளைப்பையே ஏற்படுத்தி உள்ளது. கூடவே வீணாக்கப்படும் பணம், நேரம், திறமை, பெலன், கணக்கிட்டுப் பார்க்கப்பட்டால் மனதிற்கு சஞ்சலமே.

எழுப்புதல்கூட்டங்களும், மிஷனரிக் கூட்டங்களும் சில வேளைகளில் தேவைப்படுகிறது; அவைகளிலும் சில கண்ணோட்டங்களில் மாறுதல் தேவை. இதனை என்றைக்கு இன்றைய சபைகளும் ஊழியங்களும் தலைவர்களும் புரிந்துகொள்கிறார்களோ அன்றைக்கு நம்முடைய (Resourses)

பெரும் பகுதி, அர்த்தமுள்ள அறுவடையை மனதில் கொண்ட அறியப்படாதவர்கள் அவரை அறிந்துகொள்ள ஏதுவாக காரியங்களைச் செய்து, கர்த்தரின் நாமம் மகிமைப்படவும் தேசம் தேவனை அறிந்துகொள்ளவும் ஏதுவாகும். இதற்கு நேராக தேவன் நம்மவர்களை நடத்த ஜெபிப்போம், செயல்படுவோம்.

**"எண்ணற்ற தேவைகள் எனைச் சூழ நிற்கையில்**
**எந்தன் நிலை பாருமே"**

# 47. வித்தைகள்

சாலமோனின் ஆடம்பர வாழ்க்கையும், ஞானியென்று அழைக்கப்பட்டும் கர்த்தரின் காரியத்தில் கவனமற்ற உல்லாசமும், ஒழுங்கற்ற ஒழுக்க நெறிகளும் அநேக அந்நிய பெண்களை அவன் கொள்ளும்படி செய்தது மாத்திரமல்லாமல், அவனை தேவனுக்கு முன்பாக செம்மையானவனாக வைத்திருக்கவில்லை. **ஆலயத்தினையும் அரண்மனைதனையும் கட்டி எழுப்பிய அவன் தன் குடும்பத்தை கட்டி எழுப்பும் திறனை இழந்துபோனான்.**

அவன் ஆசைப்பட்ட ஒன்றையும் அவன் விட்டுவைக்கவில்லை (1இராஜா 11:1,2). தேவனுக்கு பிரம்மாண்டமான தேவாலயத்தினை எழுப்பினவன், தேவதைகளுக்கு மேடைகளைக் கட்டினான் (1இராஜா 11:7,8). இதனால் கோபமடைந்த தேவன் அவனுக்கு பலமுறை தரிசனமாகி எச்சரித்தும் மனந்திரும்ப முடியாமற் போனான்; விளைவு,

தேவன் அவனுடைய இராஜ்யபாரத்தை எடுத்து அவன் வேலைக்காரனுக்குத் தரவேண்டியதாயிற்று (1இராஜா 11:11; 12:20). யெரொபெயாம் என்ற வேலைக்காரனுக்கு பத்து கோத்திரங்கள் தரப்பட்டன. இரண்டு கோத்திரங்கள் மாத்திரம் சாலமோனின் குமாரனான ரெகொபெயாமுக்கு இருந்தன. அதுவும் தேவன் தாவீதின் பேரில் வைத்திருந்த அன்பின் நிமித்தமும், அவனுக்குச் சொன்ன வாக்கின் நிமித்தமுமே.

இந்தக் காரியத்தினை இன்றைய சூழ்நிலையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். சீர்திருத்த சபைகளை தேவன் ஆங்காங்கே நிறுவி, மிஷனரிகளின் தியாகம், எளிமை, பாடுகள், விடாப்பிடியான ஜெபங்கள், தரிசனம் கலந்த பணி, எதையாவது சாதிக்கவேண்டும் என்ற துடிப்பு, எதிர்ப்புகளையும் அரசாங்க கட்டளைகளையும் கூட கண்டு கொள்ளாமல் அழைத்தவர் மேல் இருந்த அலாதி பிரியம், தொலை நோக்கு போன்ற நற்குணங்களால் சபைகளையும், பயிற்சி சாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் ஏன் கல்லூரிகளையும் அவர்கள் ஸ்தாபித்து தேவனை அண்டிக்கொண்டவர்களுக்கு அடைக்கலமாய், உயர்த்தும் பணியினை முறைப்படி செய்ய தங்களை ஒப்புக்கொடுத்து வாழ்ந்தனர்.

ஆனால், பின்னால் வந்த ஊழியர்களும் சபைத்தலைவர்களும் தங்களுக்குத் தரப்பட்ட வாய்ப்புகளை, பொறுப்புகளை தவறாகப் பயன்படுத்தி அந்த ஊழியத்தின் மேன்மைதனைத் தரைமட்டமாக மாற்றிவிட்டனர். பணம் புரண்டது, எண்ணிக்கை அதிகமாயிற்று, நபர்கள் பெருகினார்கள், பேரும் பிரஸ்தாபமும் முழங்க ஆரம்பித்தது, மிஷனரிகளின் பாடு-மிகுந்த சேவையின் பலனை ருசித்த தலைமைத்துவத்தின் ஆடம்பரம், உல்லாசம், தேவபயமற்ற போக்கு ஆணவம் அகங்காரம் பிடித்து வாழும் முறைகள் ஆண்டவருக்குக் கோபம் உண்டாக்கி, சபைகளிலிருந்து ஜனங்கள் ஆவிக்குரிய தாகத்தின் அடிப்படையிலும் பொல்லாப்புகளைக் காணக்கூட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதினால் ஏற்பட்ட மூச்சுத்திணர்வின் காரணமாகவும் அவர்கள் வெளியேறி சிறு சிறு குழுக்களாக ஆங்காங்கே செயல்பட ஆரம்பித்தனர்.

இந்த நேரத்தில் தேவன் பெந்தெகொஸ்தே சபைகளை ஆவிக்குரிய சபைகள் என்று எழுப்பி, தரிசனமும், ஆத்துமபாரமும், ஆவிக்குரிய தாகமும் உடையவர்களாய் எழுப்ப ஆரம்பித்து அவர்களுடைய முயற்சிக்குப் பலனைத் தர ஆரம்பித்தார்.

ஆனால், நாளடைவில் **யெரொபெயாம் செய்த அதே தவறினை ஆவிக்குரிய சபைத் தலைமைகளும் செய்ய ஆரம்பித்தனர்.** தேவன் தான் பத்துக் கோத்திரத்தினை எனக்குத் தந்தார் என்பதனை மறந்த யெரொபெயாம், ஜனங்கள் எருசலேம் தேவாலயத்திற்குப் போக ஆரம்பித்தால் தாவீது வம்சவசமாய் திரும்பிவிடுவார்கள் என்ற பயம் (1இராஜா 12:26,27) அவனை ஆட்டிப்படைக்க கன்றுக்குட்டிகள் உண்டாக்கப்பட்டன, பண்டிகைகள் நியமிக்கப்பட்டன. ஜனத்தில் ஈனமானவர்கள் (அழைப்பு இல்லாதவர்கள்) ஆசாரியர்களாக அமர்த்தப்பட்டார்கள். தன் மனதில் நியமித்துக் கொண்ட நாட்கள் கொண்டாட்ட நாட்கள் ஆகின (1இராஜா 12:28-33).

**இன்றைக்கு ஆவிக்குரிய சபைகள் என்று அழைக்கப்படுகிற சபைகளில் நடக்கும் அநேக வித்தைகள் இதற்கு ஒப்பானவைகளே.** ஆராதனை என்கிற பேரில் ஆட்டங்கள், அழைப்பைப் பற்றியோ, தேவ கட்டளைகளைப் பற்றியோ கவலையற்ற ஒரு பெரும் ஊழியர் கூட்டம், பணத்தையும் பதவிதனையும் தக்கவைத்துக்கொள்ள

எடுக்கப்படும் முயற்சிகள், தேசத்தினைக் குறித்தோ தேவ இராஜ்யத்தினைக் குறித்தோ எந்த தரிசனமும் அற்ற நிலை. கனம் பெறவேண்டும் என்பதுதான் பெரிதான கவலை. மற்றவர்களைப் போல இருக்கவேண்டும் என்பதில் போட்டோ போட்டி, பரிசுத்த குலைச்சல் பாவத்தினையும் அக்கிரமத்தினையும் கண்டுகொள்ளாப் பிரசங்கங்கள். செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதில் அதிகக் கவனம். **தேவனைப் பிரியப்படுத்தவேண்டுமே என்பதிலோ, தேவன் அங்கீகரிக்கவேண்டும் என்பதிலோ எந்த கவலையும் இல்லாமல் வாழும் வாழ்வு.** அதிகாரம் செலுத்தவும், ஆளுகை செய்யவும், இறுமாப்பாய் மந்தைதனை மேய்க்கவும் விரும்பும் இவைகளே மேலோங்கி நிற்கிற பொல்லாத காலம் இது. அன்று யெரோபேயாம் தான் உயர்த்தப்பட்டதனையும், தேவன் தன்னை நம்பித் தந்த பொறுப்பதனையும் எப்படி மறந்திருந்தானோ, அப்படியே வாழும் வாழ்க்கையைக் கொண்ட தலைவர்கள் போதகர்கள் ஊழியர்கள் பெருத்துவிட்ட காலமிது.

இந்நாட்களில், தேவன் தீர்க்கதரிசன வார்த்தைதளைக் கூறி தம் ஜனத்தினைச் சந்திக்க முயல்கிறார் (1இராஜா 13:2,3). ஆனால், அவைகள் அதிகாரத் தோரணையில் அடக்க முயற்சிக்கப்படுகிறது. அந்த இளைய தீர்க்கனை அடக்க இராஜா முயன்றது போலவே இன்றைக்கும் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்க மனதற்ற நிலையில் அதனைத் தங்களுடைய விதிமுறைகளால் அடக்கவும், ஐக்கியம் என்கிற பேரில் அது அகற்றப்படவும் முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அது முறித்துப்போடப்படுகிறது தேவ பலத்தால் (1இராஜா 13:4).

பின்னர் இசைந்து (compromise) போய், பணத்தினால் தீர்க்கனை வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதுவும் முறியடிக்கப்படுகிறது. அவனில் காணப்பட்ட பக்தி வைராக்கியத்தினால் (1இராஜா 13:7-10).

உண்மையான ஊழியர்கள் தேவ வார்த்தையினை தீர்க்கதரிசனங் கூற முற்படுகையில் ஓரம் கட்டப்படுவது இன்றைய நிலைதானே. **ஆனால், நிலைத்து நின்று தேவனை மாத்திரம் சார்ந்து வாழ்வோர் இதனைக் குறித்துக் கவலை கொள்வது இல்லையே**! ஆனால், அடுத்து நடக்கும் அபாயம்தான் அநேகரை கவனக்குறைவாக

நடக்கச் செய்கிறது; அது என்ன? கள்ளத் தீர்க்கத்தரிசிகளும், பொய்யர்களும் எழும்பி உண்மைத் தீர்க்கதரிசனங்களை முறியடிக்கச் செய்கிற வேலைதனை முறைப்படி செய்து ஜனத்தினை மோசம்போக்கி வாழ வைப்பதினால் பொய் தீர்க்கர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

அமெரிக்க பிரஜையான ஒரு சகோதரன் இந்தியா வந்திருந்தான். இந்து மதத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொண்டு தன் குடும்பத்தினை சந்திக்க வந்த அந்த நபர் தமிழக தீர்க்கதரிசி என்று அழைக்கப்படும் ஒருவர் கூட்டத்தில் கலந்துகொள்ள, இவர் அவர் மீது கை வைத்து அவர் IT துறையினைச் சேர்ந்தவர் என்று அறிந்ததினால், "நீங்கள் உங்கள் பாஸ்போர்ட்டை ஒரு நபருக்கு நம்பி தாருங்கள், அவர் உங்களை அமெரிக்கா போக வழி செய்வார்" என்று சொன்னபோது, எத்தனைப் பொய்யர்கள் நாட்டில் தீர்க்கதரிசிகள் என்று சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள் என்பதனைக் கண்டுகொண்டேன்.

அநேக இந்திய ஜெப வீரர்கள் எருசலேமுக்குச் சென்று தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். அப்போது இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும் என்று தீர்க்கதரிசனம் சொல்கிறார் ஒரு பிரபல தீர்க்கதரிசி. இது எந்த வசனத்தின் அடிப்படையில் என்று நீங்கள் கேட்டால் தேவன் எனக்கு அப்படித்தான் காண்பித்திருக்கிறார் என்பார். ஹோட்டல் ஒன்றினை எருசலேமில் வாங்குவதற்காக சாதகமாக வரும் இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்கள் சபையை கிறிஸ்துவின் வருகைக்கு எச்சரித்து ஆயத்தப்படுத்த எங்கே உதவப்போகிறது. இவைகள் செய்வது என்ன? **எச்சரிப்பின் சத்தத்தையும் பக்திவிருத்திக்கேதுவான வார்த்தைகளையும் ஜனங்கள் கவனிக்காதவாறு திசை திருப்புவதற்காக உபயோகிக்கப்படும் கள்ள வழிகளே**! கவனமாயிருங்கள்.

அன்றைக்கு இஸ்ரவேலில் நடந்தவைகளே இன்றைக்கு இந்திய திருச்சபைகளில் நடக்கிறது. விழித்துக்கொள்ளுங்கள். இராஜா வருகிறார் ஆயத்தமாவோம், இயேசு இராஜா வருகிறார் எதிர்கொண்டு செல்லுவோம்.

# 48. யார் கொள்ளைக்காரன்?

செய்தித்தாள்கள் நமக்குச்சொல்லும் செய்திகள் சிலரைத்திடுக்கிடச் செய்கிறது, “கோயில் கருவூலங்களில்” மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பெட்டகங்கள், **யாருக்கும் உபயோகப்படாமல், கணக்குகளில் வைக்கப்படாமல் இருப்பவை** கோடி கோடி மதிப்புக் கொண்டவை. **கண்மூடித்தனமாக பக்திக்கு** இவைகள் எடுத்துக்காட்டுகள், சரித்திரத்தில் நாம் கோரி முகமது, கஜினி முகமது என்ற அரசர்கள் இந்தியாவைத் தாக்கிய போதெல்லாம் கோயில்களில் தான் கொள்ளை அடித்தார்கள் என்று படித்ததின் உள்நோக்கங்கள் இப்போது தெளிவாகத் தெரிகிறது.

**ஆன்மீகத்தின் பெயரினால் "கொள்ளையடிக்கப்பட்ட"** மிகுந்த செல்வம் இவைகள். இது ஜீவ தேவனை அறியாதவர்களால் நடப்பிக்கப்பட்ட ஜீவனற்றவைகளின் பெட்டகத்தில் பாதுகாக்கப்பட்டு தலைமுறை தலைமுறையாக மூடிவைக்கப்பட்டவைகள்.

ஆனால் இது ஜீவ தேவனை அறிந்தவர்கள் மத்தியிலும், ஜீவன் தந்த இயேசு கிறிஸ்துவின் பெயராலும் செய்யப்பட்டால் அது வேதனையையும் வியாகுலத்தையுமே நமக்குத் தருகிறது, “பொன்னும் வெள்ளியும் என்னிடத்தில் இல்லை” என்னிடத்தில் உள்ளதைத் தருகிறேன்” என்ற (அப் 3:6) ஆதி அப்போஸ்தலருடையக் கூற்றுக்கு எதிர்மாறாக உள்ளது. “வரிப்பணம் கட்டுவதற்கும் சீஷனை மீன்பிடிக்கச் சொல்லி அதின் வாயிலிருந்து வெள்ளிப் பணத்தைக் கொண்டு வந்து அதனைக் கட்டவைத்த இயேசுவின் வாழ்க்கையை விட்டு வேறுவழியில் காரியங்களைக் காண்பிக்கிறது (மத் 17:24-27).

“நீர் கர்த்தருடையச் சொல்லைக் கேளாமல் கொள்ளையின் மேல் பறந்து கர்த்தருடையப் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தீர்” (1சாமு 15:19) என்று இஸ்ரவேலின் முதல் அரசராம் சவுலை இடித்துரைத்த தீர்க்கன் சாமுவேலின் வார்த்தைகளை நினைவு கூறப்பண்ணுகிறதாக இருக்கிறது.

**பவுலையும் அவனைச் சார்ந்தவர்களையும் குறித்து, பட்டணத்து சம்பிரதியானவன் (மேயர்) கூறின பெரியசாட்சி இவர்கள் "கோவில் கொள்ளைகாரர் அல்ல"** என்பதே (அப் 19:37); இந்த சாட்சி இன்று அநேக ஊழியர்களைக் குறித்தோ ஊழியங்களைக் குறித்தோ சொல்லக்கூடாத நிலை. சபைத்தலைவர்களின் நடவடிக்கைகள் தலைவர்கள் தங்கள் வாழ்க்கையினையும் செயல்பாட்டினையும் ஆராய்ந்து பார்த்தால் நலமாயிருக்கும்.

இந்த வசனத்தில் காணப்படும் இந்த சொற்தொடர் அனேக மொழியெயர்ப்பில் "சபையின் கொள்ளைக்காரர் அல்ல" என்றே கூறுவதனைக் (Robbers of Churches) கவனிக்கவும். Bible in Basic English என்ற மொழி பெயர்ப்பு இன்னும் ஒருபடி மேலே போய் **"Not doing damage to the Holy places"** (பரிசுத்த ஸ்தலத்தினை பாழாக்காதவர்கள்) என்று கூறுகிறது.

## முதலாவது யார் கொள்ளைக்காரன்?

என்பதனைக் காண்போம்...

1. கொள்ளைக்காரன் **மற்றவர்களிடத்திலிருந்து வலுக்கட்டாயமாகப் பறித்துக்கொள்பவன்.** அதற்கு எந்த பலத்தினையும் அவன் உபயோகப்படுத்துவான். பயமுறுத்துதல்கள் அவனுக்குக் கைவந்த கலை, அல்லது தந்திரமானக் காரியங்களைச் சொல்லி வஞ்சித்துவிடுவான். 1சாமு 2:12-17ல் ஏலியின் புத்திரர்களான ஓப்னியும், பினெகாசும் இதைத்தான் செய்தார்கள். காணிக்கைகளை பலவந்தமாக எடுத்துக் கொண்டார்கள்; அவர்களுக்கு அடியாட்களும் இருந்தார்கள். **ஊழியக்காரன் இடும் சாபம் தன் மேல் பலித்துவிடுமோ? என்ற பயத்தில் பல பேதைகள் பயந்துபோய் காணிக்கைச் செலுத்துகிறார்கள்.** இல்லையென்றால் பசப்பு மொழிகளும் பலமடங்கு திரும்பக்கிடைக்கும் என்ற தந்திரசாட்சிகளும் சிலரை திக்குமுக்காடச் செய்து, பொருளை இழக்கச் செய்தது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைபேர்?

**"மனப்பூர்வமாய் (யாத்-25:1) உற்சாகமாய் கொடுக்கும் காரியங்கள்"** (II கொரி9:7) என்பது முற்றிலும் இன்றைக்கு மறக்கடிக்கப்படுகின்ற ஒன்று.

2) **மற்றவர்களுடைய உழைப்பின் பலனைத் தனதாக்கிக் கொண்டு சுக போகத்தில் வாழ்பவன் கொள்ளைக்காரனே,** (நீதி-28:24) அது பிள்ளையானாலும் சரியே. ஏழைகளின் காணிக்கைதனை உல்லாசமாய் வாழ்வதற்கு செலவழிக்கும் எந்த மனிதனும் இந்த வகையினைச் சார்வான், அல்லவா!

3) **கொள்ளைக்காரர்கள் தங்களை யார் என்று காட்டிக்கொடுக்கா வண்ணம் "முகமூடி" அணிந்திருப்பர். அவர்களுடைய சுயரூபத்தினை மற்றவர்கள் கண்டு கொள்ளக்கூடாது என்பதில் மிகவும் கவனமாய் இருப்பார்கள்.** கூடவே, தங்கள் தடயங்களை வைத்து யாரும் தங்களைப் பின் தொடர்ந்து அடையாளம் கண்டு கொள்ளாதபடி எச்சரிக்கையாய் இருப்பார்கள். "வெளியரங்கமாக (Transparent) தங்களுடையவைகளைக் காண்பிக்காத எவனும் எந்த நபரும்" இந்த ரகத்தில் தான் காணப்படுவர்.

4) கொள்ளைக்காரன் மற்றவர்களுடைய இழப்பில் தன் சுகத்தை மேன்மைப்படுத்த நினைப்பவன். அவன் ராஜாவாக இருந்தாலும் அதனையேதான் செய்வான் என்பதனை உணர்த்துவிக்கும் கர்த்தர், தங்களுக்கு ராஜா வேண்டும் என்ற ஜனத்தினைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள் (I சாமு 8:11-18). அவன் நல்லவைகளை எடுத்துச் கொள்வான்... வைத்துக் கொள்வான் என்பதே ஆண்டவரின் கணிப்பு.

5) **கொள்ளைக்காரன் கணக்கில் இல்லாத ஏராளமான பொருள்களையும் பணத்தினையும் வைத்திருப்பான் :** இதனை 'கறுப்புப்பணம்' என்று இந்த நாட்களில் சொல்லுகிறோம். கறுப்புப்பணம் இன்றைக்கு எவ்வளவு உள்ளது இந்த தேசத்தில் என்பதனைக் கணக்கிடவும் கூடாத நிலை (ரூபாய் 318 இலட்சம் கோடிகள் என்கின்றனர் சிலர்) ஆனால் கணக்கில் வராத பணம் எதுவும் கறுப்புப் பணமே. அதனை வைத்திருப்பவர்களைக் கொள்ளைக்காரர்கள் என்றுதானே நாம் அழைக்க வேண்டும்.

6) தங்களிடம் உள்ளதனை யாராவது அறிய முற்படும் போது இந்த கொள்ளைக்காரர்கள் தங்களுடைய **சாதுரியத்தினால்** அப்படிப்பட்டவர்களின் வாயை மூடுவதற்கு கொஞ்சம் எலும்பை எடுத்து எறிய அஞ்சமாட்டார்கள்.

7) இவர்களுடைய தாக்குதலால் **தாக்கப்படும் நபரின் நலனைக் குறித்துக் கொஞ்சமும் கவலைக் கொள்ளாதவர்கள்.** நல்ல சமாரியன் உவமையில் அந்த கள்ளர்கள் செய்தது என்ன? “வஸ்திரங்களை உரிந்து கொண்டு, அவனைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப் போனார்கள்” (லூக் 10:30) கொள்ளைக்காரரின் ஆலோசனையை சாலொமோன் சொல்கிறான்; “இரத்தஞ் சிந்தும்படி பதிவிருந்து குற்றமற்றிருக்கிறவர்களை முகாந்திரமின்றிப் பிடித்து, பாதாளம் விழுங்குவது போல் விழுங்குவோம்... முழுமையும் விழுங்குவோம்” (நீதி 1:11,12) என்று; அதனைப்பற்றி அவர்களுக்குக் கவலையிருக்கப் போவதில்லை என்று.

இன்றைய அநேகக் காணிக்கை வசூல் முறைகள் ஆவிக்குரிய உலகில் இப்படியே காணப்படுவதினால் கவலை நம்மை மேற்கொள்கிறது. இது இஸ்ரவேல் ஜனத்தின் மத்தியிலும் நடந்ததனைக் கண்ட ஆண்டவர் ஓசியா தீர்க்கதரிசியின் மூலம் அவைகளை விவரிக்கும் வண்ணம் “சீகேமுக்குப் போகிற வழியிலே **கொலை செய்கிற ஆசாரியரின் கூட்டம் காத்திருக்கிறது. தோஷமான காரியங்களையே செய்கிறார்கள்”** (ஓசி 6:9) என்கிறார்.

கூடவே “தீர்க்கதரிசி தன் வழிகளெல்லாம் குருவி பிடிக்கிறவனுடைய கண்ணியாகவும் தன் தேவனுடைய ஆலயத்தின் பகையாளியாகவும் இருக்கிறான்” (ஓசி 9:8) என்றும் புலம்புகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இதனைக் கண்கூடாகக் கண்ட கர்த்தரும் முதலாவது ஆலயத்தின் சுத்திகரிப்பை நிகழ்த்திவிட்டு “என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்” என்றவர் (யோவான் 2:16) அதனையே மீண்டும் செய்ய நேரிட்டபோது ‘என்னுடைய ஜெப வீட்டை நீங்கள் கள்ளர் குகையாக்கினீர்கள்’, என்றும் குற்றஞ்சாட்டுகிறார் (லூக் 19:4). எரேமியா மூலம் எச்சரித்தும் (எரே 7:11) அது இயேசுவின் காலத்தில் நடைபெறுகிறது;

அவர் அழாமல் என்னச் செய்வார். (லூக் 19:41) கள்ளருடைய கூடாரத்தில் செல்வம் உண்டு (யோபு 12:6) அதனைக் கண்டு நாம் அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார் என்று கணக்கிடக் கூடாது.

இந்த கொள்ளைக்காரர் கூட்டத்தில் வேசிக்கள்ளர்களும் அடங்குவர். (எபி 13:4) மேற்சொன்ன கொள்ளையரைப்பற்றிய 7 உண்மைகளும், இவர்களுடைய வாழ்விலும் பொருந்தும். மற்றவனுடைய மனைவியை திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டவர் எத்தனை பேர்? தனக்கு நியமிக்கப்படாதவளை தீட்டுப்படுத்த நினைப்போர் திருமண உறவுக்கு வெளியே சிற்றின்பம் அனுபவிக்கத் துடிப்போடு ஈடுபடுவோரும் எத்தனைபேர். ஆகையால் தான் ஆண்டவரும் அப்படிப்பட்டவர்களை நியாயம் விசாரிப்பார் என்று கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட கொள்ளைக்காரரும் இன்றைய ஆவிக்குரிய உலகில் சுற்றித்திரிகின்றாரே.

**திருடர்களின் சொற்களைப் பார்த்தால் வெளிப்படையாக அவர்கள் நன்மை செய்வது போலவும் காட்சியளிக்கலாம்** (Language of a thief); யோவான் 12:6 அதிகாரத்தில் அப்படிப்பட்டவர்களையும் ஆவியானவர் அடையாளம் காட்டிக் கொடுக்கத்தவறவில்லை. "அவருடைய சீஷரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து இந்தத் தைலத்தை முன்னூறு பணத்திற்குவிற்று தரித்தரருக்குக் கொடாமல் போனது என்ன? என்றான்" **அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல் அவன் திருடனானபடியினால் இப்படிச் சொன்னான்** (வச:4-6) என்றே வாசிக்கிறோம்.

அநேகர் இப்படிப்பட்டவர்களால் ஏமாற்றப்பட்டு கொள்ளையாடப்படுகிறார்கள். அவனையும் வேதம் 'கொள்ளையன்' என்றே கூறுவதனைக் கவனியுங்கள்.

ஆனால் ஆபத்து என்னவெனில் **ஆண்டவர் அப்படிப்பட்டவர்களை ஆதரிப்போரைப்பார்த்து என்ன சொல்கிறார் என்பதனைக் கண்டால் அது நமக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தரும்.**

"நீ திருடனைக் காணும் போது அவனோடு ஒருமித்துப்போகிறாய்" என்று இவர்களை ஆதரிப்போரை **"துன்மார்க்கன்"** என்று அழைக்கத்தயங்கவில்லை (சங் 50:16,18). எத்தனைப் பயங்கரமானக் குற்றச்சாட்டு என்பதனைப் பாருங்கள். "எங்கள்

ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மபணத்ததைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து. கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்" (II கொரி 8:20,21) என்ற பவுலின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து, **தங்கள் கணக்கினை உங்களுக்குக் காட்ட வல்வர்களையே ஆதரியுங்கள்.**

உண்மையாய் காரியங்களை நடப்பிப்பவர்களையும் உத்தமமாய் தங்கள் கணக்குகளை உங்களுக்குக் காட்டக் கூடியவர்களையுமே ஆதரியுங்கள்.

உலகின் பல சபைகளிலும் தன்னுடைய சாட்சிகளைக் கூறி, (அநேகம் அவைகளின் கட்டுக் கதைகள்) அநேகரை பிரமிக்க வைத்து, பின்னர், கூட்டத்தில் எனக்கு ஆண்டவர் உடனடி தேவையான பல லட்சங்களைக் கொடுக்கக் கூடியவர்கள் இந்த கூட்டத்தில் இருக்கிறார்கள் என்று கூறுகிறார் எனக் கூறி, ஒரு லட்சம் கொடுக்கிறவர்கள் இத்தனை பேர் உண்டு எழுந்திருங்கள் என்று எழுப்பிவிட்டு பணத்தைக் கறந்து செல்லுபவர்களை நான் அறிவேன். பேதையர்கள் பலர் இப்படிக் கொள்ளையாடப்பட்டார்கள். **இவரை பிரபல போதகர்களும் அங்கிகரித்து அறிமுகப்படுத்தினர்.** ஆனால், இந்த ஆவிக்குரிய கொள்ளையர்களை அடையாளம் கண்டு கொண்டோர் மிகச்சிலரே. அவர்களுடைய தீர்க்கதரிசனங்களில் 95% நிறைவேறாதவைகளே! ஆவிக்குரிய முகமூடி அணிந்த இவர்களைக் காண நம்முடைய கண்களில் தேவன் கலிக்கம் போடுவாராக. (வெளி 3:18)

**"திருடன்" தந்திரமாக, மற்றவர்கள் காணக்கூடாதபடி வருகிறான். கொள்ளைக்காரன் தன் பலத்தை (power) உபயோகப்படுத்திவருகிறான். எந்தவிதத்தில் வந்தாலும் அவனை அடையாளம் காணவேண்டியது நமது கடமை.** நம்மைக்குறித்து (ஆவிக்குரியவர்களை) புறஜாதியினரும் சாட்சி கொடுக்க வேண்டும். ஆனால், மாறாக இன்று நடைபெறுகிறது. சாட்சிதனை இழந்த ஊழியங்கள் ஊழியர்கள் எத்தனை! எத்தனை! மேலும் மேலும் பெருகிக் கொண்டேதான் வருகிறது. தேவ ஜனங்கள் விழிப்போடே இருக்கவேண்டிய நேரம் இது விசேஷமாய் காவற்காரர்கள் என்று அழைக்கப்படுவோர் இதில் அதிக கவனம் செலுத்தவேண்டும் அல்லவோ!

## 49. முந்தி ஆசீர்வாதம் பெற்றவர்கள்

“ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்” (யோவான் 12:21) என்ற குரல் எத்திசைகளிலிருந்தும் கேட்கத் தொடங்கின நாட்களில் நாம் வசிக்கிறோம் என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த நாட்களில் வாழும் நாம் அதற்கான தடைகளை உணர்ந்து அதனை நொறுக்கி வாழ ஒப்புக்கொடுத்தால் எளிதில் இந்த தேசம் தேவனை அறிய வாய்ப்பாகும்.

**"முந்தி ஆசீர்வாதம் பெற்றவர்கள்" இன்றைக்கு அவரிடத்தில் மற்றவர்கள் (அவரைச்சந்தியாதவர்கள்) சேரத்தடையாயிருக்கிறார்கள்** என்பது முதலாவது உண்மை. மாற்கு சுவிசேஷத்தின் 2-ம் அதிகாரத்தில், திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையில் போட்டுக் கொண்டு வந்த நான்கு பேரைக் குறித்து வாசிக்கிறோம். ஜனக்கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாய்ச் சேரக்கூடாமல் போனதற்குக் காரணம் என்ன? (வச 4) சில நாட்களுக்கு முன்பு இதே பட்டணத்தில் இயேசு வந்தபோது (மாற்கு 1:21,33,34) அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், அற்புதங்களைப் பெற்றவர்கள், அவருடைய வார்த்தையினை ருசித்தவர்கள் இப்போது வாசலுக்கு முன்னும் நிற்க இடம் போதாதபடிக்குக் கூடிவந்தனர் (வச 2) தவறல்ல. ஆனால், **தேவையுள்ள ஒரு மனிதன்,** இதுவரை இயேசுவைச் சந்தித்திராதவன் கொண்டுவரப்படுகிறான், **அவனுக்கு இடங்கொடுக்க இவர்களுக்கு மனமில்லை.** எத்தனை கெஞ்சியிருப்பார்கள் அந்த நான்கு பேரும். யாரும் அதனைக் கவனிக்கவோ, விட்டுக்கொடுக்கவோ விரும்பவில்லை. இன்னமும் தங்களுக்கு ஆசீர்வாதம் வேண்டும் இன்னமும் அவரின் வார்த்தைகளை கேட்கவேண்டும் என்று விரும்புகிறார்களே அல்லாமல், இந்த ஒரு மனிதனுக்குத் தங்களைக் காட்டிலும் அதிகம் இயேசு தேவைப்படுகிறார் என்பதனைப் புரிந்துகொள்ளத் திராணியில்லாமல் போய்விட்டது. அதனால்தான் நான்கு பேரும் கூரையைப் பிரிக்க நேரிட்டது.

இன்றைக்கும், சுவிசேஷக் கூட்டங்களை நாம் போடுகிறோம், ஆனால் நாற்காலிகளை நிரப்புவது யார்? முன்னரே அவரை ருசித்து அவரை அறிந்து ஆசீர்வதிக்கப்பட்டவரே; **புதியவர்கள் வரவேண்டும் அவர்களுக்கு முதலிடம் தரப்படவேண்டும்** என்று விரும்பி அதற்கு வசதிகளைச் செய்து தருபவர்கள் எத்தனைபேர்? விருப்பமுள்ள பிரசங்கியாரை பக்கத்திலிருந்து பார்க்கவேண்டும் என்பதினால், முதலிடத்தினை நிரப்பும் மக்களே அதிகம். நம்முடைய மனநிலையில் எத்தனை மாறுதல் தேவைப்படுகிறது. **நம்முடைய ஆர்வமும், ஆசையுமே மற்றவர்கள் இயேசுவிடம் நெருங்கவிடாதபடிச் செய்துவிடுகிறதே.**

சில வேளைகளில் ஜனக்கூட்டம் [குறிப்பாக நடைபெறுகிறவைகளைக் கவனித்து கேள்விகள் கேட்கவும், சந்தேகப்படவும், முறுமுறுக்கவும் செய்யும் நபர்கள் அடங்கிய பெரிய கூட்டம் (லூக் 19:3,7)] தாகமுள்ளவரை, இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டவற்றை சரிபார்த்து பின் செல்லத் துடிக்கிற கூட்டத்தினரை நெருங்கவிடாதபடி செய்துவிடவும் வாய்ப்புண்டு. சகேயுவுக்கு நடந்தது அதுதானே! லூக் 19-ம் அதிகாரம் காட்டும் இந்த காரியத்தினை உற்று நோக்குங்கால் நமக்கு இது விளங்கும். அவனுடைய தாகத்தைப் பாருங்கள்; தான் ஒரு ஆயக்காரர்களின் தலைவன் என்பதனையும், ஐசுவரியவான் என்பதனையும் மறந்து சிறுபிள்ளையைப்போல் ஓடிச் சென்று மரத்தில் ஏறுகிறான். "எப்படியாவது இயேசுவைக் காணவேண்டும்" அவ்வளவே. அதற்கு தன் பதவியோ, பணமோ தடையாயில்லை என்பதனைக் காண்பிக்கும் வண்ணமே அப்படிச் செய்கிறான். அவனுடைய பெலவீனம் குள்ளனாயிருந்ததே! அதுவும் அவனைத தடை செய்ய முடியவில்லை! அதனையும் மேற்கொள்கிறான். தடையாயிருந்தவைகள் ஜனக்கூட்டம் மாத்திரமல்ல, கூடவே முறுமுறுக்கும் ஜனக்கூட்டம். **"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (வச 10). அதுவே அவருடையபிரதான காரியம் என்பதனைப்புரிய இயலாமல் இயேசுவைச் சுற்றி நிற்கும் பெருங்கூட்டம்,** தேவ நோக்கத்தினைத் தெளிவாக அறிய விரும்பாத ஓர் கூட்டம். **இன்றைக்கு முதலிடம் பெற வேண்டியது, இழந்துபோனவர்களே** இயேசுவைக் காணவேண்டியவர்களே என்பதனை ஏற்க மறுப்போர் நிரம்பிய கூட்டம்.

முன்னுரிமைக் கொடுக்கவேண்டியவற்றைப் பின்னுக்குத் தள்ளிவிட்ட கூட்டம் அது. மற்றவர்களைத் துரிதமாகப் பாவி என்று கூறி (வச 7) அவர்களுக்குத்தான் இயேசு முதலாவது தேவை என்பதனை மறுதலிக்கும் கூட்டம். வியாதியுள்ளவனுக்குத்தானே வைத்தியன் தேவை. குள்ளமானவர்கள் முன்னே வரக்கூடாமல் வழிமறித்து நிற்கும் உயர்ந்த மனிதர்கள் (வச3) இவர்கள்; என்னே பரிதாபம்.

சில வேளைகளில் சீஷர்கள் என்றும் அப்போஸ்தலர் என்றும் அழைக்கப்படுகிறவர்களும் தடையாக மாறுகின்றனர். ஜனங்களை அவரண்டை அழைத்துக் கொண்டுவரவேண்டியவர்களே தடை செய்வோராக மாறிவிடும் கொடுமை (லூக் 18:15-17). சிறு பிள்ளைகளுக்கு அவருடைய தொடுதல் தேவை. தாங்கள் கொண்டுவராவிட்டாலும், கொண்டு வந்தவர்களையாவது உற்சாகப்படுத்தவேண்டியவர்கள், மாறாக அவர்களை அதட்டுகிறதைக் கண்டு இயேசு விசனமடைந்தார் (மாற் 10:14). இன்றைக்கும் இப்படிப்பட்ட காரியங்களைக் கண்டு இயேசு விசனப்படுகிறார் என்பதனை அறிந்தவர்கள் எத்தனை பேர்? சபையிலே புதிய நபர்களை அழைத்து வருபவர்கள் ஜனங்களைக் கூட்டிச் சேர்க்க நினைத்து தன் வீட்டில் ஒரு ஜெபக்கூட்டத்தையோ, அல்லது வேறு ஒரு காரியத்தையோ செய்யும் நபர்களை உற்சாகப்படுத்தும் போதகர்கள் எத்தனை பேர்? மாறாக அப்படிப்படவர்களைச் சபை பிரசங்கபீடத்தில் வாட்டிவதைக்கும் பிரசங்கங்களை நடப்பித்து அப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு எதிரி என்றும் சபைக்குத் துரோகிகள் என்றும் ஒழுங்கற்றவர்கள் என்றும் கூறி சாப வார்த்தைகளை அள்ளி வீசி, இனி அவர்கள் செயல்படக்கூடாதபடி அப்பாவிகளாக மாற்றிவிட்ட ஊழியர்கள் எத்தனை பேர்? இப்படிப்பட்ட காரியங்களைப் பார்த்து இயேசு விசனமடையாமல் என்ன செய்வார்? சகோதரி ஒருவர், "மந்தை குட்டி போடவேண்டும்" ஆனால், எங்கள் மேய்ப்பர்கள் குட்டி போடவிடுவதில்லை என்று அங்கலாய்த்தார்கள். இதுதான் இன்றைய நிலையோ!

சிலருடைய நிலை சற்று மாறுபட்டது. யோவான் 12:20-22 வசனங்களை வாசித்துப் பாருங்கள். இந்த கிரேக்கர்கள் இயேசுவினிடத்தில் நாங்கள் வருவதற்கு **"உயர்நிலை சிபாரிசு தேவை"** என்று நினைத்துவிட்டார்கள். அவர்கள் பிலிப்புவைச் சந்தித்து அவர் அந்திரேயாவைப் பார்த்து இயேசுவிடம் சிபாரிசு செய்ய வருகிறார்கள். இன்றைக்கு அநேக ரோமன் கத்தோலிக்க சகோதர சகோதரிகள் இப்படித்தான் யோசிக்கிறார்கள். நமக்கு மறைந்துபோன பரிசுத்தவான்களும், மறைந்திருந்து செயல்படுகிற தேவதூதர்களும் (சம்மனுசுக்கள்) மரியாளும் சிபாரிசு செய்யவேண்டும், அவர்கள் நமக்காக இயேசுவிடம் சொல்லவேண்டும், நேரடியாக நாம் அவரைக் காணக்கூடாது என்ற யோசனையில் செயல்படுகிறதைக் காணலாம். கூடவே, இன்றைய ஆவிக்குரிய வட்டாரத்தில் பெரிய, வரம் பெற்ற ஊழியர் நமக்காக வேண்டிக்கொள்ளவேண்டும் என்ற மாயத்தினை நம்பும்படியாகத்தான் சாட்சிகளும், பத்திரிக்கைகளும், தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டு, இயேசுவின் ஆசீர்வாதம் பெற இதுதான் வழி என்பதுபோல சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த மாயத் தோற்றத்தினை உருவாக்கி அதனையே தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொண்ட ஊழியரும், தங்களை மிகவும் இயேசுவுக்கு நெருக்கமானவர் என்பதனைக் காண்பிக்க, தங்களுக்குக் கிடைக்கப்பெற்றதாகக் கூறும் அநேக தரிசனங்களைத் தம்பட்டம் அடிப்போரும் பெருகிவிட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம். இதனால் உண்டானவைதான் "worship" என்று சொல்லப்படும் **கண்மூடித்தனமான பக்தி. அவரிடத்தில் சேர்வோரைத் தடுத்து நிறுத்தப் போதுமான வல்லமை பொருந்தியவை** மறவாதிருப்போமாக.

இயேசுவினால் சொஸ்தமாக்கப்பட்ட திமிர்வாதக்காரனும் (யோவா 5:1-9), பிறவிக் குருடனும் (யோவா 9:1-7) இயேசுவினால் அற்புதத்தைப் பெற்ற பின்னரும் இயேசுவை அறியவோ காணவோ முடியாதவாறு காரியங்கள் காணப்படுகின்றன. முப்பத்தெட்டு வருடம் படுத்திருந்தவன் படுக்கையை எடுத்துப் போவதனைத் தங்களுடைய **மார்க்க வெறியின் நிமித்தம் நீ செய்வது நியாயமல்ல** என்றோரும் (யோவா 5:10), பிறவிக்குருடன் **சொஸ்தமான நாள் தாங்கள் ஏற்பதற்குரியது அல்ல** என்ற மத வெறி கொண்டோரும் அவர்களை

இயேசுவைக் காணக்கூடாதவாறு செய்துவிட்டனர். இயேசுவே அவர்களைத் தேடிச் சென்றார் (யோவா 5:14; 9:35), இல்லாவிடில் இவர்களின் மனுஷ கற்பனைகள், மதவெறிக் கொள்கைகள், தேவ சட்டத்தினைப் புரிந்துகொள்ளாத கண்மூடித்தனங்கள் பெரும் சுவராக மாறி, நன்மைப் பெற்றோரையும் அவரைத் தரிசித்து பின் நடக்கச் செய்யக்கூடாமல் மாற்றிவிடும் சூழ்நிலை இன்றைக்கும் உண்டு. **கிறிஸ்தவர்கள் தரும் கல்வியைப் பெற்றுக்கொள், மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள், நிவாரணங்களைப் பெற்றுக்கொள் ஆனால் இயேசு கிறிஸ்துவைப் பற்றி போதித்தால் தள்ளிவிடு** என்ற நெறி கொண்டோர் கொண்ட இந்த நாட்டில், அதனையும் தாண்டிச் சென்று நன்மை பெற்றோர் நன்மை செய்தவரைக் கண்டு பின்பற்ற வழிதனை உண்டாக்கவேண்டியது நமது கடமை என உணருவோம். நாம் வெறும் நன்மையை மாத்திரம் செய்துவிட்டு (Social service) அவரை அறிவிப்பதனை விட்டுவிடுவோம் (Gospel Preaching) என்கிற கொள்கைதனைக் கைவிடுவோம். **அவரைக் காண்பிக்கவே நாம் என்பதனை உலகுக்கு வெளிக்காட்டுவோம்.** "நாம் வெளிச்சம்; அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கச் செய்வதன் நோக்கம் பரலோகத்திலிருக்கிற நம் பிதாவை மகிமைப்படுத்துவதே என்பதனை உணர்ந்து செயல்படுவோம் (மத் 5:16). தடைகள் எதுவாயினும் எந்த ரூபத்திலிருந்தாலும் தகர்த்தெறிய தேவ பெலனுக்காய் கெஞ்சுவோம்; நம் நாட்களில் நிறைவேற்றுவோம். தாகம் கொண்ட ஜனம் இயேசுவைக் காணட்டும். "இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்ற ஏக்கக் குரலைப் புரிந்த வாழ்வுக்கு ஒப்புக்கொடுப்போம்.

# 50. தீர்க்கதரிசனம்

தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டவரும், தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலுமாகியவர் தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து. மாம்சமான யாவர் மீதும் தேவாவி ஊற்றப்படும் நாட்கள் இவை. இதன் விளைவாக, தீர்க்கதரிசிகள் மட்டுமல்ல, பிறவகை ஊழியர்களும் (சுவிசேஷகர், போதகர் போன்றோர்) தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். ஏன், குமாரரும் குமாரத்திகளும் என அழைக்கப்படுகிற இளம் வயதினரும் கூட தீர்க்கதரிசனம் உரைக்கிறதனைக் காண்கிறோம். (அப் 2:17,18)

**"தீர்க்கதரிசனங்களை அற்பமாக எண்ணாதிருங்கள் (1தெச 5:20) என்று அறிவுறுத்துவதை விட தீர்க்கதரிசனங்களை அளவுக்கதிகமாய் எண்ணாதிருங்கள்"** எனச் சுட்டிக்காட்ட வேண்டிய நிலை நிலவுகிறது.

**தீர்க்கதரிசனம், தீர்க்கதரிசனம் எனத் தேடி ஓடுகிற கூட்டமும் உண்டு.** அப்படி ஓடாவிட்டாலும், **தன்னைத் தேடி வருகிற தீர்க்கதரிசனத்தை வேண்டாம் எனத் தள்ளுவோர் எவருமில்லை.**

தீர்க்கதரிசனத்தால் கவரப்படுகிறோம் என்பது உண்மை. ஆனால், தீர்க்கதரிசனத்தின் மீது நமது **பிரதிசெயல்** (Reaction) **எவ்வாறு அமைந்துள்ளது?** என்பதே காரியம்.

அப்போஸ்தலர் 11-ம் அதிகாரத்தில் அகபு தீர்க்கதரிசி உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தபோது, தேவப் பிள்ளைகள் **"பஞ்சம் உண்டாகாது" என்று ஜெபிக்கவில்லை, உபவாசிக்கவில்லை.** ஆனால், "யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு பணஞ் சேகரித்து அனுப்பவேண்டும்" எனத் தீர்மானித்தனர்; அவ்வாறே செய்தும் முடித்தனர். (வச. 28,29,30)

"யூதேயாவில் மட்டும் பஞ்சம் வரும் என்று தீர்க்கதரிசனம் வரவில்லை. உலகம் முழுவதும் அதாவது, அவர்கள் வசித்த அந்தியோகியாவிலும் பஞ்சம் வரும்" என்றே முன்னறிவிக்கப்பட்டது. அவர்களோ, **தங்களது நலனைக் குறித்துச் சிந்தியாமல், யூதேயாவில் வசித்தவர்களின் மீது கரிசனைக் கொண்டு செயல்பட்டனர்.**

தீர்க்கதரிசனத்தின் மீது நமது பிரதிசெயல்பாடு (Reaction) சுயநலமின்மையாக இருக்கவேண்டும் (Selflessness). பிறர் மீது கரிசனைக் கொள்வதாக வெளிப்படவேண்டும். ஆனால், இன்று தீர்க்கதரிசனத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போரது செயல்பாடுகளில், சுயநலம் தலைவிரித்தாடுவது வேதனையான விஷயமே.

அப்போஸ்தலர் 21-ம் அதிகாரத்தில், இதே அகபு தீர்க்கதரிசி பவுலின் கச்சையை எடுத்து தன் கைகளையும், கால்களையும் கட்டிக்கொண்டு, "இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டி புற ஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள்" என்று தீர்க்கதரிசனம் உரைக்கிறான். (வச. 10,11)

இங்கு இருவிதமான பிரதி செயல்பாடுகளைக் காண்கிறோம். சகோதர சகோதரிகள் அழுது புரண்டு, "எருசலேமுக்குப் போகக் கூடாது" என்று பவுலை வேண்டிக்கொண்டனர். (வச. 12,13)

அகபு வருங்காரியத்தை மட்டுமே அறிவித்தானே தவிர, செய்யவேண்டியதென்ன? என்பது பற்றி எந்த ஆலோசனையுமே கூறவில்லை. ஆகவே, சகோதரர் எருசலேமுக்குப் போகாதீர் என வற்புறுத்தினர்.

**பவுலோ, கர்த்தருடைய நாமத்திற்காக மரிக்கவும் ஆயத்தம் என்று உறுதியாக இருந்தான்.** (வச. 13)

**தீர்க்கதரிசனத்தைக் கேட்டு அழுது, பவுலின் இதயத்தை உடைந்துபோகப் பண்ணினது, சகோதரரின் ஆவிக்குரியத் தரத்தின் அளவைக் காண்பிக்கிறது.** பவுலின் ஆவிக்குரிய பக்குவம் உயரத்தில் இருந்ததால், வருவது வரட்டும் வைத்த காலை எடுக்கமாட்டேன், எடுத்த பணியை விடமாட்டேன் என்ற தெளிவு, வைராக்கியம், துணிவு அவனிடமிருந்து வெளிப்படுகிறது.

"…வருங்காரியங்களானாலும்… நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு (அந்த அன்பு நெருக்கி ஏவுவதால் செய்கிற பணியை விட்டு) பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்," (ரோமர் 8:38,39; 2கொரி 5:14)

என்கிற வீரமுழக்கம் **இன்றோ, வரப்போகிற பிரச்சனை, போராட்டம், விபத்து, உபத்திரவம் பற்றிய தீர்க்கதரிசனத்தினிமித்தம், செய்யவேண்டிய தேவப்பணியைச் செய்யாமல் விட்டுவிட்டவர்கள் எத்தனை பேர்? புறப்பட்டுப் போகவேண்டிய இடங்களுக்குப் போகாமல் இருந்துவிட்டோர் எத்தனை பேர்?**

கர்த்தருக்கு ஓர் ஆலயம் கட்டுகிறவரைக்கும், என் வீட்டுக்குள் நுழையமாட்டேன், கட்டிலில் ஏறமாட்டேன், கண் தூங்கமாட்டேன் என்று தாவீது சபதமேற்று, அச்செய்தி எப்பிராத்தா போன்ற கிராமங்களின் காடுகள் வரை பரவின நிலையில் (சங் 132:1-6), நாத்தான் தீர்க்கதரிசி தாவீதுக்குத் தீர்க்கதரிசனம் உரைக்கிறான். நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப் பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப் பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்; அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான் என்று (2சாமு 7:12,13). தாவீது! நீ ஆலயம் கட்டக்கூடாது; உன் மகன்தான் கட்டுவான், அதுவும் உன் காலத்திற்குப் பிறகுதான் இது நடக்கும்; தேவாலயத்தைக் கண்களால் காண முடியாது என தீர்க்கதரிசனத்தின் மூலம் கர்த்தர் சொல்லாமல் சொல்லிவிட்டார்.

“ஐயோ, என் வாழ்வின் வாஞ்சையே இதுதானே; என் கனவு கலைந்துவிடக்கூடாது எனச் சபதம் பண்ணி, அது நாடெங்கும் பரவின பிறகு, நிறைவேற்றாவிட்டால் என் கவுரவத்திற்கு இழுக்கல்லவா? நான் பண்ணின பொருத்தனையை நிறைவேற்றக்கூடாது என்றா தீர்க்கதரிசனம் வரவேண்டும்” என்றெல்லாம் தாவீது அங்கலாய்த்திருப்பான்.

**ஆனாலும், அவன் தீர்க்கதரிசனத்திற்குக் கீழ்ப்படிந்ததினால்தான் அவன் வீடு கட்டப்பட்டது.** அவன் சந்ததிக்கு சிங்காசனம் நிரந்தரமாக்கப்பட்டது. அவனது சந்ததிகளில் தேவ குமாரனே வந்து உதிக்கிற பாக்கியம் கிடைத்தது. (2சாமு 7:15,16)

ஆனால், இஸ்ரவேலின் முதல் அரசன் “தீர்க்கதரிசிகளில் ஒருவனோ?” என்ற பழமொழி ஒன்று உருவாகக் காரணமான சவுல் எவ்வாறு செயல்பட்டான்?

சாமுவேல், சவுல் அரசனுக்குத் தீர்க்கதரிசனம் உரைக்கிறான், “நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான

எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார்" என்று. (1சாமு 15:3)

சவுல் அமலேக்கியரின் மேல் படையெடுத்துப் போனான். கர்த்தர் வெற்றியைத் தந்தார். ஆனால், **அமலேக்கிய அரசனை உயிரோடு விட்டுவிட்டான்** (வச. 8). **ஆடு, மாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட, அவனுக்கு மனம் வரவில்லை.** (வச. 9)

**தீர்க்கதரிசனத்துக்கு அரைகுறையாகக் கீழ்ப்படிந்ததால், சிங்காசனத்திலிந்து சவுல் தள்ளப்பட்டான்.** (வச 11,23,26,28,35)

பாதி கீழ்ப்படியாததற்கே இவ்வளவு பெரிய அடி என்றால், முழுவதும் கீழ்ப்படியாதோருக்கு என்ன கதி?

என்னைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்துவிட்டார் என்ற பரவசமே போதும் என்று மயங்கிவிடுபவர்களும் உண்டு. தீர்க்கதரிசனத்தின் மூலம் என்னோடு பேசிவிட்டார் என்று இன்ப அதிர்ச்சியடைந்து, அதைத் தம்பட்டம் அடிப்பதிலேயே திருப்தி அடைபவர்களும் உண்டு.

வேதாகமத்தில் குறிப்பிடுகிற முதல் தீர்க்கதரிசனமே, பிசாசுக்கு உரைக்கப்பட்டதுதான் என்பதை மறந்துவிடக்கூடாது. "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதி 3:15). **தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதோ இல்லையோ என்பது பெரிதல்ல. அதற்கு நம்முடைய பிரதி செயல்பாடு எவ்வாறு அமைகிறது? என்பதிலேயே நமது வெற்றியும், தோல்வியும் - ஆசீர்வாதமும், சாபமும் - இன்பமும், துன்பமும் - கனமும், கனவீனமும் அடங்கியிருக்கிறது.**

# 51. கிறிஸ்துவுக்குள் நான் யார்?

கிறிஸ்துவுக்குள் நான் யார்? என்ற கேள்வியை அதிகமாக எழுப்புகிற நாட்களில் நாம் வந்திருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் எனது நிலை என்ன? எனது உரிமை என்ன? எனது ஸ்தானம் என்ன? என்ற வினாக்கள் கேட்கப்படுவது நல்லதே; ஆனால், இன்றைய நாட்களில் அதற்கான பதில் தேடுகிற போர்வையில் செழிப்பு உபதேசங்கள் நுழைந்து வருகின்ற பேராபத்தும் நிகழ்ந்துவருகின்றது. நான் ராஜா, நான் தேவனுடைய சுதந்தரவாளி என்று கூறிக் கொண்டு ஆடம்பர வாழ்வுக்காக விசுவாசியுங்கள், விசுவாச அறிக்கைச் செய்யுங்கள் என்று தவறான திசைக்குத் தேவ மக்களைத் தள்ளிவிடுகிற தந்திரப் போதனைகள் பல உண்டு. கிறிஸ்துவுக்குள் நான் யார்? என்றால், அதில் உரிமைகள் மட்டுமல்ல, கடமைகளும் (பொறுப்புகளும்) அடங்கும்.

ஏசாயா 21:11,12 – தூமாவின் பாரம், சேயீரிலிருந்து என்னை நோக்கி: ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? என்று கூப்பிட்டுக் கேட்க, அதற்கு ஜாமக்காரன், விடியற்காலம் வருகிறது இராக்காலமும் வருகிறது, நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள் என்று சொல்லுகிறான்.

முதலாவது, தேவமக்களாகிய நாம் ஜாமக்காரர்கள். ஜாமக்காரன் பிறர் தூங்கும்போது விழித்திருப்பவன். ஜாமக்காரன் எப்போது விடியும்? என்று காலத்தை அறிந்து, பிறருக்கு அறிவிப்பவன்.

**"நான் நித்திரை பண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது"** என்று உன்னதப்பாட்டு 5:2 கூறுகிற வண்ணம், ஆவியில் விழித்திருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள் நாம்.

விழித்திருங்கள், விழித்திருந்து ஜெபியுங்கள் என்ற வற்புறுத்தல் புதிய ஏற்பாடு முழுவதும் உண்டு. அழிந்துபோய்க் கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்காக விழித்திருந்து விண்ணப்பிக்கவேண்டிய பொறுப்பு நமது தோளின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

விழித்திருக்க முடியாதபடி, விழத்தள்ளுகிற பலவிதமான ஆவிக்குரிய தூக்கங்கள் உலாவருவது உண்மையே. தெலீலாள்களின் மடியில், ஆழ்ந்து தூங்குகிற சிம்சோன்கள் எத்தனை பேர்? அபிஷேகம் பெற்றவர்கள்தான், மாமிச இச்சைகளின் மயக்கம் அவர்களை விழித்திருக்க இயலாதபடி செய்துவிட்டது. அவர்களை அலட்சியப் போக்குக்குள் தள்ளிவிட்டது.

எபேசியர் 5:14 "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார் என்று சொல்லியிருக்கிறார்."

**ஆவியிலே செத்த நிலையிலிருப்போரை அடையாளங் காணத் தவறியதால், அவர்களோடே தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்.** யாருக்குள் ஜீவன் இருக்கிறது, யாருக்குள் ஜீவன் இல்லை என்ற பகுத்தறிவு இல்லாவிட்டால், ஆவிக்குரிய பிணங்களோடு ஐக்கியம் கொண்டு தூக்கத்தில் ஆழ்ந்துவிடும் துயரம் நிகழ்ந்துவிடும். அத்தகையத் தூக்கம் ஆவியில் செத்தவர்களுக்காகப் பாரங்கொண்டு செயல்பட முடியாமல், நம்மை முடக்கிவிடும்.

ஜாமக்காரனுக்கு எப்போது விடியும், என்று தெரிந்திருக்கும், எழுப்புதல் எப்போது? என்று அவனுக்குத் தெரியும். காலத்தைப் பற்றிய தெளிவான உணர்வு அவனுக்குள் இருக்கும் (ரோமர் 13:11-12). "நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய் இப்படி நடக்க வேண்டும்... இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று, ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்." என்று மணியடித்து ஜாமக்காரனால் பிறரை எழுப்பிவிடமுடியும்.

"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போல் இருந்தார். இப்பொழுதோ மனந்திரும்பவேண்டும்..." என்று புதிய ஏற்பாட்டு ஜாமக்காரர்களில் ஒருவனாகிய பவுல் அத்தேனே பட்டணவாசிகளுக்கு மணியடித்தான். பழைய ஏற்பாட்டு ஜாமக்காரர்களில் ஒருவனாகிய எலிசா 2இராஜா 5:26 – ல் பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும்

திராட்சத் தோட்டங்களையும் வாங்குகிறதற்கும் இது காலமா? என்று காலத்தைப் பற்றிக் கவன ஈர்ப்பு செய்தான். ஜாமக்காரனாக ஜொலித்திருக்கவேண்டிய கேயாசி, காலத்தை அறியாமல் காசின் மேல் கண் வைத்து சாபக்காரன் ஆகிப்போனான்.

**இரண்டாவதாக, நாம் காவலாளிகளாக நிற்க கட்டளைப் பெற்றவர்கள்** (எசே 33:7). "மனுப்புத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவற்காரனாக வைத்தேன்..."

ஆங்கிலத்திலே ஜாமக்காரன், காவற்காரன் ஆகிய சொற்களுக்கு Watchman என்ற ஒரே சொல் எடுத்தாளப்பட்டிருந்தாலும், மூல மொழியாம் எபிரேயத்தில் அவை வேறுபடுத்தியே காட்டப்படுகின்றன.

காவற்காரனின் பணி, பட்டயம் வருவதனைக் கண்டு, மக்களை எச்சரிப்பது. (எசே 33:1-6)

துன்மார்க்கர்கள்தான், அவர்கள் அக்கிரமத்திற்குத் தண்டனையாகவே அழிவு வருகிறது; அவர்கள் அழிந்தாலும், அது அவர்கள் பாவங்களின் காரணமாகவே. ஆனால், காவற்காரனே நீ **துன்மார்க்கர்களை எச்சரிக்காவிட்டால், அவனது இரத்தப்பழி உன் தலையின் மேல் வந்துவிடும்.** அவன் சாகவேண்டியவன்தான்; அவன் சாவது நிச்சயம்தான்; ஆனாலும், காவற்காரனே, நீ அவனை எச்சரிக்காவிட்டால், அவனது இரத்தப்பழி உன் மீது வந்துவிடும். (எசே 33:8,9).

புதிய ஏற்பாட்டு காவற்காரர்களில் ஒருவனாகிய பவுல், எபேசு சபையின் மீது தொங்கிக்கொண்டிருக்கிற கத்தியைக் கண்டு எச்சரித்தான், "...ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் ... சிலர் எழும்பி...மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள்..." (அப் 20:29,30) என்று ஆகவேதான், அவனால் கூற முடிந்தது, 'எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாய் இருக்கிறேன்' என்று.

பழைய ஏற்பாட்டில், ஏன் முழு வேதாகமத்திலேயே நோவாவைப் போல ஒரு காவற்காரனைப் பார்க்கவே முடியாது. உலகிலுள்ள இருபது கோடி மக்களுக்கு, நூற்று இருபது

வருடங்கள் எச்சரிப்பின் பிரசங்கங்களைச் செய்தான். அவனது குடும்பத்தார் ஏழு பேர் மட்டுமே மனந்திரும்பினர். 120 ஆண்டுகள் பிரசங்கப் பணி; 20 கோடி பேருக்குப் பிரசங்கித்தான்; ஏற்றுக்கொண்டவர்கள் வெறும் ஏழு பேர்; அவனது வெற்றி 0.00000003% மட்டுமே. அவனது தோல்வி 99.99999997% அளவுக்குப் பெரியது. இன்றைய ஊழிய அளவுகோல்களின்படி பார்த்தால், நோவா ஒரு தோற்றுப்போன, பரிதாப, மிகச் சிறிய, ஏழை ஊழியன், ஒரு வீட்டு ஜெபக்குழு தலைவனாவதற்குக் கூட தகுதியற்றவன். ஆனால், கர்த்தருடைய பார்வையில், உலகத்தையே எச்சரித்த மாபெரும் காவற்காரன். எனவேதான், மனுஷக்குமாரனுடைய நாட்களுக்கு நோவாவின் நாட்களையே இயேசு எடுத்துக்காட்டாக எழுதிவைத்தார். (மத் 24:37-39)

**அடுத்ததாக, காவற்காரன் இருட்டுக்குள்ளும் ஊடுருவி பார்ப்பவன்.** ஆவிக்குரிய ஆந்தையின் கண்கள் அவனுக்கு உண்டு. Night Vision Binocular (இரவுப் பார்வை தொலைநோக்கி) போல அவனது ஆன்மீகப் பார்வை, அந்தகார சக்திகளின் அதிரடித் திட்டங்களை அக்குவேறு, ஆணிவேறாக அறிந்துவிடும். ஆகவேதான், பவுலால் முழங்க முடிந்தது, "சாத்தானுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே"... என்று (2கொரி 2:11).

**மூன்றாவதாக, நாம் எக்காளச் சத்தமாக தொனிக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்** (1கொரி14:8). "அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்?"

நமது அந்நியபாஷை, தீர்க்கதரிசனம், போதனை, வியாக்கியானம், விண்ணப்பம், பாடல் (வச. 6,13,15) யாவும் மக்களை யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுகிற எக்காளச் சத்தமாகத் தொனிக்கவேண்டும்; தெளிவாக ஒலிக்கவேண்டும் என்றே பவுல் இவ்வதிகாரம் முழுவதும் வலியுறுத்துகிறான். இயேசு சுகமளிக்கிறார், ஆசீர்வதிக்கிறார், விடுவிக்கிறார் என்பதெல்லாம் உண்மைதான்; ஆனால், இவைகள் தெளிவான எக்காளச் சத்தமல்ல. பாவத்தின் தீவிரத் தன்மையையும், பாவியின் பரிதாப

நிலையையும், பரன் இயேசு சிலுவையில் உருவாக்கிய மீட்பையும், அதனால் விளைந்த நித்திய ஜீவ வாழ்வையும் தெளிவாக எடுத்துச் சொல்லாத எந்த செய்தியும் எக்காளச் சத்தம் அல்ல. அது ஆயத்தப்படுத்தவும் செய்யாது.

ஊழியத்தின் தொடக்க நாட்களில், சென்னையில் ஒரு அந்தணர் பகுதிக்கு குழுவாகத் தெருப்பிரசங்கம் செய்யச் சென்றிருந்தோம். ஆனால், "பேசக்கூடாது" என்று அப்பகுதி மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டோம், ஆவியானவரின் ஏவுதலின்படி.

"பாவிக்குப் புகலிடம் இயேசு இரட்சகர் பாரினில் பலியாக மாண்டாரே" என்று பாடிக்கொண்டே அந்தப் பகுதியைக் கடந்து வந்தோம். எங்களை மூன்று அந்தண இளைஞர்கள் பின் தொடர்ந்து வந்து பேசவேண்டும் என்றனர். "பாவிக்குத் தண்டனை உண்டு என்றுதான் எங்கள் வேதங்களிலிருந்தும், போதனைகளிலிருந்தும் அறிந்துள்ளோம். ஆனால், பாவிக்குப் புகலிடம் உண்டு என்று நீங்கள் பாடின வார்த்தைகள் எங்கள் இருதயங்களுக்குள் ஊடுருவி விட்டன" எனக் கூறி தெருவிலேயே முழங்காலில் நின்று இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.

**நாம் யார்? என்று அறிவோம். ஜாமக்காரனாக, காவலாளியாக, எக்காளச் சத்தமாகத் திகழ தீர்மானிப்போம்.**

# 52. ஊடகங்கள்

தொலைக்காட்சி மூலமாக இன்றைக்கு மக்களைச் சந்திக்கும் பணியை அநேக சபைகளும், ஸ்தாபனங்களும், தனி மனிதர்களும் செய்ய முற்பட்டிருப்பது ஒரு பக்கம் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், மறுபக்கம் மிகுந்த பாரத்தையும், சில வேளைகளில் வேதனையையும் உண்டாக்குகிறது. சுவிசேஷம் செல்வதற்கான வழியை மின் ஊடகங்கள் (Electronic Media) வேகமாக அதிகம் பேருக்கு கொண்டுவருவதனைக் காண்கிறோம். எப்படியாகிலும், சுவிசேஷச் செய்தி சிலரைச் சந்திக்கத்தான் செய்கிறது. இருப்பினும், அதனால் ஏற்படும் பாதகங்களையும் சிந்திக்கவேண்டிய அவசியம் உண்டு.

**"விரயத்தினை விரும்பாதவர் நம் இயேசு"** ஆகையால்தான் ஐயாயிரம்பேரை போஷித்தபோதும், நாலாயிரம்பேரை போஷித்தபோதும் துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் எனக் கூறி சீஷர்களை எடுக்கச் சொல்கிறார் (மத் 14:20; 15:37). அப்படியிருக்க, இன்றைக்கும் சபைதனில், ஊழியங்களில் அதனைக் குறித்துக் கவலை கொள்ளாமல் இருப்பாரோ? ஆகையால், இன்றைய ஊழியங்களில் நடக்கும் அநேக 'விரயங்களை' நாம் கண்டு சிந்திக்கவும், சிரத்தை எடுக்கவும், ஜெபிக்கவும் மற்றும் மற்றவர்களுக்கு எடுத்துரைக்கவும் ஏவப்படுவோம்.

இன்றைக்கு அநேக T.V ஊழியங்களை தேவன் எழுப்பியுள்ளார்; அவருக்கு ஸ்தோத்திரம். சந்திக்கப்படுபவர்கள் ஒருவேளை கிறிஸ்துவை அறிந்த மக்களே; அவர்களைக் குறி வைத்தே காரியங்கள் செய்யப்படுகிறது என்றாலும், புறஜாதிகளில் சிலரும் இதன் மூலம் பயன் பெறுகின்றனர் என்பது மறுக்க முடியாது. அநேகருடைய பிரசங்கங்கள் வேதத்தோடோ, சுவிசேஷத்தோடோ ஒத்துப்போகவில்லை எனினும், **எப்படியோ கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்** என்று பவுலோடு கூடச் சேர்ந்து நாமும் சந்தோஷப்படலாம். (பிலி 1:18)

ஆயினும், இத்தனை நிகழ்ச்சிகள் உண்டாக்க செலவு பண்ணப்படும் பணம், திறமைகள், நேரங்கள், ஆட்கள், வரங்கள் போன்றவற்றின் கணக்கினை எடுத்துப்பார்த்தால், அதனை சீராக செயல்படுத்த இவர்கள் எல்லாரும் இணைந்து வந்து பேசி ஆளுக்கொரு பகுதியினை பக்திக்கேதுவாக, தேவனை அறிவிப்பதற்கு ஏதுவாக, சபைகளைக் கட்டுவதற்கு ஏதுவாக சீரமைத்து ஒளிபரப்புச் செய்தால் விரயங்கள் தவிர்க்கப்படும். இப்படிப்பட்டவைகளுக்கு **இன்றைக்குச் செலவு செய்யப்படும் பணத்தில் பத்தில் ஒரு பங்கிலேயே இன்றைக்கு நடைபெறும் காரியங்கள் சாதிக்கப்பட்டுவிடுமே**; மீதமுள்ள ஒன்பது பங்கினை வேறு சேவைக்குப் பயன்படுத்தலாமே.

இன்றைக்கு வெளியாகும் பாடல் DVD/VCD/ACD – க்களின் எண்ணிக்கைதனை அறியுங்கள் மூச்சு நின்றுவிடும். ஒவ்வொரு நாளும் சராசரியாக 17 VCD/ACD –க்கள் தமிழகத்தில் மட்டுமே வெளியிடப்படுகிறது. நானும் பாடல் பாடுவேன், நானும் வெளியிடுவேன் என்ற சிந்தையே மேலோங்கி நிற்பதனைக் காணலாம். ஏன் வெளியிடுகிறார்கள்? தெரியாது. அதனால் என்ன பயன் ஏற்படும்? தெரியாது. போட்ட முதலை எடுத்தார்களா? தெரியாது. ஊழியத்திற்குப் பயன்பட்டதா? தெரியாது. அதனைக் கேட்டவர்கள் பாடல்களை உபயோகிக்கின்றனரா? தெரியாது. சபைதனைச் சுத்தப்படுத்தவோ, உந்தித் தள்ளவோ உபயோகப்பட்டதா? தெரியாது. இசை முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. அனுபவங்களின் அடிப்படையில் எழும் பாடல்கள் எத்தனை? தேவ மனிதர்களைச் செயல்படுத்த ஏவும் பாடல்கள் எத்தனை? சிந்திக்கவும், செயல்படவும், தேவனைக் கிட்டிச் சேரவும் செய்யும் பாடல்கள் எத்தனை? அத்தனையும்கேள்விக்குரியே! கூட்டிக் கழித்துப் பார்த்தால், சேர்வது குப்பையே! இது தேவைதானா?

T.V நிகழ்ச்சிகள் **அநேகரை நடிகர்களாகவே மாற்றியிருக்கிறதைக் காணமுடிகிறது.** யாரோ ஒருவர், பாடுவதற்குத் திரையில் வரும் நபர் வெறும் **வாய் அசைப்பு** செய்கிறார்; **மக்களைக் கவரும் வண்ணம் ஒரு புன்னகை,** சில வேளைகளில் ஆடல், **வித்தியாசமான உடைகள் தரித்த அலங்காரங்கள்,** இயற்கையான தோற்றத்தை

மறைக்க முயலும் **மேக்கப்புகள்,** வயதினை மாற்றிக் காட்ட சிங்காரங்கள், இருக்கும் இடத்திற்கு ஏற்றார்ப்போல் பொருத்தமான வண்ண வண்ண உடைகள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். எழுபது வயதைத் தொட்டவரும், இருபது வயது நபரைப் போலக் காட்சி அளிக்க **மீசைக்கு மை, தலைக்கு டை** (dye), குரலிலே மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிகள் போன்றவை இவர்களை நடிப்புத் துறைக்கே தள்ளிவிடுகின்றன. சிலருடைய உடல் பேசும் மொழி (Body Language) அருவருப்பாகக் கூடக் காணப்படும்.

சில நேரங்களில் காண்பிக்கப்படும் காட்சிகள், **அவர்கள் பேசின செய்திகள் ஒரு சாராருக்கே பொருந்தியதாக இருக்க, இலட்சக்கணக்கான மாற்றுக் கலாச்சார மக்களுக்கும் அதே செய்தி காண்பிக்கப்படும்போது, அது என்ன பாதிப்பை உண்டாக்கிவிடும்** என்பது கேள்விக்குரியே.

இதற்கிடையே, எப்போதோ ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியில், தீர்க்கதரிசனங்கள், பெயர் கூறுதல் போன்ற காரியங்கள் அநேகருடைய உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, அவர்களை இடறலடையவும் செய்கிறது. போதாக் குறைக்கு **அதே நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்படுகிறது.** தீர்க்கதரிசனத்தில் சொன்ன நபர்கள் அதுவரை தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் வந்தார்களோ, இல்லையோ?

தேவச் செய்தியைக் கேட்கும் நபர் தொடப்படுவாராயின், உள்ளூரில் உள்ள சபையையோ அல்லது ஜெபக்குழுக்களையோ அல்லது தேவ பிள்ளைகளையோ சந்தித்து ஆலோசனை பெறுங்கள் அல்லது ஆவிக்குரிய வழியில் முன்னேறுங்கள் என்று கூறப்படாமல், **எங்களுக்கே எழுதுங்கள்** என்றே கூறப்படும் அவல நிலைமை சபையைப் பெரிதாக்கும் பணிக்கு எப்படி உதவிட முடியும்? தேவ இராஜ்ஜியம் கட்டும் பணியில், **கேட்கும் நபர் உள்ளூர் சபையில் இணைக்கப்படவேண்டும் என்கிற முயற்சி தவிர்க்கப்படுமானால்,** அது கேலிக்குரியதுதானே! என் சபையை நான் கட்டுகிறேன் என்று சொன்ன இயேசுவுக்கு உடன் ஊழியர்களாக நிற்கத்தானே அழைப்புப் பெற்றிருக்கிறோம்.

உலகத்தின் முறைப்படி, மனிதனின் **இம்மைக்குரியத் தேவைகளை மாத்திரம் பிரசங்கிக்கும் பிரசங்கங்களே அதிகமாகிவிட்டபடியினால்,** இரட்சிப்பு வித்தியாசமாகவே போதிக்கப்படுகிறது. கண்ணீர் விடுபவர்கட்கும், கஷ்டத்தில் இருப்பவர்கட்கும், கடன் வாங்கினவர்களுக்கும் பேசப்பட்டால், இரட்சிப்பின் இரகசியம் ஒரு நாளும் புரியப்போவதில்லை.

பாவத்தினின்று விடுதலையும், தேவனுக்குக் கீழ்ப்படிவதையும், பரிசுத்த வாழ்வுக்குத் தூண்டுதலையும், பாவப் போராட்டங்களை மேற்கொள்வதற்கும், வாழ்க்கைச் சோதனைகளை எதிர்கொள்வதற்கும், தேவ சித்தத்தை அறிந்த வாழ்க்கை வாழ்வதற்கும், நியாயத்தீர்ப்பினைக் குறித்த அறிவினைப் பெறுவதற்கும் மக்கள் போதிக்கப்படாமல், **இம்மை வாழ்வைக் குறித்த பிரசங்கங்களே அதிகமாகிவிட்டது.**

கூடவே, தொடர்ச்சியாக வரும் கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் **அநேக மெய் கிறிஸ்தவர்களின் தனி வாழ்வின் தியானத்தைக் கொள்ளை கொண்டுபோய்விட்டது** என்று சொன்னால் மிகையாகாது. இந்த நிகழ்ச்சியைத்தான் பார்த்துவிட்டோமே, தேவ வசனத்தைத்தான் கேட்டுவிட்டோமே என்ற ஒரு வறட்டு திருப்தி அவர்களை ஆட்கொள்ள, நாளடைவில் சாரமற்றுப் போனவர்களாய் அவர்களை மாற்றி, வேதம் இப்படிச் சொல்கிறதா என்ற ஆராய்ச்சியில் இருந்தவர்களைத் திசை திருப்பிவிட்டது. இதுவும் ஒரு சத்துருவின் சூழ்ச்சியே.

**மிகைப்படுத்திக் கூறும் சம்பவங்களும், சாட்சிகளும் மிகவும் மலிந்து காணப்பட ஆரம்பித்துவிட்டன.** தன்னையே உயர்த்திக் காண்பிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்படும் ஊழிய யுக்திகள், தேவ இராஜ்ஜியத்தைக் கட்டவே செய்யாது, மாறாக கேடு விளைவிக்கவே வித்திட்டுவிடும்.

**விளம்பர யுக்திகள்** உலக வியாபார ஸ்தாபனங்களையும் மிஞ்சிவிடும் அளவுக்கு நுழைந்துவிட்டபடியினால், இப்பொழுது உலகத்தார் நம்முடைய நிகழ்ச்சி முறைகளையே பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். டெக்னாலஜி என்கிற போர்வைக்குள் நாமும் **கவர்ச்சிக்கு முதலிடம் கொடுக்க ஆரம்பித்துவிட்டோம்.**

நம்முடைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் **பொழுது போக்கு அம்சங்களாகவே மாற்றப்பட்டுவருகிற அபாயமும்** ஆங்காங்கே தெரிய ஆரம்பித்துவிட்டது. பக்திவிருத்திக்கு ஏதுவானவைகள் என்றோ, சுவிசேஷம் பரப்புவதற்கு ஏதுவானது என்றோ சொல்லக் கூடாத பொல்லாத நிலமை. இதனோடே சில நிகழ்ச்சிகள் கேட்கிறவர்களையும், பார்க்கிறவர்களையும் கலங்கப்பண்ணும் **உபதேசக் கோளாறுகளினால் நிறைந்திருக்கின்றன.** இயேசுவை முப்பது வெள்ளிக் காசுக்காகக் காட்டிக் கொடுத்து பின்னர் நான்று கொண்டு செத்த யூதாசே முதல் இரத்தசாட்சி என்று கூறுகிறது ஒரு நிகழ்ச்சி. தொலைக்காட்சியோ அல்லது தொல்லைக் காட்சியோ விளங்கவில்லை.

தொலைக்காட்சியில் வந்தாலும் வந்தார்கள், அனைவருமே டாக்டர் பட்டம் எளிதாகப் பெற்றுக்கொண்டார்கள். பல்லாண்டுகள் கடும் பாடுபட்டு படித்து, கற்றறிந்து பெற்ற உண்மை பட்டதாரியான டாக்டர்கள் இப்பொழுது திரு திரு என்றே முழிக்கிறார்கள். தமிழகத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் **"பொய் போடுகிற போட்டில் உண்மை திரு திருவென்று முழிக்கிறது"** இது எத்தனை உண்மை.

கூடவே, நாங்கள் இலட்சக்கணக்கானோருக்குப் பிரசங்கிக்கிறோம் என்ற வீண் பெருமை உள்ளது வேறு.

Billy Graham Classics என்ற நிகழ்ச்சியில், பண்டிதர் பில்லி கிரஹாம் முன்னதாகப் பல நாடுகளில் பேசிய செய்திகள் ஒளிபரப்புச் செய்யும்போது, அந்தச் செய்திகள் எத்தனையாய் தொனிக்கிறது; பரலோகத்தின் மேன்மை, பாவத்தின் வெறுமை, பாவியின் நிலைமை இப்படிப்பட்டதல்லவோ பரத்துக்கு நேராகத் திருப்பும்; மாறாக மாயாஜாலங்களே மலிந்து வருகின்றது.

இன்றைய அரசியல் கட்சியில் சேர்ந்தவர்களைக் காட்டி, விஷயம் ஒன்றினை மையமாகக் கொண்டு அவர்களின் கருத்துக்களை மக்கள் முன் வைக்க சந்தர்ப்பம் கொடுத்து, மக்களையும் அவர்கள் கேள்வி கேட்கவைத்து, விஷயங்களைத் தெளிவாகப் புரியவைக்க தொலைக்காட்சி நிலையத்தார் போட்டி போட்டுக்கொண்டு

செயலாற்றும் வேளையில், நம்மவர் இப்படிப்பட்ட நிகழ்ச்சிதனை ஒத்துக்கொள்வார்களோ, வெறும் சலிப்பினையோ, சபலத்தையோ விரும்பாமல், முழு மாற்றத்தை எதிர்பார்க்கும் வகையில் நிகழ்ச்சிகளும் மாறாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தாங்கிவருகிறவர்களுடைய பணமும் பரலோகக் கணக்கில் சேருவதில்லை, அவர்கள் ஏமாறுகிறவர்களே.

மேற்கண்டவைகளை மனதிற்கொண்டு, நீங்கள் காண்கிற நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பாருங்கள். இந்த நிலை மாற ஜெபிப்போம். தேசம் தேவனை அறிய தேவையான செய்திகளைக் கொண்ட நிகழ்ச்சிகள் இடம் பெற அவரின் பொற்கரத்தைப் பிடித்துக் கெஞ்சுவோம்; இது நம்மேல் விழுந்த கடமை. **தொலை நோக்குப் பார்வையோடு செய்திகள் சொல்லப்பட்டால், தொலைக்காட்சிப் பெட்டியும் விண்ணகத்திற்கு ஆட்சேர்க்கும்.**

ஒரு பட்டணத்தில் இருக்கும் தேவ சபைகள் இணைந்து ஒரு FM Radio Staion ஒன்றினை ஆரம்பித்து சுவிசேஷத்தினை முறையாகச் சொல்லி ஜனங்களுக்கு அங்குள்ள சபைகளை அறிமுகப்படுத்தி செயல்பட்டால், குறைந்த செலவில் நிறைந்த ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வாய்ப்பு உண்டே!

# GEMS FIVE FOLD MINISTRY

**G**o to the unreached
**E**vangelize
**M**ake Disciples and
**S**end them to reach their own

## Fivefold Ministry

Evangelism
Church Planting
Discipleship & Training
Educational Services
Humanitarian

## Five Core Values

**Sincerity**
**Simplicity**
**Sanctity**
**Sacrifice**
**Service**

**2175 people toil together with GEMS as Missionaries, Workers, Tentmakers and Bible Men / Women. More than 3000 people serve as Volunteers.**

**GEMS is a trans-denominational charismatic Christian mission organization, involved in Evangelism, with the vision to reach the unreached with the Good News of the Lord Jesus Christ and help them reach their own; so as to bring about holistic societal transformation through its Spiritual, Educational, Medical and Social services; primarily in Bihar, other North Indian states like Jharkhand, Uttar Pradesh, Madhya Pradesh, Maharashtra and also countries like Nepal and some closed countries since 1972.**

# EVANGELISM

## Evangelism - Heartbeat of GEMS

CHURCH PLANTING IN CITIES, VILLAGES AND TRIBAL AREAS THROUGH ACTIVE EVANGELISM HAS RESULTED IN ESTABLISHING 1200 CHURCHES INFLUENCING MORE THAN 1 MILLION PEOPLE

NET

GUM

AGNI

PEACE

STORM

PROFIT

FILM TEAMS

CHILDREN MINISTRY

MAJOR & MINI GOSPEL MEETINGS

- 110 Mini (1000 to 3000 people) and 12 Major (6000 to 12000 people) Gospel Meetings are conducted annually to break new grounds.
- Through Panchayat Evangelism and Church Establishment (PEACE) / AGgravating New-life Influence (AGNI) strategy, attempt is made to place one missionary in every Panchayat (Govt. Administrative Demarcation) aiming Saturation Church Planting.
- GEMS Urban Ministries (GUM) attempts to influence the influencers, the urban elite.
- More than 40000 Children are reached every year through Bible Clubs, Vacation Bible Schools, Camps, and Rallies through Children Ministry.
- Students Outreach Ministries (STORM) concentrates College students through Prayer Cells, Bible Studies and Leadership Training.
- PROFIT (PROfessionals Fellowship of International Talents), is an initiative encouraging workplace evangelism globally.
- 25 Film Teams reaching more than 350 thousand people every year with Jesus Film and other Gospel Messages.

# CHURCH PLANTING

## Saturation Church Planting (SCP)

**GEMS Block Approach Model**
**with reference to politically demarked geography**

**GEMS targets key 'Blocks' and "Panchayats" and attempts to saturate every village under them, with a maximum number of Churches**




An identified Block within Bihar State, India



Panchayats circled within a block

### Political Demarcation of India

35 **States**
593 **Districts**
5564 **Blocks**
2,65,000 **Panchayats**
6,38,588 **Villages**



Villages within a Panchayat for SCP

**GEMS** identifies strategic 'Blocks' and adopts it for total transformation and wholesome communitydevelopment at grassroots level within its geographical boundary.

GEMS provides education, healthcare, community reformation, vocation specific training programs and self-help livelihood programs in these chosen 'Blocks' to bring about **transformation at grassroots level.**



Spread of GEMS'Belivers in Bihar

# DISCIPLESHIP & TRAINING

## Discipleship and Training in GEMS

25,000 first generation active believers are constantly trained under 25 different types of training programs, targeting 20 million active believers by 2020.

Corporate Training Center (CTC) with 6000 seating capacity for mass training.



Fourteen Regional, Language, Focus and Gender specific Discipleship Training Centers (DTC).

Cross Cultural, Induction Orientation, Discipleship, Short-term and One year Bible Training programs are conducted periodically.

# EDUCATIONAL SERVICES

## GEMS Educational Services

**GEMS has toiled for more than 30 years in imparting education inspired by Christ as means for structured change.**

**GEMS promises wholesome education with intellectual, moral, spiritual, social and physical attributes.**

- Schools - GEMS runs 120 English and Hindi medium schools catering to more than 25000 young lives annually.
- GEMS Industrial Training Institute GEMS ITI offers vocational training courses on four technical trades namely Electrical, Fitter, Welder and Motor Mechanic.
- Nursing School - GEMS School Of Nursing (GSON) offers nationally approved Auxiliary Nursing and Midwifery (ANM) courses.
- Higher Education - GEMS department of higher education facilitates 81 different Certificate, Diploma, Graduate and Post Graduate courses through Distance Education.
- Computer Center - GEMS Institutes of Future Technology (GIFT) offer high quality work oriented computer education in Hardware, Software and Computer Applications.
- Tailoring Training Institute -GEMS runs five Tailoring Training Institutes empowering socially underprivileged and persecuted women towards self employment and evangelism.

**Schools**

**Nursing School**

**Computer Center**

**Higher Education**

**Tailoring Training Institute**

**Industrial Training Institute**

**Fostering Education for Transformation**

# HUMANITARIAN SERVICES

## GEMS Humanitarian

**GEMS follows the approach of establishing 'Homes' as the fundamental block of bringing about wholesome transformation of society.**

### 49 Different Homes

**Homes for the abused, abandoned and exploited.**
**Homes for the physically handicapped.**
**Homes for the children from tribal territories.**
**Homes for the children of Commercial Sex Workers.**
**Homes for the children of missionaries.**

### 3 Village Transformation Projects

**A complete under-privileged village is adopted for total transformation and communitydevelopment.**

**Education, healthcare, vocational training and self-help livelihood options are offered.**

### Women Empowerment Movement

**Knowledge empowerment and self-help groups.**

### 2 Social Reformation Projects

**Rehabilitating jailed convicts.**
**Community transformation among Sex Workers.**

## Restoring Smiles to the Deprived

## சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார் எழுதிய புத்தகங்கள்

**நீ இல்லாவிடில்**

(தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மொழிகளில்)

**"மகனே, நீ இல்லாவிடில், வேறு எனக்கு யாருமில்லை"** என்ற தேவசத்தம் கேட்டு, பீஹாருக்குச் சுவிசேஷத்தினைச் சுமந்து செல்ல, தன்னை அர்ப்பணித்த சகோ.அகஸ்டின் ஜெபக்குமாரின் வாழ்க்கைப் பயணமும், ஜெம்ஸ் (GEMS) இயக்கத்தின் வரலாற்றுப் பதிவும் அடங்கிய புத்தகம்.

**சேர்ந்த இரண்டும்**

(தமிழ் மற்றும் ஹிந்தி மொழிகளில்)

வேதத்தின் 32 தம்பதியர்களது வாழ்க்கையின் வெற்றிகள் மற்றும் வீழ்ச்சிகளை உள்ளடக்கியது. தம்பதியர்கள் புயலுக்குத் தப்பி, புரிந்துகொள்ளும் வாழ்க்கைக்குத் தங்களை அர்ப்பணித்து, மணவாழ்க்கையை மணக்கச் செய்திட, நல் ஆலோசனைகளை உள்ளடக்கிய பொக்கிஷம்.




**எங்கே செல்கிறோம்?**

**"யுத்தசத்தம்"** ஜெம்ஸ் மாதாந்திரப் பத்திரிக்கைகளில் வெளிவந்த, சகோ.அகஸ்டின் ஜெபக்குமார் எழுதிய அன்பின் மடல்களின் முதல் தொகுப்பு **"எங்கே செல்கிறோம்?"** என்ற வடிவில்.

**இளம் உள்ளங்களுக்கு**

வாலிபத்தின் கேள்விகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், துடிப்புகள் இவற்றினிடையே, **"நீ தேவ சித்தத்தை அறிந்து முன்னேறு"** என வாலிபரின் வாழ்க்கையை வடிவமைக்கும் புத்தகம்.

### இளம் ஊழியருக்கு

தீமோத்தேயு நிருபத்தினையும், பவுலின் வாழ்க்கையினையும் மையமாகக் கொண்டு சகோதரர் எழுதிய, **இன்றைய இளம் ஊழியர்கள்** தங்கள் ஊழியப் பாதையில் முன்னேறுவதற்கான ஓர் பாடப் புத்தகம்.

### ஆயத்தமாக்கப்படும் தலைவன்

(தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மொழிகளில்)

**"வாழ்ந்து போதிப்பதே சாலச் சிறந்தது"** என தேவனின் பரிபூரணச் சித்தத்திற்குத் தங்களைத் தத்தம் செய்யும் தலைவர்களை ஆயத்தப்படுத்தும் புத்தகம்.

### ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்

தலைவர்கள், தேவன் வகுத்த வழியினை விட்டு விலகாமல், **தேவ சித்தம்** நிறைவேற்றுவதையே தங்கள் குறியாகக் கொண்டு அர்ப்பணிக்கத் தூண்டும் புத்தகம்.

## GEMS

No. 11, 13th Cross Street,
New Colony, Chrompet, Chennai – 44
TamilNadu, South India
Tel. : 044 22386031, 22380295

# இன்றைய

## இளைய சமுதாயம் காண விரும்புவது...

சவாலான வாழ்க்கை...

உள்ளான இறைபன்பு...

வாழ்ந்து காட்டிப் போதிக்கும் போதகம்...

மற்றவர்களை உருவாக்கும் இதயத்துடிப்பு...

தன்னலமற்ற சேவைதனைத் தரும் தலைமை...

நலிந்தோருக்காகப் பரிதபிக்கும் மனப்பான்மை...

பித்தலாட்டமில்லாத கபடமற்ற உண்மை இருதயம்...

மாற்றாரையும் நேசித்துப் போற்றும் உண்மை நாவு...

கிரயம் செலுத்தி இலக்கை அடையத் துடிக்கும் நெஞ்சம்..

உரிமைகளையும் விட்டுக் கொடுக்கும் அலாதியான பண்பு..

இவைகளே!

இவைகளை உங்களில் உருவாக்க,

இந்நூல்

# ஓர் வழிகாட்டி


**GEMS Publications**

11,13th Cross Steet, New Colony,

Chrompet, Chennai - 44

Web: www.gemsbihar.org, www.gemsmedia.in